# KALANJIYAM – International Journal of Tamil Studies

## களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

ISSN 2456-5148 (Online)

## Vol. 10, No. 02 (September 2026)

*Special Issue*



சங்க இலக்கியங்களில் தோழியின் சமூகப் பங்கு ஓர் ஆய்வு — கீர்த்தனா. கே. 1
தமிழ் இலக்கியங்களில் அறப்பண்புகளும் மனித நேயமும் — முனைவர்விஜயலட்சுமி வெ. 7
தேவிபாரதியின் நாவல்களில் காணப்படும் கதைமாந்தர்களின் வாழ்வியல் நெறிகள் — யோசுவா எம். ஏ., எம் பில்.,பி எட்., ஞா., முனைவர் மாசிலா தேவி எம்.ஏ.,எம் பில்.,பி எட் நெட் பி எச்.டி., சி. 12
காலந்தோறும் தமிழும் பல்துறை அறிவும் — முனைவர் பேபிநிஷாந்தி மெ. 18
ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு. — முனைவர். ராஜேஸ்வரி செ. 28
சங்கப் பாடல்களில் எச்சரிக்கை நிமித்தங்கள் — முனைவர். ராதிகா ரெ. 34
கவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வழமைக் கருத்தாக்கங்களும் — சுபத்ரா கு., முனைவர்

# Editorial Board

Academic Team
Dr. K. Dhanalakshmi
Assistant Professor, NGM College
Email: dhanalakshmingm@gmail.com | Profile: Vidwan-IRINS Profile

Dr. B. Aruljothi
Assistant Professor, Dept. of Tamil, NGM College
Email: aruljothib@ngmc.org | Profile: Department Profile

Dr. S. Selvakumar
Assistant Professor, PG & Research Dept. of Tamil, NGM College
Email: selvakumar@ngmc.org | Profile: Institutional Profile

Dr. P. Ganesh Vadivel
Department of Tamil, Srimad Andavan Arts and Science College, Trichy
Email: ganeshvadivel21@gmail.com | Profile: Institutional Profile / Profile PDF

Editorial & Technical Team
Mr. S. Veerakannan — Managing Editor
Deputy Librarian, NGM College
ORCID: 0000-0003-1006-158X | Profiles: Google Scholar | Vidwan ID: 395724

Technical Support Team
Typesetting, digital preservation, and website management (Dept. of Library & Technical Services):
Prabavathi
Saranyam
Poongodi
Advisory Committee
Dr. Sirpi Balasubramaniam – Sahitya Akademi Advisory Committee, Pollachi
Dr. Amuthan – Emeritus Professor, Dept. of Tamil, NGM College
Dr. P.M. Palanisamy – Former Principal, NGM College
Thiru S. Rajendran – Malaya University, Malaysia
Dr. O. Balakrishnan – Associate Professor, Bharathiar University, Coimbatore
Dr. M. Pandi – Head & Associate Professor, Alagappa University, Karaikudi
Dr. P. Anandakumar – Head & Associate Professor, Gandhigram Rural Institute
Dr. P. Velmurugan – Associate Professor, Central University, Thiruvarur
Dr. C. Sethupathi – Associate Professor, Aringar Anna Arts & Science College, Puducherry
Dr. K. Sivamani – Associate Professor, Government Arts & Science College, Chittur, Kerala

# From the Editor

Special Issue Editor: முனைவர் ப.கற்பகராமன்
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் - 05
அலைபேசி எண்: 9894210651
மின்னஞ்சல் முகவரி: dkkaveeswar@gmail.com
ORCID ID: https://orcid.org/0000-0003-1625-7209

# Contents / பொருளடக்கம்

RESEARCH ARTICLE


**சங்க இலக்கியங்களில் தோழியின் சமூகப் பங்கு ஓர் ஆய்வு** 1–6
*The Social Role of the Female Companion in Sangam Literature: A Study*
கீர்த்தனா. கே.

**தமிழ் இலக்கியங்களில் அறப்பண்புகளும் மனித நேயமும்** 7–11
*Ethical Values and Humanism in Tamil Literature*
முனைவர்விஜயலட்சுமி வெ.

**தேவிபாரதியின் நாவல்களில் காணப்படும் கதைமாந்தர்களின் வாழ்வியல் நெறிகள்** 12–17
*The lifestyles of the protagonists found in Devi Bharathi's novels*
யோசுவா எம். ஏ., எம் பில்.,பி எட்., ஞா., முனைவர் மாசிலா தேவி எம்.ஏ.,எம் பில்.,பி எட் நெட் பி எச்.டி., சி.

**காலந்தோறும் தமிழும் பல்துறை அறிவும்** 18–27
*Tamil and Multidisciplinary Knowledge Through the Ages*
முனைவர் பேபிநிஷாந்தி மெ.

**ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு.** 28–33
*Psychological Insights and Concepts of Social Unity in Andal's *Thiruppavai*: A Study.*
முனைவர். ராஜேஸ்வரி செ.

**சங்கப் பாடல்களில் எச்சரிக்கை நிமித்தங்கள்** 34–42
*Sanga Padalgalil Nannimiththangal*
முனைவர். ராதிகா ரெ.

**தவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வளமைக் கருத்தாக்கங்களும்** 43–52
*Thavvai: Literary Expressions and Conceptualization of Fertility*
சுபத்ரா கு., முனைவர் சுந்தரமூர்த்தி ம.

**தொல்காப்பியத்தில் அறிவியல் சிந்தனைகள்** 53–59
*Scientific Thoughts in Tolkappiyam*
முனைவர்.பரமசிவம் ச.ப.

**ஆற்றுப்படை நூல்களில் கலைஞர்கள்** 60–64
*Artists in *Aatruppadai* Literature*
ரேவதி எ.ச.

**சங்க இலக்கியத்தில் அளவீடுகள்** 65–70
*Measurements in Sangam Literature*
முனைவர்பரமேஸ்வரி மு.

**பிற்கால அறஇலக்கியங்களில் குற்றவியல் சிந்தனைகளும் சமூக நீதி நிர்வாகமும்** 71–72
*Concepts of Criminal Justice and the Administration of Social Justice in Later Didactic Literature*
முனைவர். வனிதா தேவி த.

**மனித வாழ்வியலில் நாக வழிபாடு Naga Worship in Human life** 73–78
*Naga Worship in Human life*
முனைவர் சுந்தரமூர்த்தி ம.

**சங்க இலக்கியப் புறநானூற்றில் வெளிப்படும் தலைமைத்துவப் பண்புகளும் இன்றைய கல்வித் தலைமைத்துவத்திற்கான அவற்றின் பொருத்தமும்** 79–85
திருமதி.தஜினி சிவகுமார் (SLTES 3)

**புறநானூற்றில் அரசியல் கோட்பாடுகளும் செங்கோன்மை நெறிகளும்** 86–89
*Political Theories and Principles of Righteous Rule in Purananuru*
வடிவேல் ச.

**வள்ளுவர் கூறும் இல்வாழ்க்கை** 90–99
*The Domestic Life Described by Valluvar*
தகைசால் தமிழறிஞர் அரிமா முனைவர் அய்யர். ச.

**ஐங்குறுநூறு பகரும் குறிஞ்சி The Kurinji Landscape as Depicted in Ainkurunuru** 100–105
*The Kurinji Landscape as Depicted in Ainkurunuru*
முனைவர்.ஆனந்தி ரா.

**அறநூல்களில் (நட்பு) – ஓர் ஆய்வு ( பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்)** 106–113
*Friendship in Didactic Literature – A Study (The Eighteen Minor Works)*
மரியம் குருசி MA., Mphil., கு.

**சிலப்பதிகாரம் உணர்த்தும் வாழ்வியல் முறைகள்** 114–119
*Ways of Life Conveyed by Silappathikaram*
சீனிவாசன் MA B.ED கோ

**எனது பார்வையில் அக்கால மருத்துவமும் இக்கால மருத்துவமும்** 120–124
*Medicine of the Past and Present: My Perspective*
நிர்மலா ர.

**நாலடியாரில் புல்லினங்கள்** 125–133
*Bird Species in Naladiyar*
முனைவர் மீனாட்சி ச.

**தமிழ் இலக்கியங்களில் வாழ்வியலும் பண்பாட்டுக் கூறுகளும்** 134–138
*Elements of Lifestyle and Culture in Tamil Literature*
முனைவர் தென்றல் சு., முனைவர் சசிக்குமார் வே.

**தமிழ் மொழி வளர்ச்சியில் அருளாளர்களும் புலவர்களும்** 139–143
*Benefactors and Poets in the Development of the Tamil Language*
முனைவர் நடராஜன், சிவ.

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 1–6
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# சங்க இலக்கியங்களில் தோழியின் சமூகப் பங்கு ஓர் ஆய்வு

*The Social Role of the Female Companion in Sangam Literature: A Study*

**கீர்த்தனா. கே.***

உதவிப் பேராசிரியர், ஏவிஎஸ் கலை மற்றும்அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) , சேலம் – 636106 செல்- 8610716542 சேலம் – 636106 செல்- *8610716542, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: கீர்த்தனா. கே. — kerthanakesavan@gmail.com



| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | — | 30 September 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00001 |



## ஆய்வுச்சுருக்கம்

சங்க அக இலக்கியங்களில் தலைவி, தலைவன், பாங்கன், பாங்கி, செவிலி, நற்றாய் போன்ற பல்வேறு பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இவர்களுள் தலைவி தனித்துவமான சமூகப் பங்கினை வைக்கிறாள். அவள் தலைவியின் நெருங்கிய தோழியாக மட்டுமின்றி தலைவியின் காதல் வாழ்க்கை, குடும்ப உறவு, சமூக ஒழுக்கம், திருமணம், பிரிவு, ஊடல் போன்ற பல்வேறு சூழல்களில் முக்கிய பங்களிப்பை செய்கிறாள். தலைவியின் உள்ளக்கருத்தை தலைவனிடம் எடுத்துரைப்பதும், தலைவனின் செயல்களை சுட்டிக்காட்டி அறிவுறுத்துவதும் தலைவியின் நலனை காப்பதும் தோழியின் முதன்மையான பணிகளாக அமைகின்றன.

தோழி தலைவிக்கும், தலைவனுக்கும் இடையே ஒரு தொடர்பு பாலமாக செயல்படுகிறாள். தலைவியின் சமூக பாதுகாப்பு, குடும்பத்தின் நற்பெயர், திருமணத்தின் அவசியம் ஆகியவற்றை தலைவனுக்கு உணர்த்துகிறாள். இதனால் தோழி ஒரு தனிப்பட்ட நட்புறவின் பாத்திரமாக மட்டுமல்லாமல், சங்ககால சமூக அமைப்பில் பெண்ணின் குரலை வெளிப்படுத்தும் முக்கியமான சமூகப் பிரதிநிதியாகவும் விளங்குகிறாள். அவ்வகையில் சங்க இலக்கியங்களில் தோழியின் சமூக பங்கினை பற்றி கட்டுரையில் விரிவாக காண்போம்.

**Keywords / திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம்; தோழி; தலைவி; தலைவன்; அக இலக்கியம்; களவு; கற்பு; சமூகப் பங்கு; பெண் குரல்; உளவியல்

## Abstract

Sangam Akam literature presents various characters such as Thalaivi, Thalaivan, Paangan, Paangi, Sevili, and Nattrai. Among them, Thozhi (the heroine's companion) plays an important social role. She supports the heroine in love, family relationships, marriage, separation, and conflicts. She communicates the heroine's feelings to the hero, advises him, and protects the heroine's dignity and welfare. Thozhi also acts as a bridge between the hero and heroine, emphasizing social values, family honour, and the importance of marriage. Thus, she represents not only friendship but also the voice and social agency of women in Sangam society.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** கே., கீ. (2026). சங்க இலக்கியங்களில் தோழியின் சமூகப் பங்கு ஓர் ஆய்வு. KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 1–6. https://ngmtamil.in/journal-article/%e0%ae%9a%e0%ae%99%e0%af%8d%e0%ae%95-%e0%ae%87%e0%ae%b2%e0%ae%95%e0%af%8d%e0%ae%95%e0%ae%bf%e0%ae%af%e0%ae%99%e0%af%8d%e0%ae%95%e0%ae%b3%e0%ae%bf%e0%ae%b2%e0%af%8d-%e0%ae%a4%e0%af%8b%e0%ae%b4%e0%ae%bf/

## ஆய்வின் நோக்கங்கள்

1. சங்க அக இலக்கியங்களில் தோழியின் நிலையை ஆராய்தல்
2. தலைவி தோழி உறவின் தன்மையை விளக்குதல்
3. தலைவிக்கும் தலைவனுக்கும் இடையிலான உறவில் தோழியின் பங்களிப்பை ஆராய்தல்
4. களவு மற்றும் கற்பு வாழ்க்கையில் தோழியின் பங்கை விளக்குதல்
5. தலைவியின் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் தோழியின் பங்கினை ஆராய்தல்
6. சங்க கால சமூகத்தில் தோழியின் இடத்தை சமூக பார்வையில் ஆராய்தல்

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் பழந்தமிழர்களின் வாழ்வியலை அறிந்துக்கொள்வதற்கான முக்கிய இலக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன. குறிப்பாக அக இலக்கியங்கள் கற்பு மற்றும் காதல் வாழ்க்கையின் மேன்மையையும் குடும்ப உறவுகளின் நுட்பமான பரிமாணங்களையும் வெளிப்படுத்துகின்றன.

அகப்பாடல்களில் தலைவியின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இருப்பினும் தலைவி தனது உணர்வுகளை எல்லா நேரங்களிலும் நேரடியாக வெளிப்படுத்துவதில்லை. அவளது எண்ணங்களையும், உணர்வுகளையும் புரிந்து கொண்டு அவற்றை சரியான சூழலில் வெளிப்படுத்துபவளாக தோழி அமைகிறாள்.

## சங்க இலக்கியத்தில் தோழி

அக இலக்கியத்தில் தோழி தலைவியின் மிக நெருங்கிய துணையாக காணப்படுகிறாள். தலைவியின் சார்பில் பேசும் உள்ளமைப்பை பெறுகிறாள். தோழியின் முக்கியத்துவத்தை தொல்காப்பிய மரபின் வழி அறியலாம் கலவு கருத்து ஆகிய அகத்திணை நிகழ்வுகளில் தலைவியின் நலனை கருத்தில் கொண்டு செயல்படுபவளாக தோழி அமைக்கப்படுகிறாள்.

## தலைவியின் நெருங்கிய தோழியாக

தோழியின் முதன்மையான சமூக உறவு தலைவியுடனான நட்பாகும். தலைவி தன்னுடைய காதலை வெளிப்படையாக கூற முடியாத சூழலில் தோல்வியிடம் தனது உள்ளத்தை பகிர்ந்து கொள்கிறாள். இதனால் தோழி தலைவியின் உளவியல் துணையாக மாறுகிறாள்.

## உதாரணம்

## யாயும் யாயும் யாராகியரோ

**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**

**யானும் நீயும் எவ்வழி அறியும்**

**செம்புலப் பெயல்நீர் போல் அன்புடை நெஞ்சம்**

**தாம் கலந்தனவே.** ( குறுந்: 40)

இப்பாடல் தலைவியின் காதல் உணர்வை வெளிப்படுத்துகிறது. இத்தகைய உள்ளுணர்வுகளை தலைவி தனது தோழியிடம் வெளிப்படுத்துவதாக சங்க அக பாடல்களில் அமைகிறது.

## தலைவனுக்கும் தலைவிக்கும் இடையிலான பாலமாக

தோழியின் மிக முக்கியமான பணி தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துவதாகும்.

காதல் உறவு சமூக ரீதியாகச் சிக்கலான சூழலை எதிர்கொள்ளும்போது தோழி நடுவராகச் செயல்படுகிறாள்.

தலைவன் தலைவியைச் சந்திக்க விரும்பும்போது, தலைவியின் நிலைமைக்கு ஏற்றவாறு தோழி பதிலளிக்கிறாள்.

அவள்:

தலைவனின் நோக்கத்தை அறிகிறாள்.

தலைவியின் விருப்பத்தை அறிகிறாள்.

இருவருக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்துகிறாள்.

சமூகத் தடைகளை மதிப்பிடுகிறாள்.

உறவு திருமணத்தை நோக்கிச் செல்ல வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறாள். இதனால் தோழி காதல் உறவின் நடுவராக செயல்படுகிறாள்.

## களவு வாழ்க்கையில் தோழியின் பங்கு

சங்க அக இலக்கியத்தில் களவு என்பது திருமணத்திற்கு முன் தலைவனும் தலைவியும் கொண்டிருக்கும் மறைமுகக் காதல் உறவைக் குறிக்கிறது. இந்த நிலையில் தோழியின் பங்கு மிக முக்கியமானது. தலைவி தலைவனைச் சந்திக்க விரும்பும்போதும், தலைவன் தாமதிக்கும்போதும், சந்திப்பு தொடர்பான சூழலைக் கையாளும்போதும் தோழி துணையாக இருக்கிறாள்.

ஆனால் தோழி கண்மூடித்தனமாகக் காதலை ஆதரிப்பவள் அல்ல. தலைவியின் நலனையும் குடும்பத்தின் நற்பெயரையும் கருத்தில் கொண்டே செயல்படுகிறாள்.

## தலைவியின் சமூகப் பாதுகாவலராக

சங்க சமூகத்தில் பெண்ணின் காதல் வெளிப்படையாகத் தெரியும்போது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் சிக்கல்கள் ஏற்படலாம். இத்தகைய சூழலில் தலைவியின் நற்பெயரைக் காப்பதில் தோழி முக்கியப் பங்கு வகிக்கிறாள்.

தலைவியின் சந்திப்புகள் பிறருக்குத் தெரியாமல் பார்த்துக்கொள்வது, தலைவியின் மனநிலையைப் புரிந்துகொள்வது, தலைவனின் செயல்பாடுகளை மதிப்பிடுவது போன்றவை அவளுடைய பாதுகாப்புப் பணிகளாக அமைகின்றன. இதனால் தோழியை தலைவியின் சமூகப் பாதுகாவலர் என்று குறிப்பிடலாம்.

## தலைவியின் உளவியல் துணையாக

தலைவியின் மகிழ்ச்சி, வருத்தம், ஏக்கம், அச்சம், நாணம், கோபம், ஊடல் போன்ற பல்வேறு உணர்வுகளைத் தோழி புரிந்துகொள்கிறாள். தலைவன் பிரிந்திருக்கும்போது தலைவியின் மனநிலையைச் சமநிலைப்படுத்துவதும் தோழியின் பணியாக அமைகிறது.

## உதாரணம்

நெய்தல் திணைப் பாடல்களில் தலைவன் கடல் வழியாகப் பிரியும் சூழலில் தலைவியின் காத்திருப்பும் ஏக்கமும் வெளிப்படுகின்றன. அப்போது தோழி தலைவியின் மனதைத் தேற்றுகிறாள்; தலைவனின் வருகையைப் பற்றிய நம்பிக்கையை உருவாக்குகிறாள்.

## தோழி – பெண்ணின் குரலாக

சங்க இலக்கியங்களில் தலைவி நேரடியாகப் பேசும் இடங்கள் இருப்பினும், பல சூழல்களில் அவளுடைய எண்ணங்களைத் தோழியே வெளிப்படுத்துகிறாள். இதனால் தோழியின் குரலை தலைவியின் **மறைமுகக் குரல்** எனக் குறிப்பிடலாம். அவள் தலைவியின் துயரத்தைச் சொல்லும்போது அது ஒரு தனிப்பட்ட பெண்ணின் துயரம் மட்டுமல்ல; அக்காலப் பெண்ணின் சமூக நிலை, எதிர்பார்ப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றையும் வெளிப்படுத்துகிறது.

## ஊடலில் தோழியின் பங்கு

தலைவனின் செயலால் தலைவி வருந்தும் போது ஊடல் ஏற்படுகிறது. இந்த நிலையில் தோழி இருவருக்குமிடையே சமரசத்தை ஏற்படுத்துகிறாள்.

அவள் தலைவனின் தவறைத் தலைவியிடம் நியாயப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தலைவியின் மனக்குறையையும் தலைவனிடம் எடுத்துச் சொல்கிறாள்.

இதனால் தோழி நடுவர் மற்றும் சமரசகராக செயல்படுகிறாள்.

## கற்பு வாழ்க்கைக்கு வழிகாட்டும் தோழி

களவு உறவு திருமணத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்பது சங்க அக இலக்கியங்களில் காணப்படும் முக்கியமான சமூக அமைப்பு. இந்நிலையில் தலைவனிடம் திருமணத்தை வலியுறுத்துவதில் தோழியின் பங்கு முக்கியமானது.

தலைவி தொடர்ந்து காத்திருப்பது அவளுடைய குடும்பத்திற்கும் சமூக நற்பெயருக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதை தோழி உணர்த்துகிறாள்.

இதனால் தோழி காதலை சமூக அங்கீகாரம் பெற்ற குடும்ப உறவாக மாற்றுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறாள்.

## தோழி – சமூக ஒழுக்கத்தின் பாதுகாவலர்

தோழி தலைவியின் காதலை ஆதரித்தாலும், சமூக ஒழுக்கத்தை முழுமையாகப் புறக்கணிப்பவளாகக் காட்டப்படவில்லை.

அவள்:

காதல் + நாணம் + குடும்ப நற்பெயர் + சமூக ஒழுக்கம்

ஆகியவற்றுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்துகிறாள்.

இதுவே சங்க இலக்கியத்தில் தோழியின் பாத்திரத்தை மிகவும் சிக்கலானதாகவும் முக்கியமானதாகவும் ஆக்குகிறது.

## தோழியின் அறிவாற்றல்

தோழி தலைவியின் உணர்வுகளை மட்டுமே அறிந்தவள் அல்ல. சூழ்நிலைக்கேற்ப பேசக்கூடிய அறிவாற்றல் கொண்டவளாகவும் விளங்குகிறாள்.

தலைவனிடம் நேரடியாகக் கூற வேண்டிய கருத்தை நேரடியாகவும், மறைமுகமாகக் கூற வேண்டிய கருத்தை இயற்கை உவமைகள் மற்றும் சூழல் வழியாகவும் தெரிவிக்கிறாள்.

அதனால் தோழியின் பேச்சு:

அறிவார்ந்தது

சூழ்நிலைக்கேற்றது

உளவியல் சார்ந்தது

சமூகப் பொறுப்பு கொண்டது.

## தோழியின் தூதுப் பணி

சங்க அகப்பாடல்களில் தோழி பல சந்தர்ப்பங்களில் தூதுவராக செயல்படுகிறாள். தலைவி நேரடியாகத் தலைவனிடம் கூற முடியாத கருத்துகளைத் தோழி எடுத்துச் செல்கிறாள். அதேபோல் தலைவனின் கருத்தையும் தலைவியிடம் தெரிவிக்கிறாள். இவ்வாறு இரு தரப்பினருக்கும் இடையில் தகவல் பரிமாற்றத்தைச் செய்பவளாக தோழி அமைகிறாள்.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் தோழி என்பது ஒரு சாதாரண நட்புப் பாத்திரம் அல்ல. தலைவியின் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் அவள் துணையாகவும், ஆலோசகராகவும், தூதுவராகவும், நடுவராகவும், பாதுகாவலராகவும் செயல்படுகிறாள்.

தலைவியின் உள்ளுணர்வுகளை அறிந்து அவற்றைச் சரியான சூழலில் வெளிப்படுத்துவது அவளுடைய முக்கியமான திறனாகும். தலைவனின் செயல்களை மதிப்பிடுவதும், அவனுக்கு அறிவுரை கூறுவதும், தலைவியின் நலனை வலியுறுத்துவதும் தோழியின் சமூகப் பொறுப்பை வெளிப்படுத்துகின்றன.

குறிப்பாக களவு வாழ்க்கையிலிருந்து கற்பு வாழ்க்கைக்குச் செல்லும் இடைநிலையில் தோழியின் பங்கு மிக முக்கியமானது. காதல் என்பது தனிப்பட்ட உணர்வு மட்டுமல்ல; அது சமூக அங்கீகாரம் பெற வேண்டிய உறவாகவும் இருந்ததைத் தோழியின் செயல்பாடுகள் உணர்த்துகின்றன.

எனவே, சங்க இலக்கியங்களில் தோழியை “தலைவியின் தோழி” என்ற குறுகிய அடையாளத்தில் மட்டும் பார்க்காமல், “தலைவியின் குரலை வெளிப்படுத்தும் சமூகப் பிரதிநிதி” என்ற விரிவான பார்வையில் அணுகுவது இன்றைய ஆய்வுலகில் பயனுள்ள புதிய வாசிப்பாக அமையும்.

## துணைநூற் பட்டியல்


1. **தொல்காப்பியம் ( பொருள் )** – தமிழ்மண் பதிப்பகம், **சிங்காரவேலர் தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017**
2. **2. குறுந்தொகை - புலியூர்க் கேசிகன் - சாரதா பதிப்பகம் – சென்னை.**

3. நற்றிணை - பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்- திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்- 522, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.

© 2026 கீர்த்தனா. கே.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

**KALANJIYAM – International Journal of Tamil Studies**
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 7–11
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# தமிழ் இலக்கியங்களில் அறப்பண்புகளும் மனித நேயமும்

*Ethical Values and Humanism in Tamil Literature*

**முனைவர்விஜயலட்சுமி வெ.***

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் 641 014 அலைபேசி எண் - *9094036932, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்விஜயலட்சுமி வெ. — vijayalakshmi@psgcas.ac.in

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | — | 30 September 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00010 |

## ஆய்வுச்சுருக்கம்

அறவழி மனிதன் வாழ வேண்டும், அவன் பிற உயிர்களையும் தன் உயிர்போல நினைத்து நேசிக்க வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழ் இலக்கியங்கள் வெறும் கற்பனை நயத்திற்காக மட்டும் படைக்கப்படவில்லை. சமுதாயத்தை நெறிப்படுத்தும், பண்படுத்தும் அறப்பணிகளைச் செய்து வந்துள்ளன. மனிதன் தன் வாழ்வில் கடைபிடிக்கவேண்டிய அன்பு, கருணை, ஈகை, இரக்கம், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை, பிறருக்கு உதவும் மனப்பான்மை போன்ற உயர்ந்த குணங்களின் தொகுப்பாகும். அறத்தைவிட உயர்ந்த செல்வமும் இல்லை. அதை மறப்பதை விட பெரிய தீங்கும் இல்லை என்பார் வள்ளுவர். அறப்பண்பு மனிதனை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்கிறது. முதலில் மனிதன் தன்னை நேசிக்கக் கற்கவேண்டும். பின்புதான் அவனால் உலகை நேசிக்க முடியும். செய்யவேண்டியதைச் செய்தலும் செய்யக்கூடாததைத் தவிர்த்தலும் அறத்தின் அடிப்படைக் கூறாகும். சங்ககாலம் முதல் இக்காலம் வரை தமிழ் இலக்கியப்பரப்பில் அறப்பண்பும் மனிதநேயமும் எவ்வாறு போற்றப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** Tamil Lierature; Tamil; Human beings; society

## Abstract

Human beings ought to live a righteous life, cherishing other living beings just as they cherish their own lives. Tamil literature, spanning two millennia, was not created merely for imaginative appeal; it has played a vital role in guiding and refining society. It embodies noble virtues that humans should practice—such as love, compassion, generosity, mercy, non-harming of other beings, and a helpful disposition. Valluvar asserts that there is no wealth greater than virtue, and no greater harm than forsaking it. A virtuous nature elevates a human being to a higher plane. One must first learn to love oneself before one can truly love the world. Performing right actions and abstaining from wrong ones constitute the fundamental elements of virtue. This article examines in detail how the values of virtue and humanism have been cherished in the realm of Tamil literature from the Sangam era to the present day.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** வெ., மு. (2026). தமிழ் இலக்கியங்களில் அறப்பண்புகளும் மனித நேயமும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 7–11. https://ngmtamil.in/journal-article/%e0%ae%a4%e0%ae%ae%e0%ae%bf%e0%ae%b4%e0%af%8d-%e0%ae%87%e0%ae%b2%e0%ae%95%e0%af%8d%e0%ae%95%e0%ae%bf%e0%ae%af%e0%ae%99%e0%af%8d%e0%ae%95%e0%ae%b3%e0%ae%bf%e0%ae%b2%e0%af%8d-%e0%ae%85%e0%ae%b1%e0%ae%aa/

## அறப்பண்பு

அதனால்தான் அன்பின் வழியது உயிர் நிலை என்கிறார் வள்ளுவர். அறவழி நடக்க அன்பே அடிப்படையாகின்றது.

**அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**

**மறத்திற்கும் அஃதே துணை** திருக்குறள் அன்புடைமை 76

என்ற குறட்பாவின் வழி அறவழியில் நடப்பவர்களுக்கு மட்டுமே அன்பு உரியது எனச் சிலர் கூறுவர். அவ்வாறு கூறுபவர் அன்பின் இயல்பை முழுமையாக அறியாதவர். வீரம் போன்ற மறச் செயலுக்கும் அன்பே துணையாகும் என்கிறாா.

## அன்பு அறம்

சங்க இலக்கியங்கள் பெரிதும் கருப்பொருளின் அடிப்படையிலே தலைவன் தலைவிக்குரிய அன்பினை வெளிப்படுத்துகின்றன. தலைவன் உயிர்களிடத்து கொண்ட அன்பை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த அகநானூறு குறுங்குடி மருதன்ாா பாடலொன்றில்,

**பூத்த பொங்கர்த் துணையொடு வதித்த**

**தாதுண் பறவை பேதுற லஞ்சி**

**மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்** அகநானூறு பாடல் - 4

கார் காலம் வந்துவிட்டது. வினைமேற் சென்ற தலைவன் காலம் தாழ்த்தாது விரைந்து வருவான் கவலைவேண்டாம், அவன் வரும் வழியில் வண்டுகள் நிறைந்திருக்கும் சோலைகள் உண்டு. எல்லா உயிர்களுக்கும் இன்பம் துய்க்கும் உரிமை உண்டு என்ற பொது சிந்தனை தோன்றி அவ்வண்டிற்கு இடையூறின்றி எச்சரிக்கையாகத் தன் தேரைச் செலுத்தி வருவதால் தாமதம் ஆகின்றது எனத் தோழி தலைவியைத் தேற்றுமாறு இப்பாடல் அமைந்துள்ளது.

மற்றொரு பாடல், மனிதன் மட்டுமின்றி விலங்குகளும் ஒன்றன்மீது ஒன்று கொண்ட அன்பினை வெளிப்படுத்துகின்றது. ஆண்மான் தன் பெண்மான் அம்புபட்டு இறந்ததை நினைத்து மேய்தலை மறந்து, நீர் கூட பருகாது, தன்மீது அம்பு தைத்ததைப் போல மாழ்கி அவ்விடத்திலேயே சோர்ந்து கிடந்தது. குட்டியிடத்தே கொண்ட அன்பால் கைம்மைப்பட்ட அந்த ஆண்மான் உயிர் வாழ்ந்ததாகக் காட்டுகின்றார் இளங்கீரனார்.

**கணையிடக் கழிந்த தன் வீழ்துணை யுள்ளி**

**குறுநெடுந் துணைய மறிபுடை யாட**

**புன்கண் கொண்ட திரிமருப் பிரலை**

**மேய் பதம் மறுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து**

**நெய்தலஅம படுவில் சின்னீர் உண்ணாது**

**எஃகுறு மாந்தரின் இனைந்துகண் படுக்கும்...**

அகநானூறு - பாடல் 371

## இல்லறம்

அன்பும் அறமும் ஒருங்கே இருப்பதே இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும் என மனித குலத்திற்காக வள்ளுவப் பெருந்தகை காட்டிய நெறியைச் சங்க இலக்கிய அகநானூற்றில் கபிலரது பாடல் ஒன்றில் காணமுடிகின்றது. காட்டிலே வேடனும் ஆண்பன்றியும் எதிர்கொண்ட காட்சி. ஆண்பன்றியானது தன் பெண் பன்றியையும் குட்டிகளையும் பாதுகாப்பான இடத்தில் விட்டு, மீண்டு வந்து வேடனின் எதிர் நின்றது. இங்கு அவ்வேடன் அதனை ஆண்பன்றியாகக் கருதாமல் தன் தலைவனாகக் காண்கிறான். தன் தலைவன் போர்க்களத்தில் பகைவர் படையை விலக்கித் தடுப்பதற்குத் தான் முன்னிற்பதாகக் காண்கிறான். அப்பன்றியைக் கொல்லாமல் விடுகின்றான். இங்கு வேடனின் மனிதநேயமும் பன்றியின் வீரமும் தன் குடும்பத்தின் மீது கொண்ட அன்பும் இல்லறச் சிறப்பு ஒருங்கே வெளிப்படுகின்றது.

**அரும்புழை முடுக்கர் ஆட்குறித்து நின்ற**

**தறுகட்பன்றி நோக்கிக் கானவன்**

**குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி....** அகநானூறு, பாடல் 248

இப்பாடலில் ஆண்பன்றியின் இல்லற மாண்பு புலப்படுகின்றது.

## ஈதல் அறம்

சங்க காலத்திற்குப்பின் தோன்றிய நீதிநூற் காலத்தை அற இலக்கியக் காலம் என்றே அழைத்தனர். அக்காலத்தில் அறமும் மனிதநேயமும் கோட்பாடுகளாக வடிவம் பெற்றன. உலகப்பொதுமறையாம் திருக்குறள் அறத்தையும் மனித நேயத்தையுமே வலியுறுத்தியது.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**

**ஊதியம் இல்லை உயிர்க்கு** திருக்குறள், புகழ் - 231

வறியவர்களுக்குக் கொடுத்து உதவி வாழவேண்டும், அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும். அப்புகழ் தவிர மனித வாழ்விற்குப் பயன்தரக்கூடியதும் சிறந்த பொருளும் வேறொன்றம் இல்லை என்பதை அக்குறள் பறைசாற்றுகின்றது. இக்கருத்தை நாலடியாரும் வலியுறுத்துகின்றது.

**மறற்றிவாம் நல்வினை யாம்இறையம் என்னாது**

**கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின்**

**முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்**

**நற்காய் உதிர்தலும் உண்டு.** நாலடியார், இளமைநிலையாமை, பாடல் - 19

நாம் இளையவராக இருக்கின்றோம், ஆகையால் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என நினைத்து அறம் செய்யாமல் விடக்கூடாது. கையில் பொருள் இருக்கும்போதே அறம் செய்தல் வேண்டும் என்கிறது.

## அரசியல் அறம்

அற இலக்கியங்கள் மட்டுமல்லாது, தமிழில் தோன்றி காப்பிய இலக்கியங்கள் தனிமனித ஒழுக்கத்தையும் சமூக அறத்தையும் பறைசாற்றியது. மக்களுக்கு மட்டுமன்றி மன்னர்களுக்கும் அறத்தை எடுத்தியம்பின. அரசன் நடுவுநிலை தவறாது ஆட்சி செலுத்தவேண்டும் என்பதை பாண்டிய மன்னனின் ஆராயாது செய்த குற்றத்தால் ஏற்பட்ட விளைவின் மூலம்,

**அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றமாம்**

சிலப்பதிகாரம், வழக்குரை காதை வெண்பா - பாடல் வரி - 82

அரசனாக இருந்தாலும் தவறு செய்தவர்களை அறமே கூற்றுவனாகி தண்டிக்கும் என்ற கருத்தைப் புலப்படுத்தியது.

## பசிப்பிணி தீர்த்தல்

சமண காப்பியமான சிலப்பதிகாரம் ஒருவகையில் அறம் உரைக்க, பொத்த காப்பியமான மணிமேகலையும் பசிப்பிணி தீர்த்தலும் அறமே என்றுரைக்கின்றது. இதனை,

**மண்திிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்**

**உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே**

மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, பாடல் வரி 95-96

இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் உணவு கொடுப்பவர்கள் உயிர் கொடுத்தவர்களாவர் என்றுரைக்கிறது.

## கருணை

திருமூலரும் தம் திருமந்திரத்தில் மனிதர்கள் செய்யவேண்டிய கருணை அறத்தினைப் பற்றிக் கூறும்போது,

**யாவர்க்கு மாம் இறைவற் கொரு பச்சிலை**

**யாவர்க்கு மாம் பசுவிற் கொரு வாயுறை**

**யாவர்க்கு மாம் உண்ணும்போ தொரு கைப்பிடி**

**யாவர்க்கு மாம் பிறர்க்கு இன்னுரை தானே**

திருமந்திரம் - முதல் தந்திரம் - அறம் செய்வான் திறம் - பாடல் எண் -252

இறைவனுக்கு ஒவ்வொரு நாளும் பச்சிலை பறித்துச் சாற்ற வேண்டும் என்றும், பசுவிற்கு உணவாகப் புல்லையும் பசியோடு இருப்பவர்க்கு ஒரு கைப்பிடி உணவும் கொடுத்தல் அறமாகும். மேலும் பிறரிடம் இனிமையான சொற்களைப் பேசுவதும் அறச்செயலாகும் என்கிறார்.

## மனிதநேயம்

சங்க இலக்கியத்தில் மனிதநேயத்தை மிகுதியாகக் காணமுடிகின்றது. வள்ளலார் உயிர்களிடத்தில் அன்பு செய்யவேண்டும் என்பதை வலியுறுத்திய தோடு தாமும் நீரின்றி வாட்டமுற்ற பயிர்களைக் கண்டபோதும் பசியால் உடல் மெலிந்து வீடுதோறும் சென்று இரந்து உண்பவரைக் கண்டபோதும் பிணியுற்றுத் துன்புறுபவரைக் கண்டபோதும் வாடிய நிலையை,

**வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் பசியினால் இளைத்தே**

**வீடுதோ ரிறந்தும் பசியறா தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்...**

திருவருட்பா பாடல் - 3471

என்ற பாடல் மூலமாக வெளிப்படுத்துகிறார்.

## சமத்துவம்

இருபதாம் நூற்றாண்டின் விடிவெள்ளியான பாரதியும் மனித நேயத்தோடு

அறத்தின் நிலையை புரட்சிகரமாக எடுத்துரைக்கிறார்.

**தனியொரு வனுக்குண வில்லையெனில்**

**ஜகத்தினை அழித்திடுவோம்**

பாரதியார் கவிதைகள், பாரத சமுதாயம்

நாட்டிலுள்ள ஒவ்வொரு தனி மனிதனும் உணவுபெற வேண்டும் வறுமை நிலை நாட்டைவிட்டு ஒழிய வேண்டும் என்பதை இப்பாடல் மூலமாக விளக்குகிறார். மனிதநேயமற்ற உலகினை முழுமையாக அழித்திடல் வேண்டும் என சமுத்துவத்தின் பேரொலியை முழக்குகிறார்.

## முடிவுரை

தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதும் தனிமனித அறமும் மனிதநேயமும் பின்னிப்பிணைந்துள்ளன. சங்கப்புறபாடலான **யாதும் ஊரே** என்ற உலகப்பொது நோக்கும் நீதி இலக்கியங்களின் **அறம் செய விரும்பு**தலும் காப்பியத்தின் பசிப்பிணி தீர்த்தலும் இடைக்கால **ஜீவகாருண்யமும்** இக்காலச் **சமத்துவ**மும் மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்தும் உன்னத நெறியினைத் தொடர்ந்து செய்து வந்துள்ளன. இந்நிலை தொடர்ந்து உலகமயமாக்கல் என்ற இன்றைய சூழலில் பெருகிவரும் சுயநலம் தவிர்த்து, மக்கள் வாழ தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் வழிவகுக்கும் என்ற கருத்தினை நிறுவும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வ◌ிற்குத் துணைநின்ற நூல்கள்


1. திருக்குறள், சாரதா பதிப்பகம் - நாலடியார், ஸ்ரீ செண்பகா பதிப்பகம்
2. புறநானூறு, -நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
3. சிலப்பதிகாரம், -கௌரா பதிப்பகம்
4. மணிமேகலை, -வர்த்தமானன் பதிப்பகம்
5. பாரதியார் கவிதைகள், -திருமகள் நிலையம்
6. வாசித்தலும் யோசித்தலும், சங்கநெறிகள் - கட்டுரைத் தொகுப்பு, -நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்


© 2026 முனைவர்விஜயலட்சுமி வெ.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

**KALANJIYAM – International Journal of Tamil Studies**
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 12–17
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# தேவிபாரதியின் நாவல்களில் காணப்படும் கதைமாந்தர்களின் வாழ்வியல் நெறிகள்

*The lifestyles of the protagonists found in Devi Bharathi's novels*

**யோசுவா எம். ஏ., எம் பில்.,பி எட்., ஞா.[1,*], முனைவர் மாசிலா தேவி எம்.ஏ.,எம் பில்.,பி எட் நெட் பி எச்.டி., சி.[2]**

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த் துறை ஜி. டி.என். கலைக்கல்லூரி (தன்னாட்சி) திண்டுக்கல். (உதவிப்ரோசிரியர் தமிழ்த்துறை எஸ்எஸ்எம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி, 9047043576 திண்டுக்கல், *India*

[2] இணைப் பேராசிரியர் தமிழ்த் துறை ஜி. டி.என். கலைக்கல்லூரி (தன்னாட்சி) திண்டுக்கல். *8508387333, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: யோசுவா எம். ஏ., எம் பில்.,பி எட்., ஞா. — yosuva1989@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | — | 30 September 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00002 |

## ஆய்வுச்சுருக்கம்

படைப்பாளர்கள் சமூகத்திற்கு உணர்த்த முற்படுகின்ற கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு கதாப்பாத்திரங்களே மிகச் சிறந்த கருவியாகத் திகழ்கின்றது. படைப்பாளர்கள் தாங்கள் கூறநினைக்கின்ற கருத்துக்களை வாசகர்களுக்குப் புலப்படுத்துவதற்காக பல புலப்பாட்டு நெறிமுறைகளை மேற்கொள்கின்றனர். படைப்பாளர்கள் கூறக்கூடிய கருத்துக்கள் ஒன்றாக இருப்பினும் அவற்றை வெளிப்படுத்துவதற்கு கையாளுகின்ற நுணுக்கங்கள் வேறுபடுகின்றன. தேவிபாரதி நாவல்களில் காணப்படுகின்ற கதைமாந்தர்களும் கதைக்கருவும் தனது அனுபவ வாழ்வுடன் தொடர்புடையவர்களாகவே காணப்படுகின்றனர். கதைகளில் வருகின்ற பெண் கதைமாந்தர்கள் மற்றும் ஆண் கதைமாந்தர்கள் அவர்களின் இயல்புகள் பற்றி விரிவாக ஆராயப்படுகின்றனர். ஒரு படைப்பாளி தனது படைப்பில் வாழ்க்கையினைப் பதிவு செய்கின்றார். படைப்பில் அவர் முன்வைக்கின்ற வாழ்க்கைக்கும் மனிதர்களுக்கும் உண்மைக் குணங்களைத் தனது அனுபவங்களிலிருந்து வெளிக்கொணர்கிறார்.
படைப்புலகில் வாழ்வு என்பது உலகியல் வாழ்வின் இன்னொரு பக்கமாகச் சித்தரிக்கப்படுகின்றனர். படைப்பாளியின் அனுபவம் மற்றும் கலையியல்பு இவற்றினைப் பொறுத்து தனது படைப்புக்குள் நடமாடச் செய்யும் தன்மையும் மாறுபடுகின்றது. அதேபோன்று கதைமாந்தர்களின் தன்மையினைப் பொறுத்து கதையின் பின்புலமும் கதைக்கருவும் மாற்றம் காண்கின்றது. அவ்வகையில் தேவிபாரதியின் சில முக்கிய கதாப்பாத்திரங்களே ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**Keywords / திறவுச்சொற்கள்:** கதை மாந்தர்; கடமை உணர்வும்; தன்னம்பிக்கை; வாழ்வியல் நிலை; பாத்திரத்தின் வலிமை

## Abstract

Characters are the best tool for expressing the ideas that creators try to convey to the society. Creators adopt many expressive methods to convey the ideas they want to convey to the readers. Although the ideas that creators can express are the same, the subtleties used to express them differ. The narrators and the plot seen in Devi Bharathi's novels are seen as related to their own experiences. The female and male narrators in the stories are examined in detail about their natures. A creator records life in his work. He reveals the true qualities of the life and people he presents in his work from his experiences.

In the world of creation, life is depicted as another side of worldly life. Depending on the experience and artistic style of the creator, the nature of the movement in his work also varies. Similarly, the background and plot of the story changes depending on the nature of the narrators. In this way, this article examines some of the key characters of Devi Bharathi.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ஞா., யோ. எ. ஏ. எ. பி. எ., & சி., மு. மா. தே. எ. பி. எ. நெ. பி. எ. (2026). தேவிபாரதியின் நாவல்களில் காணப்படும் கதைமாந்தர்களின் வாழ்வியல் நெறிகள். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 12–17. https://ngmtamil.in/journal-article/%e0%ae%a4%e0%af%87%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%aa%e0%ae%be%e0%ae%b0%e0%ae%a4%e0%ae%bf%e0%ae%af%e0%ae%bf%e0%ae%a9%e0%af%8d-%e0%ae%a8%e0%ae%be%e0%ae%b5%e0%ae%b2%e0%af%8d%e0%ae%95%e0%ae%b3%e0%ae%bf%e0%ae%b2%e0%ae%b2/

## கதை மாந்தர்கள் விளக்கம்

கதையானது பாத்திரப் படைப்பினால் உயர்வு பெறுகின்றது. கதையில் கதாப்பாத்திரங்களின் செயல்பாடுகள் வாசகரைக் கவரும் வண்ணம் இருத்தல் சாலச்சிறந்தது. கதை மறந்தாலும் பாத்திரங்கள் மறக்க முடியாத பாதிப்பினை உருவாக்க வேண்டும். கதை மாந்தர்களின் பண்பு, வளர்ச்சி, மாற்றம் இவற்றை விவரித்துக்கூற இயலாவிட்டாலும் இரு நிகழ்வுகள், ஒரு சூழல், ஒரு உணர்வு இவற்றில் ஒன்றினை உள்ளடக்கமாகக் கொண்டு கதையானது படைத்தல் வேண்டும்.

நாவல்களில் கதைக்கரு பொழுதுபோக்கு நிலையைத் தாண்டி மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைதல் வேண்டும்

படைப்பாளியின் பாத்திர உருவாக்கம் பற்றிக் கூறும்பொழுது,

> **“படைப்பில் அவன் முன்வைக்கின்ற வாழ்க்கைக்கும், மனிதர்களுக்கும் உண்மைக் குணங்களைத் தன் அனுபவங்களிலிருந்தே ஏற்றுகிறான். இவைகளைப் படைப்பாளியின் வாழ்க்கை குறித்த பார்வை எனல் தகும். இவ்வழியில் படைப்பாளியின் பாத்திரப் படைப்பும், வாழ்க்கை குறித்த பார்வையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன ஆகின்றன.”**
>
> **(திருநாவுக்கரசு, இராம. ‘சுந்தரராமசாமி: ஒரு கதைக்காரர்’, ப.97**

என்று இராம.திருநாவுக்கரசு கூறுகின்றார்.

எவ்வகைப் படைப்பாயினும் அப்படைப்பின் நோக்கத்தை கரு வெளிப்படுத்துகின்றது. உணர்ச்சி அனுபவம் மிக்க ஆசிரியர் உணர்ந்து தேர்ந்தெடுத்த கதைக் கருவே சிறப்புடையதாக காணப்படும் இச்சிறப்பு இல்லையென்றால் எவ்வளவு சிறந்த வாழ்க்கைப் பகுதி கதையில் அமைந்தாலும் பயனைத் தராது. கதைக்கரு பற்றி அறிஞர்கள் குறிப்பிடும்பொழுது,

> **“கலை என்பது என்றுமே உணர்ச்சிக்கு உட்பட்டது. அந்த அளவில் எனது பாத்திரங்களின் உணர்ச்சிகளுக்கு எனது கொள்கைகளைத் தளர்த்தி அவை கலை விஷயத்தில் தளர்ந்து கொடுக்கும் தன்மையுடையன நான் அவற்றிலே வளர்ச்சிக்கும், அன்புக்கும், மனிதாபிமனத்துக்கும் உரிய ஓர் உன்னத மனித சொரூபத்தையே தரிசிக்கிறேன்.” (ஜெயகாந்தன், ‘மாலை**

**மயக்கம்’, முன்னுரை, ப.7)**

என்று ஜெயகாந்தன் கூறுகிறார்.

**கதைக்கருவின் தன்மை**

ஒரு கதையானது படிப்பவரின் மனதில் நன்கு பதிய வேண்டுமென்றால் கதைக்கரு நன்கு அமைந்திருக்க வேண்டும் என்பதை மு.வ

**“கருவின் சிறப்பு பண்பின் சிறப்பு உணர்ச்சியின் சிறப்பு என அச்சிறப்புகள் பற்றி உணர்ந்து கூறப்படும் கரு சிறப்பாக அமையும் பட்சத்தில் படைப்புகள் படிப்போரின் நெஞ்சில் நீங்காமல் நிற்பனவாகும்.”**

(மு. வரதராஜன். இலக்கிய மரபு: ப: 130)

என்கிறார்

அதேபோல் த.ஏ.ஞானமூர்த்தி

**“கதையின் எச்செயல் அல்லது நிகழ்ச்சிகளை விவரிக்க வேண்டும் என்பதையும் எந்தக் குறிப்பிட்ட நேரத்தல் கதையின் கண் கருத்தை ஈர்க்க வேண்டும் என்பதையும் முடிவு செய்வதற்கு கருவே கதாசிரியரை நெறிப்படுத்துகிறது”**

(தா. ஏ. ஞானமூர்த்தி: இலக்கியத் திறனாய்வியல்: ப: 335)

என்கிறார்.

எனவே நாவல் படைப்புகளில் மனிதர்கள் சிறுகதைப் படைப்பாளர்களின் உலகிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றனர். சிறுகதையில் மனிதர்கள் ஏதாவதொரு தருணத்தைத் தனது படைப்பின் மூலமாக நிகழ்த்திக் காட்டுகின்றனர். சிறுகதையில் நிகழ்ச்சிகளின் சுருக்கம் காரணமாக மனிதர்களின் நுட்பமான அசைவுகள், படைப்பில் பதிவு செய்யப்பட்டு மனிதர்களும் அவர்கள் வாழ்வும் இனங்காணப்படுகின்றன. நாவலில் மனிதர்கள் மாறுதலும் வளர்ச்சியும் பெற்று அவர்களது பண்பு முழுமையாக வெளிப்படும் அளவிற்கு இடமளிக்கிறது.

**கதைமாந்தர்களின் வெளிப்பாடு**

நாவலின் மதிப்பீடானது அன்பு, குற்றம், மன்னிப்பு, ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய கருப்பொருள்களை மையமாகக் கொண்டு வளம் வருகின்றது. வறுமை மற்றும் அலைக்கழிப்புகளுக்கு மத்தியில் வாழ்கின்ற மனிதர்களின் வாழ்க்கையை அத்தகைய சூழலில் அவர்களின் தவறுகளையும் குறைகளையும் நிபந்தனையற்ற அன்பினாலும் மன்னிப்பினாலும் ஏற்றுக்கொள்வதைச் சுற்றியே இக்கதையானது பின்னப்படுகின்றது. மேலும் அன்பு மற்றும் மன்னிப்பின் வழியே மனிதர்கள் தங்களின் வாழ்க்கையில் சில நிம்மதியினை உணர்கின்றனர். குற்றங்கள் அதற்கான தண்டனைகள் மற்றும் இறுதியில் ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றின் வழியாக மனித உணர்வுகள் ஆராயும் விதமாக படைக்கப்பட்டவை இவரின் நாவல்கள்.

**காருமாமாவின் கடமை உணர்வும் மனம் தளராமையும்**

காரு என்பவர் தேவிபாரதியின் தாய்மாமா, நாவல் முழுவதும் காருமாமா என்றே அழைக்கப்படுகின்றார். காரு மாமாவின் உடன் பிறந்தவர்கள் செலம்பா, முத்தம்மாள், பழனியம்மாள் ஆகியோர். காருமாமா என்ற மனிதனைச் சுற்றி புனைவின் கதை நகர்ந்தாலும் ஒரு காலக்கட்டத்தில் சமூக வரலாறு புனைவின் இடையே வெளிப்படுகின்றது. இச்சமூகத்தின் ஒரு பாகமாகவே காருமாமா என்ற மனிதர். ஆனால் ஒரு புனைவாகச் சொல்லப்படும் அளவுக்கு அவர் வாழ்க்கை இச்சமூகத்திற்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எல்லாவற்றையும் இழந்த பிறகும் சக மனிதர்கள் மீது

கொண்ட கருணையையும் மன்னிக்கும் குணத்தையும் கைவிடாதவராகவே இருந்திருக்கின்றார். எல்லாவற்றிலும் தோற்றுப்போன் காரு மாமா காவிய நாயகனுக்குரிய அத்தனை தன்மைகளையும் பெற்றவராகவே புனைவில் சொல்லப்படுகின்றார். இவரைப் பற்றிக் குறிப்பிட நினைக்கும் பொழுது,

> **“காருவின் தந்தை இறந்தபின் தாய் நோய்வாய்ப்பட்டுவிடுகிறாள். ஆனால் காரு மனம் தளராமல் குடும்பத்திற்காக தந்தையின் கடமையை ஏற்று பதினைந்து வயதிலேயே கடுமையாக உழைத்து பல துன்பங்களை அனுபவித்து சகோதரிகளை வளர்த்தார்” (தேவிபாரதி நீர்வழிப்படூஉம் ப.171)**

மேலும் அவரது நிலைகளைக் குறிப்பிட நினைக்கும்பொழுது, இதனை

> **“நல்ல சோறு தின்றுப்பானா? நல்ல துணிமனிதேங்கட்டிருப்பானா? எங்கள உட்டுப்புட்டு ஒரு நோம்பி நொடி, எழவெடஞ் சென்னு எங்கயாவது போயிச் சுத்திப்புட்டு வந்திருப்பானா? ” (தேவிபாரதி நீர்வழிப்படூஉம் ப.171)**

என்று காருமாமா குடும்பத்தின் மேல் கொண்ட கடமை உணர்வால் தன் இன்பத்தைப் பற்றி சிந்திக்காமல் மனம் தளராமல் சகோதரிகளை வளர்த்தார் என்பதை முத்தம்மாள் புலம்புவதாக அமைகின்றது.

**செலம்பா கதாப்பாத்திரமும் தன்னம்பிக்கையும்**

நாவலில் செலம்பா முக்கிய கதாப்பாத்திரமாகவும் சமூகத்திற்கு பெண்ணிய கருத்துக்களை அதிகமாக வெளிப்படுத்துபவளாகவும் படைக்கப்பட்டுள்ளார். தன் கணவனை இழந்துவிட்டுப் பெண் குழந்தைகளுடன் தவித்துக் கொண்டிருக்கும் அக்காவின் அன்பு தான் காருமாமாவை உடையம்பாளையத்திற்கு வரவைத்து இருக்கின்றது. தன் அக்காவின் நலனுக்காக தன் வாழ்க்கையைப் பணையம் வைக்கத் தயாராக இருக்கிறார் காருமாமா. ராசம்மா அவரை விட்டுச் சென்ற பிறகும் அக்காவுடனேயே இருக்கிறார். காருவுக்கும் தனக்குமான அளவு கடந்த அன்பை ராசம்மாவிடம் நிறுவுவதிலேயே குறியாக செயல்பட்டவர். கதை சொல்லியான ராசுவின் அம்மா இவள் காருவின் தங்கை செட்டியாருடன் சென்றுவிட்ட தன் மனைவியைப் பற்றி ஒரு குற்றச்சாட்டும் காருவுக்கு இல்லை, பெரு வெள்ளத்தை எதிர்த்து சிறு புனையால் என்ன செய்துவிட முடியும் என்ற யதார்த்தத்தை புரிந்து கொண்டவராகவே படைக்கப்பட்டுள்ளார் காருமாமா.

> **“செலம்பாவிற்கு திருமணம் நடந்து குழந்தை பிறந்த இரண்டு வருடங்களுக்குள் கணவர் இறந்துவிட்டார். அதன் பின் பெண்குழந்தையோடு தனியாகவே வாழ ஆரம்பிக்கிறாள். செலம்பாவின் தனிமை நிலை கண்டு அவளின் அம்மாவும் தம்பி காருவும் தங்களோடு வந்துவிடும்படி வற்புறுத்தினர்”**
>
> **(தேவிபாரதி நீர்வழிப்படூஉம் பக்.55 - 56)**

என்கிறார். அதற்கு செலம்பா தன் தன்னம்பிக்கையை மெய்ப்பிக்கும் பொருட்டு

> **“நெட்டையோ குட்டையோ நா இங்கேயே இருந்துக்கறே”**
>
> **(தேவிபாரதி நீர்வழிப்படூஉம் ப.56)**

என்று உறுதியான மனநிலையுடன் இனி தனிமையாக வாழமுடியும் என்ற நம்பிக்கையோடு இன்பமோ துன்பமோ கணவர் வீட்டிலேயே இருந்துகொள்கிறேன் எனக்கூறி அவர்களோடு செல்ல மறுத்துவிடுகிறாள்.

முத்தையன் வலசுவின் எத்தாத்த நிலை

முத்தையன் வலசு தேவிபாரதிக்கு பெரியப்பா முறையாவார். முத்தையன் வலசுவிற்கும் சவுந்திராவுடன் திருமணம் நடந்து முடிந்த சில நாட்களிலேயே ஊரார்

செலம்பாவுக்கும் முத்தையன் வலசுக்கும் தவறான உறவு இருந்ததாக ஊரார் கூறியதை சவுந்தரா நம்பினாள். சவுந்திரா கோபம் கொண்டு செலம்பாவிடம் கடுமையான வார்த்தைகளைப் பேசி சண்டையிட்டாள். இதனை அறிந்த காருமாமாவும் செலம்பாவிற்குத் துணையாக வந்து தங்குகின்றார். எதிரெதிரான வீட்டில் இருந்தும் பலகாலம் ஒற்றுமையாக இருந்தும் காருவும் முத்தையன் வலசும் பேசிக்கொள்வதில்லை.

**“நல்வாய்ப்பாக அப்போது அவருக்கு வலிப்பு ஏற்பட்டிருக்கிறது. சரிந்து கீழே விழுந்து கை,க◌ால்கள் வெட்டியிழுத்ததைப் பார்த்தவர்கள் அவரை அங்கேயே விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள், மாமா கத்தியிருக்கிறார். வாயிலிருந்து கோழை வழிந்திருக்கிறது. முற்றிலும் கைவிடப்பட்டவராக அங்கே கிடந்து துடித்துக் கொண்டிருந்த மாமாவை அவரால் ஈஸ்வரி என அழைக்கப்பட்ட பெண் பார்த்தாளாம் ஓடிப்போய் அருகிலிருந்த பெட்டிக்கடை ஒன்றிலிருந்து சாவிக்கொத்து ஒன்றை எடுத்து வந்து மாமாவின் உள்ளங்கைகளுக்குள் திணித்து அழுத்திப் பிடித்துக் கொண்டாளாம், யாரோ கொண்டு வந்து நீட்டிய தண்ணீரை முகத்தில் விசிறியடித்து, இரண்டு மடங்குக் குடிக்கக் கொடுத்தார்களாம், துடிப்படங்கியதும் அவரை அதே உபய மண்டபத்தில் கால்களை நீட்டி மலர்த்திப் படுக்க வைத்துவிட்டு உடனடியாக அங்கிருந்து போய்விட்டார்களாம்.”**

**(தேவிபாரதி நீர்வழிப்படூஉம் ப.158)**

என்கிறார். ஒருவர் துன்பத்தில் இருக்கும் சூழ்நிலையில் உதவுபவரே உண்மையான மனிதர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. இதனை வள்ளுவர்

**“மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**

**துன்பத்துள் துப்பாயர் நட்பு” (குறள் எண் 106)**

என்று நல்லவர்கள் உறவை மறத்தல் கூடாது, துன்பத்திலும் நம்மை விட்டு விலகாதவரை விட்டுவிடக் கூடாது என கூறியுள்ளதற்கு இனங்க இக்காதாப்பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளது.

### குமரப்ப பண்டிதனின் வாழ்வியல் நிலை

நொய்யல் நாவலில் நாவிதாராக குமரப்ப பண்டிதன் என்னும் முக்கிய கதாப்பாத்திரமாக வளம் வருகிறார். சேவைச் சாதியைச் சார்ந்த அவர் சாதிய ரீதியாய கீழ்மைப்படுத்தப்பட்டவராக இருந்தாலும் தன் முயற்சியால் அவர் கற்றுக்கொண்டுள்ள ஜோதிட மற்றும் ஜாதகம் பலன்களைக் கணிக்கின்ற திறன், பிணி போக்குகின்ற மருத்துவ ஞானம் மட்டுமின்றி அவர் தன் வாயிலிருந்து சொல்லுகின்ற நல்ல சொற்களுக்காக மக்கள் தவம் கிடப்பதையும் அடுத்து அவர்கள் தயங்காமல் அவற்றைச் செய்வதாகவும் பதிவு செய்கிறார்.

வறட்சியின் கோரப்பிடியில் ஊர் சிக்குண்டு கிடப்பதைப் பார்த்து குமரப்ப பண்டிதனிடம் கேட்கும்பொழுது அவர் கிணறு தோண்டச்சொன்னவுடன் அந்த ஒற்றை வார்த்தையை நம்பி கிணற்றினைத் தோண்டுகின்றனர். இறுதியில் நீர் கண்களில் தட்டுப்படாமல் பரிதவித்து ஓர் நல்வழி பிறந்துவிடாதா? எனும் ஏக்கம் படரும்போது அவர்கள் குமரப்ப பண்டிதனின் முன்னால் கிட்டத்தட்ட கையேந்தி நிற்கின்றனர். இந்த ஒரு கணத்தில் பண்டிதன் ஓர் நாவிதன் தானா என்ற சந்தேகம் தோன்றுகின்றது. மேலும் அதனால் தன் மீது வாரி இறைக்கப்பட்;ட கீழ்மையின் சகதிகளை முற்றிலுமாக துடைத்தெறிந்து விட்டு நிற்கும் அவர்களின் பண்பினைப் பார்த்து குமரப்ப பண்டிதனின் பாத்திரம் ஆச்சரியப்படும் விதமாக படைக்கப்பட்டுள்ளது. மேலும் குமரப்ப பண்டிதனின் துயரங்கள் நிறைந்த வாழ்வும் பிறகு அவன் அந்நிலத்தில் நிலைபெறும்

புள்ளியும் நிகழும் கதை சூழலில் மிகவும் முக்கியமான குறியீடாக நிலை கொள்கிறது.

> **“குமரப்ப பண்டிதன்தான் அவனுக்குப் பாடம் சொல்லித்தருகிற வாத்தியார். தினமும் இரண்டுபேரும் ஒன்றாகத்தான் பள்ளிக்கூடம் போவார்கள். சவாரி வண்டியில் அவனைக் கொண்டுபோய் விட்டுவிட்டு சாய்ந்திரம் பள்ளிக்கூடம் விடுகிறவரை இருந்து கூட்டிக்கொண்டு வருவான் தொப்பளான். குமரப்பப் பண்டிதன் வண்டிக்காலைப் பிடித்துக்கொண்டு கூடவே நடந்து வருவான். யார் என்ன சொன்னாலும் வண்டியில் ஏறவே மாட்டான். வேம்பண கவுண்டர்கூட நாள் தவறாமல் அவனுக்குச் சொல்லிப்பார்ப்பார்.” (தேவிபாரதி, நொய்யல் ப.84)**

என்பதன் மூலம் அவனது பாத்திரத்தின் வலிமை வளப்படுத்தப்படுகிறது.

குமரப்ப கவுண்டர் நாவலில் பல மிக முக்கியமான ஆண் கதாப்பாத்திரங்களில் ஒருவர் மனித மாண்புடன் இயங்குகிறார். இயற்கை சார்ந்த மனித உணர்வுகளை மையமாகக் கொண்ட இந்த நாவலில் குமரப்ப பண்டிதர் போன்ற பாத்திரங்கள் மூலம் கொங்கு மண்ணின் கலாச்சாரம் வெளிப்படுத்தப்படுகின்றது.

குமரப்பக் கவுண்டர், தேனப்பக் கவுண்டர், சென்னி கவுண்டர், வென்னி கவுண்டர் போன்ற கதாப்பாத்திரங்களில் முக்கிய ஆண் கதாப்பாத்திரங்களில் ஒருவராக படைக்கப்பட்டுள்ளார். கொங்குத் தமிழ் மொழியால் தொல்குடி மக்களின் கதைகள், நம்பிக்கைகள், சடங்குகள் பேசும் நாவலில் குமரப்ப கவுண்டர் போன்ற பாத்திரங்கள் அந்த மண்ணின் பண்பாட்டைக் காட்டுகின்றது.

## முடிவுரை

எனவே ஒரு கதையின் சிறப்பிற்கு கதைக்கருவே மிக முக்கியம் என்பதையும் கருவில் சிறப்பு இல்லை என்றால் கதையிலும் சிறப்பு இருக்காது. கதைக்கருவானது எளிமையாக அமைந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளுவர் என்பதையும் தேவிபாரதியின் கதாப்பாத்திரங்கள் அனைத்தும் அறத்தையும் மக்களின் எளிமையான வாழ்வினையும் பிரதபலிப்பதாக அமைந்து இருப்பதை இக்கட்டுரையின் மூலம் அறியப்படுகின்றது.

## துணைநூற்பட்டியல்


1. திருநாவுக்கரசு, இராம. ‘சுந்தரராமசாமி: ஒரு கதைக்காரர்’, (2012), காவ்யா பதிப்பகம், சென்னை

2. ஜெயகாந்தன், ‘மாலை மயக்கம்’, (2002), ராணி முத்து பதிப்பகம், சென்னை,

3. மு.வரதராசன், “இலக்கிய மரபு”, (2019), பாரிநிலையம், சென்னை.

4. த.ஏ. ஞானமூர்த்தி,”இலக்கியத் திறனாய்வியல்”, (1990) ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

5. தேவிபாரதி -‘நீர்வழிப்படூஉம்’, (2024)தன்னறம் வெளியீடு, கிருஷ்ணகிரி மாவட்டம், சிங்காரப்பேட்டை – 635 307.

6. தேவிபாரதி -‘நொய்யல்’, (2002) தன்னறம் வெளியீடு, கிருஷ்ணகிரி மாவட்டம், சிங்காரப்பேட்டை – 635 307.


© 2026 யோசுவா எம். ஏ., எம் பில்.,பி எட்., ஞா., முனைவர் மாசிலா தேவி எம்.ஏ.,எம் பில்.,பி எட் நெட் பி எச்.டி., சி.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 18–27
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# காலந்தோறும் தமிழும் பல்துறை அறிவும்

*Tamil and Multidisciplinary Knowledge Through the Ages*

முனைவர் பேபிநிஷாந்தி மெ.*

னி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 02, தமிழ்நாடு, இந்தியா., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் பேபிநிஷாந்தி மெ. — ngmcollegelibrary@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | — | 30 September 2026 |
| DOI | | Article ID / கட்டுரை எண் | |
| — | | KALN-2026-00008 | |

## ஆய்வுச்சுருக்கம்

தமிழ்மொழியின் வளர்ச்சியானது இலக்கியப் படைப்புகளின் எண்ணிக்கை பெருகிய வரலாறு மட்டுமல்ல. பல்வேறு அறிவுத் துறைகளுடன் இணைந்து வந்த வரலாறாகவும் அமைகிறது. சங்க இலக்கியங்களில் இயற்கை, நிலவியல், வேளாண்மை, காலநிலை, விலங்கியல், கடல்சார் வாழ்க்கை, வணிகம் போன்றவை மக்களின் வாழ்க்கை முறைகளைக் கொண்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. அற இலக்கியங்களில் மருத்துவம், அரசியல், பொருளாதாரம், ஒழுக்கவியல் போன்ற அறிவுத்துறைகள் முறையான சிந்தனைகளாக அமைகின்றன. காப்பியங்கள் இசை, நடனம், நாடகம், நகர அமைப்பு போன்ற கலை மற்றும் சமூக அறிவுகளைப் பதிவு செய்கின்றன. நவீன காலத்தில் அச்சு, அறிவியல் தமிழ், கலைச்சொல்லாக்கம், ஆகியவற்றின் வழியாக தமிழ் புதிய அறிவுகளை ஏற்றுக்கொள்கிறது. இன்றைய நிலையில் கணினித் தமிழ், இணையத் தமிழ், செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளுடன் தமிழ் இணைந்து வளர்ந்துள்ளது. இவ்வாறு சங்ககாலம் முதல் தமிழின் வளர்ச்சியைப் பல்துறை அறிவின் தொடர்ச்சியான பயணமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**Keywords / திறவுச்சொற்கள்:** தமிழ்; பல்துறை அறிவு; சங்க இலக்கியம்; அறிவியல் தமிழ்; கணினித் தமிழ்; செயற்கை நுண்ணறிவு.

## Abstract

The evolution of the Tamil language is not merely a history of the proliferation of literary works; it is also a journey intertwined with various fields of knowledge. Sangam literature documents aspects such as nature, geography, agriculture, climate, zoology, maritime life, and trade through the lens of people's lifestyles. Didactic literature incorporates fields like medicine, politics, economics, and ethics as structured systems of thought. Epic literature records knowledge regarding arts and society, including music, dance, drama, and urban planning. In modern times, Tamil has embraced new knowledge through printing, scientific Tamil, and the coining of technical terminology. Currently, the language has evolved alongside fields such as computer-based Tamil, internet-based Tamil, and artificial intelligence. Thus, this article presents the growth of Tamil from the Sangam era to the present as a continuous journey alongside multidisciplinary knowledge.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** மெ., மு. பே. (2026). காலந்தோறும் தமிழும் பல்துறை

அறிவும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 18–27.

## முன்னுரை

ஒரு மொழியின் ஆற்றலை அதன் இலக்கியச் செழுமையைக் கொண்டு மதிப்பிடுவது மட்டுமல்லாது, அம்மொழி மனிதனின் எத்தகைய அறிவுத் தேவைகளைப் பதிவு செய்துள்ளது என்பதும் அதன் வளர்ச்சியின் அளவுகோலாகும். தமிழ்மொழி தோன்றிய காலந்தொட்டே மனித வாழ்வின் பல்வேறு கூறுகளோடு இணைந்து வளர்ந்துள்ளது. தமிழரின் வாழ்க்கை இயற்கைச் சூழலோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக நிலம், நீர், காலம், உயிரினங்கள், தொழில், வணிகம், உணவு போன்றவை இலக்கியப் பதிவுகளாக மாற்றமைந்துள்ளன. இதனை தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டின் அடிப்படையில்,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமும்”**

**(தொல். பொருளៈ. அகம். நூற்பா.5)**

என்று குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களையும் அவற்றுடன் தொடர்புடைய வாழ்வியலையும் சுட்டுகிறது. இது இலக்கிய வகைப்பாடு மட்டும் அல்லாமல் நிலவியல், சூழலியல், வாழ்வியல், தொழில், பண்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் அறிவாற்றல் முறையாகவும் உணரமுடிகிறது.

## சங்கத் தமிழரின் இயற்கையறிவு

சங்க இலக்கியத்தில் இயற்கை மனித உணர்வுகளுக்குப் பின்னணியாக மட்டும் காட்சிப்படுத்தவில்லை. அது தனக்கென ஒரு வாழ்வியல் அமைப்பைக் கொண்டதாக அமைந்துள்ளது.

குறுந்தொகையில்,

**“யாயும் ஞாயும் யாராகியரோ**

**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்”**

**(குறுந்தொகை. பா. 40)**

இப்பாடலில் செம்மண்ணில் பெய்த மழைநீரானது அந்த மண்ணோடு இரண்டரக் கலந்து நிற்பது போல, நம் அன்பு கொண்ட நெஞ்சங்கள் தாமாகவே ஒன்றாய் கலந்துவிட்டன, என்று உவமை வழி காதல் உணர்வை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சங்க இலக்கிய பாடல்களின் பெரும்பான்மையாக மனித வாழ்க்கை நிலத்தோடும் பருவத்தோடும் இணைக்கப்பட்டுள்ளதை உணரமுடிகிறது.

குறிஞ்சி நிலத்தில் மலை, அருவி, காந்தள், குறிஞ்சி, யானை போன்ற இயற்கைக் கூறுகள், முல்லையில் காடு மற்றும் மேய்ச்சல் வாழ்க்கை, மருதத்தில் வயலும் உழவும், நெய்தலில் கடலும் மீன்பிடித்தலும், பாலையில் வறட்சியும் பயணமும் இடம்பெற்றுள்ளன. எனவே சங்ககால மக்களின் சிந்தனை சூழலை தனித்த பொருளாக அல்லாமல், மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகக் கருதியிருப்பதை அறியமுடிகிறது.

## நிலவியல் பார்வை

தமிழின் திணைக் கோட்பாடு, நிலவியல் சார்ந்த பார்வையை வெளிப்படுத்தும் வகையில் தலைசிறந்து விளங்குகிறது. தொல்காப்பியம் நிலத்தை ஐந்து திணைகளாக

வகைப்படுத்துவதோடு, ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றையும் தொடர்புப்படுத்துகிறது.

**“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**

**நுவலுங் காலை முறைசிறந் தனவே.”**

**(தொல். பொருளௌ. நூற்பா.3)**

நிலம், பொழுது ஆகியவை முதல்பொருளாகவும், அந்த நிலத்தோடு தொடர்புடைய இயற்கைக் கூறுகள் கருப்பொருளாகவும், மனித உணர்வு உரிப்பொருளாகவும் அமைந்துள்ளன. இங்கு நிலமானது புவியியல் பரப்பாக இல்லாமல், மனித வாழ்க்கை, தொழில், உணவு, உயிரினங்கள், பண்பாடு ஆகியவற்றைத் தீர்மானிக்கும் சூழலாக பார்க்கப்படுகிறது. எனவே திணைக் கோட்பாடு மக்களின் பழைய நிலவியல் அறிவைப் புரிந்துகொள்ள உதவும் முக்கியமான இலக்கியச் சான்றாக அமைகிறது.

சங்க காலத் மக்கள் நிலத்தின் தன்மை, ஈரப்பதம் மற்றும் மண்களின் நிறம் ஆகியவற்றை நுட்பமாக ஆராய்ந்து அவற்றைப் பயிர் விளைச்சலுக்கு ஏற்பப் பகுத்திருந்தனர். நீர் வளம் குறைந்து, கரடுமுரடான மற்றும் கடினமான மண் அமைப்பைக் கொண்ட குறிஞ்சி, முல்லை நிலப் பகுதிகளைச் சங்க இலக்கியங்கள் வன்புலம் என்றும், தீம்புனல் (நன்னீர்) பாய்ந்து வண்டல் படிந்த வளமான மருத நிலப் பகுதிகளை மென்புலம் என்றும் அழைத்தனர்.

புறநானூற்றில் மதுரை நக்கீரர் இயற்றிய பாடாண் திணைப் பாடலில் மென்புலத்து (வயல்) உழவர்கள், வன்புலத்து (முல்லை) எருதுகளைப் பயன்படுத்தி உழுவது இருவேறு நிலங்களின் பிணைப்பைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**“வன்புலக் கேளிர்க்கு மென்புல மருங்கின்**

**விசிபிணி முழவின் பாணர் ஒக்கல்”**

**(புறம். பா - 395)**

இப்பாடலில் சோழ நாட்டின் வளமைக் குறித்து பாடும்போது வன்புலத்தில் வாழும் மக்களுக்கு, மென்புலமாகிய மருத நிலத்துச் செல்வங்களை வாரி வழங்குவதை புலவர் குறிப்பிட்டுள்ளார். எனவே தமிழர்கள் நிலத்தின் கடின, மென்மைத் தன்மைகளைத் துல்லியமாக அறிந்திருந்த செய்தியை அறியமுடிகிறது.

மழைநீரை மட்டுமே நம்பி உழவு செய்யப்படும் வறண்ட கரிசல் நிலத்தைப் 'புன்புலம்' என்று அழைத்து, அதில் விளையும் வரகு, தினைப் பயிர்களைப் பற்றி விவரிக்கும் அகநானூற்றுப் பாடலில் புலவர் இடைக்காடனார்,

**“கல்லென் கானத்துக் கட்கண் ஆமான்**

**புன்புல வரகின் பூப்போங் கணவற்…”**

**(அகம். பா - 194)**

பெருமழை பொழிந்த விடியற்காலையில், செம்மண் நிலத்தில் ஏர் பூட்டி உழுத நிலமானது ஊனைக் கிழித்தது போலச் சிவந்து காணப்பட்டன. அந்த ஈரமான செம்புழுதியில் விதைக்கப்பட்ட வரகு விதைகள் நன்றாக முளைத்து வளர்ந்துக் காணப்பட்டன. இதனை புலவர் மண்ணின் நிறம், அதன் கடினத் தன்மை, நீர்வளம் மிக்க ஆற்றுப் படுகை ஆகியவற்றைத் தங்களின் உழவுப் பட்டறிவால் வகைப்படுத்திய சங்ககால மக்களின் வாழ்வியல் அறிவை உணரச்செய்துள்ளார்.

**வேளாண் சிந்தனை**

சங்க இலக்கியங்களில் வேளாண்மை என்பது ஒரு தொழிலாக மட்டுமின்றி, ஒரு

வாழ்வியல் சிந்தனையாகவும், அறிவியல் நுட்பமாகவும் போற்றப்பட்டுள்ளது. நிலத்தைத் தெரிவுசெய்வது முதல் அறுவடை செய்து விதைகளைப் பாதுகாப்பது வரை மக்களின் வேளாண் சிந்தனை சிறந்து விளங்கிற்று.

வேளாண்மை மக்களின் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படையாக இருந்தது. மருதத்திணைப் பாடல்களில் வயல், நெல், நீர், உழவு, எருது, உழவர் போன்ற பல்வேறு பகுதிகளாக இடம்பெற்றுள்ளன. இதனை திருவள்ளுவர் குடிமையியல் அதிகாரத்தில் உழவின் அடிப்படைத் தன்மை குறித்து விளக்கியுள்ளார்.

**“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை.”**

**(குறள். 1031)**

என்று உலகத்தின் இயக்கத்திற்கு அடிப்படையாக அமையும் உழவுத் தொழிலின் சிறப்பை எடுத்துரைக்கிறது.

மேலும்,

**“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது**

**எழுவாரை எல்லாம் பொறுத்து.”**

**(குறள். 1032)**

என்று உழவரின் சமூகப் பங்களிப்பையும் விவரிக்கிறது. இவ்விரு குறள்களும் வேளாண்மையை ஒரு தொழிலாகக் கருதாமல், சமூகத்தின் பொருளாதார அடித்தளத்தை எடுத்துரைக்கின்றது. இதன் மூலம் தமிழில் வேளாண் சார் அறிவு, பொருளாதாரச் சிந்தனை ஆகியவை இணைந்திருப்பதை அறிய முடிகிறது.

**இயற்கை வேளான்மை**

மனித முயற்சி இன்றி இயற்கையாகக் காடுகளிலும் மலைகளிலும் விளையும் தானியங்களை அறுவடை செய்யும் முறையும் சங்க கால மக்களிடம் இருந்துவந்துள்ளது. இது குறிஞ்சி நில மக்களின் வேளாண் சிந்தனையை அறியமுடிகிறது.

**“தொய்யாது வித்திய துளர்படு துடவை**

**ஐவன வெண்ணெல்”**

**(புறம். பா - 168)**

இங்கு தொய்யாது வித்திய என்றது நிலத்தை மனிதர்கள் உழாமல், தானாகவே காட்டில் முளைத்து வளர்ந்த மலைநெல் என்று பொருள்படும். இயற்கையோடு இயைந்த உழவுச் சிந்தனைக்கு இதுவொரு சிறந்த சான்றாக விளங்குகிறது. வேளாண்மை வயல் வேலை மட்டுமல்ல. அது நீர்ச் சேமிப்பு, விதை மேலாண்மை, மண் வளம் காத்தல், மனிதப் பண்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு வாழ்வியல் சிந்தனையாக அமைகிறது.

**நீர் மேலாண்மையும் வேளாண்மையும்**

மழைநீரையும், ஆற்று நீரையும் தேக்கி வைத்து வேளாண்மை செய்ய வேண்டும் என்ற நீர்ப்பாசனச் சிந்தனை சங்ககால மக்களிடம் காணப்பட்டுள்ளது. நீரின்றி வேளாண்மை இல்லை எனும் செய்தியை புறநானூற்றுப் பாடலில் மன்னர்களுக்குப் புலவர்கள் அறிவுறுத்துமாறு குடபுலவியனார் இயற்றியுள்ளார்.

**“நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்**

**தட்டோ ரம்ம, இவண் தட்டோ ரே**

**தள்ளாதோரே தள்ளாதோரே.”**

**(புறம். பா - 18)**

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்குப் பாடிய இப்பாடலில், நிலம் தாழ்வாக உள்ள பகுதிகளில் எல்லாம் ஏரிகளை அமைத்து நீர்நிலைகளைப் பெருக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்பவர்களே உலகில் அழியாப் புகழைப் பெறுவார்கள், செய்யாதவர்கள் வீணே மடிவார்கள் என்றும் வேளாண்மைக்கான நீர் மேலாண்மைச் சிந்தனைக் குறித்து இயற்றியுள்ளார்.

நீரானது மக்களின் வாழ்வியலில் இன்றியமையாத ஒன்றாகும். வேளாண்மை மட்டுமன்றி, குடிநீர், உணவு உற்பத்தி, கால்நடை, மனித வாழ்வு ஆகிய அனைத்திற்கும் நீர் அடிப்படை ஆதாரமாக அமைகிறது.

இந்நீரின் முக்கியத்துவம் குறித்து திருவள்ளவர் வான்சிறப்பு அதிகாரத்தில்,

**“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**

**தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று.”**

**(குறள். 11)**

என்றும்,

**“நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**

**வானின்றி அமையாது ஒழுக்கு.”**

**(குறள். 20)**

என்றும் நீரின்றி உலக வாழ்க்கை இயங்காது என்ற அடிப்படைச் சூழலியல் சிந்தனையை இக்குறள்களின் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கியங்களில் ஆறு, குளம், ஏரி, அருவி, மழை போன்ற நீராதாரங்கள் பல்வேறு சூழல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால் சங்க கால மக்களின் பழைய இலக்கியங்களை நீரியல் மற்றும் சுற்றுச்சூழல் வரலாற்று ஆய்வுகளுக்கான துணைமை ஆதாரங்களாகவும் துணைநிற்கின்றன.

### மருத்துவ மரபறிவு

நம் முன்னோர்களின் மருத்துவச் சிந்தனை மிகவும் பழமையானது. உடல் நலம், நோய், உணவு, மருந்து, உடல் சமநிலை போன்ற கருத்துகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என நோயில்லாத் தன்மையையே நம் முன்னோர்கள் செல்வமாகக் கருதினார். சங்க கால மக்கள் தங்களைச் சுற்றியுள்ள தாவரங்களின் மருத்துவக் குணங்களை நன்கு அறிந்தவர்கள்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான சிறுபஞ்சமூலம் மருத்துவப் பெயரையே தன் நூலின் பெயராகக் கொண்டு அமைந்துள்ளது. ஐந்து வகையான மூலிகைகளைக் கொண்டு நோயை நீக்குவது போல, ஐந்து வகையான அறக்கருத்துகள் மனித வாழ்வின் தீமைகளை நீக்கும் என்ற அறக்கருத்துக்களை விளக்குகிறது.

சிறுபஞ்சமூலம் என்ற பெயரே ஒரு முக்கியமான மருத்துவக் குறிப்பைத் தருகிறது. கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து வேர் பொருட்களின் தொகுப்பாகும். இவை சித்த மருத்துவத்தில் பல்வேறு நோய்களுக்குப் பயன்படும் மூலிகைகளாகப் பயன்பட்டுவருகின்றன.

**“சிறிய வழுதுணைவேர் சின்னெருஞ்சி மூலம்**

**சிறுமலி கண்டங்கத்தரிவேர் நறிய**

**பெருமலி ஓர்ஐந்தும் பேசுபல் நோய் தீர்க்கும்**

**அரிய சிறுபஞ்சமூலம்.”**

**(பதார்த்த குண சிந்தாமணி. பா. 495)**

இங்கு மருத்துவச் சிந்தனையானது சங்ககால மக்களின் பழந்தமிழ் வாழ்வியலில் உணவு, உடல் நலம், மூலிகை மற்றும் நோய் தீர்த்தல் ஆகியவை ஒன்றையொன்று சார்ந்தது என்பதை எடுத்தியம்புகிறது. மருந்தானது நோய் ஏற்பட்ட பின் பயன்படுத்தப்படுவதல்ல. நோய் வராமல் உடலைப் பாதுகாக்கும் வாழ்க்கை முறையையும் குறிப்பிடுகிறது. எனவே சிறுபஞ்சமூலம் மக்கள் மூலிகையின் மகத்துவத்தை அறிந்திருந்ததையும், உடல்நலச் சிந்தனையையும் வெளிப்படுத்தும் இலக்கியச் சான்றாக அமைந்துள்ளது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் மருத்துவக் குறிப்புடன் அமைந்த மற்றொரு நூல் ஏலாதி ஆகும். உடல் நோயைப் போக்கும் மருந்தைப் போல, அறிவும் அறநெறியும் மனிதனின் வாழ்வியல் குறைகளைப் போக்கும் என்ற கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளது.

ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறு பொருட்களின் சேர்க்கையால் உருவாகும் மருந்தாகக் குறிப்பிடப்படுகிறது.

**“நிறை உடைமை, நீர்மை உடைமை கொடையே**

**பொறை உடைமை, பொய்ம்மை புலாற்கண் மறை உடைமை**

**வேய் அன்ன தோளாய் இவை உடையான் பல் உயிர்க்கும்**

**தாய் அன்னன் என்னத் தகும்.”**

**(ஏலாதி. பா. 6)**

என்று உடல்நோயைப் போக்கும் மருந்தாக ஏலாதி பயன்பட்டது போல, ஏலாதி நூலில் இடம்பெறும் அறக்கருத்துகள் மனிதனின் உள்ளநோயைப் போக்கும் மருந்தாக அமைந்துள்ளன. இதன்மூலம் பழந்தமிழரின் மருத்துவச் சிந்தனை உடல் நலம் மட்டுமின்றி மனநலம் மற்றும் அறநெறியையும் உள்ளடக்கியதாக இருந்தது காணலாகிறது.

திருவள்ளுவர் மருத்துவத்திற்கென தனி அதிகாரத்தையே அமைத்துள்ளார்.

**“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**

**வாய்நாடி வாய்ப்பச் செயல்.”**

**(குறள். 948)**

என்று நோயை அறிதல், அதன் காரணத்தை ஆராய்தல், அதற்கான தீர்வை அறிதல், நோயாளியின் நிலைக்கேற்ப செயல்படுதல் என்ற நான்கு நிலைகளை இக்குறளில் அமைத்துள்ளார்.

**உணவியல் மரபு**

தமிழ் இலக்கியங்களில் உணவு மனித வாழ்வின் அடிப்படைத் தேவையாகும். உணவு பசியைத் தீர்ப்பதற்கான பொருளாக மட்டும் கருதப்படவில்லை. உடல் நலத்துடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. நிலம், நீர், வேளாண்மை, உழைப்பு, விருந்தோம்பல், உடல்நலம், சமூக வாழ்வு ஆகியவற்றோடு உணவு நெருங்கிய தொடர்புடையது.

சங்க இலக்கியங்களில் மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. அதில் புறநானூறு போன்ற நூல்கள் அக்கால மக்களின் உலகியல் வாழ்க்கையைப் பதிவு செய்யும் முக்கிய இலக்கியச் சான்றாக விளங்குகிறது.

உணவின் அடிப்படை நிலமும் நீரும் எனும் பொருளை புறநானூற்றுப் பாடலில்,

**“உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**

**நீரும் நிலனும் புணரி யோரீண்டு**

**உடம்பும் உயிரும் படைத்திசினோரே”**

**(புறம். பா. 18)**

என்று உணவு உருவாவதற்கு நிலமும் நீரும் அடிப்படை என எடுத்துரைக்கிறது. நிலத்தில் விளையும் பயிரும், அதனை வளர்க்கும் நீரும் சேர்ந்தால்தான் உயிர்களைக் காக்கும் உணவு கிடைக்கிறது. இதன் வழி, உணவு உற்பத்தியின் அடிப்படையாகிய வேளாண் அறிவும் நீரியல் அறிவும் மக்களிடையே இருந்ததை அறியமுடிகிறது.

எனவே, தமிழ் இலக்கியங்களில் காணப்படும் உணவியல் மரபு மக்கள் என்ன உணவை உண்டனர்? என்பதைக் குறிப்பிடுவது மட்டுமல்ல. உணவு கிடைத்தவிதம், நிலம் மற்றும் நீரின் முக்கியத்துவம், உழைப்புக்கும் உணவுக்கும் உள்ள தொடர்பு, ஆகியவற்றையும் வெளிப்படுத்துகிறது. இதனால் தமிழ் இலக்கியங்கள் மக்களின் உணவு அறிவுக்கும், வாழ்வியல் அறிவுக்கும் சான்றாக விளங்குகின்றது.

**கடல்சார் அறிவு**

நெய்தல் நில வாழ்க்கை கடலை மையமாகக் கொண்டது. மீன்பிடித்தல், படகு, கடற்பயணம், உப்பு உற்பத்தி, கடல்வழி வணிகம் போன்றவை சங்ககால மக்களின் கடல்சார் வாழ்வை வெளிப்படுத்துகின்றன. பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகச் செழிப்பை எடுத்துரைக்கும் பாடல்,

**“நீர்ப்பெயர்ந்து எவ்வம் நீர்பரந்து”**

**(பட்டினப்பாலை. பா. வரி.6)**

எனக் கடல்சார் இயக்கத்தையும் வணிகச் சூழலையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. எனவே சங்கத் தமிழ் கடல்சார் வரலாறு, வணிகம், பொருளாதாரம், புவியியல் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய அறிவையும் பெற்றிருந்ததை அறியமுடிகிறது.

**அரசியல் அறிவு**

சங்க இலக்கியங்களில் அரசியல், ஆட்சிமுறை, மன்னரின் கடமை, நல்லாட்சி, நீதி, குடிமக்கள் நலம், போர், தூதரகம், அமைச்சரவை போன்ற அரசியல் சார்ந்த செய்திகள் பல பதிவாகியுள்ளன. புறநானூறு, பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, போன்ற புற இலக்கியங்கள் பழந்தமிழரின் அரசியல் அறிவை எடுத்தியம்புகிறது.

மன்னனின் ஆட்சி அறத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற அரசியல் சிந்தனைய மதுரை மருதன் இளநாகனார் புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்.

**“அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**

**அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்”**

**(புறம். பா. 55)**

என்று மன்னனின் வெற்றியானது போரில் பெறும் வெற்றி மட்டுமன்று. அறநெறியைப் பின்பற்றி மக்களை ஆட்சி செய்வதே உண்மையான அரச வெற்றி என்கிறார். இப்பாடல் ஆட்சியின் அடிப்படை அறமாக இருக்க வேண்டும் என்ற தமிழரின் அரசியல் சிந்தனையை எடுத்துரைக்கிறது. எனவே சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் அரசியல் அறிவுக்கும் ஆட்சியியல் சிந்தனைக்கும் வரலாற்று ஆவணங்களாக திகழ்கின்றன.

அரசியல் சிந்தனைக்கு முன்னுதாரனமாக திருக்குறளின் பொருட்பாலில் முதல் அதிகாரமான இறைமாட்சி அமைந்துள்ளது.

**“படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்**

**உடையான் அரசருள் ஏறு.”**

**(குறள். 381)**

அரசின் வலிமை படை, குடிமக்கள், பொருளாதார வளம், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய பல கூறுகளின் ஒருங்கிணைப்பில் அமைகிறது என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அரசனின் தனிப்பட்ட வீரத்தை மட்டுமே அரசின் வலிமையாகக் கருதாமல், நிர்வாக அமைப்பின் பல கூறுகளை ஒருங்கிணைந்த முறையை எடுத்துரைக்கிறது. இதன்மூலம் தமிழ்ச் சிந்தனையில் அரசியல் அறிவும் நிர்வாக அறிவும் தொன்மையான அடித்தளத்தைக் கொண்டிருந்ததை அறியமுடிகறது.

**தமிழும் இசை அறிவும்**

நம் முன்னோர்களின் பல்துறை வளர்ச்சியில் இசைத்துறையும் முக்கிய பங்காற்றுகிறது. சிலப்பதிகாரம் இசை தொடர்பான விரிவான செய்திகளைத் தரும் காப்பியமாகத் திகழ்கிறது. அரங்கேற்றுக் காதையில் மாதவி நடனமாடும் போது குழல், யாழ், தண்ணுமை, முழவு மற்றும் ஆமந்திரிகை போன்ற பல்வேறு இசைக்கருவிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து மிக நேர்த்தியாக ஒலித்ததை இளங்கோவடிகள் அழகாக விவரித்துள்ளார்.

**“யாழும் குழலும் சீரும் மிடறும்**

**தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின்**

**இசைந்த பாடல் இசையுடன் படுத்து**

**வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கித்**

**தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்துத்”**

**(சிலம்பு. அரங்கேற்றுக் காதை. பா.வரி. 139–142)**

என இசைக் கருவிகளின் ஒலிச்சூழலைக் குறிப்பிடும் பகுதிகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன. இதனால் மக்களின் இசை மரபை இசையியல், ஒலியியல், நாடகவியல், நடனவியல் போன்ற பல துறைகளோடு இணைத்து ஆய்வு செய்யமுடிகிறது.

**தமிழும் அச்சுத் தொழில்நுட்பமும்**

தமிழின் அறிவுப் பரவலில் அச்சுத் தொழில்நுட்பம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஓலைச்சுவடிகளில் இயற்றிய இலக்கண இலக்கியங்கள் அச்சு வடிவம் பெற்றது. பழந்தமிழ் நூல்களைத் தேடி, சேகரித்து, பதிப்பித்த உ.வே. சாமிநாதையரின் தமிழ்ப்பணி தலைசிறந்ததாகும். அவர் பதிப்பித்த சங்க நூல்கள் இன்று ஆய்வாளர்களுக்கு முதன்மை ஆதாரங்களாக பயன்படுகின்றன.

அவரது **“என் சரித்திரம்”** நூலில் ஓலைச்சுவடிகளைத் தேடி அலைந்த அனுபவங்கள் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனை அச்சுத் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்திற்கான வரலாற்றுச் சான்றாகக் கொள்ளலாம். அச்சுத் தொழில்நுட்பம் தமிழின் வளர்ச்சியில் ஊடக மாற்றமாக மட்டும் இல்லாமல், அறிவைப் பாதுகாத்து தலைமுறைகளுக்குக் கடத்தும் அறிவியல் செயல்முறையாகவும் அமைகிறது.

**தமிழும் கணினித் தொழில்நுட்பமும்**

இன்றைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் கணினி முக்கியப் பங்காற்றி வருகிறது. உலகின் பல்வேறு மொழிகள் கணினித் தொழில்நுட்பத்துடன் இணைந்து வளர்ந்து வருவதுபோல, தமிழும் கணினித் தொழில்நுட்பத்துடன் இணைந்து புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. தமிழ் எழுத்துகளை கணினியில் உள்ளீடு செய்தல், சேமித்தல், திருத்துதல், அச்சிடுதல், இணையத்தில் பகிர்தல் போன்ற செயல்பாடுகள் தமிழின் பயன்பாட்டை விரிவுபடுத்தியுள்ளன.

**“கணினித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் தமிழ் தட்டச்சு முறைகள் உருவாகின. தமிழ்99, அஞ்சல், தமிழ் தட்டச்சு போன்ற உள்ளீட்டு முறைகள் தமிழில் கணினிப் பயன்பாட்டை எளிதாக்கின. மேலும், Unicode தொழில்நுட்பத்தின் மூலம் தமிழ் எழுத்துகள் உலகளாவிய கணினி மற்றும் இணையச் சூழலில் ஒருங்கிணைக்கப்பட்டன. இதனால் வெவ்வேறு கணினிகள் மற்றும் இணையத் தளங்களில் தமிழ்த் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது எளிதானது.”**

**(தமிழ் இணையக் கல்விக்கழகம்)**

கணினி வழித் தமிழ் ஆய்வு இன்று புதிய துறையாக வளர்ந்து வருகிறது. மின்னூல்கள், மின்னிதழ்கள், மின்னணு அகராதிகள், உரைத்தொகுப்புகள், சொல் தேடல் கருவிகள், இயற்கை மொழிச் செயலாக்கம் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் தமிழ் பயன்படுத்தப்படுகிறது. இதனால் தமிழ் மொழி இலக்கியப் பயன்பாட்டைத் தாண்டி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளிலும் தனது பயன்பாட்டை விரிவுபடுத்தியுள்ளது.

கணினித் தொழில்நுட்பம் தமிழின் பரவலுக்கும் பெரிதும் துணைபுரிகிறது. சமூக ஊடகங்கள், இணையதளங்கள், வலைப்பதிவுகள், காணொளித் தளங்கள் போன்றவற்றின் வழியாகத் தமிழ் உலகளாவிய தொடர்பு மொழியாகவும் பயன்பாட்டு மொழியாகவும் வளர்ந்து வருகிறது. இளம் தலைமுறையினர் தமிழில் எழுதவும் படிக்கவும் பகிரவும் கணினி மற்றும் இணையத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர்.

கணினித் தொழில்நுட்பம் தமிழைப் பாதுகாப்பதற்கான கருவியாக மட்டுமன்றி, தமிழை நவீன அறிவியல் உலகுடன் இணைக்கும் பாலமாகவும் விளங்குகிறது. ஓலைச்சுவடியிலிருந்து அச்சு நூலுக்கும், அச்சு நூலிலிருந்து மின்னூலுக்கும், மின்னூலிலிருந்து செயற்கை நுண்ணறிவு வரையிலான தமிழின் பயணம், காலந்தோறும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொண்டு வளர்ந்து வரும் தமிழின் தனித்துவத்தை வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

காலந்தோறும் தமிழ் மொழியும் தமிழ் இலக்கியங்களும் பல்வேறு துறைகளோடு இணைந்து வளர்ந்து வந்துள்ளன. இயற்கை, வேளாண்மை, மருத்துவம், வானியல், நீரியல், விலங்கியல், தாவரவியல், கடல்சார் அறிவு உள்ளிட்ட பல்துறை அறிவுச் செய்திகளைத் தமிழ் இலக்கியங்கள் தம் பதிவுகளின் வழியாக வெளிப்படுத்தியுள்ளன. பழந்தமிழரின் வாழ்வியல் அனுபவங்களும் அறிவியல் சிந்தனைகளும் இலக்கியங்களில் அழகியலோடு இணைந்து பதிவாகியுள்ளன. கால மாற்றத்திற்கேற்ப தமிழ் புதிய அறிவுத் துறைகளையும் தொழில்நுட்பங்களையும் உள்வாங்கிக் கொண்டு தன்னைத் தொடர்ந்து வளப்படுத்தி வருகிறது. குறிப்பாக, கணினி மற்றும் இணையத் தொழில்நுட்ப வளர்ச்சி தமிழின் அறிவுப் பரப்பை உலகளாவிய தளத்திற்கு விரிவுபடுத்தியுள்ளது.

## துணைநூற்பட்டியல்

(1) இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், பொருளதிகாரம், கௌரா பதிப்பகம்.

சென்னை. 2010.

(2) சாமிநாதையர். உ.வே. (உ.ஆ). குறுந்தொகை. டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(3) உ.வே. சாமிநாதையர், புறநானூறு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(4) உ.வே. சாமிநாதையர், அகநானூறு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(5) ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, நற்றிணை, பூம்புகார் பதிப்பகம், சென்னை. 2010.

(6) சாமிநாதையர். உ.வே. (உ.ஆ). பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(7) இராகவையங்கர்.ரா (உ.ஆ). பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(8) நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை. (உ.ஆ). திருக்குறள். பழனியப்பா பிரதர்ஸ். சென்னை. 2007.

(9) ந.மு. வேங்கடசாமி நாட்டார். சிலப்பதிகாரம். கௌரா பதிப்பகம். சென்னை. 2011.

(10) மு. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புதுதில்லி. 2009.

(11) ச. வையாபுரிப்பிள்ளை, தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை.2000.

(12) தனிநாயக அடிகள், தமிழும் பண்பாடும், தமிழ் ஆய்வு வெளியீடு.2004.

(13) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்மொழி மற்றும் இலக்கிய ஆய்வு வெளியீடுகள், சென்னை.2012.

(14) உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. https://www.tamilvu.org

(15) தமிழ் இணையக் கல்விக்கழக வெளியீடுகள், சென்னை. https://www.tamilvu.org

(16) தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழ் இணையக் கல்விக்கழகப் பாடத்திட்டங்கள் மற்றும் மின்னூலகம், சென்னை. https://www.tamilvu.org

(17) சுப்ரமணியன், கு. வை., கணித்தமிழ், சென்னை, மணிவாசகர் பதிப்பகம். 2011.

(18) மு. பொன்னவைக்கோ, இணையத் தமிழ், சென்னை: பாரதி புத்தகாலயம்.2023.

(19) கண்ணன், க. சங்க இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள். நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 2008.

© 2026 முனைவர் பேபிநிஷாந்தி மெ.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 28–33
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு.

*Psychological Insights and Concepts of Social Unity in Andal's *Thiruppavai*: A Study.*

முனைவர். ராஜேஸ்வரி செ.*

உதவித் தமிழ் பேராசிரியை, ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரி , முகவரி: 1/66, வடக்குத் தெரு, சுப்பையாபுரம், தேவர்குளம் *(Post)* திருநெல்வேலி 627-951 கைபேசி: *9524841633, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். ராஜேஸ்வரி செ. — rajeshwariraji19910@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00011 |

## ஆய்வுச்சுருக்கம்

பக்தி இலக்கியத்தின் முத்துப் பெட்டகம் ஆண்டாள் அருளிய திருப்பாவை. ஆன்மீக வெளிப்பாட்டைக் கடந்து மனித மனத்தின் ஆழடுக்குகளைச் செம்மைப்படுத்தும் மாபெரும் உளவியல் களமே இத்திருப்பாவை.

திருப்பாவை முப்பது பாசுரங்களும் திருமாலின் பெருமைகளைப் பாடி, அவனுடைய திருவருளைப் பெற்ற வரலாற்றை எடுத்துக் கூறுவது. இப்பிரபந்தத்தின் உட்கருத்து, கண்ணனின் திருவருளைப் பெறுவதை, இறுதி இலட்சியமாகக் கொண்டு ஆண்டாளும், ஆயர்குல சிறுமியும் தங்களுக்கும், உலகத்தார்க்கும் எல்லாவித சிறப்பான நன்மைகள் கிடைக்க மேற்கொண்ட இந்நோன்பைக் குறிக்கும் ஓர் அற்புத இலக்கியம். இந்நூலைப் படிக்கும் போது ஏற்படும் உணர்வு "யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ அவர்களை நான் அங்ஙனமே சார்கிறேன்" (1-11) கூறுவதை பிரதிபலிக்கும் கீதை.

இச்சிறந்த பக்தி இலக்கியத்தில் உளவியல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் எங்கெங்கு, எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வின் நோக்கமாகும்.

**Keywords / திறவுச்சொற்கள்:** 1.உளவியல்- Psychology 2.சமூக ஒருமைப்பாடு- social integration 3.பக்தி இலக்கியம்- Devotional literature 4.நோன்பு - Fasting 5.பாவனை - Pretense 6.தன்வய சிந்தனை - Self- centered thinking 7.உளகட்டுப்பாடு - Mental control 8. மனஉறுதி; - Strength of Mind 9.விழிப்புணர்வு - Awareness 10.அகந்தை -- Ego Dissolution

## Abstract

Thiruppavai,graced by Andal ,is a treasure chest of devotional literature. Beyond being an expression of spirituality, this text serves as a grand psychological arena that penetrates deep into the recesses of the human mind.

All thirty hymns (Pasurams) of Thiruppavai sing the glories of Lord Vishnu (Thirumal) and narrate the history of obtaining his divine grace. The core concept of this text is that it is a wonderful piece of literature denoting the penance (Nonbu) undertaken by Andal and the young girls of the cowherd

community for themselves and for the people of the world to receive all kinds of excellent benefits, keeping the attainment of Lord Krishna's (kannan) divine grace as their ultimate goal. The feeling that arises while reading this book reflects the Gita, which says, "In whatever way men approach Me, in that same way do I accept them". The objective of this research is to analyze where and how psychological and aesthetic unification thoughts have been handled in this outstanding devotional literature.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** செ., மு. ரா. (2026). ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு. KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 28–33.

## முன்னுரை: -INDRODUCTION

ஆண்டாள் தந்தருளிய திருப்பாவை எனும் பக்தி இலக்கியம், மாநில மக்களின் மனம், மற்றும் நற்பண்புகளை மேம்படுத்தும் உன்னதமான உளவியல் கருத்துக்களை பாசுரங்களால் கோர்த்தெடுத்த பக்தி பாமாலை என்றால் அது மிகையாகாது.

**"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்**

**எல்லாப் புகழும் தரும்" (குறள் 457)**

அஃதாவது ஆண்டாள் நாச்சியார் தன் தேனினிக்கும் பாசுரங்களில், தோழியரை, தன் ஆயர் குலச் சிறுமியரை ஒன்றிணைத்து நோன்பு நோற்பதும், சோம்பலை அகற்றி மனதை ஒருமுகப்படுத்துவதும் வள்ளுவர் காட்டும் 'மனநலம்' மற்றும் இனநலத்தின்

வடிவமன்றோ?திருப்பாவை பாசுரங்கள் முப்பதும் இளம் மங்கையரின் உள்ளங்களில் நல்லொழுக்கத்தையும், இல்லறவாழ்வில் இணைந்த இல்லதரிசிகளுக்கும்

அறநெறியையும் பக்தி மார்க்கத்தை நாடு பரம பதம் அடைய நினைப்பவர்களுக்கு இறைவனை அடைவதற்கான பக்தி மார்க்கத்தையும் எடுத்துரைக்கின்றன.

திருப்பாவை சொல் நயமும், பொருள் நயமும், கற்பனை அழகும், <u>கவிச்</u>சிறப்பும் கொண்ட ஒரு சிறந்த இலக்கியப் பொக்கிஷம்.

இவ்விலக்கிய பாசுரங்களை சமய நூல், சமுதாய நூல், தத்துவ நூல் என ஒவ்வோர் அடிப்படையிலும் படித்து மகிழும் வகையில் அமைந்தது. இக்கட்டுரையின் கீழ் அப்பாசுரங்களில் உளவியல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள் பொருந்து மாற்றைக் காண்போம்.

## ஆண்டாள் - பெண் ஆழ்வார ் :- நாச்சியார் – ANDAL THE FEMALE ALVAR

ஆண்டாள் நாச்சியார், சூடிக் கொடுத்த சுடர்க் கொடி, பெரியாழ்வாரின் அருமைத் திருமகள், திருவில்லிப்புத்தூரில் வாழ்ந்த விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வாரின் அருமைத் திருமகள்.

திருப்பாவை '**பட்டர்பிரான் கோதை**' என்றும், திருமொழி '**விட்டுசித்தன் கோதை**' '**வில்லிப்புத்தூர்க் கோன் கோதை**' என்றும் ஆண்டாளைக் குறிப்பிடுகின்றன. கண்ணன், மணிவண்ணன், ஆயர்குல தலைவன், யதுகுல மன்னன் அவதார பெருமை, மகிமைகளைப் பெரியாழ்வார் மனமுருகிப் பாடுவதைக் கேட்டுக் கேட்டு, ஆண்டாளின் உள்ளம் அதில் தன்னையும் ஈர்த்ததை அறிந்து தந்தையிடம் ஆன்ம ஞான அறிவைப் பெற்று வளர்ந்தாள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே ஆண்டாளின் உள்ளத்தில் <u>முளையிடபட்ட</u> பக்தி உணர்ச்சி, அவள் வளர்ந்த நிலையில் மேலும் மலர்ந்து மணம் பரப்பியது.

அவள் வளர்ந்த தெய்வீகம் சூழ்நிலை <u>பின்னாளில்</u> நாச்சியாரை பக்தி நெறி மிக்க தெய்வீகப் பெண்ணாக உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.

**"அடிமனதில் உறைந்து கிடக்கும் உணர்வுகள் தான் மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இளமைப் பருவத்தில் ஏற்படும் பிற்காலத்தில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படும்.** இத்தகைய **அடிமன உணர்வுகள் கலைஞனுடைய படைப்புகளில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படுத்தக் கூடும்**" என்பது '**பிராய்டு**' தரும் விளக்கமாகும்.

பிரபந்த நூலான திருப்பாவை ஆண்டாளின் திருவாக்காக தோன்றியதன் நோக்கம் திருமாலே பரம்பொருள், அவனை நம் திருவாயால் பாடி, நல் மனத்தால் சிந்தித்தால் தீவினை அனைத்தும் நெருப்பிலிட்ட தூசியாய் போகும், எத்தனைப் பிறவி எடுத்தாலும் திருமாலுக்கு தொண்டு செய்து வாழ்வதே பேரின்ப வாழ்வு என்பவற்றை உலக மாந்தர் அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துரைக்க எழுந்ததே இத் திருப்பாவை பாசுரங்களாகும்.

**திருப்பாவையில் உளவியல் கருத்துக்கள்: - PSYCHOLOGICAL ASPECTS IN THIRUPPAVAI**

ஆண்டாளின் தன்னலமற்ற, பரந்த உலக நோக்கில் உருவானவையே இப்பாஅரப்பாடல்கள். திருப்பாவை ஒரு கற்பனை இலக்கியப் படைப்பாக இருந்தாலும், இளம் பருவத்தினர்களுக்கு இருக்க வேண்டிய

ஒழுக்க நெறிகள், கட்டுப்பாடு, நல்வாழ்விற்கான உயர்ந்த வழிமுறைகள் ஆகியன வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

பொதுவான உடன்பாடு குழுக்களிடம் இருந்தாலும் மனஉறுதி மிகுந்திருக்க வேண்டும். நல்லதொரு மனஉறுதிக்கு சில இன்றியமையாத காரணிகள் உண்டு.

முதல் ஐந்து பாடல்களில் நோன்பு நோற்பவர் யார், நோன்பு மேற்கொள்ளக் காரணம், நோன்பின் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், நோன்பின் பயன்கள் ஆகியன கூறப்படுகின்றன. முதல் பாடலில்

**"மார்கழிகழித் திங்கள் தொடங்கி........**

**...**

**"நீர் ஆடப் போதுவீர்**

**போதுமினோ நேர் இழையீர்!**

**சீர்மல்கும் ஆய்ப்பாடிச்**

**செல்வச் சிறுமீர்காள்" - (பா. 1)**

இப்படி அழைப்பதிலிருந்தே பக்திக்கும், இறைத் தொண்டிற்கும் விருப்பம் மட்டுமே போதும், வேறேதும் தேவையில்லை எனத் தெரிகிறது.

"நோன்பு உளக்கட்டுப்பாடு நிலையில் அமைகிறது எப்படி என்றால், தான் விருப்பம் நிறைவேற இன்ன செயல்களைச் செய்கிறேன், இன்ன செயல்களைச் செய்ய மாட்டேன் என்றோ உள்ளத்தைக் கட்டுப்படுத்துவது நோன்பு. எடுத்த காரியம் முடிக்க சில விதிகளையும், சில நியமங்களை, விலக்குகளை கடைபிடிக்க வேண்டும் அல்லவா?

- இறைவன் அடி பாடுதல்
- காலை நீராடுதல்
- ஐயமும் பிச்சையும்
- நெய், பால் உண்ணாதிருத்தல்
- மையும், மலரும் அலங்கரித்து கொள்ளாதிருத்தல்

போன்றவற்றை கடைபிடிக்கின்றனர்.மேலும்

**"தூயோமாய் வந்து நாம்**

**தூ மலர்தூவித் தொழுது**

**வாயினால் பாடி**

**மனத்தினால் சிந்திக்க**

**புகுதருவான் நின்றனவ தீயினில் தூசாகும்" (பா. 5)**

அஃதாவது மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் இறைவனை வழிபடும் கிரியை நெறி, மனத்தை ஒருமுகப்படுத்தும் யோக சக்தி நெறி, இறைவனை வழிபட்டால் தீமைகள் நீங்கி கிடைக்கும் ஞான நெறியும் ஒருங்கே அமைவதை மனஉறுதியோடு கூறுகிறாள் ஆண்டாள் நாச்சியார்.

**உள்ளத்தின் பல்வேறு நிலைகளும், சமுதாய ஒற்றுமையும்:HEART VARIOUS STATE SOCIAL UNITY:**

திருப்பாவையின் ஆறாம் பாசுரம் முதல் பத்து பாடல்கள் பெண்களுக்குரிய இயல்பான அன்பும் பேச்சும், பரிகாசப் பேச்சும், உரையாடல்கள், என இப்பாடல்கள் ஒரு நாடக நிகழ்ச்சி நடைபெறுவது போலவே அமைந்துள்ளது சிறப்பானதாகும்.

துயில் எழுந்தவர்கள், துயில் கொள்பவர்களை துயிலெழுப்பும் தோழி வயதில் சிறியவளாக இருப்பதால் **"பிள்ளாய் எழுந்திராய், புள்ளும் சிலம்பின காண்"**

என எழுப்புகிறாய்.

பறவைகளின் ஒலி, கோயிலில் பெரிதாகக் ஒலிக்கும் சங்கொலி, ஆச்சியல் மத்தினால் ஓசைப்படுத்தும் தயிர் மத்தின் ஓசை கேட்கவில்லையா என்பதிலிருந்து அவள் சாதாரண வீட்டுப்பெண் எனத் தெரிகிறது.

செல்வம் படைத்த குடும்பப் பெண்ணை

"தூமணி மாடத்து"...... (பா. 9)

எழுப்புதலும் கும்பகர்ணன் போல் தூங்குபவளை பொற்றொடிமே என்றும், நற்செல்வன் தங்கையை காலடியில் பால் வெள்ளமுட எனச் உணர்ச்சி பொங்கிடவும்

**"எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ"**

என்று இளங்கிளியை ஒத்த பெண்ணையும் அழைப்பதிலிருந்து, இவர்கள் அழைத்துச் செல்லும் தோழிப் பெண்கள் வெவ்வேறு குணகியல்பற்றவர்களாகவும் வெவ்வேறு குடிப்பிறப்பில் பிறந்தவர்களாக இருப்பத்தையும் காணுகையில் சமுதாய வாழ்க்கையில் ஒற்றுமையைக் காட்டி, அன்பின் இன்றியமையாமையை இளம் உள்ளங்களுக்கு அறிவுறுத்தவே இப்பாசுரத்தை ஆண்டாள் பாடினாளோ என எண்ணத் தோன்றுகிறது.

**நம்பிக்கையும் மனஉறுதியும்: - BELIEF AND MIND FIRMNESS**

நம்பிக்கையும், மனஉறுதியுமே இறைவழிபாட்டிற்கு இரு கண்கள் போன்றது. இதையே இவரது சமகாலத்து ஆழ்வார்கள் பாடியிருப்பதை இங்கு உற்று நோக்கத்தக்கது.

**"அன்பே தகளியா**

**ஆர்வமே நெய்யாக**

**இன்புருகு சிந்தை இடுதிரியா -**

**நன்புகழ் நாரணனஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்**

**நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்த நான்"**

- **<u>பூதத்தாழ்வார்</u>**

**<u>இரண்டாம் திருவந்தாதி.</u>**

என்பதற்கு ஏற்றாற்போல கண்ணன் தங்களுக்கு அருள் செய்வான் என்ற தளராத நம்பிக்கை.

**"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும**

**உற்றோமே ஆவோம்**

**உனக்கே நாம் ஆட்செய்வோம்**

**மற்றைநம் காமங்கள் மாற்று" (பா. 29)**

என்ற பாசுரத்தைக் காணும் போது இவர்கள் கண்ணனிடம் கொண்ட ஆழ்ந்த விருப்பத்தையும், மனத் திடத்தையும் உணர முடிகிறது.

**<u>நிறைவுரை: - CONCLUDING REMARKS</u>**

மார்கழி நோன்பை மையமாகக் கொண்டு ஆண்டாள் தன் திருப்பாவை பாசுரங்கள் மூலம் இந்நோன்பை ஒற்றை நபராக இல்லாமல் தோழிப் பெண்களுடன் சேர்ந்து செய்யும் கூட்டு பிரார்த்தனையாக விவரிக்கிறாள்.

பேதமை நீங்க, குலபேதம், செல்வமிக்கவர், ஏற்றத்தாழ்வு போன்ற வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தரப்புப் பெண்களையும் உறக்கம் நீங்க எழுப்பி அழைத்து கண்ணனை வாயாரப் பாடி, மனதினால் சிந்தித்துச் செய்வது சமூக ஒருமைப்பாட்டை எடுத்துரைக்கிறது.

மேலும் பொது நலமாக, தனிமனித வேண்டுகோள் இன்றி, "நாங்கள்" என்ற ஒருமித்த கூட்டுச் சொல்லாலும்

"நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி" என உலக நன்மைக்காக, மழையைப் பொழியச் செய்ய இறைவனை வேண்டுவது சமூக நலத்தைக் குறிக்கிறது.

**<u>சமத்துவ உணர்வு தரும் பாசுரமாக</u>**

**"அங்கண்மா ஞாலத்தரசர்**

**அபிமான பங்கமாய் வந்து...**

**யாமும் வந்தோம்..." (பா. 22)**

பெரிய, பெரிய அரசர்களும் கூட தங்களின் அகந்தையை விட்டுவிட்டு இறைவனின் சன்னதியில் எளிய மக்களோடு மக்களாக நிற்பதைக் காணும் போது ஆன்மீகத்திலும், சமூகத்திலும் அனைவரும் சமம் என்ற சமத்துவக் கோட்பாட்டை உணர்த்துகிறது.

மக்கள் உள்ளங்களைக் கவரக் கூடிய, பதியக் கூடிய, ஏற்றுக் கொள்ளக் கூடிய பாடல்களும், இலக்கியமும்தான் காலம் கடந்து வாழும். அந்த வகையில் மழலைகள் முதல் இறையடி சேரும் பெரியோர் வரை, பல்வேறு நிலையிலுள்ள யாவரும் உய்த்துணர்ந்து, நல்ல வாழ்க்கைக்கும், நற்கதிக்கும் வழிகாட்டியாகவும், உளவியல் கருத்துக்கள் உள்ளடக்கியதாகவும், சமூக ஒருமைப்பாட்டை உயர்த்திக் காட்டுவதாகவும் இத்தெய்வ பிரபந்த பாசுரங்கள் ஒவ்வோர் ஆண்டிலும், ஒரு மாதமாம் திரு மாதமான மார்கழித் திங்களில் உருகிப் பாடுகின்ற காரணத்தால் உலகம் வாழ்கிறது என்று

**<u>வாழும், பல்லாண்டு வாழும் என்பது உறுதி:</u>**

**"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி**

**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து**
**ஓங்கு பெருஞ் செந் நெல் ஊடு கயல் உகளப்**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்று**
**வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்" – (பா. 3)**

என்ற இப்பாசுரமே இக்கட்டுரையின் மொத்த கருத்திற்கும் ஒத்த எடுத்துக்காட்டாய் திகழ்கிறது எனக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

**துணை நூற்பட்டியல்: -BIBLIOGRAPHY**

1. ஆர். சண்முகம் — மனிதனும் மனமும்
2. திரு ஆண்டாள் நாச்சியார் — திருப்பாவை
3. பூதத்தாழ்வார் — இரண்டாம் திருவந்தாதி
4. திருவள்ளுவர் — திருக்குறள் (457)
5. சிஞ். பிராய்டு — உளவியல் சிந்தனைகள்

© 2026 முனைவர். ராஜேஸ்வரி செ.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 34–42
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# சங்கப் பாடல்களில் எச்சரிக்கை நிமித்தங்கள்

*Sanga Padalgalil Nannimiththangal*

**முனைவர். ராதிகா ரெ.***

உதவி பேராசிரியை, தமிழாய்வுத் துறை, தனலட்சுமி சீனி வாசன் நிகர் நிலை பல்கலை கழகம் ஸ்கூல் மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். ராதிகா ரெ. — ngmcollegelibrary@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |
| DOI | | Article ID / கட்டுரை எண் | |
| — | | KALN-2026-00012 | |

## ஆய்வுச்சுருக்கம்

பண்டையத் தமிழர்களின் வாழ்வியல் கருவூலமாகத் திகழும் சங்க இலக்கியங்கள், அவர்களின் பண்பாடு, நம்பிக்கை மற்றும் இயற்கையுடனான பிணைப்பை வெளிப்படுத்துகின்றன. மனிதன் தன் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் நன்மைகளையும் தீமைகளையும் இயற்கையின் சில அறிகுறிகள் மூலம் முன்கூட்டியே உணர்ந்து கொண்டான். இவ்வறிகுறிகளே 'நிமித்தங்கள்' அல்லது சகுனங்கள் எனப்பட்டன. தொல்காப்பியக் காலம் தொட்டு சங்க காலம் வரை இந்நிமித்தங்கள் தமிழர்களின் அக, புற வாழ்க்கையில் மிக முக்கியப் பங்காற்றியுள்ளன. இவ்வாய்வுக் கட்டுரை, சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களில் பயின்று வந்துள்ள நிமித்தங்கள் (நன்னிமித்தம்) பற்றிய பதிவுகளைத் தொகுத்துக் காண்பதையும், அவற்றின் பின்னணியில் உள்ள மக்களின் உளவியல் மற்றும் இயற்கை சார்ந்த அறிவை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
சங்க கால மக்கள் விரிச்சி கேட்டல் (நற்சொல்), புள் (பறவைகளின் ஒலி/செய்கை), பல்லி கத்துதல், காகம் கரைதல், கனவுகள் மற்றும் கோள்களின் நிலை மாறுபடுதல் போன்ற பல்வேறு நிமித்தங்களை நம்பியுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. தலைவியின் ஆற்றாமைக்கு மருந்தாக நன்னிமித்தங்களும், இவை வெறும் மூடநம்பிக்கையாக மட்டுமில்லாமல், சங்க கால மக்களின் ஆழ்ந்த இயற்கையறிவையும், அவர்களின் மன உணர்வுகளுக்கு வடிகாலாக அமைந்த உளவியல் தேவையையும் பிரதிபலிக்கின்றன என்பதை இவ்வாய்வுக் கட்டுரை நிறுவுகிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம்; நிமித்தங்கள்; விரிச்சி; புள்; நற்சகுனம்; தமிழரின் வாழ்வியல்.

## Abstract

Sangam literature, serving as a repository of the ancient Tamils' way of life, reveals their culture, beliefs, and deep-seated bond with nature. Through specific natural signs, humans were able to anticipate in advance the fortunes and misfortunes they would encounter in their daily lives. These very signs came to be known as 'Nimithangal' or omens. From the era of 'Tolkappiyam' through the Sangam period, these omens played a pivotal role in the domestic (Akam) and public (Puram) lives of

the Tamils. This research paper aims to compile and present the references to omens—specifically auspicious (Nannimittam) signs—found within the Sangam literary corpus, comprising the ‘Ettuthogai’ and ‘Pathupattu’ anthologies; furthermore, it seeks to analyze the underlying human psychology and knowledge of the natural world that inform these beliefs.
It has been established that the people of the Sangam era placed their faith in various omens, such as ‘Virichi’ (listening for auspicious words), ‘Pul’ (the sounds or actions of birds), the chirping of lizards, the cawing of crows, dreams, and shifts in planetary positions. While auspicious omens served as a solace for the heroine in her distress, inauspicious omens acted as warnings for kings embarking on war. This research paper establishes that these elements are not merely superstitions, but rather reflect the profound understanding of nature possessed by the people of the Sangam era, as well as the psychological need that served as an outlet for their emotional expressions.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ரெ., மு. ரா. (2026). சங்கப் பாடல்களில் எச்சரிக்கை நிமித்தங்கள். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 34–42.

## முன்னுரை

மனித நாகரிகத்தின் தொடக்கக் காலம் தொட்டே, இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் சுற்றியுள்ள நிகழ்வுகளைத் தன் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வழக்கம் கொண்டிருந்தான். அவ்வகையில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் வாழ்வியலைத் தெள்ளத்தெளிவாகப் படம் பிடித்துக் காட்டும் சங்க இலக்கியங்களில் 'நிமித்தங்கள்' எனப்படும் சகுனங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

'நிமித்தம்' என்பது ஒரு செயல் நடப்பதற்கு முன்னரோ அல்லது நடக்கும் போதோ தோன்றும் அறிகுறியாகும். அது நன்மையையோ அல்லது தீமையையோ முன்கூட்டியே உணர்த்தும் இயற்கையின் சிக்னலாகக் கருதப்பட்டது. தொல்காப்பியர் காலம் முதற்கொண்டே நிமித்தம் பார்த்தல் என்பது தமிழர்களின் மரபாக இருந்துள்ளதை "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்..." என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்.

சங்க கால மக்கள் பறவைகளின் ஒலி (புள்), விலங்குகளின் செய்கை, பல்லி கத்துதல், விரிச்சி கேட்டல் (நற்சொல்), கனவுகள் மற்றும் கோள்களின் நிலை போன்றவற்றைக் கொண்டு வரவிருக்கும் நன்மைகளையும் தீமைகளையும் எவ்வாறு கணித்தார்கள் என்பதையும், அவர்களின் நம்பிக்கைக்குப் பின்னுள்ள வாழ்வியல் உண்மைகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### பறவை

பறவைகள் ஒலிப்பதையும், அவை பறப்பதையும் கொண்டு பல்வேறு நிமித்தங்கள் உருவாயின. "**புதுப்புள் வரினும் பழம்புள் போகினும் தீய நிமித்தம்**" என்று ‘புறநானூறு’ கூறுகிறது. ஆநிரைகள் (பசுக்கூட்டங்கள்) இருக்கும் காட்டில் **காரியென்னும் பறவை** கத்தினால், அது ஒரு தீய நிமித்தமாகக் கருதப்பட்டது. இப்பறவை உட்புகுந்ததால் தீமை வரும் என்று ஆநிரையிலிருந்த நிமித்தக்கன் கூறினான் என **சீவக சிந்தாமணி** குறிப்பிடுவதும் இங்கு கவனிக்கத்தக்கது. இக்காலத்திலும் ஒருவர் வெளியே புறப்படும்போது விலங்கு அல்லது பறவைகளில் எது எதிரில் வந்தால் என்ன நிமித்தம் என்று கருதும் வழக்கம் காணப்படுகிறது.

## புள் ஓர்த்துக் கழிதல்

போர்க்களமானாலும் சரி, காதற்களமானாலும் சரி, நிமித்தம் பார்த்துப் புறப்படுவது போலவே, பொருளும் பரிசிலும் பெற விழைந்த புலவரும் கூத்தரும் நிமித்தம் பார்த்தே புறப்பட்டனர். பரிசில் பெற்ற நன்னனிடம் இருந்து திரும்பும் ஒரு கூத்தன், வழியில் கண்ட மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்துகிறான். அவர்கள் செல்ல வேண்டிய

வழியைக் கூறி வரும்போது, "இரவு நேரத்தில் நடந்து வந்த வருத்தம் போக்கும்படி புல்வேய் குரம்பையிடத்து (குடிசையில்) தங்குவீர். சில நாட்கள் தங்கிய பின்னர், இராக்காலம் நீங்கிய விடியற்காலத்து நிமித்தம் பார்த்துப் போவீர்" என்கிறான். இதனை,

**"புலரி விடியல் புள் ஓர்த்துக் கழிமின்" - (மலைபடு. 448)**

என்னும் 'மலைபடுகடாம்' தொடரால் நன்கு அறியலாம்.

இதனைத் தொடர்ந்து பிற்காலத்தில் எழுந்த 'பிரபுலிங்கலீலை' கூறுவது போல, கூத்தனும், பரிசில் பெறச் செல்லும் மற்றொருவனைக் கண்டபோது மகிழ்ந்து, "என்னைப் பார்த்ததினாலேயே நீவிர் புறப்படுகின்ற பொழுது நுமக்கு வரும் ஆக்கத்தை எதிர்கொண்டு நின்று நன் முகூர்த்தத்தோடு நன்னிமித்தத்தையும் உடையவராக இருந்தீர்', எனப் பாராட்டுகின்றான். இங்ஙனம் புலவன் மற்றொரு புலவனை ஆற்றுப்படுத்தும் பொழுது, 'நன்னிமித்தம் பார்த்துப் போவாயாக!' என்று கூறுவதிலிருந்து அக்காலத்திய நிலையும் நன்கு புலனாகிறது.

### புள்ளும் பொழுதும் பழித்தல்

கழைதின் யானையார் என்னும் சங்கப் புலவர் வரையாது சுரக்கும் கொல்லிமலைத் தலைவனாகிய வல்வில் ஓரியைப் பாராட்டிப் பாடிய புறநானூற்றுப் பாடலில், இரவலர் புரவலரிடம் புள்ளும் பொழுதும் பார்த்துப் புறப்பட்ட செய்தியினைக் கூறுவர். இரவலர் பரிசில் பெறாதபோது தாம் நாடி வந்தவரைப் பழித்துப் பேசார். தாம்புறப்பட்ட நேரத்தையும் புள் நிமித்தத்தையுமே பழிப்பர். 'எனக்கு இல்லையெனினும் உன்னைப் புலவேன். வானம்போல வரையாது சுரக்கும் வள்ளியோய் நீ வாழி' என்று புறநானூற்றுப் புலவர் வாழ்த்துகின்ற காலத்திலும் நன்னிமித்தமும் தீ நிமித்தமுமே வெற்றிக்கும் தோல்விக்கும் காரணம் எனக்கருதும் உள்ள நிலையையும் உணரமுடிகிறது.

**புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை**

**உள்ளிச் சென்றோர்ப் பழியலர் - (புறம். 204)**

என்னும் பகுதி இதனை நன்கு தெளிவுறுத்தும்.

### விரிச்சிக் கேட்டல்

செருக்களம் சென்று வந்த செம்மல் மார்பிலே புண்பட்டு மயங்கிக் கிடக்கின்றான். பெருவீரம் தந்த வெற்றிப் பரிசிலான விழுப்புண்களால் அவனுடைய இறப்பு இன்றோ நாளையோ என வருந்தும் மகளிரின் துன்பநிலை, அந்நிலையிலும் அருள் நிறைந்த அவ்வறவோனைப் பார்க்கப் பாணனும், விறலியும் துடி கொட்டுவோனும் அவனகத்தின் புறத்தே காத்துக் கொண்டுள்ளனர். இந்நிலையில் தலைவி தீ நிமித்தங்களைக் கண்டு புலம்புகின்றாள்.

**“என்னை மார்பிற் புண்ணும் வெய்ய**

**—--------------------------------------**

**நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்” - (மேலது. 280)**

இப்பாடலில் தலைவி, நண்பகற்போதில் முரலாத தும்பிகள் அப்பொழுது ஒலித்தலையும், இல்லிலே ஏற்றி வைத்த விளக்கு நில்லாது அணைவதையும், உறங்காது பன்னாள்கள் அவனருகே இருந்த அவள் கண்கள் மூடுவதையும் அச்சத்தைத் தரும் கூகை கூவுவதையும் தீ நிமித்தங்களாகக் கருதிப் புலம்புகிறாள். நெல்லும் நீரும் எறிந்து விரிச்சி கேட்டு இவன் பிழைப்பான் என்று கூறிய செம்முது பெண்டிரின் சொல்லும், இந்நிமித்தங்களால் குறைபாடடைவதை அவள் வருந்திக் கூறுகிறாள். இறக்குந் தறுவாயில் துன்புறுவோர் பிழைக்கும்பொருட்டு நெல்லும் நீரும் எறிந்து முதுபெண்டிர் விரிச்சி கேட்கும் நிமித்தமும் வழக்கமும் அந்நாளில் இருந்தது என்பதும் இதனால் புலனாகிறது.

**ஓந்தியும் நன்னிமித்தமும்**

ஓந்தி நன்னிமித்தத்திற்குரியது என்பதைக் குறுந்தொகைப் பாடலொன்று கூறும். பொருள்வயிற் பிரிவினால் தலைவனைப் பிரிந்த தலைவி தன் காதலன் பாலைநிலத்துச் சென்ற காட்சியினைக் கூறும்போது, 'தலைவன் கருக்கரிவாளைப் போன்ற முதுகையுடைய முதிய ஆண் ஓந்தியானது வழிச்செல்லும் மனிதர்கள் நிமித்தமாகக் கொள்ளும்படி தங்குகின்ற பாலை நிலத்திற் சென்றனர்' என்பதனால் ஓந்தி நன்னிமித்தங் காட்டுவது என்பது போதரும்.

**"நாவிசிச் சிலியோந்தி தான்**

**வலமாயின் வழிப்பயண மாகை நன்றாம்" - (அறப்பளீசுர சதகம்)**

என்னும் பிற்காலத்திய அறப்பளீசுர சதகப் பாடலும் இதனை நன்கு வலியுறுத்தும்.

**காக்கையும் நன்னிமித்தமும்**

காக்கை கரைந்தால் விருந்து வரும் என்று எண்ணுகின்ற வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. குறுந்தொகையில் காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய பாட்டு இதனை அறிவிக்கும்.

**"விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" - (குறுந். 20)**

என்பது அப்பாடல் தொடராகும். ஐங்குறுநூற்றிலும் காக்கை கரைவதை நன்னிமித்தமாகக் கொண்டமை காணப்படுகிறது. இத்தகைய நம்பிக்கையினைப் பறவைகள் பறப்பதையும் ஒலிப்பதையும் நிமித்தங்களாகக் கருதியமையைப் பழந்தமிழரைப் போலப் பண்டைய கிரேக்கர்களும் உரோமானியர்களும் கொண்டிருந்தனர். பறவைகள் குறித்துப் பழந்தமிழர் கொண்டிருந்த நம்பிக்கையினை மார்க்கோ போலோவும் தம் பயணக் குறிப்பில் சுட்டியிருப்பதை இங்குக் கருதுதல் தகும்.

**பல்லியும் பலனும்**

வினைமுற்றி மீண்ட தலைமகன் பேரார்வத்தோடு தலைவியிடம் செல்லுகின்றான். அப்போது தேர்ப்பாகனிடம் பின்வருமாறு உரையாடுகின்றான்: 'என் அன்பு வருகையினை எதிர்நோக்கி என் இல்லத் தலைவி இல்லத்தின்கண் நிமித்தம் கேட்டற்குரிய இடத்திலே நிற்கின்றாள். நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து நன்னிமித்தத்தைக் குறிக்கும் பக்கத்திலே பல்லி சொல்லுந்தோறும் நின்று மகிழ்கின்றாள்.'

**"பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்**

**கன்றுபுகு மாலை நின்றோள்" - (அகம். 9)**

என்று அகநானூறு இதனை அழகுறக் கூறும்.

**பல்லியும் பன்றியும்**

மாந்தர் நிமித்தம் பார்த்துச் செயலாற்றியதைப் போன்றே விலங்கினமும் நிமித்தம் பார்த்துச் செயலாற்றியதைக் கூறும் செய்தியும் சங்க இலக்கியத்தில் உண்டு. முதிய மேட்டுக் கொல்லையில் தழைத்து விளங்கியது சிவந்த தினைப் பயிர். அப்பயிர்களின் கதிர்களைத் தின்ன விழைந்த பன்றி, பல்லி சொல்லும் நன்னிமித்தம் பார்த்துப் புறப்பட்டதாம்.

**"பகுவாய்ப் பல்லி பாடோர்த்துக் குறுகும்**

**புருவைப் பன்றி" - (மேலது 88)**

என்னும் அகநானூற்றுப் பாடல் இதனை அழகுற உணர்த்தும். பொறி வைக்கும் வழிகளை உணர்ந்த பன்றிக் கூட்டம் அவ்வழிகளில் பயந்து பயந்து பார்த்துச் செல்வது

இயற்கையாகும். இதனைப் பல்லியின் குரல் கேட்டுக் காட்டுப் பன்றி விளைபுனத்தில் நுழைவதாகக் கற்பனையாகக் கூறினர். இதேபோன்று நற்றிணை (98) பாடலிலும் காட்டுப்பன்றி பல்லி சகுனம் பார்த்துப் பொறியில் மாட்டாது தப்பித்துக் கொண்டதாகக் கூறுவதும் கருதத்தக்கது. இவை கவிஞருடைய உயர்ந்த கற்பனையாயினும் அக்காலத்திய இயல்பினை அறிந்து கொள்ள ஏதுவாகிறது.

**பல்லியின் பெருமை**

தலைவன் பிரிந்து சென்ற காட்டின் இயல்பைக் கூறவந்த தலைவி ஒருத்தி, 'செல்லுகின்ற வழிப்போக்கர்க்குமேல் வந்துறும் நிகழ்ச்சிகளை அறிவிக்கின்ற சிறிய செம்மையுடைய நாவினையும், மணியோசையைக் கேட்டாற் போன்ற தெளிந்த குரலையும், சோதிடம் கூறுகின்ற வாயினையுமுடைய பல்லிகளையுடைய காடு' என்கிறாள். இதனை அகநானூறு,

**கள்ளி முள்ளரைப் பொருந்திச் செல்லுநர்க்கு**

**உறுவது கூறுஞ் சிறுசெந் நாவின்**

**மணியோர்த் தன்ன தெண்குரற்**

**கணிவாய்ப் பல்லிய காடிறந் தோரே” - (அகம். 151)**

என்று கூறும். பல்லி நன்மையாயினும் தீமையாயினும் நடுநின்று கூறுதலின் 'செந்நா' என்று கூறினாள் போலும்.

**பல்லியும் பற்றுக்கோடும்**

ஆறுதல் கூறும் அன்பு மொழிகளே துன்பத்தில் வருந்துவோர்க்கு அருமையான அரவணைப்பாகும். அவையே அவர் தம் உயிரின் பற்றுக்கோடாகவும் அமையும். நோயுற்றுத் துடிக்கும் நோயாளர்க்கு மருந்தினும் மாமருந்தாய் அமைவன மருத்துவரும் மற்றையோரும் கூறும் உள்ளன்பு மொழிகளே ஆறுதலுரைகளே. அவையே அவர்களுக்கு உயிர்ப்பும் உணர்வும் தருவன. தலைவனைப் பிரிந்த தலைவிக்கோ வினைதீர்க்கும் மாமருந்தாய் அமைந்தது பல்லியின் நிமித்தமே. ஒவ்வொரு நாளும் சுவரிலே வட்டங்கீரிப் பார்த்துப் பார்த்து எழுது சுவர் நனையுமளவுக்குக் கண்ணீர் விட்டு அழுதவள் தலைவி. அவ்வன்புடைத் தலைவியின் நலத்தை நினைந்து இரங்கித் தன் நெஞ்சிற்குச் சொல்லுகிறான் தலைவன்:

**செய்குறி ஆழி வைகநே றெண்ணி**

**—-------------------------------------**

**உள்ளுதொறு உம் பல்லி**

**புள்ளுந் தொழுதுறைவி” -(மேலது 351)**

‘பிரிவாற்றாது, வருந்துகின்ற தோளினது மெலிவைத் தீர்க்கும் மருந்து இது என்று நினைத்து, பல்லியின் சொல்லை நன்னிமித்தமாகக் கொண்டு, அது சொல்லுந்தொறும் தன்னைக் கை கூப்பித் தொழுது, அந்நிமித்தம் பற்றுக் கோடாக உயிர் வாழ்கிறாள் தலைவி’ என்பது தலைவன் கூற்று. ‘புள்ளுந் தொழுதுறைவி’ என்னுந் தொடரால் அவளுடைய துன்பநிலையும் அவள் அந்நிமித்தத்தைப் பற்றுக் கோடாகக் கொண்ட உண்மை நிலையும் நன்கு விளங்கும்.

**பல்லியும் பாங்கொத்திசைத்தல்**

தலைவன் தான் கடந்து செல்லவிருக்கும் காட்டின் இயல்பை முன்னரே கூறியிருந்தான். இல்லார்க்கு அருள் புரியப்பேணாரை அழித்துப் பொருள் தேடி. அப்பொருளால் புணர்ச்சி பெறுவேன் எனக் கூறிச் சென்றான் தலைவன். அவன் வாராததை எண்ணி மயங்கிய தலைவி அவன் அன்பு மொழிகளை நினைவில் கொண்டாள். “பிடியூட்டிப்

பின்னுண்ணும் களிறும், அன்பு கொண்ட மடப்பிடியின் வருத்தத்தை மென் சிறகால் ஆற்றும் புறவும், இன்னிழல் இன்மையால் வருந்தும் மடப்பிணைக்குத் தன்னிழலைத் தந்தளிக்கும் கலைமானும் வாழ்கின்ற காட்டினைக் கடந்த நிலையிலுமா தலைவனுக்கு என் நினைவு வரவில்லை? அருளுணர்வினையும் அன்புணர்வினையும் காட்டும் அக்காட்சிகள் என்னை அவர்க்கு நினைவுறுத்துமே! என் அழகு நலம் கெடுமுன் அவர் வருதல் உறுதி! இதோ, பல்லியும் பாங்கொத்திசைத்தது! என் மையுண்கண்ணும் இடந்துடித்தது” என நிமித்தம் அறிந்து மகிழ்ந்தாளாம்.

**“பல்லியும் பாங்கொத் திசைத்தன**

**நல்லெழி லுண்கணும் ஆடுமா லிடனே” - (கலித். 11)**

என்னும் கலித்தொகைப் பாடற் பகுதி காதல் நெஞ்சத்தின் கனிவையும் நன்னிமித்தமறிந்து மகிழும் நற்செய்தியையும் கூறும். பல்லி பாங்கொத்திசைக்கும் நிமித்தத்தை இன்னும் சில பாடல்களிலும் நாம் காணலாம்.

**பழந்தமிழரின் விரிச்சி (நன்னிமித்தம்)**

விரிச்சி என்பது நற்சொற் கேட்டலாம். அதாவது ஒன்று நன்றாமோ தீ தாமோ என்று அறிய விரும்புவார் ஊர்ப் புறத்தே சென்று, நெல்லும் மலரும் தூவித் தெய்வம் பரவி, அயலிலே உண்டாகும் ஏதிலார் சொல்லை ஓர்ந்து நிற்பர். அங்ஙனம் நின்ற காலை அயலில் எழும் சொல் தம் கருத்திற்கு இயைபுடையதாய வழி நன்றாம் என்றும் முரணியவழி தீதாம் என்றும் கொள்வர். இதனை,

**“நாழி கொண்ட நறுவீ முல்லை**

**அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது**

**பெருமது பெண்டிர் விரிச்சி நிற்பச்**

**சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்” - (முல்லை பாட்டு, 7-18)**

எனவரும் **முல்லைப்பாட்டுப்** பகுதியால் இதனை இனிதுணரலாம்.

**விளக்கம்:**

போர்புரிய விரும்பிய அரசர்கள் முதலில் பகைவரின் ஆநிரைகளை (பசுக்கூட்டங்களை)க் கைக்கொள்வது வழக்கம். அப்போது வெற்றி கிடைக்குமா என்பதனை அவனுடைய படைவீரர்கள் அருகிலுள்ள பாக்கத்தில், மக்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, அவர்களறியாமல் சொற்கேட்கும் அளவில் நின்று, அவர்கள் கூறும் சொற்களை நிமித்தமாகக் கொள்ளுவர். இதனைத் தொல்காப்பியம் ‘பாக்கத்து விரிச்சி’ என்றும் கூறும். புறப்பொருள் வெண்பா மாலையும்,

**“வேண்டிய பொருளின் விளைவு நன்கறிதற்கு**

**ஈண்டிருள் மாலைச் சொல் லோர்த்து” - (புறப். பொ. வெ. மா. வெட்சி. 5)**

என்று கூறுவதும் ஈண்டுக் கருதத்தக்கதாகும். ‘விரும்பிய பொருளின் ஆக்கத்து அழகுணர்தற்குச் செறியும் இருண்ட மாலையிடத்து நற்சொற்கேட்டல்’ என்பர் இதன் உரைகாரர்.

**புள்ளும் விரிச்சியும்**

இணைபிரியாது வாழ்ந்த இல்லறத் தலைமகனும் தலைவியும் பிரிய நேரிடுகிறது. தலைவனைப் பிரிந்த தலைவி வருந்துகிறாள், வாடுகிறாள், சுணங்கு பூத்த அணங்காகிறாள். எனவே, 'வெற்றி பொருந்திய கொற்றவைக்குப் பலிக்கடனும் பூணோம், கைந்நூலும் கட்டோம்' என்று வருந்திக் கூறுகிறாள்.

**"புள்ளும் ஓரம் விரிச்சியும் நில்லாம்**

**உள்ளது முள்ளா மன்றே தோழி" -( குறுந். 218)**

என்று கூறுவதிலிருந்து, தலைவனைப் பிரிந்துறையும் மகளிர் காப்பு நூல் கையிற் கட்டி, நோன்பு பூண்டு 'புள்ளும் விரிச்சியும்' கேட்பர் என்பது புலனாகும். தலைவியின் காதல் மாண்பும், அன்புடை நெஞ்சமும் இதனால் இனிதே புலனாகின்றன. புறத்திணையில் மட்டுமின்றி அகத்திணையிலும் இக்குறி கேட்கும் வழக்கம் இருந்ததும் நன்கு தெளிவாகும். இங்ஙனம் விரிச்சி கேட்டு நின்றதை நற்றிணையிலும், புறநானூற்றிலும் மேலும் காணலாம்.

**பெண்ணியல் கூறும் நன்னிமித்தம்**

மாந்தரின் உடலில் ஏற்படும் குறிகள் கண்டும் பழந்தமிழர் நிமித்தங்களைக் கருதினர். தலைவன் தலைவியினைப் பிரிந்தான்; காலமும் நீண்டது. அவன் குறித்த பருவ வரவின் கண்ணும் வராமையினை எண்ணி, அவன் அன்புருவை நினைந்து வருந்துகின்றாள் தலைவி. அவள் மேனியியல்பை அறிந்த தோழி அவளை ஆற்றுவிக்கின்றாள். “வேந்துவிடு தொழிலின்கண் சென்ற தலைவன் வெற்றியுடன் முடித்து விரைந்து வருவதை நின் பெண்ணியல்பால் கண்டனன், கவலைற்க” என நிமித்தக் குறிகள் கூறி ஆற்றுவிக்கின்றாள். கண்ணாடல், தோள் இடம் துடித்தல், நுதலொளி சிறத்தல் முதலிய பெண்பாலுக்கு உரிய குறிகள், ‘பல்லாற்றானும்’ என்பதற்குத் தலைமகனோடு உடன் சென்று மீண்டோர் கூறுவனவும் நன்னிமித்தம் பிறவும் என்பர். ‘காதற் கொழுநற்களாவாகும் நன்மை தீமைகள் மகளிர் மேனிக்கண் தோன்றும் சில குறிகளால் உணரப்படும்’ என்பது பற்றி, பெண்ணியல் காமர் சுடர் நுதல் விளங்கும் என்றாள் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள். இதனை,

**“வேந்துவிடு விழுத்தொழில் எய்தி ஏந்துகோட்டு**

**அண்ணல் யானை அரசுவிடுத் தினியே**

**எண்ணிய நாளகம் வருதல் பெண்ணியல்**

**காமரு சுடர்நுதல் விளங்கும்**

**தேமொழி அரிவை தெளிந்திசின் யானே” - (ஐங். 466)**

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் அழகுற விளக்கும்.

**வளை செறிதல்**

ஐங்குறுநூற்றில் தலைவன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழி, அதுகேட்டு ஆற்றாளாகிய தலைமகளுக்குத் தோழி தான் கண்ட நற்குறிகளைக் கூறி, "தலைவன் விரைவில் வந்து உன்னை வரைவான் (திருமணம் செய்வான்), கவலைப்படாதே" என ஆற்றுவிக்கின்றாள். அப்பொழுது அவள்,

**“நுண்ணேர் புருவத்த கண்ணும் ஆடும்**

**மயிர் வார் முன்கை வளையுஞ் செறூஉம்**

**களிறுகோட் பிழைத்த கதஞ்சிறந் தெழுபுலி” - (மேலது. 218)**

என்று கூறும் அழகிய செஞ்சொற் கவியில், நுண்ணிய புருவத்தை உடைய கண் துடித்தலையும், மயிர் ஒழுங்கிய முன்கையில் அணிந்த வளைகள் நெகிழாது செறிதலையும் நன்னிமித்தங்களாகக் கூறுகின்றாள். பெரும்பாலும் அகத்துறையில் உளவியலுடன், ஆற்றாது புலம்பும் தலைமகளுக்கு நன்னிமித்தக் குறிகளைக் கூறி, அவளை ஆற்றுவிப்பது தோழியின் அறிவாற்றலுக்குச் சான்றாகத் திகழ்வதோடு, அவளது உளவியலறிவும் உலகியலறிவும் வெளிப்படுகிறது. இங்ஙனம், ‘வளை செறிதல்’ நன்னிமித்தம் என்பதைக் குறுந்தொகை கூறுவதும் கருதத்தக்கது:

பெண்டிர்க்கு இடக்கண், இடது தோள் துடித்தல் நன்மையின் நிமித்தம் என்பதைக்

கலித்தொகையும் கூறும். கண்ணகி கருங்கண்ணும் மாதவி செங்கண்ணும் இடமும் வலமும் துடித்த செய்தியினை இந்திரவிழவூரெடுத்த காதை இனிது கூறும். கண்ணகிக்குக் கோவலனின் கூட்ட முண்மையின் இடமும், மாதவிக்குப் பிரிவுண்மையின் வலமும் துடித்தன என்பர். ஆயர் ஊதுகின்ற குழலோசை அன்புடைய கேள்வனை நமக்குத் தருகின்ற நன்னிமித்த ஓசை கூறுவதாகக் கலித்தொகை கூறும்.

**விளக்கும் வெற்றியும்**

இவைபோன்ற நிமித்தக்க குறிகளேயன்றி கொழுந்து விட்டெரியும் 'ஒளிச் சுடரும்' நன்னிமித்தத்தைக் காட்டும் குறி எனப் புறப்பொருள் வெண்பாமாலை புகழ்கிறது. சுழல்காற்று சூறாவளியாக வீசத் தானைப் படையினருக்கு நன்னிமித்தம் தோன்றுகிறதாம். பெருங்காற்று வீசிய போதும் வலமாகச் சுழன்றெழுந்து சோதி உயர்ந்து எரிகிறது. எனவே, விளக்கின் மிகுந்த ஒளி வேந்தற்கு வெல்நெறியைக் காட்டுகின்றதாம்.

**"அளப்பருங் கடற்றனையான்**

**விளக்குநிலை விரித்து ரைத்தன்று" - (பு. பொ. வெ. மா. 200)**

என்னும் கொளுவிற்கு ஏற்ப, இப்பாடலைச் சான்று காட்டுவர் புறப்பொருள் வெண்பா மாலையார்.

**தவமும் நோன்பும்**

சங்ககால மக்கள் தவம் செய்வதிலும் நோன்பு இருப்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

**"நலமாண் எயிற்றி போலப் பலமிகு**

**நன்னலம் நயவர வுடையை**

**என்நோற் றனையோ? மாவின் தளிரே" -(மேலது, பா.365)**

தலைவன், "மாவிற்கு தளிரே! கூட்டமான விலங்குகளைத் தொலைத்துத் தன் தமையன்மார்கொண்டு வந்த நிணமான் தசையினைக் கவர வருகின்ற பறவைகளை ஓட்டும் பெண்மை நலம் உடைய எயிற்றியைப்போல், பலவாய் மிக்க நலம் யாவரும் விரும்பும்படி பெற்றுள்ளாய்!

**நல்ல நிமித்தம் காணுதல்**

தலைவன் மணம் பேசி சான்றோரை அனுப்பத் தலைவியின் சுற்றத்தார் மறுத்தனர். அதைக் கேட்டு, 'இஃது எப்படி முடியுமோ?' என்று வருந்திய தலைவிக்குத் தோழி தனக்கு நற்கறி செய்யக் கண்டு, 'விரைவில் வந்து மணந்து கொள்வான்' எனக் கூறுகிறாள்.

**நுண்ணேர் புருவத்த கண்ணும் ஆடும்**

**---------------------------------------------**

**பெருங்கல் நாடன் வருங்கொல் அன்னாய்" - (மேலது, பா.218)**

இப்பாடலின்படி தோழி தனது புருவத்தை உடைய இடக்கண் துடிக்கும். இடக்கண் துடித்தல் பெண்டிர்க்கு நன்னிமித்தம் மயிர் ஒழுக்கையுடைய முன்கை. நெகிழ்வு நீங்கிப் பொருந்தும். களிறு கொள்வதில் பிழைபட்ட புலி சினம் மிக்கு முழங்கும். மலை நாடன் எனக் கூறியதால், தம் சுற்றத்தார் மணந்து கொள்வதை மறுத்தமை அறிந்து கண் கலுழ்ந்து மேனி மெலிந்து ஆற்றாத தலைவிக்கு உள்ளுறையால் தலைவனின் ஆண்மைச் சிறப்பைச் சொல்லி ஆற்றுவிக்கலானாள். அவள் இடக்கண் துடித்தது கை வளை செறிந்தது என்பன நன்னிமித்தங்கள், எனவே இவற்றைப் புலப்படுத்தித் தலைவன் மணந்து கொள்வான் என்று தெளிவித்தாள். இது அக்காலத்தில் நிமித்தம் பார்க்கும் வழக்கத்தை எடுத்து இயம்புகிறது.

## தொகுப்புரை:

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சங்க காலத் தமிழர்கள், சுற்றியுள்ள உயிரினங்களின் அசைவுகளையும் மாற்றங்களையும் கூர்ந்து கவனித்துத் தங்களின் வாழ்வியலோடு தொடர்புபடுத்திக் கொண்ட உயரிய சிந்தனையின் வெளிப்பாடே நிமித்தங்கள் ஆகும். அறிவியல் வளர்ச்சியற்ற காலக்கட்டத்தில், மனித மனத்திற்கு நம்பிக்கையூட்டும் ஒரு வாழ்வியல் உத்தியாக இந்நிமித்தங்கள் திகழ்ந்துள்ளன என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

சங்க இலக்கியங்களை ஆழமாக நோக்கும் போது, நிமித்தங்கள் என்பவை வெறும் மூடநம்பிக்கைகளாக மட்டும் பார்க்கப்படவில்லை; அவை மக்களின் அக வாழ்விலும் புற வாழ்விலும் மிகப்பெரிய உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை அறிய முடிகிறது. தலைவனின் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தலைவிக்குக் காகம் கரைதலும், பல்லி சொல்லும் நிமித்தமும் பெரும் ஆறுதலைத் தந்துள்ளன. அதேபோல, போருக்குச் செல்லும் மன்னர்களுக்கு விரிச்சி கேட்டலும், கோள் நிலைகளும் வழிகாட்டியாக அமைந்துள்ளன.

ஆகவே, சங்க காலத் தமிழர்கள் இயற்கையைத் தங்களின் ஒரு பகுதியாகவே கருதினர். இயற்கையில் ஏற்படும் மாற்றங்களை நுட்பமாகக் கவனித்து, அதன் மூலம் தங்களின் எதிர்கால நிகழ்வுகளை ஓரளவிற்கு யூகித்து வாழும் கலை அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அறிவியல் வளராத அக்காலத்தில், மனித மனத்திற்கு நம்பிக்கையையும், எச்சரிக்கை உணர்வையும் ஊட்டிய ஒரு வாழ்வியல் கருவியாகவே 'நிமித்தங்கள்' விளங்கியுள்ளன என்பது திண்ணம்.

## துணைநூற்பட்டியல்


1. இராகவையங்கார், இரா (உ.ஆ). பத்துப்பாட்டு (மூலமும் உரையும்). ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, பதிப்பு 2021.
2. சாமிநாதையர், உ.வே, சிலப்பதிகாரமும் மூலமும், அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் உரையும், பதிப்பு 1944
3. சுப்ரமணியன், ச.வே, தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003
4. நாராயணசாமி ஐயா, அ. நற்றிணை நானூறு. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 600 018, மறு அச்சு, 2001.
5. பாக்யமேரி. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு. பூவேந்தன் பதிப்பகம், சென்னை, 600 004, பதிப்பு, 2019.
6. மோகன், இரா. (உ.ஆ). முல்லைப்பாட்டு. நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.) லிட்., சென்னை, பதிப்பு, 2014.


© 2026 முனைவர். ராதிகா ரெ.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 43–52
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# தவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வளமைக் கருத்தாக்கங்களும்

*Thavvai: Literary Expressions and Conceptualization of Fertility*

**சுபத்ரா கு.[1,*], முனைவர் சுந்தரமூர்த்தி ம.[2]**

[1] முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை பெரியார் பல்கலைக்கழகம் சேலம் - *11 8072677960, India*
[2] பேராசிரியர் தமிழ்த்துறை பெரியார் பல்கலைக்கழகம் சேலம் – *11 9443714173, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: சுபத்ரா கு. — nalinisubathra@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00013 |

## ஆய்வுச்சுருக்கம்

தவ்வை என்ற சொல் தமிழில் அன்னையையும் மூத்த சகோதரியையும், இவ்விடத்தில் தமிழர்களின் ஆதித்தெய்வமும் வளமைத்தெய்வமுமாகிய மூத்ததேவியையும் குறிக்கின்றது. தற்காலத்தில் இத்தெய்வ வழிபாடு மறைந்துவரும் நிலையில் மூதேவி என்ற வசைச்சொல்லின் பயன்பாடு மக்களிடையே இருப்பதனைக் காண முடிகின்றது. சங்ககாலத்து இலக்கியங்கள் முதற்கொண்டு தற்கால இலக்கியம் வரை தவ்வையைக் குறித்து நேரடியாகவோ மறைமுகமாகவோ வரும் பல்வேறு பெயர்கள் காணக்கிடைக்கின்றன. அப்பெயர்களின் ஆய்வு இத்தெய்வம் வளமைக்கும் செழிப்புக்கும் உரிய தெய்வமாக இருந்தது என்ற கருத்தினை உணர வழிவகுக்கும். இதன் வழி மூதேவி என்ற சொல், வசைச்சொல் அல்ல வளமைச்சொல் என நிரூபிப்பது இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

**Keywords / திறவுச்சொற்கள்:** மூதேவி – வளமை – செழிப்பு – தாய்தெய்வம் - வளமைக்கடவுள் - தமிழர்களின் ஆதித்தெய்வம்

## Abstract

The term 'Thavvai' in Tamil denotes mother and elder sister, and in this context, it refers to the primordial goddess and the goddess of Prosperity or Abundance of the Tamils, known as Moodevi. At present, while the worship of this deity is gradually declining, the use of ‘Moodevi’ as a derogatory term can be observed among the people. From Sangam-period literature through contemporary literature, various names referring to Thavvai, either directly or indirectly, can be found. The study of these names helps establish that this deity was associated with prosperity and abundance. Through this, the objective of this research is to establish that the word 'Moodevi' is not a derogatory term but a term denoting prosperity.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** கு., சு., & ம., மு. சு. (2026). தவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வளமைக் கருத்தாக்கங்களும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 43–52.

## முன்னுரை

தற்காலத்தில் தவ்வை வழிபாடு முற்றிலும் மறையக் கூடிய சூழல் உள்ள நிலையில் நாட்டுப்புற மக்களின் நினைவில் இத்தெய்வம் இருந்தாலும் 'அமங்கலத்தின் தெய்வம்' என்ற எதிர்நிலைப்பாட்டையும் புழக்கத்தில் மிகக் குறைவான பெயர்ப் பயன்பாட்டையும் கொண்டிருக்கிறது. ஆனால் இலக்கியங்களிலும் நிகண்டுகளிலும் இத்தெய்வம் குறித்த பெயர்ச் சொற்கள் பல காணக்கிடைக்கின்றன. மேலும் கள ஆய்வில் இத்தெய்வம் குறித்தும் இதன் வளமைத் தன்மை குறித்தும் மக்களிடமிருந்து நேரடியான தகவல் ஏதும் கிடைக்காவிட்டாலும் உற்றுநோக்கல் மற்றும் உய்த்துணரல் அடிப்படையில் கிடைக்கும் சில தகவல்கள் இக்கட்டுரைக்கும் தவ்வையின் வளமை பற்றிய கருத்துக்கும் வளம் சேர்க்கின்றன.

**வளமைக் கருத்தாக்கம்**

நாட்டுப்புற மக்கள் வளமை மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். வளமை என்பதற்கு செழிப்பு, நன்மை, செல்வம், உதவி, பொருள், மாட்சிமை எனவும் வளமையர் என்பதற்கு வேளாளர், மாட்சிமையுள்ளோர், பணச்செழிப்புள்ளோர் எனவும் பொருள் கூறப்படுகின்றது. வளம் என்பது செழிப்பு என்ற சொல்லாட்சியாலும் சுட்டப்படுகின்றது. செழிப்பு என்பது முதலில் பயிர்களின் செழிப்புத்தன்மையை உணர்த்துகின்றது. பயிரால் விளையும் தானியங்கள் செல்வம் எனப்படுகின்றது. தானியத்தினால் உணவுத்தேவையை நிறைவேற்றித் தன்னிறைவு பெற்றவன் தொடர்ந்து தன்னிறைவுத் தன்மையைப் பெற முயலும் போது வளமை பற்றிய கருத்து வலுப்பெறுகின்றது. மனிதன் உணவு உற்பத்தி செய்யும் தொழில் முறையைக் கைக்கொண்டபின்னும் பயிர் வளத்திற்கும், அழிவிற்கும் பல இயற்கை நிகழ்வுகள் காரணமாய் அமைந்தன. வெள்ளம், வறட்சி, மிகுந்த வெப்பம், தொடர்ந்து ஓரிடத்தில் பயிர் செய்வதால் வளம் குன்றுதல் ஆகிய இடர்பாடான காரணிகள் ஓரினம் நிலையாக ஓரிடத்தில் வேளாண்மை செய்து வாழ்வதற்குத் தடையாக இருந்தன. இதனை அனுபவத்தின் வாயிலாக அறிந்த மனிதன் ஒவ்வொரு இடர்பாடுகளையும் எதிர்க்கும் அல்லது தாங்கும் மாற்று வழிகளைச் சிந்திக்கலானான். இச்சிந்தனைகள் புலம் பெயர்ந்து வாழும் நாடோடி வாழ்க்கையையும் வேட்டைத் தொழிலையும் மறக்கச் செய்து ஓரிடத்தில் நிலையாக வாழும் வாழ்வுக்குக் கால்கோள் நாட்டியது.

ஆற்றலை வணங்குவதே தமிழரின் வழிபாட்டு மரபாகும் என்ற நிலையில் வேளாண்மைக்கும் கால்நடைவளர்ப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து பல வழிபாடுகளும் நம்பிக்கைகளும் தோன்றின. ஓரிடத்தில் நிலையாகத் தங்கும் போது தூய்மைக் கருத்தும் - கழிவு மேலாண்மையும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறியது. இத்தகைய தூய்மைக் கோட்பாடு பிற்காலத்தில் சில நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் தோன்றக் காரணமாய் அமைந்தது.

ஓரிடத்தில் நிலத்தைப் பண்படுத்தி உழுது வேளாண்மை செய்தபோது பயிர்கள் நன்கு விளைந்த நிலையில் அதே இடத்தில் தொடர்ந்து நிலைபெற்று வேளாண்மை செய்தனர். இம்மக்கள் இயற்கையை நம்பி வாழ்ந்தவராவர். அவர்கள் தாம் இயற்கையைப் போல நடந்தால் தாம் செய்வதைப் பார்த்து இயற்கையும் அதுபோல் நடக்கும் என்று நம்பினர். “மனித இனம் குழவிப்பருவத்தில் இருந்த நிலையில் இயற்கையை மந்திரத்தாலும் மாயவித்தைகளாலும் பணிய வைக்க முடியும் என்று நம்பிற்று. இயற்கையைப் போலச் செய்தால் இயற்கை தனக்கு பணிந்து தன் சொற்படி ஏவல் கேட்கும் என்று எண்ணிற்று”.( தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், ப.177) இது வளமை அல்லது செழிப்பு பற்றிய நம்பிக்கைகளை ஏற்படுத்துகின்றது. இந்நம்பிக்கை காரணமாக வளமைச் சடங்குகள் செய்யப் படுகின்றன. தொடர்ந்து வளமை வழிபாடு தோன்றியது. வளமை என்பது பயிர் வளமும் உயிர் வளமும் மிகுதியாகச் செழித்து வளர்வது காரணமாக உருவான கருத்தாக்கம் ஆகும். இதனடிப்படையில் வளமைக் குறியீடுகள் பல உருவாகியிருக்கின்றன.

### தாய்த்தெய்வ உருவாக்கத்தில் வளமைப்பார்வை

"உலக இலக்கியங்களும் நாட்டார் வழக்காறுகளும் நிலத்தையும் பெண்ணையும் ஒரே நேர்க்கோட்டில் வைத்தே பேசுகின்றன. நிலத்திற்குரிய இலக்கணங்களைப் பெண்ணிற்கும் பெண்ணிற்குரிய இலக்கணங்களை நிலத்திற்குமாகப் பொருத்திப் பார்ப்பதை சமூகம் ஒரு மரபாகவே இன்று வரை கடைபிடித்து வருகின்றது."[2] (ஆர். முத்துராஜன், நாட்டார் வழக்காற்றில் வேளாண் பழமொழிகள், ப. 82) மண்ணும் பெண்ணும் ஆகிய கருத்துக்கள் வளமைக்குரிய ஒன்றாகவும் வளமையுடனும் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. உலகியலில் மண், பயிர்களை உற்பத்தி செய்கின்றது. பெண் மனித உயிர்களை உற்பத்தி செய்கின்றாள். இவ்விரண்டையும் உற்பத்தி என்ற அடிப்படையிலும் 'வளமை' என்ற அடிப்படையிலும் ஒப்புமைப்படுத்திப் பேசியிருக்கின்றனர். இதனடிப்படையில் மக்கள் தாய்தெய்வ வழிபாட்டினை மேற்கொண்டிருக்க வேண்டும். இதுவரை கிடைத்துள்ள தாய்தெய்வச் சிற்பங்கள் அனைத்தும் வளமைக்குறிகளுடன் கிடைத்துள்ளமை இக்கருத்தினை மெய்ப்பிக்கின்றது. தொல்லியல் சான்றுகளில் காணலாகும் பருத்த வயிறும் மார்பகங்களும் தவ்வை சிற்பத்திலும் இடம்பெறுகின்றன. தவ்வை சிற்பத்தினைத் தவிர வேறு எந்தப் பெண்தெய்வச் சிற்பங்களும் பெரிய வயிற்றினையும் மார்பினையும் கொண்டிருக்கவில்லை. இக்கருத்துக்கள் வளமைக்கும் வளத்தின் விளைவான செல்வத்திற்கும் ஒரு பெண்தெய்வமே அதிபதியாகக் கருதப்பட்டு வணங்கப்பட்டு வந்தமையை வெளிப்படுத்துகின்றன.

### நாட்டுப்புற மக்களின் வளமைக்கருத்துக்கள்

மூத்ததேவி நாட்டுப்புற மக்களின் சிறுதெய்வமாகும். இதனைப்பற்றி தொ.பரமசிவன் அவர்கள் "குடைவரை கோவில்கள் எழுந்த காலத்தில் வைதீகப் பார்ப்பன மரபு ஏற்றுக்கொள்ளாத தொல்திராவிடத் தெய்வங்கள் சிலவும் இக்கோவில்களில் இடம் பெற்றிருந்தன. திருப்பரங்குன்றத்தில் சிவன், திருமால், முருகன், நடராசர் ஆகிய தெய்வங்களோடும் பக்கத்தில் மூத்ததேவி(மூதேவி) எனப்பட்ட ஜேக்ஷ்டா தேவிக்கும் ஒரு தன்னி குடைவரை உருவாக்கப்பட்டுள்ளது". (தொ. பரமசிவன், சமயங்களின் அரசியல்,பக்.20,21) இக்கருத்துக்கு சில வரலாற்று ஆவணங்களும் துணைசெய்கின்றன. வைதீக மதமும் திருமாலை வழிபடும் பிராமண அந்தணர்களின் தீட்டுக்கோட்பாடுமே தமிழர்களின் நாட்டுப்புறத்தெய்வங்கள் 'சிறு'தெய்வங்களாக மாறியதற்குக் காரணமாகும்.

மூத்ததேவி செல்வத்துக்கு அதிபதியாக இருந்தவள் என்பதைக் கூற நாட்டுப்புறப் பழக்கவழக்கங்களில் ஏராளமான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. உதாரணமாக வீட்டினைத் தூய்மை செய்யும் துடைப்பத்தை காலில் மிதிப்பதும், வீட்டின் மூலையில் குப்பைகளைக் குவித்து வைப்பதும், பொழுது இறங்கும் வேளை அதாவது மாலை வேளைகளில் குப்பையை வெளியே கொட்டுவதும், உறைமோர் முதலான பெருகக் கூடிய செல்வங்களை மாலை நேரத்தில் மற்றவருக்குத் தருவதும், நாம் பயன் படுத்திய துடைப்பத்தினைக் கடனாகத் தருதல், வெள்ளிக் கிழமைகளில் பணம் கொடுத்தல், உரல் அம்மி முதலான உணவு தாணியங்களினைத் தூய்மை செய்யும் கருவிகளைக் காலில் மிதித்தல் போன்ற செயல்களால் ஒரு குடும்பத்திற்கு வறுமை, தரித்திரம், செல்வக் குறைவு, உணவுக்குறைவு ஆகியவற்றை ஏற்படுத்தும் என்பது நாட்டுப்புற நம்பிக்கையாகும். இந்நம்பிக்கைகளுக்குரிய பொருள்களைப் பார்க்கும் போது இவை தவ்வையின் அடையாளங்களாகத் தெரிகின்றன. ஆனால் நாட்டுப்புற வழக்கு இவற்றுக்குரிய தெய்வமாக திருமகளான லட்சுமியை அடையாளப்படுத்துகின்றது. இவற்றிடையே நுட்பமாக பார்க்கும்போது மக்கள் தவ்வைக்கு மாற்றாக இலட்சுமி தெய்வத்தை ஏற்றுக்கொள்ளப்பட்டமை புலனாகின்றது.

பிற்காலத்தில் தமிழகத்துக்குள் வந்த ஆரியர்களின் பண்பாட்டுக் கலப்பே

தமிழர்களின் வளமைத் தெய்வம் மறைந்ததற்கான காரணமாக அமைகின்றது. அவர்கள் பழங்குடி இன மக்களின் தெய்வங்கள் சிலவற்றைத் தமதாக்கிக் கொண்டனர் என்பதும், அத்தெய்வங்களின் வழிபாட்டு முறையைத் தங்களது மரபுக்கேற்ப மாற்றிக் கொண்டனர். மேலும் அத்தெய்வங்களுக்கான புராணக் கதைகளையும் புனைந்து கொண்டனர். இவ்வாறே தவ்வை என்ற வளமைத்தெய்வத்திற்கு ஈடாக இலட்சுமி என்ற தெய்வத்தைப் படைத்துக்கொண்டிருப்பினும் இதனை நாட்டுப்புற மக்களும் பெயரளவில் ஏற்றுக்கொண்டாலும் மறைமுகமாக அவர்களது வாழ்வியலில் தவ்வையையே நிலைபெற்ற தெய்வமாக வைத்துள்ளனர்.

**உரம்**

தொடக்க காலத்தில் மக்களின் வழிபாடு ஆற்றலை வழிபடுவதாக அமைந்திருந்தது. இயற்கையைக் கண்டு அஞ்சிய மனிதன் உணவும், வளங்களும் தனது தேவைகளும் இயற்கையிடமே இருக்கின்றது என்பதையும் அறிந்தான். எனவே அவ்வியற்கையை வயப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொண்டான். ஆற்றலைப் பெறவும் அதனைத் தன்வயப்படுத்திக்கொள்ளவும் விழைந்த மனிதன் அதனை வணங்கத் தலைப்பட்டான். இவ்வகையில் முதன்மைத்தொழிலான வேளாண்மைக்கு மூலமாக வளத்தினை வழங்குவது உரமாகும். உரத்தின் ஆற்றலே இங்கு வளம் என வழங்கப்படுவதாகும்.

ஓரிடத்தில் நிலத்தைப் பண்படுத்தி உழுது வேளாண்மை செய்தபோது பயிர்கள் நன்கு விளைந்த நிலையில் அதே இடத்தில் தொடர்ந்து வேளாண்மை செய்தனர். அவ்வாறு செய்யும்போது ஆண்டுக்கு ஆண்டு மண்ணின் வளம் குறைவது இயற்கையே. அப்போது உரத்தின் பயன்படு மேலோங்கிய சூழல் காணப்படும். வேளாண்மையில் உரத்தின் பயன்பாடு வளத்தை மிகுவிக்கிறது. இவ்வளமை ஆற்றல் வணக்கத்திற்குரிய தெய்வத்தினைத் தோற்றுவிக்கிறது. எருவினைக் குப்பை என்றே வழங்குவர். எருவினைக் குழிகளில் இட்டு மட்க வைத்து உரமாகப் பயன்படுத்துவர். வீடுகளில் சேரும் குப்பையும் எருக்குழிக்கே சென்றுசேரும். எருவினை வளம் தரும் செல்வத்தின் மூலமாகக் கருதியதாலே குப்பையைக் கொட்டுதல் - செல்வத்தைக் கொட்டுதல் என ஆகிவிட்டது. உரக்குழியை மிதிக்கக்கூடாது என்ற நம்பிக்கையும், சாணம் என்பது இலட்சுமியின் அம்சம் எனக் கூறும் வழக்கு தவ்வையைக் குறித்து வருவதனையும் இதன் மூலம் அறியலாம்.

**தவ்வை குறித்துவரு கிளவிகள்**

சேட்டை என்ற சொல்லாட்சி கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் “சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே” என்று பாடுவதன் மூலம் அறிகிறோம். ஜேஷ்டா என்பதற்கு மூத்த அல்லது பெரிய என்று பொருளாகும். திருமகளாகிய லட்சுமி தேவிக்கு மூத்தவள் என்ற பொருளிலில் பரவலாக ஜேஷ்டாதேவி என்ற பெயர் பயன்படுத்தப் படுகின்றது. ஆனால் தமிழில் மூத்தோள், பழையோள் என்ற தாய்தெய்வப் பெயர்களே வடமொழியில் ஜேஷ்டாதேவி என்று ஆக்கிக்கொள்ளப்பட்டது. ஆரியர்கள் தமிழர்களின் அல்லது பழங்குடிமக்களின் தெய்வவழிபாட்டை ஏற்றுக்கொண்டனர். அவ்வகையில் ஆரியர்களின் பெண்தெய்வ வழிபாடு என்பதும் பழங்குடி மக்களிடம் இருந்து பெறப்பட்டதாகும். சூடாமணிநிகண்டு ஜேஷ்டாதேவிக்கு வேறுபெயர்களாக பதிமூன்று(13) பெயர்களைக் குறிப்பிடுகின்றது. மூதேவி, தௌவை, முகடி, சீர்கேடி, சிறப்பில்லாதாள், கேட்டை, கெடலணங்கு, சேட்டை, ஏகவேணி, கலதி, இந்திரைக்கு மூத்தாள், காகத்துவசம் உற்றாள், கழுதை வாகினி - இவற்றுடன் கயாதர நிகண்டு பதிநான்காவதாக(14) கரக்கொடி மங்கை என்ற பெயரையும் சேர்த்துக் குறிப்பிடுகின்றது.

**தவ்வை**

மூத்ததேவியைக் குறிக்கத் தற்கால ஆய்வுகளில் தவ்வை என்ற சொல்லே அதிகம் காணப்படுகின்றது. “பட்டோன் தவ்வை படுதுயர் கண்டு” (சிலம்பு.15:60) என்ற சிலப்பதிகார வரியில் காணப்படும் பட்டோன் தவ்வை என்ற சொல்லுக்குப் “பொய்யனைப் பெற்ற தாய்”4 என உரையாசிரியர்களால் பொருள் கூறப்பட்டுள்ளது. இதே சிலப்பதிகாரத்தில் “ஐயையும் தவ்வையும்”(சிலம்பு.16:52) என்ற வரி காணப்படுகின்றது. இது மாதரியையும் ஐயையும் குறித்துவரும் வரியாகும். இதிலும் தவ்வை எனும் சொல் ஐயையின் அன்னை மாதரியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தின் சமகாலத்தில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் மணிமேகலையில் “தாரை தவ்வை தன்னொடு கூடிய”(மணி.7:104) என்னும் வரி காணப்படுகின்றது. இவ்வரியில் தவ்வை என்ற சொல்லுக்கு மூத்த சகோதரி என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. சமகாலத்தில் வாழ்ந்த நெருங்கிய தொடர்புடைய இரு புலவர்களின் இப்பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் அவர்களின் வாழ்விடத்தின் வட்டார வழக்கு வேறுபாடாக இருக்கலாம். தவ்வை எனும் சொல் அன்னையைக் குறிக்கப்படுவதாகக் கொண்டாலும் தாய்வழிச் சமூகம் நிலவிய தமிழகத்தில் மூத்ததாய் இறந்தபிறகு மூத்த சகோதரி குடும்பத் தலைவியாவாள். எவ்வாறாயினும் குடும்பத் தலைவியைத் தவ்வை என அழைத்ததும், அவ்வழக்கு பின்னாளில் அன்னை, மூத்த சகோதரி ஆகிய இருவரையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றிலிருந்து மாறுபட்டு சங்க காலத்தைச்சேர்ந்த காப்பியங்களுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் நூலான திருக்குறளில் தவ்வை என்ற சொல் நேரடியாக ‘மூதேவி’ என்ற பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது என்பது கிட்டத்தட்ட அனைத்து உரையாசிரியர்களின் கருத்தாகவே உள்ளது.

**அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்**
**தவ்வையைக் காட்டி விடும்.** (குறள்.167)

என்ற குறளுக்கு “பிறர் ஆக்கங்கண்டவழிப் பொறாமையுடையானைத் திருமகள் தானும் பெறாது தன் தவ்வைக்குக் காட்டிநீங்கும்” எனப் பரிமேலழகர் உரை கூறுகிறார்.

“அழுக்காறு உடையானைத் திருமகள் தானும் அழுக்காறு செய்து தன் தவ்வையாகிய மூதேவிக்கு காட்டி இவன்பால் செல் என்று போம். இது நல்குரவிற்குக் காரணம் கூறிற்று” என மணக்குடவரின் உரை கூறுகின்றது. செய் என்பதற்கு நிலம் என்று பொருள். இச்சொல்லுடன் ‘அள்’ என்ற பெண்பால் விகுதி சேர்க்கப்பட்ட செய்யவள் என்ற சொல்லுக்கு நிலமகள், பூமித்தாய் என்றும் பொருள் கொள்ளலாம். நிலத்தைப் பெண்ணாக உருவகம் செய்யும் வழக்கம் தமிழர்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் ‘செய்யவள் தவ்வை’ என்ற வாக்கியத்திற்கு செய்யவளான தவ்வை எனவும் பொருள் கொள்ளலாம். இதனைக்கொண்டு பேராசை எனும் காழ்புணர்ச்சியை ஒருவன் கைக்கொண்டால் அவன் நிலமகளுக்கு உரமாவான். அல்லது மண்ணோடு மண்ணாவான் என இக்குறளிற்குப் பொருள் கொள்ளவும் இடமுண்டு.

பொறாமைக் குணம் கொண்டவன் மடிந்து மண்ணிற்கு உரமாவான் என்ற பொருளில் இக்குறளைக் காணலாம். இக்கருத்திற்கு வலுவூட்டும் வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி ‘தவ்வுதல்’ என்ற சொல்லுக்குக் கெடுதல், அழிதல், உருக்குலைதல் ஆகிய பொருள்களைத் தருகிறது. உயிர் மற்றும் உயிரல் பொருள்கள் உருக்குலைந்து, அழிந்து உரமாகின்றன. இவ்வுரமே தவ்வையின் முதன்மையான அடையாளமாகும். மேலும் இவ்வகராதி தவ்வை என்ற சொல்லுக்கு தாய், தமக்கை, மூதேவி ஆகிய பொருள்களைக் கூறுகின்றது. மேலும் அவ்வை என்ற சொல்லிலிருந்து தவ்வை என்ற சொல் வந்ததாகக் குறிப்பிடுகின்றது. தவ்வை என்ற சொல்லுக்கு ந.சி.கந்தையாவின் திருக்குறள் அகராதி “தமக்கை, மூதேவி” ஆகிய பொருள்களையும்

செந்தமிழ் அகராதி “தமக்கை, தாய், மூதேவி” ஆகிய பொருள்களையும் கூறுகின்றது. மதுரைத்தமிழ்ப் பேரகராதி தவ்வை எனும் சொல்லுக்கு “அக்காள், செவிலித்தாய், மூதேவி, செவிலியின் மகளாய்த் தலைவியின் மூத்தவள்” ஆகிய பொருள்களைக் கூறுகிறது.

தவ்வுதல் என்ற சொல்லுக்கு சொற்பிறப்பியல் அகராதி கூறும் பொருள்களின் வழி, அதனுடன் ‘ஐ’ எனும் பெண்பால் விகுதிசேர்க்கப்பட்டு தவ்வை என்ற சொல் தோன்றியிருக்கலாம். இச்சொல் வளத்துடனும் உரத்துடனும் தொடர்புடைய பெண்தெய்வத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற விளக்கம் இதிலிருந்து பெறப்படுகின்றது.

**மாமுகடி**

மாமுகடி என்ற சொல்லும் பலவிடங்களில் தவ்வையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. திருக்குறளிலும் மூத்ததேவியைக் குறிக்கும் சொல்லாக மாமுகடி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்**

**தாளுளாள் தாமரையி னாள்.** (குறள்.617)

இக்குறளில் காணும் மாமுகடி என்னும் சொல் மூதேவியைக் குறிப்பதாக உரையாசிரியர்கள் பலரும் பொருள் கூறியுள்ளார். உதாரணமாக மணக்குடவர் எனும் உரையாசிரியர் ‘வினைசெய்யுங்கால் அதனைச் செய்யாது சோம்பியிருப்பானது சோம்பலின் கண்ணே மூதேவி உறைவாள். அதனைச் சோம்பலின்றி முயலுபவன் முயற்சியின் கண்ணே திருமகள் உறைவள் என்று சொல்லுவர். இது வினையை மடியின்றிச் செய்யவேண்டும் என்பது கூறிற்று’ என உரை கூறியுள்ளார். ‘கரிய சேட்டை ஒருவன் மடியின் கண்ணே உறையும்; திருமகள் மடியிலானது முயற்சிக்கண்ணே உறையும் எனச் சொல்லுவர் அறிந்தோர்’ எனப் பரிமேலழகர் உரை கூறியவிடத்து கரிய சேட்டை என மூதேவியைக் குறிப்பிடுகின்றார். திருக்குறளார் வீ.முனிசாமியும் தவ்வையைக் குறிக்கக் கரியசேட்டை என்ற சொல்லட்சியைப் பயன்படுத்தியுள்ளர். பெரிய துன்பக் கடவுள் என சி. இலக்குவனார் தவ்வையைக் குறிப்பிடுகின்றார். கரிய நிறமுடைய மூத்தவள் என கா.சு.பிள்ளை குறிப்பிடுகின்றார். இவ்வாறு மூதேவியைக் குறிக்க சேட்டை, கரிய சேட்டை, துன்பக்கடவுள் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட உரைகள் அனைத்தும் ‘மாமுகடி’ என்ற சொல்லிற்கு கரிய சேட்டை ஆகிய மூதேவி என்றும் தாமரையினாள் என்பதற்குத் திருமகள் என்றும் பொருள் கூறுகின்றன.

முகடி என்ற சொல் மோடி என்ற சொல்லிலிருந்து திரிந்த சொல்லாகக் கருதலாம். சங்க இலக்கியப் பாக்களில் ‘மோடி’ என்ற சொல் காணப்படுகின்றது. இச்சொல் தாய்த்தெய்வத்தைக் குறித்து வருகின்றது. முகடி என்ற சொல்லுக்கு அபிதான சிந்தாமணி ‘மூதேவிக்கு ஒரு பெயர்’ எனப் பொருள் கூறுகின்றது. மதுரைத் தமிழ்ப் பேரகராதி முகடி என்ற சொல்லுக்கு மூதேவி என்பதுடன் ‘மேட்டிமைக்காரி’ எனப் பொருள் கூறுகின்றது. மேட்டிமை என்ற சொல் தற்காலத்தில் உயர்ந்த என்ற பொருளில் ஆளப்படுகின்றது. மேட்டிமைக்காரி என்ற சொல்லுக்கு மேட்டிமைப்பண்பு உடையவள் என்ற பொருள் ஏற்படுகின்றது. மேட்டிமை என்ற சொல்லுக்கு தலைக்கணம், கர்வம் போன்ற பொருள்களுடன் ‘பெரியதனம்’ என்ற சொல்லும் காணப்படுகின்றது. இதன் மூலம் பெரியதனக்காரி என்பதும் பெறப்படுகின்றது. இச்சொல்லை மூத்ததேவி, தவ்வை பற்றி எழுதிய தொல்லிய ஆய்வாளர் கோ. சசிகலா குறிப்பிடுகின்றார். “மூத்ததேவியின் பெருத்த வயிறும் தனங்களும் மிகுந்த வளத்தைத் தரும் குறியீடுகளாகப் பண்டு வணங்கப்பட்டன” (கோ. சசிகலா, கொற்றவையும் நடுகற்களும், ப.81) என அவர் குறிப்பிடுவதிலிருந்து பெரியதனம் என்பது வளமை வழிபாட்டுப் பொருளாக இருந்ததனை அறியலாம். மேலும் மேட்டிமைக்காரி என்பதும் மேட்டிமைக்காரன்

என்பதும் ஒருபொருள் உணர்த்தும் பால் வேறுபாட்டுச் சொற்கள் ஆகும்.

பெரியதனக்காரன் என்பதற்கு நிழக்கிழார், பெரும் செல்வமுடையவன், சொத்துடையவன் என்ற நேரடிப்பொருள் கூறப்படுகின்றது. நிலம், செல்வம் ஆகிய பொருள்கள் பண்டைய இனக்குழு சமூகத்தில் பெண்ணோடு தொடர்புடையவனவாய் இருந்தன என்பதை அறிவோம். இக்காலத்தில் பெரியதனக்காரன் என்ற சொல் ‘ஒருவருடைய முடிவெடுக்கும் பண்பை’ எதிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் பெரியதனக்காரர் ஊரின் நிர்வாகத்தில் சில முடிவுகளை எடுப்பவராக உள்ளதை நம்மால் அறியமுடிகின்றது. பெரும் சொத்து, பெரும் செல்வம் ஆகியவற்றின் அதிபதியாக இருந்தமையால் தவ்வை மேட்டிமைக்காரி என அழைக்கப்படுகிறார்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் மோடி என்ற சொல்லானது தாய்த்தெய்வத்தைக் குறித்து வருகின்றது. இதன் வேர்ச்சொல் ‘மோடு’ எனக் கொண்டால், இதற்கு “மேடு, உயர்ச்சி, முகடு, கூரையின் உச்சி, பருமை, பெருமை, உயர்நிலை, வயிறு, கருப்பை, பிளப்பு, உடம்பு, மடமை ஆகிய பொருள்களை தமிழ் தமிழ் அகராதி கூறுகின்றது. இச்சொற்களுள் முகடு என்ற சொல்லிற்கு பெண்பால் விகுதி சேர்த்தால் முகடி ஆகின்றது. மேலும் பருமை, வயிறு, கருப்பை, பிளப்பு, உடம்பு ஆகிய சொற்களும் வளமைக் கருத்தோடு பொருந்தி அமைகின்றன. உயிர்களைத் தோற்றுவிக்கும் கருப்பையும் கருவினைத் தாங்கும் வயிற்றையும் அவ்வயிறு மேடாக இருப்பதனையும் உணர்த்தும் இச்சொல் சங்க இலக்கியத்தில் தாய்த்தெய்வத்தைக் குறிக்கின்றது.

மோடி என்பதற்கு எல்லோரையும் பெற்ற தாய் எனப் பொருள் கூறுவார் நச்சினார்க்கினியர். மோடு என்பதற்கு வயிறு, பெரிய வயிறு, எல்லோரையும் பெற்ற வயிறு எனப் பொருள் கூறுவர். மோடி என்பதற்கு அத்தகைய வயிற்றை உடைய பெண், தாய், எனப் பொருள் கொள்ளலாம். “மோடு என்பதற்கு எல்லோரையும் பெற்ற வயிறு என்று பெரும்பாணாற்றுப்படையில் (வரி 458) நச்சினார்க்கினியர் கூறிய விளக்கத்தைக் கவணிக்க வேண்டும்”8

பெருங்கதையில் இலாவணகாண்டம் 106 வது பாடலில் மோடேந்தரிவை என்ற சொல் காணப்படுகின்றது. தனிப்பாடல் ஒன்று ‘பெருமோட்டுக்கிழாள்’ என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றது. தகடூர் யாத்திரை பெருமோட்டாள் எனக் குறிப்பிடுகின்றது. பிற்காலத்தில் மோடி என்பது காளி, மந்திரம், தந்திரம் என்ற பொருளில் ஆளப்படுகின்றது. கான மோடி என நீலகேசியிலும் போகமர் மோடி, கடற்கோடியின் மோடி என்ற சொற்கள் தேவாரத்திலும் காணப்படுகின்றது. தக்கையாகப் பரணி மோடியுரையுங்காடு என்று குறிப்பிடுகின்றது. ‘மோடி முன்தலையை வைப்பரே முடி’ என்ற வரிகள் கலிங்கத்துப்பரணி பெண்தெய்வத்திற்குத் தலையைக் காணிக்கையாக்குகின்றதைத் தெரிவிக்கின்றது.

எல்லாரையும் பெற்ற வயிறு பெரியதாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பெரிய வயிற்றையுடைய தாய்த்தெய்வம் படைக்கப்பட்டது. புதிய கற்கால மனிதன் இத்தெய்வத்தைச் சுடுமண் சிற்பங்களாக உருவாக்கினான். இவற்றின் எச்சங்கள் பல தொல்லியல் சான்றுகள் வழி காணக்கிடைக்கின்றன. இவற்றுள் தாய்மைக்கான அடையாளங்கள் மிகுத்துக் கூறப்பட்டுள்ளன.

## பழையோள்

தவ்வை என்ற தெய்வத்தின் சங்ககாலப் பெயர் பழையோளாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். “இழைஅணி சிறப்பின் பழையோள் குழவி”(முருகு.259) என்பதற்கு காடுகாளுடைய குழவி எனப் பொருள் கூறுவர். காடுகாள் என்பது காடுகிழாள் என்பதிலிருந்து தோன்றிய சொல்லாகும். பழையர் என்ற பழங்குடி சமூகத்தின் தெய்வம் பழையோள் என்பதும் பலருடைய கருத்தாக உள்ளது. பழையர் மகளிர் தழையுடை அணிந்து கோடேந்து அல்குல் உடையவராக தாய்த்தெய்வத்தை

வணங்கினர் என்பதை

**“தலையணிப் பொழிந்த கோடேந் தல்குல்**

**பழையர் மகளில் பனித்துறை பரவ”** (அகம்.201:4-7)

என்ற அகநானூற்றுப் பாடல் உணர்த்துகின்றது. “நக்னசபரி என்ற பெயரில் இந்தத் தெய்வத்தை இந்துக்களும் தொழுதனர். ஆடையற்ற பெண்தெய்வம் என்பதே இதன் பொருள்” (பி.எல். சாமி,தமிழ் இலக்கியத்தில் தாய்தெய்வ வழிபாடு,பக்.1,2) எனப் பி.எல்.சாமி குறிக்கின்றார். இன்றளவும் கிடைத்துவரும் தவ்வை சிற்பங்களும் மேலாடையற்றதாகவே காணப்படுகின்றது. மிகப் பழமையான குடிகளிடமிருந்து மிகப்பழங்காலத்தில் தமிழர் பெற்ற தெய்வம் என பழையோளை பி.எல்.சாமி குறிக்கின்றார். முதியோள் கோட்டம் என்ற கோவில் பற்றி மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது. இது பழையோளை வழிபடும் இடமாக இருக்க வாய்ப்புகள் இருக்கின்றது. நாயன்மார்களும் முதுகோதை என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்துகின்றனர். இச்சொல்லும் தவ்வையைக் குறித்து வரலாம்.

திவாகர நிகண்டில் தாய்த்தெய்வங்களாகக் கூறப்படும் பெயர்த் தொகுதிகளில் காடுகாள் என்பதற்கு மோடி, காரிதாய், கொற்றி, மாரி, சூரி, வடுகி, மூதணங்கு என்ற சொற்களைக் காணலாம். இவற்றுள் மோடி என்பதற்கு எல்லோரையும் பெற்ற வயிறு எனப் பொருளாகும். மூதணங்கு என்ற சொல்லும் தவ்வையைக் குறித்து வரும். மூதணங்கு என்ற சொல்லுக்கு பழையோள், வருத்தும் தெய்வம், பெண்தெய்வங்களில் மூத்தவள் எனப் பொருள் கூறப்படுகின்றது.

**ஏகவேணி**

தவ்வையின் பல பெயர்களுள் ஒன்றாக ‘ஏகவேணி’ என்ற பெயரும் காணப்படுகிறது. இதற்குப் பொதுவான பொருளாக ஒற்றைச் சடையுடையவள் எனக் கூறப்படுகின்றது. ‘ஏ’ எனும் சொல்லுக்கு அம்பு என்பது பொருளாகும். ஒரு நாணில் ஒரே அம்பு மட்டுமே ஏற்ற முடியும் என்பதன் அடிப்படையில் ஒற்றை என்ற பண்புப்பெயர் ஏ எனும் ஓரெழுத்து ஒருமொழிக்கு ஆகி வந்தது. வில்வித்தையில் தேர்ந்தவன் ஏகலைவன் என அழைக்கப்பட்டான். முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை ஏகன் என்றும் கூறுவர்.

வேணி என்பதற்கு சடைப்பின்னல் என இவ்விடம் பொருள் கொள்ளப்படுகின்றது. இதனடிப்படையில் ஏககவேணி என்ற சொல்லுக்கு ஒற்றைச் சடையுடையாள், ஒற்றைச் சடையுடைய மூதேவி என்றெல்லாம் பொருள் ஏற்பட்டது. ஏகம், வேணி, ஏகவேணி ஆகியசொற்களுக்கு அகராதிகளிலும் பொருள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சில வளமைக் கருத்தோடு பொருந்திவருகின்றன. வேறொரு வகையில் ‘ஏகவேணி’ என்ற பெண்தெய்வம் வண்ணார்கள் வழிபடும் தெய்வமாக இருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் பல காணக்கிடைப்பதாக கல்வெட்டு அறிஞர்கள் தெரிவிக்கின்றன. அவ்வகையில் தவ்வையோடு தொடர்புடைய கழுதையும் வண்ணார் இன மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்ந்துள்ளது. வண்ணார்கள் அழுக்குத் துணி மூட்டையுடன் எதிரே வந்தால் நல்ல சகுனமாகப் பார்க்கப்படுகின்றது. அவர்கள் அழுக்குத்துணி மூட்டையைக் கழுதையின் மீதே வைத்து நடத்தி வருவர். அக்கழுதையைக் குறித்து இந்நம்பிக்கை தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

வேணி என்ற சொல்லுக்கு ‘பின்னிய சடை, வசம்பு, நீர்ப்பெருக்கு, தெரு, ஆகாயம்’ என்று ந.சி.கந்தையாவின் செந்தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. நீர்ப்பெருக்கு என்பதும் ஆகாயம் என்பதும் தவ்வையோடு நேரடிப்பொருள் கொண்டதாக வளமைக்கருத்தோடு தொடர்புடையதாக உள்ளது. நீர் என்பது அனைத்திற்கும் ஆதாரம் ஆகும். பயிர் வளர்ச்சிக்கு அடிப்படை நீராகும். நீருக்கு ஆதாரமாக ஆகாயம் அமைகின்றது. நீரும் நீரால் நீக்கப்படும் அழுக்கும் வண்ணார்களின் தொழிலுக்கு அடிப்படையாகும். அழுக்கின் அடையாளமாகவே தவ்வை வணங்கப்படுகின்றார். பயிர்வளர்ச்சிக்கும் நீரும்

உரமும் இன்றியமையாதன. துணிகளை வெளுப்பதற்கு நீரின் பங்கு இன்றியமையாதது. நீரும் உரமும் போல கழுதைவாகனம் என்பது தவ்வையோடும் வண்ணார்களின் வாழ்வாதாரத்தோடும் பிண்ணிப் பிணைந்துள்ளது. இன்றும் வீடுகளின் முன் கழுதையின் படத்தை மாட்டி ‘என்னைப்பார் யோகம் வரும்’ என்ற வாக்கியம் எழுதப்படுகின்றது. இங்கு யோகம் என்பது செல்வத்தைக் குறிப்பதாகவே அமைகின்றது. செல்வத்தின் அதிபதியான இத்தெய்வத்தை வணங்குதல் கூட இங்கு பேசப்படவில்லை. அதனைக் கண்டாலே போதும் என்ற கருத்து இவ்விடம் வலுவாகக் கூறப்பட்டுள்ளதனை அறியலாம். வளமை நம்பிக்கைகள் அனைத்தும் இத்தத்துவத்தினையே கொண்டு அமைகின்றன. இவற்றைச் சிற்பச் சான்றின் மூலமும் அறியலாம். எனவே இவை பற்றிய நம்பிக்கையும் வளமையின் அடியாகவே பிறக்கின்றன.

## முடிவுரை

வளமை என்பது பயிர்கள் மற்றும் மனித உயிர்கள் பெருகி வளர வேண்டும் என்ற கருத்தினை மையமாகக் கொண்டு இயங்கும் ஓர் பண்பாட்டு அசைவாகும். பயிர் வளத்தைக் கொடுக்கும் ஆற்;றல் வடிவமான உரம் என்பது வணங்கப்பட்டு உயிர்களைப் படைக்கும் சக்தி படைத்த பெண்ணோடு உருவகப்படுத்தப்பட்டது. அப்பெண் தெய்வமாக வணங்கப்பட்டது. இதுவே தாய்த்தெய்வவழிபாட்டிற்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. நாட்டுப்புற மரபு என்பது பல்வேறு சமூக பண்பாட்டு மாற்றங்களைக் கடந்தும் தனக்கேயுரிய சில தனிப்பட்ட பண்பாட்டினை மாற்றத்துடனோ மாற்றமின்றியோ கடத்தி வருகின்றது. அவ்வகையில் இக்கட்டுரையின் மூலப்பொருண்மையான ‘தவ்வை’ பற்றிய கருத்துக்களையும் இம்மரபு கொண்டுள்ளதனை அறிய முடிகின்றது. தவ்வை குறித்த பெயராய்வில் இத்தெய்வம் குறித்த வளமைக்கருத்துக்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. பழம் பெரும் நிகண்டுகளில் இத்தெய்வத்திற்குரிய பதினைந்துக்கும் மேற்பட்ட பெயர்கள் காணக்கிடைக்கின்றன. அவற்றுள் தவ்வை என்ற சொல் திருக்குறளில் ஆளப்பட்டு மட்குதல் உரமாதல் என்ற கருத்தாக்கத்தின் மூலம் இத்தெய்வத்தின் இருப்பை உணர்த்துகின்றது. ‘மோடி’ என்ற எண்ணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இத்தெய்வம் தாய்தெய்வங்களில் முதன்மையான மூத்த தெய்வம் என்ற கருத்தாக்கங்களை உணர்த்துகின்றது. ‘மேட்டிமைக்காரி என்ற சொல்லாட்சி நிலத்தோடும் செல்வத்தோடும் தவ்வைக்குரிய உரிமையைக் காட்டுகின்றது. பழையோள் - முதியோள் - முதுகோதை ஆகிய சொற்பரிமாணங்கள் காலந்தோறும் ஏற்பட்ட இத்தெய்வத்தின் பெயர்மாற்றம் பற்றி அறிய உதவுகின்றது. ஏகவேணி என்ற பெயர் வளமையோடும் வண்ணார்களுடனான இத்தெய்வ உறவோடும் பொருந்திச் செல்கிறது. எனவே தமிழரின் ஆதித்தெய்வம், வளமைத்தெய்வம், மூத்ததெய்வம் ஆகிய பொருண்மைகள் தவ்வையோடு பொருந்தி வருகின்றன என்பதனை இக்கட்டுரை உறுதியாகச் சுட்டுகின்றது.

## துணைநின்ற நூல்கள்

1. சசிகலா. கோ, கொற்றவையும் நடுகற்களும்(பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள்), சித்தன் புக்ஸ், சென்னை–86( 2019).
2. சாமி. பி.எல்.,தமிழ் இலக்கியங்களில் தாய்தெய்வ வழிபாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50(1975).
3. பரமசிவன். தொ, சமயங்களின் அரசியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-5 (2022).
4. முத்துராஜன். ஆர்,நாட்டார் வழக்காற்றில் வேளண் பழமொழிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50.(2022)
5. லூர்து. தே(ப.ஆ), நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், முல்லை

நிலையம்,சென்னை-17.(2011)

© 2026 சுபத்ரா கு., முனைவர் சுந்தரமூர்த்தி ம.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)
Vol. 10, No. 02 (September 2026), pp. 53–59
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# தொல்காப்பியத்தில் அறிவியல் சிந்தனைகள்

*Scientific Thoughts in Tolkappiyam*

**முனைவர்.பரமசிவம் ச.ப.***

முதுகலைத் தமிழாசியர் மற்றும் உதவிதலைமையாசியர் அரசு மேல்நிலைப்பள்ளி, சின்னப்பம்பட்டி, தாரமங்கலம் (வ) சேலம் (மா), *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.பரமசிவம் ச.ப. — ngmcollegelibrary@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |
| **DOI** — | | **Article ID / கட்டுரை எண்** KALN-2026-00014 | |

## ஆய்வுச்சுருக்கம்

சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியின் முதல் நூலான தொல்காப்பியம் மொழி, இலக்கிய இலக்கண வரையறைகளைத் தாண்டி, பழந்தமிழரின் வாழ்வியலையும் அறிவியல் சிந்தனைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் முதன்மை நூலாகும். உலக நாகரிகங்கள் வளரத் தொடங்கிய காலத்திலேயே தமிழர்கள் அறிவு உச்சத்தை எட்டியிருந்தனர் என்பதைத் தொல்காப்பிய நூற்பாக்கள் மற்றும் உரைகளின் அடிப்படையில் வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.
இக்கட்டுரையில், உலகத் தோற்றம் குறித்த தொல்காப்பியரின் ஐம்பூதக் கொள்கை மேலைநாட்டு அறிஞர்களின் பிரபஞ்சப் பரிணாமக் கொள்கைகளோடு ஒப்பிடப்படுகிறது. மேலும், உடலையும் உள்ளத்தையும் துன்புறுத்தும் பிணி மற்றும் நோய்களைத் தானே கண்டறியும் ஆண், பெண் இருபால் "நோய் மருங்கறிஞர்கள்" பற்றியும், வேம்பு, கடுக்காய் போன்ற மூலிகைகளைப் பயன்படுத்திய "வாயுறை" மருத்துவ முறைகள் குறித்தும் ஆராயப்படுகிறது. அதிர்வும் மனத் தடுமாற்றமும் உயர் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தி இதய நோய்களுக்கு வழிவகுக்கும் உடலியல் உண்மைகளையும், பெண்களின் கருவுறும் காலத்தைப் பன்னிரண்டு நாட்கள் ("பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்") எனத் துல்லியமாகக் கணக்கிட்ட சான்றோர்களின் கணிதவியல் கண்ணோட்டத்தையும் இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.
முடிவாக, இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு இலக்கியங்கள் அடித்தளம் அமைப்பதற்கு முன்பே, அவற்றுக்கெல்லாம் முற்பட்ட இலக்கண நூலான தொல்காப்பியம் இயற்கையின் இயல்பு மாற்றங்கள், மருத்துவம், கணக்கியல் போன்ற அறிவியல் கூறுகளை அழகுபடப் பதிவு செய்து பழந்தமிழரின் தத்துவார்த்த அறிவியல் அடித்தளமாக விளங்குவதை இக்கட்டுரை உறுதி செய்கிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** தொல்காப்பியம்; உலகத் தோற்றம்; ஐம்பூதங்கள்; நோய் மருங்கறிஞர்; கணக்கியல்.

## Abstract

*Tholkappiyam*, the earliest extant text of the distinguished Tamil language, transcends mere linguistic and literary definitions; it is a seminal work that encapsulates the lifestyle and scientific

insights of the ancient Tamils. This article aims to demonstrate—based on the *sutras* (aphorisms) and commentaries of *Tholkappiyam*—that Tamils had attained intellectual heights at a time when other world civilizations were merely beginning to develop.
The article compares Tholkappiyar’s theory of the five elements (*pancha-bhuta*) regarding the origin of the universe with the theories of cosmic evolution proposed by Western scholars. Furthermore, it examines the "healers" (both male and female) who diagnosed ailments affecting the body and mind, as well as the "Vayurai" medical practices that utilized medicinal herbs such as neem and *kadukkai* (haritaki). The article also elucidates physiological insights—such as how stress and mental agitation induce high blood pressure and lead to heart disease—and highlights the mathematical precision of ancient scholars who accurately calculated the female fertile period as twelve days.
In conclusion, the article affirms that long before literature laid the foundation for modern scientific advancement, *Tholkappiyam*—a grammatical treatise predating such literature—beautifully documented scientific elements like natural phenomena, medicine, and mathematics, thereby serving as the philosophical and scientific foundation of ancient Tamil civilization.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ச.ப., மு. (2026). தொல்காப்பியத்தில் அறிவியல் சிந்தனைகள். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 53–59.

## முன்னுரை

சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியில் தோன்றிய தொல்காப்பியம் தமிழர்தம் மொழி, இல்க்கியம், இலக்கணம் பற்றியது மட்டுமல்லாமல் தமிழரின் வாழ்வும் நாகரிகமும் பற்றிய நூலாகவும் விளங்குகிறது. உலக மனித வரலாற்றின் இன்றியமையாத ஒரு பகுதியான அறிவியல் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இதற்குத் தமிழ் சமூகமும் விதிவிலக்கன்று. இந்நிலவுலகில் தமிழகம் தொன்மைக்கு, வேர்விட்டத் தொல்லுலக மண்ணாகும். நாகரிகம் வளரத் தொடங்கிய நாள் முதல் இன்றுவரை உலகின் பிற நாகரிகங்களோடு உறவுகொண்ட சிறப்புடைய தமிழ்ச் சமூகத்தில் இடம்பெற்றுள்ள அறிவியல் – தொழில்நுட்பம் பற்றி அறிய பண்டைய இலக்கியங்கள், இலக்கணங்கள் அவற்றின் உரைகள் முதன்மையாகத் திகழ்கின்றன. இவற்றின் அடிப்படையில் தமிழ்மொழியின் முதல் நூலான தொல்காப்பியத்தில் காணலாகும் அறிவியல் செய்திகளை வெளிக்கொணர்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.

## உலகத் தோற்றம்

உலகின் தோற்றம் குறித்துப் பல்வேறு கதைகள் வழங்கப்படுகின்றன. ஆன்மீகத்தில் உலகின் பல்வேறு சமயங்களும் பலவிதமான கருத்துகளைத் தெரியப்படுத்தியுள்ளன. அறிவியல் அறிஞர்களும் தீவிர ஆராய்ச்சிகளுக்குப் பிறகு உலகின் தோற்றம் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஐம்பூதங்கள் பற்றிய சிந்தனைகளைக் கொண்டு, உலகத் தோற்றம் பற்றிய தமிழறிஞர்களின் கருத்துக்களை அறிவதன் வாயிலாக இலக்கியங்கள் வெறும் கற்பனைப் படைப்பாக இல்லாமல் அறவியல் சிந்தனைகளைக் கொண்ட கருவூலங்களாக அமைகின்றன என்பதை அறிய இயலும்.

“உலகம் எப்படித் தோன்றியது என்ற வினாவிற்குப் பல கருத்துக்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் தாலஸ் என்பவர் உலகம் நீரினால் ஆக்கப்பட்டது. ஆக நீரே முதன்மைப் பொருள் என்றார். அனாக்ஸிமினிஸ் என்ற அறிஞர் காற்றினாலேயே உலகம் ஆனது என்றார். அனாக்ஸிமேண்டர் (சுமார் கி.மு. 6ஆம் நூற்றாண்டு) என்பவர் “ஏபைரான்” என்ற உருவமற்ற யாரும் பார்க்க முடியாத பொருளால் உலகம் ஆக்கப்பட்டது என்றார். தாலமி என்பவர் பிரபஞ்சத்தைப் பற்றிய கருத்தினை முன் வைத்தார். இப்படிப் பல்வேறு கருத்துக்கள் தோன்றிய காலக் கட்டத்தில் தமிழர்களும் அறிவு உச்சத்தை எட்டியிருந்தனர் என்பதற்குத் தொல்காப்பியர்

சான்றாவார்.” (பா.பிரிவு, 2019)

தமிழ் இலக்கண மரபின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் அறிவியல் நூலாகவும் திகழ்கிறது. மொழி, இலக்கியம், அறிவியல், ஆன்மீகம் என்னும் பல்வேறு பகுதிகளைத் தொல்காப்பியர் விளக்கிச் சென்றுள்ளார். உலகத் தோற்றம் குறித்து தொல்காப்பியர் கூறும் கருத்துக்கள் இன்றைய அறிவியலாளரின் கருத்துக்களோடு ஒத்திருப்பதைக் காணமுடிகிறது.

“ஆதியில் இயற்கையை ஆராயத் தொடங்கிய மனிதனுக்கு ஓர் உண்மைப் புலப்பட்டது. ஒன்றாய் இருந்த விதை வேராய், அடிமரமாய், கிளையாய், கொம்பாய், கவடாய், இலையாய், பூவாய், காயாய் என்று பலவகையாய் மாறுவது போலவே, வித்தென அருவமாய் நின்றவை “மரம்” என உருமாறியதாக அவன் நினைத்தான். இக்கொள்கைக்குப் “பரிணாம வாதம்” என் உருமாறியதாக அவன் நினைத்தான். இக்கொள்கைக்குப் “பரிணாம வாதம்” என்றும், “கூர்தல் அறம்” என்றும் பெயர். ஐம்பூதங்களின் சேர்க்கையினாலேயே “உலகம் தோற்றம் பெற்றது” என்ற கொள்கையை வற்புறுத்தியவர் அரிஸ்டாட்டில் என்பவர் ஆவார்.” (ந. சுப்புரெட்டியார், 1990)

**“நிலம் நீர் வளி விசும்போடு ஐந்தும்**

**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**

**இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்**

**திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்” (தொல்.பொருள். 635)**

என்னும் தொல்காப்பிய நூற்பா நிலம், நீர், காற்று, வானம், தீ ஆகிய ஐந்தும் கலந்த மயக்கமே உலகம் என்று குறிப்பிடுகிறது.

இதனையே கம்ப நாடனும்

**“.............................. பூதம் ஐந்தும்**

**விலங்கிய விகாரப் பாட்டின வேறுபாடு உற்ற வீக்கம்”**

**(கம்பர்-சுந்தர காண்டம்-கடவுள் வாழ்த்து)**

என்று கூறுவான். மனித வாழ்க்கையைக் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட திணைநிலை இலக்கியமான சங்க இலக்கியத்தில் உலகத் தோற்றத்தை, ஐம்பூதக் கருத்தியலைச் சில பாடல்களில் காணமுடிகிறது. முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறநானூற்றுப் பாடல் “ஐம்பூதச் சேர்க்கையே உலகம்” என்னும் கருத்தினைப் பதிவு செய்கிறது.

**‘மண் திணிந்த நிலனும்**

**நிலம் ஏந்திய விசும்பும்**

**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல” (புறம். 2)**

என்னும் இப்பாடல் ஐம்பெரும்பூதங்களான நிலம், விசும்பு, வளி, தீ, நீர் பற்றிக் குறிப்பிடுகிறது.

**மருத்துவம்**

மருத்துவம் என்பது நோய்களைக் குணப்படுத்துவதற்கான கலையும், அறிவியலும் ஆகும். உலகில் தோன்றிய அனைத்து உயிரினங்களும் இயற்பியல், வேதியியலுக்கு உட்பட்டவையாகும். உயிரிகள் அனைத்தும் உயிர் அணுக்களால் ஆனவை. மனித உயிர் உட்பட அனைத்துயிர்களும் பல்வேறு வேதிப் பொருட்களின் உள்ளடக்கமாகும். இவ்வேதிப் பொருட்கள் உயிரினங்களின் உடம்பில் குறைந்தும் மிகுந்தும் காணப்பட்டு ஒருசில மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இம்மாற்றங்கள் உடலளவிலும்,

உள்ளளவிலும் பல்வேறு இன்ப துன்பங்களை உருவாக்குகின்றன, துன்பங்களை நாம் நோய், பிணி என்கின்றோம், இவற்றைச் சரி செய்யும் முயற்சியே “மருத்துவம்” ஆகும்.

“இன்றைய மருத்துவமனைகளில் மருத்துவச் சேவையும், பயிற்சியும், ஆராய்ச்சியும் முக்கிய இடம்பெறுகின்றன. அந்நாளில் மடாலயங்களும் கல்விக் கூடங்களும் இவ்வகைச் சேவைகளில் ஈடுபட்டன. நோயுற்றவர்க்கும், அன்னியர்க்கும் ஒதுக்கப்பட்ட அறைகளுக்கு ”ஹாஸ்பிசெஸ்” (hospices) என்று பெயர். பழைய இலத்தீன் வழக்கியல் “ஹோஸ்திஸ்” பகை இராணுவத்தான் அல்லது “எதிரி” என்று பொருள். இன்றைய வழக்கில் இதுவே விருந்து உபசரிப்பவனைக் குறிப்பிடும் சொல் ஆயிற்று. அவ்வாறே “ஹாஸ்பிஸ்” என்றால் விருந்தாளி. அதனாலேயே பிற்காலத்தில் “உபசரிப்பு இல்லங்கள்” என்ற பொருளில் மருத்துவமனைக்கும் “ஹாஸ்பிடல்” என்ற பெயர் வழங்கலாயிற்று.” (சு.முத்து, 2018)

இம்மருத்துவம் பற்றித் தொல்காப்பியமும்

**“நோய்மிகப் பெருகித்தன் னெஞ்சு கலுழ்ந் தோளை**

**அழிந்தது களையென மொழிந்தது கூறி” (தொல். பொருள். 42)**

என்று கூறி நோய் என்பது நெஞ்சு அளவில் துன்பத்தை உண்டாக்குவது என்றும்,

**“மூப்பே பிணியே வருத்த மென்மையோடு**

**யாப்புற வந்த இளிவரல் நான்கே” (தொல். பொருள். 250)**

என்று பிணி பற்றிக் கூறுகிறார். நோய் பற்றித் தொல்காப்பியம்,

**“பையுளும் சிறுமையும் நோயின் பொருள” (தொல். பொருள். 335)**

என்று கூறுகின்றது. நோய் என்பது உள்ளத்தைத் துன்பத்தில் ஆழ்த்துவதென்றும், பிணி உடலைத் துன்பத்தில் ஆழ்த்துவதென்றும் இவற்றைச் சரி செய்வதே மருத்துவம் என்றும் அறியப்பெறுகிறது.

மருத்துவத் தொழிலை செய்பவர்கள் மருத்துவர்கள் ஆவார். நோயாளிக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர் நோயாளிக்கு நம்பிக்கையேற்படும் அளவில் மருத்துவத்தில் நன்கு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். நோய்களின் வகையினை கண்டறியும் திறன்பெற்ற மருத்துவர்கள் தொல்காப்பியர் காலத்தில் இருந்துள்ளனர். “மருத்துவ அறிவியலின் தந்தை எனப் போற்றப்படும் ஹிப்போகிரேட்டஸ் உடல் அவையங்களின் அடிப்படை நோக்கம் என்றும் அதன் அடிப்படையில்தான் நோய்களுக்குத் தீர்வு காணமுடியும் என்றும் வலியுறுத்தியுள்ளார்”. எனவே மருத்துவர் என்பவர் நோயாளிகளிடம் நோயினைக் கேட்டறியாது தானே எந்நோய் என்று கண்டறிதல் வேண்டும். இவற்றையே மருத்துவ உலகில் ஆங்கிலத்தில் “Diagnosis” என்கின்றனர். இவற்றைத் தொல்காப்பியம்,

**“ஊரு மயலுங் சேரி யோடும்**

**நோய்மருங் கறி நருந் தந்தையும் தன்னயுங்” (தொல். பொருள். 492)**

என்ற நூற்பாவில் “நோய் மருங்கறிஞர்” என்கிறது. இதில் நோய் மருங்கறிஞர் என்பது ஆண், பெண் இருவரையும் குறிப்பதாகும். என்வே தொல்காப்பியக் காலத்திலேயே நோயினைக் கண்டறியும் ஆண், பெண், இருபால் மருத்துவ அறிஞர்களும் இருந்தனர் என்பது உறுதியாகின்றது. மருத்துவன், மருத்தன், மாமாத்திரர், வைத்தியன் மற்றும் சவர்ணன் போன்ற சொற்கள் பொதுவாக மருத்துவர் தொழில் புரிபவரைக் குறிப்பிடுகிறது.

இன்று போல் மருத்துவமனை வசதி அன்று இருந்திருக்கவில்லை. மக்களின் உடனடி பிணி தீர்வுக்கு மூலிகை மருந்துகளையே நம்பி இருந்தனர். எனவே மக்கள் அனைவரும்

மூலிகை மருந்துகளையே நம்பி இருந்தனர். எனவே மக்கள் அனைவரும் மூலிகைகளின் மருத்துவப் பயன்களை நன்கு அறிந்திருந்தனர். அவர்களுக்குத் தேவைப்படும் மூலிகைகளைப் பறித்துத் தாங்களே நோய்களுக்கான மருத்துவம் மேற்கொண்டனர். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொல்காப்பியம் வேம்பும், கடுவும் முதலில் கசந்தாலும் பின்னர் அவை உடலுக்கு நன்மையைத் தரும் என்கிறது இதனையே.

**“வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்**

**வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்**

**தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று**

**ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே” (தொல். பொருள். 417)**

என்ற நூற்பாவால் அறியலாம். நோயுள்ளவர்களின் உடலின் உள்ளுக்குள் செலுத்துவதற்கு வாய் வழியாகக் கொடுக்கப்படும் மருந்து வாயுறை எனப்படும். இந்நூற்பாவில் வேம்பும் கடுவும் என்ற இரண்டு மருந்துகள் கூறப்பட்டுள்ளன. இரண்டு மருந்துப் பொருட்களும் கசப்புத் தன்மை கொண்டவை. இதனை நோயாளிக்கு நேரிடையாகக் கொடுக்காது அதனுடன் தேனைக் கலந்து கொடுத்தால் நன்மை பயக்கும் என்று அறியமுடிகின்றது.

**“கடுக்காய்க்கு அகணி நஞ்சுஇ சுக்கிற்குப் புறணி நஞ்சு”**

**(கமலதியாகராசன், 2017)**

என்ற பழமொழி அகணி என்பது உள்கொட்டை. கடுக்காயின் கொட்டை துவர்ப்புச் சுவையுடையது. இது நச்சுத்தனமை கொண்டது. எனவே எவ்வகைப் பயன்பாட்டிற்கும் கடுக்காயின் கொட்டையை நீக்கிவிட்டு பயன்டுத்துவதே சிறந்தது என்பதை உணர்த்துகிறது.

**இதய நோய்**

உயர் இரத்த அழுத்தமுள்ள ஒருவருக்கு எந்தவொரு அதிர்ச்சியானத் தகவல்களைச் சொன்னாலும் அது நடுக்கத்தை ஏற்படுத்தி இதய நோய்களை உண்டாக்கிவிடும். இவற்றையே தொல்காப்பியம்

**“அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்” (தொல். சொல். 310)**

என்கிறது. அதிர்வு என்பது அதிர்ச்சியைக் குறிப்பதாகும். இவ்வாறு மன அழுத்தும் உள்ள ஒருவர் அதிர்ச்சியடையும்போது அவரது மனமும் தடுமாற்றம் அடைகின்றது. இவற்றையே

**“அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி” (தொல். சொல். 304)**

என்கிறது தொல்காப்பியம். இதற்கு உரை கூறும் நச்சினார்க்கினியர் “அலமரல் தெருமரல் ஆகிய அவ்விரண்டும் மனத் தடுமாற்றம் ஆகிய குறிப்பு உணர்த்தும்” என்கிறார். இந்த மனத் தடுமாற்றமானது மன அழுத்தத்தால் நடுக்கமாகி என அழுத்தத்தால் மனத் தடுமாற்றம் அடையும்போத அவரது முகம் வெளுத்து காணப்படுவதை நாம் உணரலாம்.

இன்று மனிதர்களை உடனடியாக மரணத்தில் தள்ளும் நோய்களில் குறிப்பிடத்தக்கது இதய நோய்களாகும். இவ்விதய நோய்கள் உயர் இரத்த அழுத்தத்தாலும் மன அழுத்தத்தாலுமே ஏற்படுகின்றன. இவ்வாறு உயர் இரத்த அழுத்தம், மன அழுத்தம் பற்றிய பதிவுகள் தொல்காப்பியத்தில் காணப்படுவதால் இதய நோய்கள் பற்றிய அறிவும் தொல்காப்பியக் காலத் தமிழரிடையே காணப்பட்டிருக்கின்றது என்பது அறியலாகின்றது.

### கணக்கியல்

பண்டைத் தமிழர்கள் எண் எழுத்து ஆகி இவ்விரண்டிலும் நாட்டம் செலுத்தி எண்ணறிவு எழுத்தறிவு ஆகியவற்றில் சிறந்து விளங்கியுள்ளனர். கணிதத்துக்கும் இலக்கியத்திற்கும் தமிழரின் எழுத்தறிவும் எண்ணறிவும் முறையாக இருந்துள்ளன. “இலக்கண இலக்கியங்களை வகைப்பாடு செய்வதற்குக்கூட கணிதம் தேவைப்படுகிறது. கணிதம் இன்றைய நவீன காலத்திலும் மனித வாழ்க்கையில் மிக முக்கியப் பங்குப்பெறும். கணிதத்தை அறிவியலின் அரசி என்றும் வர்ணிப்பர்”. (கமலதியாகராசன், 2017)

தொழில்நுட்பக் கண்ணோட்டத்தில் மட்டுமன்றிக் கணிதவியல் கண்ணோட்டத்திலும் தமிழரின் உலகளாவிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. உலகம் எண்களால் ஆனது என்பது கிரேக்கர்களின் நம்பிக்கை. அவர்களைப் போலவே தமிழர்களும் எண்கள் மீது நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டிருந்தனர். எனவே தான் ஐம்பூதம் ஐம்புலன் ஏழ்கடல் ஏழ்மலை ஏழ்பிறவி என்றாய்ந்து குறிப்பிட்டது இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

**“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்” (கொன்றை வேந்தன் – 7)**

**“எண் எழுத்து இகழேல்” (ஆத்திச்சூடி – 7)**

என்று ஔவையாரும் கணிதவியல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதே போன்று கணக்கியல் அடிப்படையிலான கருத்துக்கள் தொல்காப்பியத்திலும் இடம்பெற்றுள்ளன.

பெண்களின் கருவுறும் காலத்தைத் தொல்காப்பியர்

**“பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**

**நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர்” (தொல். பொருள். 187)**

என்றுரைத்தார். தலைவிக்கு மாதப் பூப்பு முடிந்த காலத்திற்குப் பின்வரும் பன்னிரெண்டு நாளும் தலைவன் அவளைப் பிரிய மாட்டான். ஏனெனில் அது கருவுறும் காலம் என்கிறார். உரையாசிரியர். இதனை உற்று நோக்கும் போது பண்டையச் சான்றோர் சிறந்த கணக்காயர்களாகத் திகழ்ந்தனர் என்பதில் ஐயமில்லை.

### முடிவுரை

தொல்காப்பியம் இலக்கணத்திற்குரிய வரையறைகளைக் கூறுவதோடு மட்டுமல்லாமல் அறிவியல் கூறுகளையும் அழகுபடக் கூறியுள்ளது. இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு இலக்கிய நூல்கள் அடித்தளம் அமைத்தது போல் இலக்கியத்திற்கு முற்பட்ட இலக்கண நூலான தொல்காப்பியமும் அடித்தளமாக விளங்குகிறது. இக்கட்டுரையில் இயற்கையில் ஏற்படும் இயல்பு மாற்றங்களும் மருத்துவம் பற்றிய சிந்தனைகளும் கணக்கியல் தொடர்பான கருத்துக்களும் மிகத் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர் உரை, 2005, தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.

2. முனைவர் ந. சுப்புரெட்டியார், 1990, தமிழில் அறிவியல் அன்றும் இன்றும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

3. முனைவர் பா. பிரபு, 2019, சமூக விஞ்ஞானப் பார்வையில் பழந்தமிழகம், வனிதா பதிப்பம், சென்னை.

4. நெல்லை சு. முத்து, 2018, அறிவியல் புலமை கொள், மணிவாசகர் பதிப்பம், சென்னை.

© 2026 முனைவர்.பரமசிவம் ச.ப.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு:

Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)
Vol. 10, No. 02 (September 2026), pp. 60–64
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# ஆற்றுப்படை நூல்களில் கலைஞர்கள்

*Artists in *Aatruppadai* Literature*

**ரேவதி எ.ச.***

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்) தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி ( தன்னாட்சி) சேலம்.7., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: ரேவதி எ.ச. — ngmcollegelibrary@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |
| **DOI** — | | **Article ID / கட்டுரை எண்** KALN-2026-00015 | |

## ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியம் இலக்கிய வளமும், இலக்கண வளமும் பெற்று தனித்தியங்கவல்ல சிறப்பினை உடையது. தமிழர்களின் மிக நீண்ட பண்பாட்டிற்கும் தனி சிறந்த நாகரிகத்திற்கும், பழம்பெரும் மரபுகளை புரிந்து கொள்வதற்கும் கலைகள் சான்றாக விளங்குகின்றது. சங்ககால வாழ்க்கை முறை இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சங்க இலக்கியத்தை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று இரண்டாக பகுத்துள்ளனர். இதில் பத்துப்பாட்டில் கலைகளும், கலைஞர்களும் அதிகமாகக் காணப்படுகின்றனர். பத்துப்பாட்டில் ஆடல், பாடல், இசைக் கலையில் சிறந்து விளங்கிய பாணர், விறலியர், கூத்தர், பொருநர் உள்ளிட்ட கலைப்படைப்பாளர்கள் எவ்வாறு கலையில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிய முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**Keywords / திறவுச்சொற்கள்:** கலைகளும்; கலைஞர்களும்

## Abstract

Sangam literature possesses the unique distinction of being rich in both literary and grammatical excellence. The arts serve as a testament to the Tamils' enduring culture, distinctive civilization, and ancient traditions. The Sangam way of life was deeply rooted in the natural environment. Sangam literature is categorized into two main divisions: *Ettuthogai* and *Pathupattu*. Among these, the *Pathupattu* anthology offers significant insight into the arts and the artists of the era. This article aims to explore how various performing artists—such as *Panar*, *Viraliyar*, *Koothar*, and *Porunar*—engaged in their respective arts of dance, song, and music as depicted in the *Pathupattu*.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** எ.ச., ரே. (2026). ஆற்றுப்படை நூல்களில் கலைஞர்கள். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 60–64.

## ஆற்றுப்படை இலக்கியங்கள்

ஆற்றுப்படை இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் வாழ்க்கை, அரசியல், கொடை, புகழ், போர்த்திறம், கல்வி, கலை ஆகியவற்றை சுவைப்பட எடுத்துக் கூறுகிறது. பண்டைத் தமிழரின் வாழ்வில் கலைகளும், கலைஞர்களும் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர். ஆற்றுப்படை நூல்கள் கலைக்கு சிறந்த வழிகாட்டும் நூல்களாக அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் கலைஞர்கள் கருத்து சுதந்திரத்துடனும், ஓங்கிய

ஒழுக்கத்துடனும் வழிகாட்டும் மாமனிதர்களாக விளங்கினர். வறுமையிலும், செம்மையைக் கடைப்பிடித்த கலைஞர்கள் ஆற்றுப்படை நூல்களில் காணப்படுகின்றனர். ஆற்றுப்படை நூல்களை,

**”முருகு, பொருநாறு, பாணிரண்டு முல்லை**

**பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய**

**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்**

**பாலை கடாத்தொடும் பத்து”**

என்று பத்துப்பாட்டு நூல்களில் வகைப்படுத்தியுள்ளனர். வெறும் இவற்றில் ஆற்றுப்படை நூல்களாக திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் என்பதை ஆற்றப்படை நூல்களாக குறிப்பிட்டுள்ளனர். இவற்றில் கலைகள் அதிகமாக வெளிப்படுவதை அறிந்துக்கொள்ளலாம்.

**கலைஞர்கள்**

கலை எவ்வளவு சிறந்ததாயினும் அது தோன்றகின்ற விதம் மனிதனின் சக்தியில் அடங்கியுள்ளது. சங்க இலக்கியத்தில் சிறந்து விளங்கிய கலைஞர்களை நூலறிப் புலவர், தச்சர், கம்மாளர், மண்ணீட்டாளர் என்றும் ஓவியக்கலையில் சிறந்து விளங்கிய கலைஞர்களை கண்ணுள் வினைஞர் என்ற பெயராலும், இசை, நடனம் போன்ற கலையில் சிறந்து விளங்கிய கலைஞர்களை பாணர், கூத்தர், பொருநர் என்ற பெயராலும் அழைக்கப்படுவதை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. பிறதுறைக் கலைஞர்களை விட இசையோடு தொடர்புடைய கலைஞர்கள் இலக்கியத்தில் சிறப்புப் பெற்றிருந்தனர். கலைஞர்களின் வாழ்க்கைமுறைப் பதிவுகளை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

கலைஞர்களை வாழ்க்கை முறை (ம) தொழில்முறை என்று இருவகையாக பகுத்து அதனை இரண்டாக இசைக்கருவி தொடர்பில் பாணர், கூத்தர், விறலியர், பொருநர் என்றும் மற்றொரு பிரிவில் இசைக்கருவி முறையில் புலவர்கள், தொழில் முறையில் சிற்பம் ஓவியம் என்றும் பிரித்தும் காட்டுகின்றனர். மேலும் பத்துப்பாட்டு நூல்களில் கலைஞர்களைப் பற்றி.

**“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடக் காட்சி உறழத் தோன்றி**

**பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறிஇச்**

**சென்று பயனெதிர்ச் சொன்ன பக்கமும்” (தொல்.பொருள்.புறம். 36 )**

என்று தொல்காப்பியர் தனது புறத்திணையியல் நூற்பாவில் ஆற்றுப்படைக் கலை மாந்தர்களுக்கான இலக்கணத்தை சிறப்பாக வகுத்தளித்துள்ளார். கலைஞர்ககளைப் பற்றி பின்வருமாறு விரிவாக காணலாம்.

**பாணர்**

பாணர் இசைக்கலையில் வல்லுநர். பல நரம்புகளை உடைய பெரிய யாழை இசைத்துப் பாடுபவர் ‘பெரும்பாணர்‘ எனப்பட்டனர். சிறிய யாழை இசைத்துப் பாடுபவர் ‘சிறுபாணர்‘ எனப்பட்டனர். இப்பாணர்கள் வள்ளல்களை நாடிச் சென்று பாடிப் பரிசில் பெற்றனர். பாணர்களின் வாழ்க்கை மன்னர்களையும், வள்ளல்களையும் நாடிச் சென்று பரிசில் பெறும் நிலையை,.

**“கையறு கடன்நிறை யாழே மெய்யது**

**புரவலர் இன்மையின் பசியே, அரையது**

**வேற்று அழை நுழைந்த வோநனைசிதாஅர்**

**ஓம்பி உடுத்த உயவல் பாண!" (புறம்.69)**

என்ற புறநானூறு வரிகள் அரசவையில் பாணர் நின்ற நிலையினையும், தொழிலையும், வறுமையினையும் விளக்குகின்றன. பாணனின் கையில் இலக்கணம் பொருந்திய யாழுடன், ஆதிரிப்பார் இல்லாமையால் வயிற்றில் பசியுடன் இடையில் வேர்வையால் நனைந்த கந்தலாடையை உடுத்தியிருந்தான் என்று கூறும்போது பாணனின் வறுமை நிலையினையும் கலைத்திறனையும் அறிய முடிகிறது. மேலும் பாணன் வறுமை அவனை வாட்டும்போது அவன் பெற்ற கல்வியை இகழ்ந்துப் பேசுவதாய் பெரும்பாணாற்றப்படை,

**"கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்த திரிதரும்**

**புல்லென யாக்கைப் புலவுவாய்ப்ப பாண!" (பெரு.)**

என குறிப்பிடுகிறது.

சங்ககால இசைக்கவிஞர்களில் பாணர்கள் சிறப்புப் பெற்றவராக விளங்கினார்கள். பண்களை குரல் வழியாகவும், யாழ், குழல், முதலிய இசைக்கருவிகள் வழியாகவும் பாணர்கள் தம் திறமையை வெளிப்படுத்தினார்கள். நச்சினார்க்கினியர் பாணர்களை இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் என்று மூன்று வகையாகப் பிரிப்பர்.

**"களங்கனி அன்ன கருங்கோட்டு சீறியாழ்ப்**

**பாடுஇன் பனுவல் பாணர் உய்தெனக்**

**களிறு" (புறம். 57)**

என்று புறநானூறு வரிகள் இசைப்பாணர்களைப் பற்றியும், பதிற்றுப்பத்து.

**"வாங்கு இரு மருப்பின் தீந்தொடை பழுனிய**

**இடனுடைப் பேரியாழ்பாலை பண்ணி" (பதி.பத்து. 66)**

என்ற வரிகளில் யாழ்ப்பாணர்களைப் பற்றிய செய்தியும் காணமுடிகிறது.

**விறலியர்**

பாணர் குலத்தில் பிறந்த பிரிவினருள் விறலியும் ஒருவர். விறல் என்னும் சொல் வெற்றியைக் குறிக்கும் சொல்லாகும். மன்னிரின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவதும். தன்னுடைய உள்ளக் குறிப்பை விரல்களின் மூலம் வெளிப்படுத்துவதும் இவரியல்பாதலால் விறலி என அழைக்கப்பட்டனர். சங்க இலக்கியம் விறலியை இசையோடு ஆடலோடும் தொடர்புடையவளாக 42 இடங்களில் பதிவு செய்துள்ளது. பாணர் குலத்தில் பிறந்த விறலியும், பாடினியும் ஒருவரே என்று கருத்து நிலவுகிறது. ஆனால் தொல்காப்பியமும், பரிபாடலும் இருவரும் வேறு வேறானவர் என்று கூறுகிறது. இதனை,

**"தோழி, தாயே, பார்ப்பன், பாங்கன்,**

**பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,**

**கூத்தர், விறலியர்,. அறிவர், கண்டோர்**

**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப" (தொல்.கற்.நூ.19)**

என்ற தொல்காப்பியரின் நூற்பா வழி அறியமுடிகிறது. பாடும் இயல்பும் ஆடும் இயல்பும் உடையவள் விறலி என்பதை.

**“ஒருதிரம் பாடல் நல்விறலியா; ஒல்குபு நுடங்க” (பரி.17)**

என்ற பாடலின் வழி அறியலாகிறது. மேலும் இக்கால நடிகையர் கண்கவரும் உடற்கட்டும் பேரழகும் பெற்றிருத்தல் போலவே சங்ககால விறலியரும் பெற்றிருந்தனர் என்பதை.

**“ஐதுவீழ் இகுபெயல் அழகுகொண்டு அருளி**

**நெய்கணிந்து இருளிய கதுப்பின்; கதுப்புஎ,**

**………………………………………………………………………………………**

**மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர்” (சிறு)**

எனம் சிறுபாணாற்றுப்படை அடிகளால் அறியலாம்.

**பொருநர்**

பொருநரும் பாணரைப் போன்று இசைமரபைச் சார்ந்தவராவர். சங்க இலக்கியத்தில் பொருநன் என்ற சொல் வீரன், அரசன், கூத்துக்கலைஞன் என்ற பல பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சங்க இலக்கியத்தில் குறிப்பிடும் பொருநர் போர்க்களத்தோடு தொடர்புடையவர் என்பதை போர்க்களப் பொருநர், போர்க்களத்திற்குச் சென்ற வீரர்கள் உற்சாகம் அடையுமாறு முரசினைக் கொட்டி வஞ்சியை பாடினர் என்பதை,

**“ஒருகண் மாக்கினை தெளிர்ப்ப ஒற்றிப்**

**பாடுஇமிழ் முரசின் இயல் தேர்த்தந்தை**

**வாடா வஞ்சி பாடினேன்” (புறம். 394)**

என்று புறநானூறு சுட்டுவதை இப்பாடலின் வழி அறியலாம்.

**கூத்தர்**

தொல்காப்பியர் குறிப்பிடும் நால்வகைக் கலைஞருள் கூத்தர் என்போர். பாடுவதோடு, ஆடவும் செய்யும் கலைஞராவர். கூத்து என்ற சொல்லானது ஆடல், நாட்டிய நிகழ்ச்சி எனும் பொருளைக் குறிக்கின்றது. சங்க காலத்தில் வெற்றியின் போதும் மகிழ்ச்சியின் போதும் ஆண்களும், பெண்களும் சேர்ந்து பெருங்கூட்டத்தினருடன் ஆடிப்பாடினர். கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், தன்னை நாடி வந்த கோடியர்க்கும் அவனது சுற்றத்திற்கும் குதிரைகளைப் பரிசாக வழங்கினான் என்பதை,

**“கோடியர் பெருங்கிளை வாழ, ஆடுஇயல்**

**உளை அவிர் கலிமாப் பொழிந்தவை எண்ணின்” (பதி.பத்து.42)**

என்று பதிற்றுப்பத்து வரிகளின் மூலம் அறியலாம்.

**முடிவுரை**

அன்றைய கலைஞர்களின் பண்பு இன்றைய கலைஞர்களுக்கு இருக்கின்றது. இங்கு கலைகளை விட கலைஞர்களே நன்கு மதிக்கப்படுகின்றனர். நாட்டுப்புறக் கலைஞர்களால் மக்களிடையே நன்மதிப்பும் மரியாதையும் பெற இயலவில்லை. தெருக்கூத்து, வில்லுப்பாட்டு போன்றவை கோவில் திருவிழாக்களிலும் நடக்கின்றன. சங்க காலத்தில் கலையும், கலைஞர்களும் மன்னர்களால் ஆதரிக்கப்பட்டனர். மேலும் கலை மாந்தர்கள் கலையை மன்னர்களிடம் வெளிப்படுத்தி பொன், பொருள், மலை, நாடு, குதிரை போன்றவற்றை பரிசாக பெற்றள்ளனர் என்பதையும், கலைகளை கைவினைப்பொருட்கள், ஓவியம் ஆகியவற்றின் மூலமாக வெளிப்படுத்தி சிறந்த கலை கலைஞர்களாக திகழ்ந்து தங்களது வாழ்க்கையைக் கொண்டு சென்றுள்ளனர் என்பது நமக்கு புலப்படுகிறது.

**துணை நூற்பட்டியல்**

தொல்காப்பியமும் பொருளதிகாரமும்

மூலமும் உரையும்

கதிர் பதிப்பகம்

திருவையாறு

1. புலியூர்க்கேசிகன் - புறநானூறு மூலமும் உரையும்

கௌரா பதிப்பகம்

பதிப்பு – 2006

2. சா. நசீமாபானு - பெரும்பாணாற்றுப்படை

கங்கை புத்தக நிலையம்

பதிப்பு – 2016

3. புலியூர்க்கேசிகன் - பதிற்றுப்பத்து தெளிவுரை

ஸ்ரீ செண்பகா பதிப்பகம்

பதிப்பு – 2016

4. டாக்டர் உ.வே. சாமிநாதையர் – பத்துப்பாட்டு மூலமும்

நச்சினார்க்கினியாருரையும்

டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம்

பதிப்பு - 2018

© 2026 ரேவதி எ.ச.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 65–70
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் அளவீடுகள்

*Measurements in Sangam Literature*

## முனைவர்பரமேஸ்வரி மு.*

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி, தி.நகர், சென்னை-*17, 9003134328, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்பரமேஸ்வரி மு. — parameswari@shasuncollege.edu.in

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00016 |

### ஆய்வுச்சுருக்கம்

பண்டைத் தமிழர்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகச் சங்க இலக்கியம் திகழ்கின்றது. ஓர் இனத்தின் நாகரிகப் பரிணாம வளர்ச்சியை மதிப்பிடுவதற்கு அவ்வினம் பயன்படுத்திய அறிவியல் மற்றும் கணிதக் குறியீடுகள் மிக முக்கியச் சான்றுகளாகும். அவ்வகையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச் சமூகம், வெறும் கற்பனை வளம் மிக்க இலக்கியச் சமூகம் மட்டுமல்லாமல் துல்லியமான அறிவியல் மற்றும் வணிகக் கோட்பாடுகளைக் கொண்டிருந்த ஓர் அறிவுச் சமூகம் என்பதைச் சங்க இலக்கியம் வழி அறியமுடிகிறது.

திணைசார் வாழ்க்கையையும், உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத்தையும் அடித்தளமாகக் கொண்ட சங்க காலத்தில் பண்டமாற்று முறைக்கும் அரசு நிர்வாகத்திற்கும் அளவீடுகள் இன்றியமையாத தேவையாக இருந்தன. பண்டமாற்று முறையில் பொருட்களின் அளவீட்டு முறைகள் பொருட்களின் நிலை மற்றும் அவற்றின் மதிப்புக் கருதியே அமைந்தது எனலாம். சங்க இலக்கியக் கோட்பாடுகளின் துணைகொண்டு பண்டைத் தமிழர்கள் பயன்படுத்திய நீட்டல், முகத்தல், நிறுத்தல் அளவைகளின் அமைப்பையும் அவற்றின் பின்னால் உள்ள சமூகப் பொருளாதார அறிவியல் பின்னணியையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### Abstract

Sangam literature serves as a mirror reflecting the lifestyle of the ancient Tamils. The scientific and mathematical notations employed by a people constitute vital evidence for assessing the civilizational evolution of that community. In this context, Sangam literature reveals that the Tamil society of two millennia ago was not merely a community rich in imaginative literature, but also an intellectual society grounded in precise scientific and commercial principles.

During the Sangam era—a period defined by landscape-based lifestyles (*Tinai*) and both domestic and foreign trade—systems of measurement were indispensable for the barter system and state administration. It can be observed that the methods used to measure goods in the barter system were determined by the nature and value of the commodities themselves. This article aims to examine—drawing upon the principles found in Sangam literature—the systems of linear, volumetric, and weight measurements used by the ancient Tamils, as well as the underlying socio-economic and

scientific contexts.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** மு., மு. (2026). சங்க இலக்கியத்தில் அளவீடுகள். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 65–70.

**முகத்தல் அளவை:**

சங்க காலத்தில் தானியங்கள், பால், நெய், தேன், கள் போன்ற திரவ மற்றும் திடப் பொருட்களை அளக்க முகத்தல் அளவைகள் பயன்படுத்தப்பட்டன. முகத்தல் அளவைகளாகக் கலம், சாடி, அம்பணம், நாழி போன்ற கருவிகள் இருந்துள்ளன.

**கலம், சாடி**

சங்க காலத்தில் நெல், பயறு போன்ற தானிய வகைகள் வட்டில், உழக்கு, பதக்கு ஆகியவற்றால் அளக்கப்பட்டன. மேலும் கள், பால் போன்றவை கலம், சாடி அளவைகளால் அளக்கப்பட்டன என்பதை அகநானூறு பின்வருமாறு எடுத்துரைக்கிறது. இதனை,

**“நல்மரம் குழீஇய நனைமுதிர் சாடி**

**பல்நாள் அரித்த கோஒய் உடைப்பின்**

**மயங்குமழைத் துவலையின் மறுகு உடன் பனிக்கும்**

**பழம்பல் நெல்லின் வேஊர் வாயில்” (அகம்.166:1-4)**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. சங்க காலத்தில் கள் அளப்பதற்குச் சாடி பயன்படுத்தப்பட்டுள்ளது. பல நாட்கள் வடித்து எடுக்கப்பெற்ற கள் நிறைந்த சாடியிலிருந்து முகக்கும் கலம் கள் விற்கும் வீட்டில் உடைபடும் என்று கூறுவதிலிருந்து கள்ளினை முகக்கும் அளவாகச் சாடியினைப் பயன்படுத்தியமை புலப்படுகிறது. மேலும் அரச குடும்பத்தினர் கள்ளினைப் பொன்னாலாகிய கலத்தினால் முகந்து பயன்படுத்தியுள்ளனர் என்பதை,

**“யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்**

**பொன்செய் புனை கலத்து ஏந்தி நாளும்**

**ஒண் தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து” (புறம்.56:18-20)**

என்னும் பாடலடிகளால் அறியமுடிகிறது. வேடர்கள் கள்ளினை முகக்கக் கடகப் பெட்டியினைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை,

**“கான்உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்**

**மானதசை சொரிந்த வட்டியும் ஆய் மகள்” (புறம்.33:1-2)**

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன. சங்க காலத்தில் கள்ளினை முகக்க அரச குடும்பத்தினர் பொன்னாலாகிய கலமும் வேடர்கள் கடகப் பெட்டியும் பயன்படுத்தியதன் மூலம் மக்களின் பொருளாதார நிலைக்கேற்ப அவர்கள் பயன்படுத்தும் அளவுப் பொருள்களின் தரம் மாறுபட்டு இருந்ததைச் சங்கப்பாக்களால் அறியமுடிகிறது.

**மரக்கால் (தூணி)**

சங்கத் தமிழர்கள் தானியங்களை அளக்க ‘மரக்கால்’ என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். சங்க இலக்கியத்தில் இது ‘அம்பணம்’ என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. இம்மரக்கால் மரம், செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம் போன்ற பொருட்களால் செய்யப்பட்டுள்ளது. சங்ககால மக்கள் நெல்லினை அளக்கவும் ஊதியம் கொடுப்பதற்கும் யானைக்கு உணவளிக்கவும் மரக்காலைப் பயன்படுத்தினர் என்பதைச் சங்கப்பாக்களால் அறியமுடிகிறது. இதனைப் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூற்றுப்

பாடலடிகளால் அறியலாம்.

**"பரூஉப்பகடு உதிர்த்த மென் செந்நெல்லின்**

**அம்பண அளவை உறை குவித்தாங்கு**

**கடுந்தேறு உறு கிளை மொசித்தன துஞ்சும்**

**செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாரின்" *(பதிற்.71:4-8)***

**"அம்பணத்தன்ன ஆமை ஏறி**

**செம்பினன்ன பார்ப்புப் பல துஞ்சும்" *(ஐங்.43:12)***

மேலும் பொருள்வயின் தலைவியைப் பிரியக் கருதிய நெஞ்சிற்குத் தலைவன் கூறும்போது பொருளானது பொய்கையிடத்தில் ஓடுகின்ற மீனின் வழியைப்போலத் தாம் இருந்தவிடம் தெரியாமல் கெடும் இயல்புடையது. பெரிய கடல் சூழ்ந்த அகன்ற இந்நிலவுலகத்தில் ஏழு மரக்கால் அளவு பெரிய நிதியைப் பெறுவதாக இருந்தாலும் அந்த நிதியை யான் விரும்பேன் என்று கூறுவதன் மூலம் அக்காலத்தில் மரக்கால் பொருள்களை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதை அறியமுடிகிறது. இதனைப் பின்வரும் பாடலடிகளால் அறியமுடிகிறது.

**"........................ என் நெஞ்சே! - பொருளே**

**......................................**

**விழுநீர் வியலகம் தூணி ஆக**

**எழு மாண் அளக்கும் விழு நெதி பெறினும்**

**கனங்குழைக்கு அமர்த்த சேயரி மழைக் கண்**

**அமர்ந்து இனிது நோக்கமொடு செகுத்தனென்" *(அகம்.16:4-10)***

**எண்ணளவை - ஆம்பல்**

மிகப் பெரிய எண்ணினைக் குறிக்க சங்க காலத்தில் ஆம்பல், பேரெண், தாமரை போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு வகையான அணிகலன்களின் எண்ணிக்கையைக் குறிக்க **'ஆம்பல்'** என்று அகநானுற்றில் குறிப்பிடப்பட்டள்ளதைப் பின்வரும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**"நல் நகர் மரந்தை முற்றத்து ஒன்னார்**

**பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்**

**பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்**

**ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்று அவண்**

**நிலமதினத் துறந்த நிதியத்து அன்ன" (அகம்.127:6-10)**

**நிறுத்தல் அளவை:**

சங்க இலக்கியத்தல் நிறுத்தல் அளவை இயற்கையோடு இயைந்து உருவாக்கப்பட்டவை ஆகும். நிறுத்தல் அளவைகளின் துல்லியத்தன்மை அவர்களது சமூகப் பொருளாதாரப் பின்னணி மற்றும் மெய்யியல் சிந்தனைகளை மையமாகக் கொண்டவையாக இருந்துள்ளது.

**துலாக்கோல்**

சமன் செய்து சீர்தூக்கும் கோலாக வள்ளுவரால் சுட்டப்படும் துலாக்கோல் முதலில் தான் சமனாக நின்று, பின்னர் தன்னிடம் உள்ள பொருட்களின் சீர் உணர்த்தும் தன்மை உடையதாகும். இது இலக்கியங்களில் சமன்கோல், தராசு, துலா, துலாம், துலாக்கோல்,

நிறுப்பான் எனப் பல பெயர்களில் சுட்டப்படுகின்றது. இக்காலத்தில் இத்தராசுக்கோலினின்று மாறுபடும் நிறுக்கும் எந்திரங்களைக் காணமுடிகிறது.

சங்க காலத்தில் இத்தராசுக்கோல் பெரும்பாலும் சீர் தூக்கும் அதன் செம்மைத் தன்மையாகிய ஒரு பக்கம் சாராமையை விளக்குவதாக அமைகிறது. நன்னன் நடுவுநிலைமை தவறாத நின்ற சொல்லையுடைய நல்ல உள்ளத்தினன் என்பதற்கு முன்னே தான் சமனாக நின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாக்கோல் உவமையாகக் கூறப்பட்டுள்ளதைப் பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**“எவன் ஆய்ந்தனர் கொல் - தோழி! - ஞெமன்ன்**

**தெரிகோல் அன்ன செயிர் தீர் செம்மொழி” (அகம்.349:3-4)**

பரந்த அளவுடைய பொருள்களை ஆராயும் துலாக்கோலின் சமன்கோல் போன்று நீயும் ஒரு பக்கம் சார்ந்து நில்லாதே. நின் படை முதலிய உறுப்புகள் சிறந்து விளங்கட்டும் என்று பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியைச் சிறப்புற வாழுமாறு காரிக்கிழார் அறிவுறுத்துவதன் மூலம் அக்காலத்தில் பொருள்களைச் சமமாக அளவிட துலாக்கோல் பயன்பட்டமையை அறியமுடிகிறது. இதனை,

**“உருவும் புகழும் ஆகி விரி சீர்த்**

**தெரிகோல் ஞமன்ன் போல ஒரு திறம்**

**பற்றல் இலியரோ நின் திறம் சிறக்க” (புறம்.6:8-10)**

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. மேலும் கலித்தொகையில் தலைவன் ஆராய்ந்து அறத்தையே விரும்பும் நெஞ்சத்தை உடையவன் என்பதற்கு உவமையாக துலாக்கோலைக் கூறுவதன் மூலம் சங்க காலத்தில் துலாக்கோலின் பயன்பாடு இருந்திருப்பதை அறியமுடிகிறது. இதனை,

**“ஆர்வுற்றார் நெஞ்சம் அழிய விடுவானோ**

**ஓர்வு உற்று ஒருதிறம் ஒல்காத நேர்கோல்**

**அறம் புரி நெஞ்சத்தவன்” *(கலித்.42:13-15)***

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இதன்மூலம் பொருளைச் சமமாக அளவிட துலாக்கோல் பயன்படுத்தப்பட்டிருப்பது தெளிவாகிறது. அவையத்தார் முன்பு பகை, உவகை ஆகியவற்றில் பிறழாமல் தன்னைக் காத்துக் கொள்ளும் இலக்கணங்களால் அமைந்து பின்பு பகை, நட்பு, நொதுமல் என்ற முத்திறத்தும் பிறழாது தீர்ப்பு உரைக்கும் சான்றோர்கள் துலாக்கோலைப் போல் மதுரை நகரில் வாழ்ந்தனர் என்று மதுரைக்காஞ்சியில் (489-492) கூறப்பட்டுள்ளது. சங்க காலத்தில் தராசு யானைத் தந்தம் மற்றும் பொன்னால் செய்யப்பட்டதைப் பின்வரும் பாடலடிகள் விளக்குகின்றன.

**“புறவின் அல்லல் சொல்லிய கறை அடி**

**யானை வால் மருப்பு எறிந்த வெண் கடைக்**

**கோனிறைத் துலாம் புக்கோன்” (புறம்.39:1-3)**

**“செம்பொன் துலைத் தாலம்”*(கம்ப. மந்.19)***

**வட்டில்**

வட்டி என்பது இடைக்காலத்தும் பயன்படுத்தப்பட்டதொரு வகைப் பாத்திரமாகக் காண்கிறோம். இதனை, “வட்டில் ஒன்று வெள்ளி ஐம்பத்தறு கழஞ்சரை” என்று “தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்” நூல் குறிப்பிடுகிறது. ஆனால் சங்க காலத்தில் வட்டியில் பொருட்களை வைத்துப் பயன்படுத்துவதோடு பண்டமாற்று நிலையில்

அதனை ஒரு அளவையாகவும் கருதியதை ஐங்குறுநூற்றுப் பாடலில் காணமுடிகிறது.

**“முள்எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த**

**அகன் பெரு வட்டி நிறைய மனையோள்**

**யாண்டு கழி வெண்ணெல் நிறைக்கும் ஊர” (ஐங்.47:1-3)**

**நாழி**

பல்லவர் காலத்தில் கருநாழி, நால்வா நாழி, மாராய நாழி, பிளையா நாழி, நாராய நாழி போன்ற பலவகை நாழிகள் பயன்படுத்தப்பட்டதை அறியமுடிகிறது. நெல்லை அளக்க நாழி பயன்படுத்தப்பட்டதை முல்லைப்பாட்டு குறிப்பிடுகிறது. இதனை,

**“யாழிசை இன வண்டார்ப்ப நெல்லொடு**

**நாழி கொண்ட நறுவீ முல்லை” (முல்லை.8-9)**

என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது.

**நீட்டல் அளவை: மா**

சங்க காலத்தில் நில அளவை மா, செறு என்று வழங்கிய நிலையைக் காணமுடிகிறது. ‘மா’ என்ற சொல் பெரியதொரு நிலத்தைக் குறிக்கும். இன்று மா என்ற அளவினை வேலியில் 20-ல் 1 பங்கு எனவும், 100 குழி நிலம் எனவும், ¼ காணி நிலம் எனவும் சுட்டுகின்றனர். இதன் மூலம் தமிழகம் முழுவதும் பல பெயர்கள் இருந்திருப்பதை அறியமுடிகிறது.

ஒரு மாவிற்குக் குறைந்த நிலமாயினும் அதன்கண் விளைந்த காய்ந்த நெல்லை அறுத்துக் கவளமாகக் கொள்ளின் யானைக்குப் பல நாட்களுக்கு உணவாக அது பயன்படும். நூறு வயல்களாயினும் யானை தனித்துச் சென்று புகுந்த உண்ணுமாயின் அதன் வாயில் புகுந்த நெல்லினும், காலடியில் பட்டு அழிவது மிகுதியாகும். அத்தன்மையில் அறிவுடைய அரசன் நெறியறிந்து வரியைப் பெற வேண்டும் என்று மன்னனுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இப்பாடலில் மா என்ற அளவு இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. இதனைப் புறநானூறு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**“காய் நெல்லறுத்துக் கவளம் கொளினே**

**மா நிறைவு இல்லதும் பன்னாட்காகும்**

**நூறு செறுவாயினும் தமித்துப் புக்குணினே**

**வாய்ப் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்” (புறம்.184:1-4)**

மேலும் நிலத்தின் பரப்பளவைக் குறிக்க வேலி என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

**“துளி பதனழிந்து பொழிய**

**வேலி ஆயிரம் விளையுட்டாக” (புறம்.391:20-21)**

**“சாலி நெல்லின் சிறைகொள் வேலி**

**ஆயிரம் விளையுட்டு ஆக**

**காவிரி புரக்கும் நாடு கிழவோனே” (பொருந.246-248)**

என்னும் பாடலடிகள் சுட்டுகின்றன. இப்பாடலடிகளின் மூலம் நிலத்தின் பரப்பளவைக் குறிக்க மா, வேலி என்ற அளவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**நிறைவுரை**

சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற அளவீடுகள் அனைத்தும் சங்கத் தமிழரின் அறிவுத் திறனையும், பண்பாட்டு முதிர்ச்சியையும், தொழில்நுட்ப ஆளுமையையும் எடுத்தியம்புகின்றன. அவர்கள் பயன்படுத்திய முகத்தல், நீட்டல் மற்றும் நிறுத்தல் அளவைகள் இன்றைய நவீன அளவீட்டு முறைகளுக்கு மிக வலிமையான அறிவியல் பூர்வமான அடித்தளத்தைப் பண்டைத் தமிழ்ச் சமூகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தங்களின் வாழ்வியலோடு இயல்பாகக் கொண்டிருந்தது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

## துணைநூற் பட்டியல்


1. ஆலிஸ். அ (உ.ஆ.), - பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
2. செயபால். இரா (உ.ஆ.), - அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
3. சோமசுந்தரனார். பொ.வே (உ.ஆ.),- பத்துப்பாட்டு, கழக வெளியீடு, சென்னை, 1980.
4. தட்சிணாமூர்த்தி. அ (உ.ஆ.),- ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
5. துரைசாமிப் பிள்ளை. ஔவை.சு (உ.ஆ.),- புறநானூறு, கழக வெளியீடு, சென்னை, 1962.
6. நச்சினார்க்கினியர் (உ.ஆ.), - கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை, 1962.
7. நாகசாமி. இரா, - தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை, 1969.
8. நாராயணவேலுப்பிள்ளை. எம், - கம்பராமாயணம், திருமகள் பதிப்பகம், சென்னை, 1998.


© 2026 முனைவர்பரமேஸ்வரி மு.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 71–72
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# பிற்கால அறஇலக்கியங்களில் குற்றவியல் சிந்தனைகளும் சமூக நீதி நிர்வாகமும்

*Concepts of Criminal Justice and the Administration of Social Justice in Later Didactic Literature*

**முனைவர். வனிதா தேவி த.***

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி, சென்னை., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். வனிதா தேவி த. — ngmcollegelibrary@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |
| **DOI** | | **Article ID / கட்டுரை எண்** | |
| — | | KALN-2026-00017 | |

## ஆய்வுச்சுருக்கம்

மனிதன் வாழக்கூடிய சமுதாயத்தின் ஒழுங்கிற்கும் அமைதியான வாழ்வியல் சூழலுக்கும் அடிப்படையாக விளங்குபவை அறச் சிந்தனைகளே. தமிழ் இலக்கியப் பரப்பில் சங்க காலம் மற்றும் சங்கம் மருவிய காலத்தைத் தொடர்ந்து, பிற்காலத்திலும் குறிப்பாக 14-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் பல நீதி நூல்கள் தோன்றின. அவை சமூகத்தின் ஒழுங்கிற்கும் அமைதியான வாழ்வியலுக்கும் தேவையான நெறிமுறைகளை வழங்கின. பிற்கால அற இலக்கியங்களான நீதிநெறி விளக்கம், நன்னெறி, அறநெறிச்சாரம், மாயூரம் வேதநாயக பிள்ளையின் நீதிநூல் போன்றவை தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்துவதோடு, சமூகம் என்ற அமைப்பில் குற்றத் தடுப்பு, குற்றங்களுக்கான தண்டனைக் கோட்பாடுகள், நீதி நிர்வாகம் ஆகியவற்றையும் நுட்பமாக விளக்குகின்றன. பிற்கால அறஇலக்கியங்களில் பொதிந்துள்ள குற்றவியல் சிந்தனைகளையும் சமூக நீதி நிர்வாக முறைகளையும் பன்முகப் பார்வையில் ஆய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகிறது..

**Keywords / திறவுச்சொற்கள்:** சமூக நீதி; நிர்வாகம்; நடுவுநிலைமையைப் பின்பற்றும் நெறிகள்

## Abstract

Ethical thought forms the foundation for social order and a peaceful way of life. Following the Sangam and post-Sangam eras, a significant number of didactic works emerged in Tamil literature during the later period—specifically between the 14th and 19th centuries. These texts provided the necessary guidelines for maintaining social order and ensuring a harmonious existence. Later ethical works—such as *Neethineri Vilakkam*, *Nanneri*, *Aranericharam*, and Mayuram Vedanayagam Pillai’s *Neethinool*—not only emphasize individual morality but also offer nuanced insights into crime prevention, theories of punishment, and the administration of justice within the social framework. The primary objective of this article is to examine, from a multifaceted perspective, the concepts of criminology and the systems of social justice administration embedded in these later

ethical literary works.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** த., மு. வ. தே. (2026). பிற்கால அறஇலக்கியங்களில் குற்றவியல் சிந்தனைகளும் சமூக நீதி நிர்வாகமும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 71–72.

*The full text was submitted as a DOC file (037.*-பிற்கால-அறஇலக்கியங்களில்-குற்றவியல்-சிந்தனைகளும்-சமூக-நீதி-நிர்வாகமும்*.doc). It is available as a separate download from the editorial dashboard.*

© 2026 முனைவர். வனிதா தேவி த.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 73–78
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# மனித வாழ்வியலில் நாக வழிபாடு Naga Worship in Human life

*Naga Worship in Human life*

**முனைவர் சுந்தரமூர்த்தி ம.***

பேராசிரியர் தமிழ்த்துறை பெரியார் பல்கலைக்கழகம் சேலம் – *11, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் சுந்தரமூர்த்தி ம. — drmsundaramoorthi@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00018 |

## ஆய்வுச்சுருக்கம்

புராணகாலம்தொட்டு இன்று வரையிலும் உலகில் பல்வேறு இன மக்களிடையே நாக வழிபாடானது இருந்து வருகின்றது. ஒவ்வொரு நாட்டினரும் ஒவ்வொரு பெயர் வைத்து வெவ்வேறு முறையில் நாகவழிபாட்டினை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக வெப்பமண்டல பகுதியான தென்னிந்தியாவில் பல இடங்களில் நாகத்திற்கான கோவில்களும் அவற்றிற்கான வழிபாடுகளும் நேர்த்திக்கடன்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் குறிப்பாக குறிஞ்சி, முல்லை நிலங்களைப் பெறுமளவில் கொண்டிருக்கும் கொங்கு நாட்டில் நாகவழிபாடு பெற்றுள்ள முக்கியத்துவத்தினை இக்கட்டுரை முன்வைக்கிறது. சிறுதெய்வ வழிபாடு நிறைந்துள்ள கொங்குநாட்டில் பல இடங்களில் நாகத்;திற்கான கோவில்களும், நாக சிற்பங்களும் அமைந்து இன்றளவும் பெருவாரியான மக்களால் வழிபடப்பட்டு வருகின்றன. கொங்குநாட்டில் நாகவழிபாடு பெற்றுள்ள முக்கியத்துவத்தினையும் உட்பொருளையும் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது

## Abstract

From ancient times to the present day, Naga worship has existed among various ethnic groups around the world. People of each nation have adopted different names and practiced Naga worship in diverse ways. Particularly in South India, a tropical region, temples dedicated to Nagas, along with rituals and votive offerings, continue to be observed in many places. This article highlights the significance of Naga worship in Tamil Nadu, especially in the Kongu region, which largely comprises Kurinji and Mullai landscapes. In the Kongu region, which is abundant with folk deity worship, Naga temples and Naga sculptures are found in many places and are still worshipped by a large number of people today. This article is structured to explore the importance and underlying significance of Naga worship in the Kongu region.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ம., மு. சு. (2026). மனித வாழ்வியலில் நாக வழிபாடு Naga Worship in Human life. KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 73–78.

## உலகநாடுகளில் நாகவழிபாடு

உலகின் பல பாகங்களிலும் பாம்பு நீர்வளம்இ நீடித்த ஆயுள்இ நிறைந்த அறிவு இவற்றைத் தரும் தெய்வமாக எண்ணி வணங்கப்படுகிறது. எகிப்திய நாடுகளில் பாம்பு வளமையின் சின்னமாகக் கருதப்படுகிறது. 'ஈஜோ' என்ற நாக கண்ணிகை வழிபாடு சிறப்பானதாகும். நைல் நதிப் பிரதேசங்களில் காணப்படும் இவ்வகை நல்ல பாம்பின் நாக்குகளால் தான் கிளியோபாட்ரா தன் உயிரை மாய்த்துக்கொண்டாள் என்கிறது வரலாறு.

பழமை வாய்ந்த கிரேக்கர்களும்இ ரோமானியர்களும் பாம்புகளைஇ கடவுளின் மண்மீதான அவதாரம் என்று கருதினர். கிரேக்கக் கடவுளான ஜீயுஸ்இ உலகத்திலுள்ள ஜீவன்களைச் சந்திக்க விரும்பும்போது பாம்பு உருவம் எடுத்து வருவதாக ஐதீகம் வழங்குகிறது. அமெரிக்க நாடுகளில்இ தென் மேற்குப் பகுதிகளில் வசிக்கும் அமெரிக்க இந்தியர்கள் பாம்பு நடனத்தை மிகப் புனிதமாக மதிக்கின்றனர். 'ஹோபி எனும் இந்த நடனம் வளமையின் சின்னமாகவே கருதப்படுகின்றது. சீனர்களோ 'டிராகன்' என்ற இராட்சத நாகத்தைத் தங்கள் அரச இனத்தைக் காப்பாற்றும் மெய்க் காவலனாக உருவகப்படுத்தியும்இ போரில் வெற்றி தரும் வீரச் சின்னமாகவும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

### இந்தியாவில் பாம்பு வழிபாடு

இந்தியப் புராணங்கள் நாகங்களைப்பற்றிப் பல செய்திகளைக் கூறுகின்றன. அக்ஷ்ட நாகங்கள் எனப்படும் எட்டு நாகங்களான அனந்தாஇ வாசுகிஇ கார்க்கோடன்இ பிங்களகன்இ சங்காஇ பத்மஇ மகாபத்மஇ தவுகன் என்பன உயிருடன் உள்ளதாகவே மக்கள் இன்றும் நம்பி வருகின்றனர்.

மொஹஞ்சதாரோஇ ஹரப்பா முதலிய இடங்களில் சிந்துவெளி நாகரீகம் பரவியிருந்த காலத்திலேயேஇ ஒரு சமூகத்தினர் நாக வழிபாடு செய்து வந்துள்ளார்கள் என்பதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மிகச்சிறந்த போர் வீரரான அலெக்ஸாண்டர் இந்தியா வந்தபோது நாகபூஜை செய்யும் பிரிவினரைத் தட்சசீலத்தில் சந்தித்துள்ளார். பிரபல வரலாற்று ஆசிரியரான அபுல்பஸகல் 700 இடங்களில் கற்களில் செதுக்கப்பட்டுக் கடவுளாக வழிபாடு செய்யப்பட்ட நாகசிலைகளைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார். முஸ்லீம் அரசர்களின் படையெடுப்பு வரை காபூல் முதல் காக்ஷ்மீர் வரை மக்கள் நாகத்தைக் கடவுளாக வணங்கி வந்திருக்கின்றனர்.

### தெய்வங்களும் பாம்புகளும்

பூமி உருண்டையையே ஆதிசேடன் என்னும் பாம்பு தாங்கியுள்ளதாகப் புராணங்கள் கூறுகின்றன. சிவபெருமான் பாம்பைத் தன் தலையில் வைத்துள்ளார். விக்ஷ்ணுவோ பாம்புப் படுக்கையில் படுத்துள்ளார். அரசமரத்தடிப் பிள்ளையாரின் இரு புறங்களிலும் பாம்பு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான அம்மன் கோவில்களிலும் பாம்புப் புற்றுகள்இ சிலைகள் வழிபடப்படுகின்றன. புத்தமதம்இ சமண மதம் ஆகியவற்றிலும் பாம்பு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. நவக்கிரகங்களில் இராகுஇ கேதுக்கள் பாம்புகளே ஆகும்.

### கேரளாவும் பாம்பு வழிபாடும்

தமிழகத்திலும் கேரளாவிலும் மிகச் சிறப்பாகப் பாம்பு வழிபாடு இடம்பெற்றுள்ளது. கேரளாவைப் பரசுராமர் உருவாக்கினார் என்று ஒரு கர்ணபரம்பரைக் கதை உண்டு. அவ்வாறு உருவாக்கும் போது பாம்புகள் அங்கு ஏராளமாக இருந்தன. அதனால் அங்கு வர மற்றவர்கள் பயந்தனர். அப்போது பரசுராமனின் தவத்தால் பாம்புகள் அகன்றன. ஆனாலும் வாசுகி என்ற பாம்பின் வேண்டுகோளின்படி ஒவ்வொரு கிராமத்தின் ஓரத்திலும் புதரான இடத்தில் கல்லில் செதுக்கிய நாக உருவங்களைப் பிரதிக்ஷ்டை செய்தனர். இவைகளை உள்ளூர் மக்கள் 'காவு' என்பர். இங்கு வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கேரளாவில் உள்ள மன்னாரசாலா கோயில் நாகவழிபாடு செய்வோர்களிடையே பெருமை பெற்றுள்ளது. வருடந்தோறும் புரட்டாசி – ஐப்பசி மாத ஆயில்ய நட்சத்திரத்தில் வரும் நாட்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடித் திருவிழாக் கொண்டாடுகின்றனா. இந்த ஆலயத்தில் பெண்ணே பூசாரியாக உள்ளது தனிச் சிறப்புடையதாகும்.

**தமிழகமும் நாக வழிபாடும்**

இந்தியாவிலேயே நாகத்தின் பெயரை உடைய ஒரே ஒரு ஊர் நாகர்கோவில் எனலாம். பாம்புகளால் நிலம் வளம் பெறுகிறது என்ற நம்பிக்கை தமிழகத்தில் நிலவி வருகிறது. தமிழ்நாட்டில் சிறப்பான பாம்பு ஆலயங்களில் பூசாரிகளாக இருப்பவர்களில் சிலர் படையாச்சி சமூகத்தைப் போன்ற விவசாயக் குடும்பத்தினர் ஆவர்.

**“பாம்புஉறை மருங்கின் ஓங்குசினை நீழல்**

**பலிபெறு வியன்களம் மலிய ஏற்றி”** (பெரும்பாண்.இ232:233)

என்ற பெரும்பாணாற்றுப்படை வரிகள் மருதமர நிழலிலுள்ள பாம்புகளுக்குப் பலிகொடுத்தமையைக் குறிப்பிடுகின்றன.

தமிழகத்தில் ஒவ்வொரு கோவில் குளக்கரை அல்லது அரச மரத்தடியில் பாம்பு உருவம் செதுக்கப்பட்ட கற்கள் நடப்பட்டு வழிபாடுகள் நடந்து வருவதைக் காணலாம். பெரும்பாலும் நாகங்கள் குடியிருக்கும் புற்றுகள் கோவில்களாகவே மாறுகின்றன. இப்புற்றில் வாழும் பாம்புகளுக்குப் பால் வார்க்கப்படுகின்றன. வீட்டின் சுவர்களில் நல்லபாம்பின் உருவம் வரைந்தும் வணங்குவதுண்டு. புற்றுகளில் சந்தனம்இ மஞ்சள்இ குங்குமங்களால் கோலமிட்டு வணங்குகின்றனர்.

நாகர் கோயிலில் உள்ள நாகராஜர் கோவிலில் ஐந்துதலை நாகப்படிமமே கோயில் கருவறைத் தெய்வமாக உள்ளது. கன்னியாகுமரியில் உள்ள மகேந்திர மலையைஇ இராமாயண ஆசிரியர் வான்மீகிஇ நாகர் தம் உறைவிடம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாகர்கோவில் நாகராஜர் கோயிலில் இன்றும் சிறப்பான வழிபாடுகள் நடைபெறுகின்றன. மூலப்படிமத்திற்கு எதிரே உள்ள இரண்டு மரங்களின் அடிகளில்இ நாக உருவங்கள் நிரம்ப உள்ளன. கூரையே கோயில்இ கோயில் சுவர்களும் மண்சுவரே. பால் காணிக்கையாகத் தரப்படுகிறது. பலர் மிளகுஇ உப்புஇ கொண்டுவந்து கொட்டி வேண்டிக்கொள்வர். ஞாயிற்றுக்கிழமைகளில் மூலவருக்குப் பால் முழுக்கு செய்வர். பக்தர்கள் வேண்டிய செயல் நிறைவேறும்போது மரத்தால் ஆன உருவங்களைச் செய்து கொண்டுவந்து கோயிலுக்கு வைப்பர். இங்கு மண்ணே பிரசாதமாகத் தரப்படுகிறது. இக்கோயில் சமணக்கோயில் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். இங்குப் பல சமணக் கல்வெட்டுக்கள் உள்ளன.

செங்கை மாவட்டத்தில் பெரியபாளையம் என்ற ஊரில் நாகாத்தம்மன் கோயில் இருந்துள்ளது. குளித்தலை வட்டம் புதூர் அருகே ஒரு மலை. அதில் பாம்புருவம் உள்ளது. இதை நாககன்னி என்று வழிபடுகின்றனர்.

**கொங்கில் நாக வழிபாடு**

சிறுதெய்வ வழிபாடுகள் மிகுந்த பகுதி கொங்கு நாடாகும். இங்கே ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய தலங்கள் மிகக் குறைவு. குலதெய்வ வழிபாடு மிகுந்த கொங்கில் நாகவழிபாடும் நீண்டகாலமாக நிலவி வருகிறது.

திராவிட இனத்தவர் பன்னெடுங்காலமாகவே ராகுஇ கேது ஆகியவற்றைப் பாம்பின் உருவம் கொடுத்தே வழங்கி வந்தனர். கொங்கு கிராமங்களில் பலவிடங்களில் நாகருக்குக் கோயில்கள் அமைந்துள்ளன. கரூர் வலங்கையம்மன் நாகாலயம் குறிப்பிடத்தக்கதாகும்.

பழனி வட்டத்திலுள்ள வாகரைக் கிராமத்தில் நாகருக்குத் தனிக் கோயில் உள்ளது.

இக்கோயிலின் அடியில் பணம் (தங்கக் காசுகள்) ஏழு அண்டாக்களில் புதைத்து வைத்திருப்பதாக ஒரு நம்பிக்கை நிலவுகிறது. ஐவர்மலைஇ பழநியிலிருந்து மேற்கில் சுமார் **16** கி.மீல் அமைந்துள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மலையில் **16** சமணத் தீர்த்தங்கரர் உருவங்கள் குகைத்தளத்தில் செதுக்கப்பட்டுள்ளன. பார்சுவ நாதருக்கு நாகம் குடைபோல் காட்டப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி.பத்தாம் நூற்றாண்டாகும்.

தாளவாடி மலைப் பகுதிகளில் குறிப்பாக ஹோரை என்ற இடத்தில் நடுகற்களிடையே நாக சிற்பங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. பல இடங்களில் கோயில்களில் வேண்டுதலுக்காகப் பாம்பு உருவங்கள் செய்து வைப்பது வழக்கமாகும்.

அவிநாசி வட்டத்திலுள்ள சோமனூரில் வாழைத்தோட்டத்து ஐயன் கோயில் அமைந்துள்ளது. கோயில் மூல ஸ்தானத்தில் பெரிய கிளுவமரம் மட்டும் உள்ளது. அம்மரத்தை ஒட்டி ஒரு புற்று உள்ளது. அதைப் பாம்புப் புற்று என்கின்றனர். கோயிலுக்கு வரும் பக்தர்கள் புற்று மண்ணையே பிரசாதமாகப் பெறறுக் கொள்கின்றனர். நஞ்சு தொடர்பான நோய்கள் வாழைத்தோட்டத்து ஐயன் கோவிலில் வழிபட்டால் நீங்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே வேரூன்றியுள்ளது. அதனால் தேங்காய்இ பழம்இ கற்பூரம்இ வைத்து வழிபடுகின்றனர்.

### திருச்செங்கோட்டில் நாக வழிபாடு

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள திருச்செங்கோடு பழம்பெருமை படைத்தது. இவ்வூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெருங்கற் சின்னங்கள் காணப்படுகின்றன. நாகேசுவரர் ஆலயத்தை வேட்டுவர் தலைவன் **ஆறை இம்முடி அல்லால இளையான்** என்பவன் கட்டியுள்ளான்.

திருச்செங்கோட்டு மலைமேல் சிவாலயத்திற்குச் செல்லும் வழியில் இருநூறு அடி உயரத்தில் உள்ள மலைச்சரிவில் அறுபதடி நீளத்திற்கு ஐந்துதலைநாகம்இ மல்லாந்த நிலையில் மலைமேல் உடலை நீட்டிப் படுத்திருப்பது போல ஒரு பாம்பு உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் உள்ள இடத்திற்கு ‘நாகபள்ளம்’ என்ற பெயர் வழங்கப்படுகிறது. இதனை ஒட்டி இவ்வூரே அரவகிரிஇ நாககிரிஇ நாகாசலம்இ சர்ப்பகிரிஇ உரகவெற்புஇ கபசெவி குன்றம் என்றெல்லாம் இலக்கியங்களில் அழைக்கப்படுகிறது.

புதன்இ வியாழன்இ ஞாயிறு ஆகிய நாட்களில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். ஞாயிறே மிகுந்த சிறப்புடைய நாளாகும். நாகரை வழிபடுவோர்கள் வேண்டிக்கொண்டு நாகம் போன்ற உருவங்களைப் பதிக்கச் செய்வர். இம்மலையடிவாரம் முழுவதும் பாம்புருவங்களைக் காணலாம். குங்குமம்இ பூக்கள் வைத்து வழிபடுவதும் உண்டு.

ஆடி அம்மாவாசை கழித்த சுக்கிலபட்ச சதுர்த்திஇ பஞ்சமி நாட்கள் நாகவழிபாட்டிற்குச் சிறப்பானவை. இங்கு பலியிட வருவோர் சேவல் அறுப்பர். அப்போது அதற்கு மஞ்சள்நீர் தெளித்து ‘துளுக்க’ வைத்து அறுப்பார்கள். துளுக்காவிட்டால் கெட்ட சகுனமாக எண்ணுவர்.

குழந்தை இல்லாத பெண்கள் நாகத்தைக் கல் உருவில் செய்து ஆறுமாதம் தண்ணீரிலும் ஆறுமாதம் நெய்யிலும் வைத்த பிறகுஇ விசேசபூசை செய்து அரசமரத்தடியில் பிரதிட்டை செய்து வழிபடுவர்.

நாக வழிபாட்டில் பலியிட்டுப் படையல் செய்யும் போதுஇ பலியிட்ட சேவலின் இறைச்சியை அங்கேயே சமைத்துச் சாப்பிடுவார்கள். மிச்சத்தை வீட்டிற்குக் கொண்டு செல்வது மரபில்லை. இது தௌரா என்ற ஆப்பிரிக்கப் பகுதி மக்களிடமும் உள்ள பழக்கமாகும்.

திருச்செங்கோட்டில் உள்ள நாகரை வழிபட்டால் கைகால் முடக்கு நோய்கள் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை உள்ளது. அதை அப்பகுதியில் வழங்கும்

நாட்டுப்பாடலானஇ

‘காக்காய்க்குப் பூசை செஞ்சு கையொடிஞ்சுப் போச்சு

நாகருக்குப் பூசை செஞ்சு கைநல்லாப் போச்சு”

என்பது காட்டுகிறது.

**நாஞ்சில் நாடும் கொங்கு நாடும்**

நாஞ்சில் நாட்டவரும் கொங்கு நாட்டவரும் நாக வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். நாகத்தின் பெயரால் எழுந்த நாகர் நாஞ்சில் நாட்டில் உள்ளது. நாகர்கோயில் நாகரசர் ஆலயத்தில் ஆறுஅடி உயரத்தில் படமெடுத்த கோலத்தில் காட்சி தரும் நாகர் சிலைகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. அதேபோன்று கொங்கு நாட்டிலுள்ள திருச்செங்கோட்டு மலைச்சரிவில் 60 அடி நீளம் கொண்ட ஒரு பாம்பின் சிலை புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. குமரி மண்ணில் ஏழூர் செட்டிமார் சமுதாயத்தினர் ஒடுப்புரை என்ற இடத்தில் பாம்புச் சிலையைப் பொங்கலிட்டு வழிபடுவது போலத திருச்செங்கோட்டிலும் பாம்புச் சிலையைப் பொங்கலிட்டு வழிபடுகின்றனர். இரண்டு இடங்களிலும் பாம்பின் உருவைக் கல்லிலே செதுக்கி நேர்த்திக் கடன் முடிக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

**கொங்கு நாட்டு விளக்கு**

கி.பி.7இ8இ9 ஆம் நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டு மக்கள் நாஞ்சில் நாட்டிலுள்ள நாகராசர் ஆலயம் வந்து விளக்கேற்றி வழிபாடு செய்ததாக ஒரு வரலாறு உண்டு. நாகர்கோயில் நாகராசர் ஆலயத்தில் ஆவணி மாதக் கடைசி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் திருவிளக்கு அலங்காரம் இன்றும் ‘கொங்கு நாட்டு விளக்கு’ என்றுதான் அழைக்கப்படுகின்றது.

**கொங்கில் பிற இடங்கள்**

கோவைக்கு அருகில் உள்ள பேரூர் மிகப் பழமையான ஊராகும். இங்கு கி.பி.7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகர் சிற்பம் ஒன்றுள்ளது. கொங்கு நாட்டிலுள்ள விஜய மங்கலம்இ போளுவாம்பட்டி முதலிய இடங்களிலுள்ள திருநாகேஸ்வரமுடையார் கோயில்கள் நாகவழிபாட்டுடன் தொடர்புடையவை ஆகும். போளுவாம்பட்டிக்கு அமரபுயங்க நல்லூர் என்ற பெயர் முன்னர் வழங்கி வந்ததை இங்குள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதில் ‘புயங்க’ என்பது நாகம் எனப் பொருள்படும். அதனால் இவ்வூருக்கு நாகவழிபாட்டின் அடிப்படையில் இப்பெயர் ஏற்பட்டுள்ளது.

கொடுமுடி ஆற்றிலும்இ விஜய மங்கலத்திலும் பண்டைய நாக உருவங்கள் கிடைத்துள்ளன. தற்போது பேரூரில் மிகவும் தொன்மையான சுடுமண் நாக உருவம் கிடைத்துள்ளது. கொங்கு நாட்டில் அய்யன் கோவில்கள் நாகவழிபாட்டுத் தலமாக இப்போதும் வழிபடப்பட்டு வருகிறது. கொங்கு நாடு முழுவதும் உள்ள கோயில்களில் நாக வழிபாடு இல்லாத கோயில்களே இல்லை எனலாம். கொண்டலாம்பட்டி நாட்டாமங்கலம் சென்றாயப் பெருமாள் கோயிலில்் மூலவர் பாம்புப் புற்றுதான்.

**பாம்பின் பெயர்களும்இ நம்பிக்கைகளும்**

கொங்கில் உள்ள ஊர்ப் பெயர்கள் பலவும் பாம்பை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அரவக்குறிச்சிஇ நாகதேவன் பாளையம்இ நாகமலை போன்ற ஊர்களைக் கொங்கில் காணலாம். நாகசாமிஇ நாகவல்லிஇ நாகராசன்இ நாகம்மாள் எனப் பெயர்களும் காணப்படுகின்றன. கொங்கில் நெசவுத்தொழில் செய்யும் தேவாங்க இனத்தவர் நாகவழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்கள். அவர்கள் திருமண விழாவில் மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டுவதற்கு முன்னர் ‘நாகவல்லி’ என்ற ஒருவகைத் தாலியினை மணமகளின் தாய் மணமகளுக்குச் சூட்டுவது வழக்கமாகும். நாஞ்சில்

நாட்டைப் போலவே குறிப்பாகத் தேவாங்க இனத்தவரிடையே நாகராசன்இ நாகவல்லிஇ நாகம்மாள் போன்ற பெயர்களைக் கொண்டவர்கள் பலருண்டு.

பாம்புக் கடிக்கு மந்திரிப்பவர்களை கொங்கு நாட்டின் பலபகுதிகளிலும் காணலாம். பாம்புகள் வெப்பமண்டலத்தில் உள்ளன. குளிர்நாடுகளில் இருக்காது. அதனால் வெள்ளையர் நாட்டில் பாம்புவழிபாடு இல்லை. ஆனால் பாம்புகள் நிறைந்த முல்லைப்பகுதியான கொங்கு நாடு முழுவதுமே பாம்பு பற்றிய நம்பிக்கைகள் மிகுதி. நாகப்பாம்பைக் கொன்றால், குழிதோண்டி அதில் பாலூற்றி மஞ்சள்துணி, காசு ஆகியனவற்றையும் போட்டுப் பாம்பைப் புதைப்பதுண்டு. எரிப்பதும் உண்டு. குறிப்பாகக் கொங்கில் நாகத்தைக் கொண்றவன் ஆற்றில் இறங்கி தலையில் காசு வைத்து நீரில் மூழ்கி தன் தீட்டைக் கழிக்கும் பழக்கம் இருந்தது.

## வளமைக் குறியீடு

தமிழ்க் கலாச்சாரத்தில் பாம்பு வளமை மற்றும் செழிப்பின் குறியீடாகக் கருதப்படுகின்றது. விவசாயிகளில் பயிர்களை அழிக்கும் எலிகளைப் பாம்புகள் வேட்டையாடுவதால் அவை விளைச்சலைக் காக்கும் காவலனாகக் கருதப்படுகின்றன. இந்துமத புராணங்களில் பாம்புகள் (நாகங்கள்) நீர்நிலைகள் ஆறுகள் மற்றும் மழையோடு தொடர்புடையவையாகக் கருதப்படுகின்றன. நீர்வளம் பெருகினால் மட்டுமே விவசாயம் செழிக்கும் என்பதால் பாம்பு வளமையின் குறியீடானது. பாம்பு தன் உடலின் பழையதோலை உரித்துவிட்டு புதிய தோலுடன் வெளிவருகின்றது. இது மறுபிறவிஇ நீடித்த ஆயுள் மற்றும் இளமையைப் புதுப்பித்தல் ஆகியவற்றின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. குழந்தை இல்லாதவர்கள் தங்களுடைய வம்ச விருத்திக்காகவும் குடும்ப வளத்திற்காகவும் நாகதேவதையை வழிபடும் வழக்கம் தமிழகத்தில் பரவலாக உள்ளது. பாம்புகள் பிணைந்திருக்கும் நிலையில் வழிபாடுதல் மகப்பேற்றினைத் தருவதாக நம்பப்படுகின்றது. பாம்புகளுக்கு பிற உயிரினங்களை விட அதிக எண்ணிக்கையில் இனப்பெருக்க உறுப்புகள் இருப்பதாக நம்பப்படுகிறது. எனவே அதனை வணங்கும் செயல்முறையானது வளமையைக் கூட்டுவதாக உள்ளது.

பொதுவாக ஆதிமனிதர்்களிடம் இருந்த பாம்பு வழிபாடு இன்னும் கொங்கில் பரவலாகக் காணப்படுகிறது. சடங்குகள் இன்னும் பின்பற்றப்படுகிறது. அதையொட்டிய நம்பிக்கைகள் சடங்குகள் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதனையும் அறிய முடிகிறது.

## துணைநின்ற நூல்கள்

1. பெரும்பாணாற்றுப்படை - திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.

2. முனைவர் ம. சுந்தரமூர்த்திஇ கொங்கு கோயில்கள்இ பல்லவி பதிப்பகம்இ ஈரோடு. பதிப்பு – 2008.

3. கு. மகுடீஸ்வரன்(ப.ஆ)இ கொங்கு மானிடவியல்இ கோபி கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை வெளியீடுஇ பதிப்பு – 2007.

© 2026 முனைவர் சுந்தரமூர்த்தி ம.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

**KALANJIYAM – International Journal of Tamil Studies**
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 79–85
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# சங்க இலக்கியப் புறநானூற்றில் வெளிப்படும் தலைமைத்துவப் பண்புகளும் இன்றைய கல்வித் தலைமைத்துவத்திற்கான அவற்றின் பொருத்தமும்

**திருமதி.தஜினி சிவகுமார் (SLTES 3)***

விரிவுரையாளர் (கல்வியியல் துறை) ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிஇ பத்தனை. இலங்கை. *071 6201993, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: திருமதி.தஜினி சிவகுமார் (SLTES 3) — dhajinisiva1978@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | 1 October 2026 | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00019 |

## ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வுக் கட்டுரை சங்க இலக்கியமான புறநானூற்றில் வெளிப்படும் தலைமைத்துவப் பண்புகளை அடையாளம் கண்டு, அவை இன்றைய கல்வித் தலைமைத்துவத்துடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதை ஆராய்கிறது. அரசரின் அறநெறி, நீதி, பொதுநலப் பொறுப்பு, கொடை, ஆலோசனையை மதித்தல், துணிவு மற்றும் மக்களுடன் கொண்ட உறவு ஆகியவை முக்கிய கருப்பொருள்களாகக் கொள்ளப்பட்டன. தரமான விளக்கவியல் அணுகுமுறையின் கீழ் புறநானூற்றில் தலைமை சார்ந்த கருத்துகள் உள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடல்களும், அவற்றைப் பற்றிய ஆய்வுகளும் நோக்கமுடைய மாதிரியாகப் பயன்படுத்தப்பட்டன. கருப்பொருள் உள்ளடக்கப் பகுப்பாய்வு மூலம் கிடைத்த கருத்துகள் சேவகர் தலைமைத்துவம், மாற்றுத் தலைமைத்துவம் மற்றும் மதிப்புசார் கல்வித் தலைமைத்துவக் கோட்பாடுகளுடன் ஒப்பிடப்பட்டன. புறநானூற்றின் தலைமைச் சிந்தனைகள் நவீன கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாகப் பிரதியிடப்பட வேண்டியவை அல்லாதபோதிலும், நீதி, சேவை, பொறுப்புணர்வு மற்றும் பொதுநல நோக்கு போன்ற பண்புகள் கல்வித் தலைவர்களின் ஒழுக்கநெறி நடைமுறைக்கு பயனுள்ள பண்பாட்டு அடித்தளமாக அமையக்கூடும் என ஆய்வு முடிவுறுகிறது.
தமிழ் திறவுச்சொற்கள்: புறநானூறு, தலைமைத்துவம், கல்வித் தலைமைத்துவம், அறநெறித் தலைமை, சேவகர் தலைமைத்துவம்.

**Keywords / திறவுச்சொற்கள்:** Purananuru; Leadership; Educational Leadership; Ethical Leadership; Servant Leadership

## Abstract

This research article examines leadership qualities represented in Purananuru, a major work of Sangam literature, and considers their relevance to contemporary educational leadership. The study focuses on ethical responsibility, justice, public welfare, generosity, consultation, courage, and relationships between leaders and communities. A qualitative interpretive design is adopted, using purposively selected leadership-related Purananuru texts together with relevant scholarly literature.

Thematic content analysis is used to identify recurring leadership themes and compare them with servant, transformational, and values-based educational leadership. The analysis suggests that Purananuru should not be transferred uncritically into modern institutions; however, its emphasis on fairness, service, responsibility, and collective welfare offers a culturally grounded perspective for reflecting on ethical leadership practice.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** (SLTES 3), தி. சி. (2026). சங்க இலக்கியப் புறநானூற்றில் வெளிப்படும் தலைமைத்துவப் பண்புகளும் இன்றைய கல்வித் தலைமைத்துவத்திற்கான அவற்றின் பொருத்தமும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 79–85. https://ngmtamil.in/journal-article/%e0%ae%9a%e0%ae%99%e0%af%8d%e0%ae%95-%e0%ae%87%e0%ae%b2%e0%ae%95%e0%af%8d%e0%ae%95%e0%ae%bf%e0%ae%af%e0%ae%aa%e0%af%8d-%e0%ae%aa%e0%af%81%e0%ae%b1%e0%ae%a8%e0%ae%be%e0%ae%a9%e0%af%82%e0%ae%b1%e0%af%8d/

## 1. அறிமுகம்

சங்க இலக்கியம் தமிழ்ச் சமூகத்தின் பழமையான அரசியல், சமூக மற்றும் அறநெறிச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் முக்கிய இலக்கிய மரபாகும். அதில் புறநானூறு, போரியல் அல்லது அரசர்ப் புகழ் மட்டுமன்றி, அரசனின் கடமை, குடிமக்களின் நலம், கொடை, அறம், நீதி மற்றும் மனித உறவுகள் குறித்து பல்வேறு கருத்துகளை முன்வைக்கிறது. புறநானூற்றில் அரசன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் குறித்த காட்சிப்படுத்தல்கள் தலைமைத்துவத்தை அதிகாரம் என்ற ஒரே கோணத்தில் அல்லாது, பொறுப்பு மற்றும் பொதுநல சேவை என்ற கோணங்களிலும் புரிந்துகொள்ள வழியளிக்கின்றன. Ali (2021) புறநானூற்றில் அரசரின் உருவாக்கத்தை ஆராய்ந்துள்ளதுடன், M. (2022) அரசர்களின் அரசியல் செயல்பாடுகளில் அறநெறிக் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறார்.

இன்றைய கல்வி நிறுவனங்களிலும் தலைமைத்துவம் நிர்வாகத் திறனைத் தாண்டி, நியாயமான தீர்மானம், ஆசிரியர் பங்கேற்பு, மாணவர் நலம், மதிப்புசார் வழிநடத்தல் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றை உள்ளடக்குகிறது. மாற்றுத் தலைமைத்துவம் மற்றும் சேவகர் தலைமைத்துவம் குறித்த சமகால ஆய்வுகள் கல்வித் தலைவர்கள் பங்கேற்பு, உறவு, சேவை மற்றும் மதிப்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டியதை வலியுறுத்துகின்றன (Aboramadan, Dahleez and Hamad, 2020; Alainati, Almonawer and Al-Hammad, 2023). இருப்பினும், புறநானூற்றின் அரசியல் அறம் மற்றும் தலைமைச் சிந்தனைகளை இன்றைய கல்வித் தலைமைத்துவத்துடன் முறையாக ஒப்பிட்டு விளக்கும் ஆய்வுகள் வழங்கப்பட்ட இலக்கியத் தொகுப்பில் குறைவாகத் தோன்றுகின்றன. எனவே, வரலாற்று வேறுபாடுகளை உணர்ந்தபடியே புறநானூற்றின் தலைமை மதிப்புகள் நவீன கல்வித் தலைமைத்துவத்திற்கு எந்த அளவில் பொருத்தமுடையவை என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் மையப் பிரச்சினையாகும்.

இக்கட்டுரையின் முக்கியத்துவம் இரு நிலைகளில் அமைந்துள்ளது. முதலில், தமிழரின் பாரம்பரிய இலக்கியத்தில் தலைமை குறித்த சிந்தனை எவ்வாறு அறம் மற்றும் சமூகப் பொறுப்புடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை கல்வியியல் கோணத்தில் மீள்படிக்கிறது. இரண்டாவது, மேற்கத்திய நிர்வாகக் கோட்பாடுகளை மட்டும் சாராமல், உள்ளூர் பண்பாட்டு அறிவிலிருந்து கல்வித் தலைமை பற்றிய சிந்தனை வளத்தை உருவாக்கும் வாய்ப்பை ஆராய்கிறது. இதன் மூலம் பழமையும் புதுமையும் இடையிலான நேரடி சமமாக்கலைத் தவிர்த்து, பொருத்தமான மதிப்புகளை விமர்சனமாகத் தேர்ந்தெடுக்கும் அணுகுமுறை முன்னிறுத்தப்படுகிறது.

## 2. இலக்கிய மீளாய்வு

புறநானூற்றை மையமாகக் கொண்ட ஆய்வுகள் அரசரின் தன்மை, அறநெறி, கொடை, மனிதநேயம் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றை முக்கியமாகச் சுட்டுகின்றன. Ali (2021) அரசரின் இலக்கியப் பிரதிநிதித்துவத்தை கவனத்தில் கொண்டுள்ளதுடன், K. (2022) புறநானூற்றில் வாழ்க்கை நற்குணங்கள் எவ்வாறு பகிரப்படுகின்றன என்பதை ஆராய்கிறார். M. (2022) அரசரின் அரசியலில் அறத்தின் நிலையை மையப்படுத்துகிறார். R. (2022) அரசர், மக்கள் மற்றும் சான்றோர்கள் இடையிலான மனிதநேயப் பண்பாட்டை ஆராய்வது, தலைமைத்துவத்தை ஒருதலைப்பட்ச அதிகாரமாக அல்லாமல் உறவுசார் சமூகப் பொறுப்பாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. இவ்வாய்வுகளின் ஒட்டுமொத்தப் பொருள், சிறந்த தலைவரின் மதிப்பு அவரது ஆட்சிச் சக்தியால் மட்டுமல்ல, அவர் சமூகத்துடன் ஏற்படுத்தும் நீதியுள்ள மற்றும் அறமுள்ள உறவுகளாலும் தீர்மானிக்கப்படுகிறது என்பதாகும்.

சமகால கல்வித் தலைமைத்துவ இலக்கியத்தில் சேவகர் தலைமைத்துவம், மாற்றுத் தலைமைத்துவம் மற்றும் மதிப்புசார் தலைமைத்துவம் முக்கிய இடம் பெறுகின்றன. Aboramadan, Dahleez and Hamad (2020) உயர்கல்வியில் சேவகர் தலைமைத்துவம் கல்வியாளர்களின் ஈடுபாட்டுடன் தொடர்புடையது என்பதை ஆராய்ந்துள்ளனர். Canavesi and Minelli (2021) சேவகர் தலைமைத்துவ ஆய்வுகளின் பரந்த வளர்ச்சியை முறையான இலக்கிய மீளாய்வு மூலம் தொகுக்கின்றனர். Alainati, Almonawer and Al-Hammad (2023) கல்வியில் மாற்றுத் தலைமைத்துவ இலக்கியத்தை ஆய்வு செய்கின்றனர். மேலும் Effendi and Erb (2024) பள்ளி முதல்வரின் மனிதநேயப் பங்கை சேவகர் தலைமைத்துவத்துடன் இணைக்கின்றனர். இவ்வகை சமகால அணுகுமுறைகள் அதிகாரத்தின் உச்சியில் இருக்கும் ஒருவரை விட, பிறரின் வளர்ச்சி, நலன், பங்கேற்பு மற்றும் அமைப்பின் பொது நோக்கை முன்னிறுத்தும் தலைவரை மதிக்கின்றன.

சேவகர் தலைமைத்துவத்தில் தலைவர் முதலில் சேவை செய்பவராகக் கருதப்படுகிறார்; இதனால் பின்தொடர்பவர்களின் வளர்ச்சி, நம்பிக்கை, நலன் மற்றும் சமூக மதிப்பு முக்கியமாகின்றன. Adams, Gurr, Dunn and Feng (2025) கல்வி நிறுவனங்களில் சேவகர் தலைமைத்துவத்தை தனித்த ஆய்வுத் துறையாக அமைப்பதற்கான அறிவுத் தளத்தை விரிவுபடுத்துகின்றனர். கல்வி சூழலில் இவ்வகை அணுகுமுறை ஆசிரியரின் தொழில்முறை சுயமரியாதை, மாணவர் நலன் மற்றும் பரஸ்பர நம்பிக்கையை ஆதரிக்கும் தலைமைச் செயல்பாடுகளுடன் தொடர்புபடுத்தலாம். அதேபோல் மாற்றுத் தலைமைத்துவம் பகிரப்பட்ட நோக்கு, ஊக்குவிப்பு மற்றும் நிறுவன வளர்ச்சியை வலியுறுத்துகிறது. Fitriani, Dewi and Suharyati (2025) பல கல்வித் தலைமைத்துவக் கோட்பாடுகளை ஒருங்கிணைந்த கட்டமைப்பில் அணுகுவது, ஒரே மாதிரி எல்லா சூழல்களுக்கும் போதுமானதல்ல என்பதை நினைவூட்டுகிறது.

இதனால் புறநானூற்றில் வெளிப்படும் நீதி, சேவை, பொதுநலம், அறப்பொறுப்பு போன்ற கருத்துகளுக்கும் நவீன கல்வித் தலைமைத்துவத்தின் சில அடிப்படை மதிப்புகளுக்கும் கருத்தியல் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அதேவேளை, பழந்தமிழ் அரசாட்சியின் மரபுரிமை மற்றும் மன்னராட்சி சூழலை நவீன ஜனநாயகக் கல்வி நிர்வாகத்துடன் நேரடியாக ஒப்பிட முடியாது. இந்த வேறுபாட்டை ஏற்றுக்கொள்வதே வரலாற்றுச் சிந்தனையை சமகாலப் பயன்பாட்டுடன் விமர்சனமாக இணைக்கும் அடிப்படையாகும்.

புறநானூற்றின் அரசர்ப் பண்புகள் பற்றிய ஆய்வுகளும் நவீன கல்வித் தலைமை ஆய்வுகளும் வெவ்வேறு வரலாற்று மற்றும் நிறுவனச் சூழல்களில் உருவானவை. எனவே ஒற்றுமைகளை மட்டும் தேடுவது ஆய்வை எளிமைப்படுத்திவிடும். மாறாக, எந்த

மதிப்புகள் காலத்தைக் கடக்கும் அறநெறி முக்கியத்துவம் உடையவை, எந்த கூறுகள் மன்னராட்சி அதிகார அமைப்புக்கே உரியவை, எந்த கருத்துகள் நவீன கல்வியில் மாற்றிப் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதைக் கேட்பதே இவ்வாய்வின் விமர்சன அடித்தளமாக அமைகிறது.

## 3. ஆய்வு நோக்கங்கள்

1. இவ்வாய்வின் முதல் நோக்கம் தெரிவுசெய்யப்பட்ட புறநானூறு பாடல்களில் வெளிப்படும் முக்கிய தலைமைத்துவப் பண்புகளை அடையாளம் காண்பதாகும்.

2. இரண்டாவது நோக்கம் அவற்றை சேவகர், மாற்றுத் மற்றும் மதிப்புசார் கல்வித் தலைமைத்துவக் கருத்துகளுடன் ஒப்பிடுவதாகும்.

3. மூன்றாவது நோக்கம் வரலாற்று மற்றும் நிறுவல் வேறுபாடுகளை கருத்தில் கொண்டு, புறநானூற்றின் பொருத்தமான தலைமை மதிப்புகள் இன்றைய கல்வித் தலைமைத்துவ நடைமுறைக்கு வழங்கக்கூடிய பங்களிப்பை மதிப்பிடுவதாகும்.

## 4. ஆய்வு வினாக்கள்

1. தெரிவுசெய்யப்பட்ட புறநானூறு பாடல்களில் எந்த முக்கிய தலைமைத்துவப் பண்புகள் வெளிப்படுகின்றன?

2. அவை சமகால கல்வித் தலைமைத்துவக் கருத்துகளுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன?

3. அவற்றில் எந்த மதிப்புகள் இன்றைய கல்வித் தலைமைத்துவ நடைமுறையில் வரலாற்று வேறுபாடுகளை உணர்ந்தபடி பொருத்தமாகப் பயன்படுத்தப்படலாம்?

## 5. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு தரமான விளக்கவியல் மற்றும் ஒப்பீட்டுச் சிறப்புடைய ஆய்வு வடிவமைப்பைப் பயன்படுத்துகிறது. மாதிரியாக, அரசன், அறம், நீதி, கொடை, மக்கள் நலம், ஆலோசனை மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற தலைமைக்குறிய கருத்துகளைத் தெளிவாகக் கொண்ட புறநானூறு பாடல்கள் நோக்கமுடைய தேர்வு முறையில் அணுகப்படுகின்றன. இதனுடன் புறநானூற்றின் அரசர் உருவாக்கம், அறநெறி, நற்குணங்கள் மற்றும் மனிதநேயம் குறித்து வழங்கப்பட்ட ஆய்வுகள் துணைத் தரவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தரவு சேகரிப்பு ஆவண மற்றும் உரைப் பகுப்பாய்வு முறையைக் கொண்டது. தெரிவுசெய்யப்பட்ட இலக்கியக் கருத்துகள் நீதி, சேவை, பொறுப்பு, பொதுநலம், ஆலோசனை, துணிவு மற்றும் மனிதநேயம் போன்ற ஆரம்பக் குறியீடுகளின் கீழ் வாசிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன. பின்னர் அவை கருப்பொருள் உள்ளடக்கப் பகுப்பாய்வின் மூலம் பரந்த தலைமைத் தலைப்புகளாக ஒருங்கிணைக்கப்பட்டு, சமகால கல்வித் தலைமைத்துவ இலக்கியத்துடன் ஒப்பிடப்படுகின்றன. இந்த ஆய்வின் முக்கிய வரம்புகள் இலக்கிய விளக்கத்தின் கருத்துநிலை இயல்பு, முழு புறநானூற்றையும் வரி வரியாகப் பகுப்பாய்வு செய்யாதிருத்தல், மற்றும் பழந்தமிழ் மன்னராட்சி சூழலுக்கும் நவீன கல்வி நிறுவனங்களுக்கும் இடையிலான வரலாற்று வேறுபாடுகள் ஆகும்.

பகுப்பாய்வில் ஒவ்வொரு கருப்பொருளும் முதலில் புறநானூறு சார்ந்த ஆய்வுகளில் எவ்வாறு விளக்கப்படுகிறது என்பது பதிவு செய்யப்படுகிறது. பின்னர் அதனுடன் கருத்தியல் ஒற்றுமை கொண்ட சமகால கல்வித் தலைமைத்துவக் கோட்பாடு இணைக்கப்படுகிறது. இறுதியாக, அந்த ஒற்றுமையின் எல்லை மற்றும் நடைமுறைப்

பொருத்தம் மதிப்பிடப்படுகிறது. இவ்வாறு மூன்று நிலைகளில் வாசிப்பது, வெறும் ஒப்புமைகளை உருவாக்காமல், வரலாற்று வேறுபாடுகளையும் கல்வி நிறுவனங்களின் தற்போதைய பொறுப்புக்கூறல் அமைப்புகளையும் கவனத்தில் கொள்ள உதவுகிறது.

ஆய்வின் நம்பகத்தன்மையை மேம்படுத்த, ஒரே தலைமைப் பண்பை ஆதரிக்கும் வேறுபட்ட ஆய்வுகளின் கருத்துகள் ஒப்பிட்டு வாசிக்கப்படுகின்றன. மேலும், பழந்தமிழ் அரசரின் பண்பை நவீன கல்வித் தலைவருடன் சமமாக்காமல், செயல்பாட்டின் அடிப்படை மதிப்பு மட்டுமே ஒப்பிடப்படுகிறது. இதனால் உரைப் பொருள், வரலாற்றுச் சூழல் மற்றும் கல்வி பயன்பாடு ஆகிய மூன்றுக்கும் இடையில் தெளிவான வேறுபாடு பேணப்படுகிறது. இவ்வாய்வு அளவியல் பொதுமைப்படுத்தலை நோக்கமல்லாது, கருத்தியல் விளக்கம் மற்றும் பண்பாட்டு பொருத்தத்தை ஆராய்வதையே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அணுகுமுறை ஆய்வின் விளக்கத் தெளிவையும் விமர்சன ஆழத்தையும் மேலும் உறுதிப்படுத்துகிறது.

## 6.ஆய்வுக் கண்டுபிடிப்புகள்

பகுப்பாய்வில் முதன்மையாக வெளிப்படும் கருப்பொருள் நீதி மற்றும் அறப்பொறுப்பாகும். புறநானூற்றின் அரசர் குறித்த ஆய்வுகள் சிறந்த ஆட்சியை அறம், பொறுப்பு மற்றும் சமூக நலனுடன் இணைக்கின்றன (Ali, 2021; M., 2022). கல்வி நிறுவனத்தில் இதன் சமகாலப் பொருள், முதல்வர் அல்லது கல்வித் தலைவர் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துபவராக மட்டும் அல்லாமல், தீர்மானங்களில் நியாயம், வெளிப்படைத்தன்மை மற்றும் மதிப்புசார் நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும் என்பதாகும். எனினும், இன்றைய கல்வித் தலைவரின் அதிகாரம் சட்டம், தொழில்முறை தரநிலைகள் மற்றும் நிறுவனப் பொறுப்புக்கூறல் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

இரண்டாவது கருப்பொருள் சேவை மற்றும் பொதுநலமாகும். புறநானூற்றில் நற்குணம், கொடை மற்றும் மனிதநேயம் பற்றிய ஆய்வுகள் தலைவர் தனது சமூகத்துடன் கொண்ட கடமைமிக்க உறவை முன்னிறுத்துகின்றன (K., 2022; R., 2022). இது சேவகர் தலைமைத்துவத்தின் பிறரின் வளர்ச்சி மற்றும் நலனைக் காக்கும் நோக்குடன் கருத்தியல் தொடர்பு கொண்டுள்ளது. உயர்கல்வியில் சேவகர் தலைமைத்துவத்தின் பயன்பாடு மற்றும் கல்வியாளர்களின் ஈடுபாடு குறித்த ஆய்வுகளும் இதே உறவுசார் பார்வையின் முக்கியத்துவத்தை காட்டுகின்றன (Aboramadan, Dahleez and Hamad, 2020; Adams, Feng and Omar, 2025).

மூன்றாவது கருப்பொருள் ஆலோசனை மற்றும் உறவுசார் பொறுப்பாகும். பழந்தமிழ் இலக்கியச் சூழலில் தலைவருக்கும் மக்கள், புலவர், சான்றோர் போன்ற சமூகக் குழுக்களுக்கும் இடையிலான உறவு முக்கியமாகக் காணப்படுகிறது. நவீன கல்வி சூழலில் இது ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சமூகப் பங்காளிகளின் குரலைக் கேட்கும் பங்கேற்புத் தலைமைத்துவத்துடன் ஒப்பிடப்படலாம். Effendi and Erb (2024) மனிதநேய கல்விச் சூழலை உருவாக்கும் முதல்வரின் சேவகர் தலைமைப் பங்கை வலியுறுத்துவது இதனுடன் தொடர்புடையது.

நான்காவது கருப்பொருள் துணிவு, நோக்கு மற்றும் மாற்றத்திற்கான பொறுப்பாகும். புறநானூற்றில் தலைவன் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்திற்குப் பொறுப்பேற்கும் உருவாக வெளிப்படுவதை சமகால கல்வியில் மாற்றத்தை வழிநடத்தும் பொறுப்புடன் விமர்சனமாக ஒப்பிடலாம். மாற்றுத் தலைமைத்துவம் கல்வி அமைப்பில் நோக்கை உருவாக்குதல், உறுப்பினர்களை ஊக்குவித்தல் மற்றும் வளர்ச்சியை முன்னெடுத்தல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது (Alainati, Almonawer and Al-Hammad, 2023). ஆகவே, வரலாற்று வடிவங்களை நேரடியாகக் கடத்துவதற்குப் பதிலாக, அவற்றின் அறநெறி சார்ந்த மைய மதிப்புகளை நவீன சூழலுக்கேற்ப மறுபொருளாக்குவது

பொருத்தமான அணுகுமுறையாகும்.

மேலும், இக்கருப்பொருள்கள் ஒன்றிலிருந்து ஒன்று தனித்தனியாக இயங்குவதில்லை. நீதி இல்லாத கொடை தனிப்பட்ட புகழாக மாறக்கூடும்; பொதுநல நோக்கு இல்லாத துணிவு அதிகார மையப்படுத்தலாக மாறக்கூடும்; ஆலோசனை இல்லாத நோக்கு அமைப்பு உறுப்பினர்களிடம் எதிர்ப்பை ஏற்படுத்தக்கூடும். இதனால் புறநானூற்றிலிருந்து பெறப்படும் தலைமைப் பாடங்கள் தனித்த பண்புகளின் பட்டியலாக அல்லாமல், ஒன்றோடொன்று தொடர்புடைய அறநெறி அமைப்பாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். நவீன கல்வித் தலைமைத்துவத்திலும் இதே ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது.

கல்வித் தலைவரின் நடைமுறையில் இவ்விணைப்பை எடுத்துக்காட்டினால், நியாயமான முடிவெடுப்பு ஆசிரியர்களின் நம்பிக்கையை உருவாக்க வேண்டும்; சேவை நோக்கு மாணவர் மற்றும் ஆசிரியர் நலனை முன்னிறுத்த வேண்டும்; ஆலோசனை பங்கேற்பை உண்மையான முடிவெடுப்பில் பிரதிபலிக்க வேண்டும்; மாற்றத்திற்கான துணிவு நிறுவனத்தின் பகிரப்பட்ட நோக்குடன் இணைந்திருக்க வேண்டும். சேவகர் தலைமைத்துவம் குறித்த முறையான ஆய்வுகள் உறவு மற்றும் பொறுப்பின் தொடர்ச்சியான முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன (Canavesi and Minelli, 2021). இக்கருத்துகள் புறநானூற்றின் பண்பாட்டு மரபை நவீன கல்வியில் அப்படியே மீண்டும் உருவாக்காமல், உள்ளூர் நெறி வளமாகப் பயன்படுத்தக்கூடிய வழியைக் காட்டுகின்றன.

## 7. முடிவுகளும் பரிந்துரைகளும்

இவ்வாய்வு புறநானூற்றில் வெளிப்படும் தலைமைத்துவத்தை அதிகாரம், வீரியம் அல்லது புகழ் ஆகியவற்றில் மட்டும் அடைக்காமல், நீதி, அறப்பொறுப்பு, சேவை, மனிதநேயம் மற்றும் பொதுநலக் கடமை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகப் புரிந்துகொள்ள முடியும் என்பதை காட்டுகிறது. இம்மதிப்புகள் சேவகர், மாற்றுத் மற்றும் மதிப்புசார் கல்வித் தலைமைத்துவத்தின் சில கூறுகளுடன் பொருத்தமான கருத்தியல் தொடர்பைக் கொண்டுள்ளன. ஆனால் பழந்தமிழ் மன்னராட்சி வடிவத்தை நவீன கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாகப் பயன்படுத்த முடியாது. கல்வித் தலைவர்கள் புறநானூற்றிலிருந்து பெறக்கூடிய பயனுள்ள பாடம், அதிகாரத்தை விட பொறுப்பு, தனிப்பட்ட புகழை விட சமூக நலம், கட்டளையை விட நியாயமான உறவு ஆகியவற்றை முன்னிறுத்துவதாகும். எதிர்கால ஆய்வுகள் குறிப்பிட்ட புறநானூறு பாடல்களை விரிவாக உரைப் பகுப்பாய்வு செய்து, ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகளின் பார்வைகளுடன் ஒப்பிட்டால் இத்தொடர்பை மேலும் வலுப்படுத்தலாம்.

எனவே பள்ளி மற்றும் உயர்கல்வி நிர்வாகப் பயிற்சிகளில் தமிழ் இலக்கிய மரபிலுள்ள தலைமைச் சிந்தனைகளை வழக்குக் கலந்துரையாடல், மதிப்புசார் தீர்மானப் பயிற்சி மற்றும் உள்ளூர் தலைமை எடுத்துக்காட்டுகளுடன் இணைத்துப் பயன்படுத்தலாம். இத்தகைய பயன்பாடு இலக்கியத்தை நிர்வாகக் கையேடாக மாற்றுவதல்ல; மாறாக, தலைமை என்பது அதிகாரம் மட்டுமல்ல, சமூகத்திற்கான அறநெறிப் பொறுப்பும் என்பதை சிந்திக்கச் செய்யும் கல்வி வளமாக அணுகுவதாகும்.

## 8. உசாத்துணைகள்


Aboramadan, M., Dahleez, K. & Hamad, M.H. (2020) ‘Servant leadership and academics’ engagement in higher education: mediation analysis’, Journal of Higher Education Policy and Management, 42, pp. 617–633. https://doi.org/10.1080/1360080x.2020.1774036

Ali, N. (2021) ‘The Portrait of the King in the Purananuru’, pp. 74–78.

https://doi.org/10.34293/tamil.v5i4.3725

Fitriani, A., Dewi, N.L.P.E.S. & Suharyati, H. (2025) 'Beyond Styles: An Integrative Framework of Educational Leadership Theories and Models', Journal of Educational Management Research. https://doi.org/10.61987/jemr.v4i6.1207

சாமிநாதையர், உ. வே. (1985). புறநானூறு மூலமும் உரையும். தமிழ்ப் பல்கலைக்கழகம்.

சாமிநாதையர், உ. வே. (1971). புறநானூறு மூலமும் பழைய உரையும். டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்.

துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு. (1968). புறநானூறு *1–200* பாடல்கள். திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

புலியூர்க்கேசிகன். (1958). புறநானூறு தெளிவுரை. கேசிகன் பதிப்பகம்.

© 2026 திருமதி.தஜினி சிவகுமார் (SLTES 3). This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

**KALANJIYAM – International Journal of Tamil Studies**
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 86–89
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# புறநானூற்றில் அரசியல் கோட்பாடுகளும் செங்கோன்மை நெறிகளும்

*Political Theories and Principles of Righteous Rule in Purananuru*

**வடிவேல் ச.***

விரிவுரையாளர் ,(இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை) நிறுவனம் - ஆசிரியர் வாண்மை விருத்தி மத்திய நிலையம் கொழும்பு, இலங்கை *TELEPHONE 0094717032642 0094777032642, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: வடிவேல் ச. — wadeewell@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00020 |

## ஆய்வுச்சுருக்கம்

பண்டைய தமிழ்ச் சமூகத்தின் அகம், புற வாழ்க்கைப் பதிவுகளுள் புறநானூறு ஒப்பற்ற வரலாற்றுப் பேழையாகும். சங்க கால அரசியலமைப்பு, மன்னர்களின் கடமைகள், ஆட்சி நெறிமுறைகள், வரி வசூல் கோட்பாடுகள் மற்றும் அறமன்றங்களின் செயல்பாடுகள் குறித்துப் புறநானூற்றுப் பாடல்கள் விரிவாகப் பேசுகின்றன. இக்கட்டுரை, புறநானூற்றில் இடம்பெற்றுள்ள அரசியல் கோட்பாடுகளையும், "செங்கோன்மை" எனப்படும் நீதி தவறா ஆட்சிமுறையையும், அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான உறவையும் விரிவாக ஆராய்கிறது. நவீன அரசியல் அறிவியல் சிந்தனைகளுக்கு இணையான கோட்பாடுகள் சங்க காலத்திலேயே நடைமுறையில் இருந்ததை இக்கட்டுரை நிறுவுகிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** புறநானூறு; செங்கோன்மை; அரசியல் கோட்பாடு; அறநெறி; வரி விதிப்பு; குடிதழீஇய ஆட்சி; அரசநீதி.

## Abstract

Among the records of internal and external lives of the ancient Tamil society, Purananuru is an incomparable historical treasure. The poems of Purananuru discuss in detail the political structure, duties of kings, principles of governance, taxation theories, and the functioning of courts of justice during the Sangam era. This paper comprehensively examines the political concepts featured in Purananuru, the system of righteous governance known as "Sengonmai" (unwavering justice), and the relationship between the state and its citizens. This paper establishes that concepts equivalent to modern political science thoughts were in practice as early as the Sangam period.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ச., வ. (2026). புறநானூற்றில் அரசியல் கோட்பாடுகளும் செங்கோன்மை நெறிகளும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 86–89.

## ஆய்வு நோக்கம் (Objective)

பண்டைய தமிழ் இலக்கியமான புறநானூற்றில் வெளிப்படும் அரசமைப்பு சார்ந்த அரசியல் கோட்பாடுகளையும், மன்னர்களின் நீதி தவறா ஆட்சிமுறையான

"செங்கோன்மை" நெறிகளையும் விரிவாக ஆராய்ந்து, அவை தற்கால உலகளாவிய நல்லாட்சிச் ((Good Governance)) சிந்தனைகளுக்கு எவ்வகையில் அடிப்படையாக அமைகின்றன என்பதை நிறுவுதல்.

1. அறிமுகம் **(Introduction)**

ஒரு நாட்டின் அமைதிக்கும், வளர்ச்சிக்கும், மக்களின் நல்வாழ்விற்கும் திறம்படச் செயல்படும் அரசியல் அமைப்பும் நீதி நெறியும் அவசியமானவை. சங்க இலக்கியங்களில் புறநானூறு அரசியல் சிந்தனைகளின் கருவூலமாகக் திகழ்கிறது. பேரரசர்கள், குறுநில மன்னர்கள், வேளிர்கள் எனப் பலத்தரப்பட்ட ஆட்சியாளர்களின் ஆட்சிமுறையைச் சங்கப் புலவர்கள் நேர்மையோடும் நடுவுநிலையோடு மதிப்பிட்டுப் பதிவு செய்துள்ளனர்.

அரசன் என்பவன் எதேச்சதிகாரம் படைத்த ஆட்சியாளன் அல்லன்; மாறாக, அறத்தின் காவலன்; மக்களின் சேவகன் என்ற உயரிய கோட்பாடு புறநானூற்றில் வலியுறுத்தப்படுகிறது.

2. அரசனுக்கான அறமும் செங்கோன்மை நெறியும்

சங்கப் பாடல்களில் "செங்கோல்" என்பது நீதியையும் நேர்மையையும் குறிக்கும் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு மன்னனின் உண்மையான ஆற்றல் அவனது படை பலத்திலோ அல்லது கூரிய வேலிலோ இல்லை அவனது நடுவுநிலை தவறாத நீதியிலேயே உள்ளது.

‘வேலன்று வென்றி தருவது மன்னவன்’

கோலதூஉம் கோடா தெனின்"— (புறநானூறு: 55)

மன்னன் கோடாத செங்கோலை உடையவனாக இருந்தால் மட்டுமே அவனுக்கு வெற்றி கிடைக்கும் என்பதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. மேலும், அரசன் நீதி தவறினால் நாட்டில் பருவ மழை பொய்த்துப் போகும் என்ற நம்பிக்கையும், அரசனுடைய ஆட்சியின் நல்ல விளைவே இயற்கையின் வளம் என்ற எண்ணமும் சமூகத்தில் நிலவியது.

3. அரசனை மையப்படுத்திய சமூகப் பொறுப்பு

அரசன் நாட்டின் உயிராகக் கருதப்பட்டான். ஆனால், அந்த உயர்வு அவனது அதிகாரத்தைக் காட்டிலும் அவனது கடமையையே அதிகம் நினைவூட்டியது.

“நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

அதனால், யான்உயிர் என்பது அறிகை

வேல்மிகு தானை வேந்தற்கு கடனே"

— (மோசிகீரனார், புறநானூறு: 186)

மக்களின் வாழ்வாதாரத்திற்கு உணவும் நீரும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் ஒரு நல்அரசனின் ஆட்சி. தான் நாட்டின் உயிர் என்பதை உணர்ந்து, குடிமக்களைப் பாதுகாப்பதே மன்னனின் தலையாயக் கடமையாகும்.

4. பொருளியல் மற்றும் வரி விதிப்புக் கோட்பாடு (Taxation Policy)

ஒரு நாட்டின் அரசு இயங்குவதற்கு வரி அவசியமானது. ஆனால், அவ்வரி குடிமக்களுக்குச் சுமையாக இருக்கக் கூடாது என்பதைப் புறநானூறு தெளிவான உவமையின் மூலம் விளக்குகிறது.

பிசிராந்தையார், பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறிவுறுத்தும் பாடலில்:

ஒரு சிறிய நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கினால், யானைக்குப் பல

நாட்களுக்கு உணவாகும்.

அதே யானை புகுந்து தானாக உண்ணத் தொடங்கினால், அது உண்பதை விடக் காலால் மிதித்து அழிப்பதே அதிகமாகும்.

'அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே

கோடி யாத்து நாடுபெரிது நந்தும்...

யானைப் புக்க புலம்போல

தானும் உண்ணான் உலகமும் கெடுமே"

— (பிசிராந்தையார், புறநானூறு: 184)

,

முறை அறிந்து வரி திரட்டினால் நாடும் மன்னனும் வளம் பெறுவர்;. முறை அறியாது கொடுங்கோன்மையால் வரி வசூலித்தால் நாடும் அழியும், அரசனுக்கும் பயன் கிடைக்காது என்ற பொருளியல் கோட்பாடு இதில் வெளிப்படுகிறது.

5. புலவர்களின் அரசியல் வழிகாட்டலும் இடித்திடித்தலும்

சங்க காலத்தில் புலவர்கள் வெறும் அரசவைப் புகழ்பாடிகளாக இல்லாமல், மன்னர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் அரசியல் ஆலோசகர்களாகச் செயல்பட்டனர்.

நீர்ப்பாசன வழிகாட்டல்: குடபுலவியனார், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்துகையில், நிலத்தையும் நீரையும் ஒன்றிணைத்துப் பாசன வசதிகளைப் பெருக்கும் அரசனே உலகத்தில் நிலையான புகழைப் பெறுவான் என்றார் (புறநானூறு: 18).

போரைத் தடுத்தல்: மன்னர்களிடையே தேவையற்ற போர்கள் நிகழும்போது கோவூர் கிழார் போன்ற புலவர்கள் தூது சென்று போரைத் தடுத்து, பொதுமக்களையும் வளங்களையும் காப்பாற்றினர்.

6. அறமன்றங்களும் ஜனநாயகக் கூறுகளும்

மன்னன் தனித்து முடிவெடுக்காமல், சான்றோர்கள் அடங்கிய அவையின் ஆலோசனையைப் பெற்றே ஆட்சி நடத்தினான்.

“அறமன்றங்கள்" நடுவுநிலையோடு நீதி வழங்கும் மையங்களாகச் செயல்பட்டன.

குற்றங்களை ஆராய்ந்து, தராசு போலச் சமமாக நீதி வழங்கும் முறை பின்பற்றப்பட்டது.

7. முடிவுரை **(Conclusion)**

புறநானூறு காட்டும் அரசியல் கோட்பாடுகள் தற்கால உலகளாவிய ஜனநாயக மற்றும் நல்லாட்சி (புழழன புழளநசயெnஉந) நெறிமுறைகளுக்கு மிகவும் நெருக்கமானவை.

1. அதிகாரத்தை விட நீதிக்கே முதன்மை.
2. மக்க நலனை அடிப்படையாகக் கொண்ட வரி விதிப்பு.
3. இயற்கையையும் நீர் வளத்தையும் பேணும் நாட்டின் பொருளியல் வளர்ச்சி.
4. ஆட்சியாளரைக் கண்டிக்கும் சுதந்திரமான தன்னாட்சி அமைப்புகள் (புலவர்கள்ஃசான்றோர்கள்).

இத்தகைய உன்னதமான அரசியல் மற்றும் செங்கோன்மை நெறிகளை உலகிற்கு உணர்த்தும் ஒப்பற்ற இலக்கியமாகப் புறநானூறு திகழ்கிறது.

துணைநூல் பட்டியல் (**(References)**

1. சாமிநாதையர், உ. வே. (பதிப்பாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உ. வே. சா. நூல்நிலையம், சென்னை.

2. சுப்பிரமணியன், ந., சங்ககால அரசியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

3. கைலாசபதி, க., பண்டைய தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு.

4. பிள்ளை, கே. கே., தமிழக வரலாறும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

5. கைலாசபதி, க. (1978). தமிழ் வீரநிலைக்கவிதை. குமரன் புத்தக இல்லம்.

6. வானமாமலை, நா. (1981). பண்டைய தமிழ்ச் சமூகமும் பண்பாடும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

© 2026 வடிவேல் ச.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)
Vol. 10, No. 02 (September 2026), pp. 90–99
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# வள்ளுவர் கூறும் இல்வாழ்க்கை

*The Domestic Life Described by Valluvar*

**தகைசால் தமிழறிஞர் அரிமா முனைவர் அய்யர். ச.***

எழுத்தாளர் தொல்லியலறிஞர் ,125, அறிவாலயம்,அமைதிச் சோலைநகர், திருநகர், மதுரை – *625 006, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: தகைசால் தமிழறிஞர் அரிமா முனைவர் அய்யர். ச. — ayyarsakkannan@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |
| **DOI** | — | **Article ID / கட்டுரை எண்** | KALN-2026-00021 |

## Abstract / ஆய்வுச்சுருக்கம்

To guide one's way of life, Thiruvalluvar delineates the principles of domestic life across twenty chapters under the section titled *Illaraviyal* (The Ethics of Domestic Life). Valluvar systematically outlines the essential attributes of domestic life and the ideal partner; the blessing of having children; the possession of love; hospitality; the habit of speaking pleasantly; gratitude; impartiality and adherence to virtue; self-restraint; moral conduct; fidelity (not coveting another's spouse); patience; freedom from envy; refraining from coveting others' wealth; avoiding backbiting; abstaining from idle speech; the fear of committing evil acts; living in harmony with the ways of the world; generosity; and attaining undying fame through these virtues. It is Valluvar’s view—and indeed the truth—that all these qualities are essential for both the man and the woman leading a domestic life. Let us now examine what Valluvar has to say about each of these aspects.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ச., த. த. அ. மு. அ. (2026). வள்ளுவர் கூறும் இல்வாழ்க்கை. KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 90–99. https://ngmtamil.in/journal-article/%e0%ae%b5%e0%ae%b3%e0%af%8d%e0%ae%b3%e0%af%81%e0%ae%b5%e0%ae%b0%e0%af%8d-%e0%ae%95%e0%af%82%e0%ae%b1%e0%af%81%e0%ae%ae%e0%af%8d-%e0%ae%87%e0%ae%b2%e0%af%8d%e0%ae%b5%e0%ae%be%e0%ae%b4%e0%af%8d%e0%ae%95/

## முன்னுரை

வாழ்க்கை நெறி பொருந்தத் திருவள்ளுவர் இல்லறவியல் என்னும் தலைப்பில் இல்வாழ்க்கைக்குரிய செய்திகளை இருபது அதிகாரங்களில் கூறுகின்றார். இல்வாழ்க்கையின் இலக்கணம், வாழ்க்கைத்துணையின் இலக்கணம், மக்கட்பேறு, இல்லறத்தார்க்கு இருக்க வேண்டும் அன்புடைமை, விருந் தோம்பல் பண்பு, இனியவை கூறும் இயல்பு, செய்நன்றி யறிதல், அறத்தில் வழுவாது நடுநிற்றல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறுமை யுடைமை, பொறாமை கொள்ளாதிருத்தல், பிறர் பொருளை வவ்வக் கருதாமை, புறங்கூறாமை, பயனற்ற சொற்களைச் சொல்லாமை, தீயவற்றைச் செய்வதற்கு அஞ்சுதல், உலக நடையை அறிந்து நடத்தல், ஈகைக்குணம், இவ்வனைத்துப் பண்புகளாலும் இறவாத புகழ்பெறுதல் என்பன வள்ளுவரால் முறைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. இல்வாழ்க்கை வாழும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இவையனைத்தும் தேவை என்பது வள்ளுவர் கருத்து.

உண்மையும் அதுவேயாகும். இனி, இவ்வொவ்வொன்றனைப் பற்றியும் வள்ளுவர் கூறுவதைக் காண்போம்.

### வாழ்க்கைத்துணை நலம்

உன்னை மணந்து கொண்ட கணவனையே பற்றுக் கோடாகக் கொண்டு அவன் விரும்பும் முறையில் இல்லறத்தை நடத்துவாயாக' என்று மணநாள் அன்று பெரியோர் கற்பித்த முறைப்படிநடப்பவள் 'கற்புடையாள்' எனப்படுவாள். அக்கற் பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்துக் கொண்டு, தன் கணவனையும் உணவு முதலியவற்றால் பேணி, இருவரிடத்தும் புகழ் நீங்காமல் காத்து, நற்குண நற்செய்கைகளில் வழுவாமல் இருப்பவளே பெண் என்று சொல்லப்படுவாள், அவள் கணவனது வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துவாள்; துறந்தவரைப் பாதுகாத்தலும் விருந்தினரை உபசரித்தலும் வறியவரிடம் அருளோடு நடந்து கொள்ளுதலும் அவளுடைய நற்குணங்களாகும். வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து கடைப்பிடித்தலும், சமையல் தொழில் திறமையும், உலக நடைக்கு ஏற்ப நடத்தலும், அவளுடைய நற்செயலாகும். இவை அமையப் பெறாத மனைவி இருக்கும் வீடு, எவ்வளவு செல்வம் இருந்தாலும், பிற சிறப்புக்கள் இருந்தாலும், வீடாகக் கருதப்படாது . மேலே சொல்லப் பெற்ற நற்குணங்களையும், நற்செயல்களையும் உடைய மனைவி இருக்கும் வீடு பொருள் வசதி அற்றதாயினும், இன்பம் தரும் இனிய வீடாகக் கருதப் படும். கற்பு என்னும் திண்மையை உடைய மனைவியைப் பெற்றவளே பேறு பெற்றவள். அவளே பிற போகபாக்கியங் களைப் பெற்றவளைவிடச் சிறந்தவளாவாள். கற்புடைய மனைவியைப் பெற்றவன் சமுதாயத்தில் சிங்க ஏறு போலப் பெருமிதநடைநடப்பான். அஃதாவது, கணவன், மனைவியின் நற்குண நற்செயல்களாற்றான் இல்லற இன்பம் துய்த்துச் சமுதாயத்தின் பாராட்டைப் பெறுவான் என்பது. மனைவியினது சிறப்பே கணவனுக்கு மங்கலத்தைத் தரும். இச்சீரிய பண்பு நலம் வாய்ந்த மனைவிக்கு அவளது உள்ள உறுதியே காவலாகும். இத்தகைய மனையாளைப் பெற்றவன் பேறு பெற்றவனாவான்.

### மக்கட் பேறு

சிறந்த மனைவாழ்க்கைக்கு மக்கட்பேறே மிக்க அழகாகும். அம்மக்களைக் கல்வி, கேள்வி, ஒழுக்கம் இவற்றால் சிறக்கச் செய்து சான்றோர் அவையில் முன்வரிசையில் இருக்கச் செய்தலே பெற்றோர் கடமையாகும். தன் மகன் கல்வி,கேள்வி ஒழுக்கங்களாற் சிறந்தவன் என்று பிறரால் புகழப்படும் பொழுது தாய். அவன் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை விடப் பெருமகிழ்ச்சி அடைவாள். மக்களது அறிவுடைமை சமுதாயத் திற்குப் பயன்படும். ஆதலால் அவர்களை அறிவுடையவர் களாகச் செய்யும் பெற்றோர் அம்மக்களுக்கும், சமுதாயத்திற்கும் ஒருங்கே தொண்டு செய்தவராவர். பெற்றோரால் நன்முறையில் வளர்க்கப்படும் மக்கள், 'இவர்களைப் பெற இவர் பெற்றோர் எத்தவத்தைச் செய்தனரோ! என்று பாராட்டத்தகும் முறையில் அறிவுத்துறையில் முன்னணியில் நிற்கவேண்டும். அறிவறிந்த மக்கள் பெற்றோர்க்குச் செய்யும் கடமை இதுவேயாகும்.

குழந்தைகள் வாழ்க்கையை வளப்படுத்தும் விளக்கங்கள் ஆவர். அவர்கள் பெற்றோர் உண்ணும் பொழுது அவ்வுணவுப் பொருள்களைத் தம் சிறு கைகளால் துழாவுவர். அங்ஙனம் துழாவப்பெற்ற உணவுப் பொருள்கள் அன்பு மிகுதியால் அமிழ்தினும் மிக்க சுவையைத் தரும். குழந்தையின் உடம்பைத் தீண்டுவது பெற்றோர் உடம்பிற்கு இன்பத்தைத் தரும்; அவர்தம் சொற்களைக் கேட்பது செவிக்கு இன்பத்தைக் கொடுக்கும். மக்களின் மழலைச் சொற்கள் குழலினிசையை விட-யாழிசையைவிட இனியவையாக இருக்கும். இத்தகைய மக்களைப் பெற்ற வீடு, இன்பம் தரும் இனிய வீடாகும்.

### அன்புடைமை

அன்பு என்பது மனைவி, மக்கள், உற்றார் பெற்றார் முதலிய வர்கள் மீது செல்லும் பிரியம். பின்பு அது படிப்படியாக வளர்ந்து அனைவர்பாலும் செல்லவல்லது. வாழ்வரசியாக இருக்கும் மனைவி மீது கணவனுக்கு அன்பு இல்லையாயின், இல் வாழ்க்கை பழுதுபடும். அவ்வாறே கணவன் மீது மனைவிக்கு அன்பு இல்லையாயின், இல்வாழ்க்கை நரக வாழ்க்கையாகும். ஆதலின் இல்வாழ்க்கைக்கு அன்பு அடிப்படையாகும். அன்பு கணவனையும் மனைவியையும் முதலில் பிணிக்கின்றது; பின்பு குழந்தைகளையும் பிணிக்கின்றது. அன்பு இருக்கும் இடத்தில் இன்பம் குடியிருக்கும். அன்பு என்னும் நற்பண்பை யுடையவர்தந்நலம் விரும்பும் கீழ்மக்களாக இரார். அன்புடையவர் சொல்லாலும் பொருளாலும் - உடம்பாலும் பிறர்க்கு உதவுவர். முதலில் உற்றார் உறவினரிடம் செல்லும் அன்பு, பின்பு அயலாரிடத்தும் விரும்பிச் செல்லும். அப்பொழுது தான் அவனுக்குப் பகைவரும், அயலாரும் இரார். 'இவ்வுலகத்தில் இல்வாழ்க்கையில் நின்று இன்பம் நுகர்ந்து இல்லறத்தால் அடையும் சிறப்பு அன்பின் பயன்' என்று அறிஞர் அறைவர். அறத்திற்கு மட்டும் அன்பு துணையாவதன்று; தீயவனை நல்லவனாக்கவும் அன்பு பயன்படும். மனத்தில் அன்பில்லாத ஒருவர் இல்லறத்தில் இருந்து வாழ்தல், வலிய பாலைநிலத்தில் பட்டுக்கிடக்கும் மரம் தளிர்ப்பது போன்றதாகும். சுருங்கக்கூறின், அன்புடைய உடம்பே உயிருள்ள உடம்பாகும். அன்பு இல்லாத உடம்பு எலும்பும் தோலும் போர்த்த உடம்பாகும்.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் இல்வாழ்க்கையின் உயிர் நாடியாகும். விருந்து - புதுமை, விருந்தினர் - புதியவர்; தாம் முன்னர் அறியாதவர், ஏழைகள், நன்னிலையில் இருந்து கெட்டவர், ஊர் விட்டு ஊர் வந்தவர், இவர் போன்றோர் பிறரும் விருந்தினர். எனப்படுவர். இவர்களை உபசரித்து உண்பித்தல் இல்வாழ்வர் கடமையாகும். இவர்கள் தன் வீட்டுத் திண்ணையில் இருக்க, ஒருவன் தான் மட்டும் உண்ணுதல் அறமாகாது. தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள்தோறும் உபசரிப்பவனது இல் வாழ்க்கை சிறப்புடைமையேயன்றிச் சீர்கெடாது. விருந்தினர் உள்ளம் குளிர உணவளிப்பவன், வேள்வி செய்து பெற வேண்டும் பயன் ஒன்றுமில்லை. பொருளுடையவர் விருந் தோம்பலைப் பாதுகாக்க வேண்டும். பொருளிருந்தும் அறிவில்லா தவர் விருந்தோம்பலைக் கைவிடுவார். அனிச்சப்பூ மோப்பக் குழையும்; அது போல உபசரிப்போர் முகம் வேறுபடின் விருந்தினர் மனவாட்டமடைவர். ஆதலால் இல்வாழ்க்கையில் ஈடுபட்டவர் அகமும் முகமும் மலரத் தம்மால் இயலும் வரையில் விருந்தினரை உபசரித்தல் நல்லது.

**இனியவை கூறல்**

இல்வாழ்வார்க்கு அடுத்து இருக்க வேண்டும் பண்பு இனியவை கூறல் என்பது. கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும், இவ்விருவரும் பிள்ளைகளிடமும் இனிய சொற்களைப் பேசுவராயின், இல்லத்தில் இன்பம் நிறைந் திருக்கும். இப்பண்பு இல்லறத்தாரிடம் வளருமாயின், விருந்தின ரிடமும் பிறரிடமும் இனிய சொற்களையே பேசுவர். பிறர்க்கு இனிமை தராத சொற்கள் காய் போன்றவை; இனிமை தரும் சொற்கள் கனி போன்றவை. நமக்கு காய் வேண்டுமா? கனி வேண்டுமா? கனியை விரும்புவது தான் அறிவுடைமை.அது போல இனிய சொற்களைப் பேசுதல் இல்லறத்தார் கடமையாகும். முகமலர்ச்சியோடு இனிமையாகப் பேசுபவர் பொருளுதவி செய்யாவிடினும், வறியவர் ஆறுதலோடு அவர்களை வாழ்த்திச் செல்வர். 'ஒருவரைக் கண்ட பொழுதே அவரை முகமலர்ச்சியோடு நோக்கி இனிய சொற்களாற் பேசுவதே அறம் என்று அறிஞர் கூறுகின்றனர். எல்லோரிடமும் இன்பத்தை உண்டாக்கும், இனிய சொற்களைப் பேசு வோர்க்குத் துன்பம் தொடராது. எல்லோரிடத்திலும் பணிவும், இனிய சொற்களைச் சொல்லுதலும் உடைய ஒருவர்க்கு வேறு சிறப்புத் தேவையில்லை. பிறர்க்கு நன்மை பயக்கும் சொற் களை மனத்தால் ஆராய்ந்து இனிய முறையில் சொல்லு வோர்க்கு

நன்மையே வரும். பிறர் மனத்தை வருந்தாத இனிய சொல், அதனைச் சொல்வோனுக்கு இம்மையிலும் - மறுமை யிலும் இன்பத்தைத் தரும். இங்ஙனம் இனியவைகூறல் எல்லோர்க்கும் இன்பத்தைத் தந்து தன்னையும் உயர்த்து வதை அறிந்தும், ஒருவன் வன்சொற்களைப் பேசுவது அறிவுடைமையாகாது அன்றோ? எனவே, இல்லறம் நல்லறமாக வேண்டுமாயின் இனிய சொற்கள் இன்றியமையாதவை, சமுதாயத்தில் நல்லவர் என்று பெயர் எடுக்க வேண்டுமாயின், இனிய சொற்கள் தேவைப்படுவனவேயாகும்.

**செய்நன்றியறிதல்**

செய்நன்றியறிதல் என்பது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை, இனியவை கூறி இல்லறம் வழுவாது நடத்துவோர்க்கு இந்நற்பண்பு இருத்தல் வேண்டும். ஆதலின் அறிவிற் சிறந்த திருவள்ளுவர் இனியவை கூறலை அடுத்து இதனைக் கூறியுள்ளார்.

தனக்கு முன்பு ஓர் உதவியும் செய்யாதிருக்க, ஒருவன் பிறருக்கு உதவி செய்கிறான். அவ்வுதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது என்பது வள்ளுவர் கருத்து. அதனால் அவர், "ஒருவனுக்கு தாங்கமுடியாத துன்பம் வந்தபொழுது ஒருவன் செய்த உதவி, தன்னை நோக்கச் சிறியதாய் இருந்தாலும், அக்காலத்தை நோக்க நிலவுலகத்தைவிட மிகப் பெரியதாகும்" என்கிறார்.இவர்க்கு இது செய்தால் நாம் இன்ன பயனைப் பெறலாம் என்பதை எண்ணாதவராய்ச் செய்த உதவியை ஆராயின், அதன் நன்மை கடலினும் பெரிது என்று கூறலாம். தக்க காலத்திற் செய்த உதவி தினையளவாக இருப்பினும், அறிவுடையோர் அதனைப் பனையளவாகக் கொண்டு பாராட்டுவர். துன்பக் காலத்தில் இங்ஙனம் உதவி செய்பவரது நட்பை விடலாகாது; அதனை என்றும் நினைப்பது நல்லோரது கடமை. ஒருவன் செய்த தீமையை செய்த அப்பொழுதே மறப்பது நல்லது. ஆனால் ஒருவன் செய்த நன்மையை மறப்பது அறமாகாது. தனக்கு முன்பு ஒரு முறை நன்மை செய்தவன் பின்பு மிகக் கொடிய செயலைச் செய்தானாயினும், அவன் முன்பு செய் நன்மையை எண்ணிப் பின்பு செய்த தீமையை மறத்தலே பெருந்தன்மை, பசுவின் காம்பை அறுத்தல், மகளிர் கருவினைச் சிதைத்தல் முதலிய கொடுமைகளைச் செய் வோருக்குக் கழுவாய் உண்டு. ஆயின், ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்க்குக் கழுவாய் இல்லை. ஆதலால், ஒருவன் செய்த உதவியை மறவாது போற்றுவதே மாண்புடையது.

**நடுவுநிலைமை**

பகைவர், நண்பர், அயலார் நமக்கு உதவி செய்தவர் என்ற எத்திறத்தாரிடத்தும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமையே நடுவுநிலைமை என்பது, ஒருவன் பகைவன், அயலான், நண்பன், தனக்கு உதவி செய்தவன் என்னும் இவரிடம் நடுவுநிலைமையிலிருந்து தவறாது நடத்தலே அறம் என்று சொல்லலாம். நடுவுநிலைமை உடையவன் அறநெறி தவறி வாழான். ஆதலால் அறநெறியில் நடப்பதால் வரும் புகழ் அவன் இறந்த பின்பும் நிலைத்து நிற்கும். எனவே, தனக்குச் சுயநன்மை இருப்பதாயினும், நடுவுநிலையிலிருந்து தவறுவதால் வரும் செல்வத்தை விரும்பாதிருத்தலே அறமாகும். மனத்தின்கண் நடுவுநிலையிலிருந்து பிறழாமையே சான்றோர்க்கு அழகாகும். முன்னே தான் சமனாக நின்று, பின் தன்னிடம் வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாம் போல நடுவுநிலையிலிருந்து ஒரு பக்கத்தும் சாயாமை கல்வி, கேள்வி, ஒழுக்கங்களாற் சிறந்த பெருமக்கட்கு அழகாகும்.

**அடக்கமுடைமை**

மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் தீயநெறியிற் செல்லாமல் அடங்குதல் உடையவராய் இருத்தல் அடக்க முடைமை எனப்படும். பகைவர் செய்த குற்றத்தை தாம் செய்த குற்றத்தையும் நிறுக்கின்ற நடுவுநிலைமையையுடையவர் அடக்கத்தை

அணிகலனாகக் கொண்டவராவார். அடக்கம் ஒருவனை தேவர் உலகத்து உய்க்கும் ; அடங்காமை நரகத்தில் தள்ளும். அஃதாவது, அடக்கமுடையவன் இன்பத்தைத் துய்ப்பான், அடங்காதவன் துன்பத்தை நுகர்வான் என்பது பொருள், மனம் ஒன்றை எண்ணும்; அவ்வெண்ணம் செயலின் உருவத்தை அடையும். எனவே, செயலுக்கு மனமே முதற் காரணமாக அமைகின்றது. ஆதலால் மன அடக்கம் உடையவன் மொழி அடக்கம் உடையவனாவான்; செயல் அடக்கம் உடையவனும் ஆவான்.

அடக்கமே பெறுதற்கரிய செல்வம், அதனை உறுதிப் பொருளாக கொண்டு அழியாமற் காப்பவனே அறிஞன். அவ்வடக்கம் அறிஞரால் அறியப்பட்டு அவனுக்கு உயர்வைத் தரும். இல்வாழ்க்கை ஆகிய தனி நெறியிலிருந்து வேறுபடாது நின்று அடங்கியவனது உயர்ச்சி, மலையின் உயர்ச்சியை விட மிகப் பெரியதாகும். பெருமிதமின்றி அடங்குதல் எல்லோருக்கும் நல்லது; செல்வர் அடங்கியிருத்தல் மேலும் சிறப்புடையது. ஆமை தன் ஐந்து உறுப்புகளையும் அடக்குதல் போல் ஐம்பொறிகளையும் தீயநெறிகளிற் செல்லாமல் நடத்துபவன் மிகச் சிறந்தவன். ஒருவன் எதனைக் காக்க முடியா விடினும் நாவை மட்டும் காத்தல் சிறந்தது ; அதனைக் காவானாயின் சொற்குற்றத்தால் துன்புறுவான். ஒருவனை யொருவன் தீயினாற் சுட்டபுண் உடம்பில் இருக்கும்; மனத்தில் பதியாது; ஆனால், நாவினால் சுடப்பட்ட வடு மனதிற் பதிந்து விடும்; அது என்றும் ஆறாது. ஆதலால் மனதில் கோபம் தோன்றாமல் ஒவ்வொருவரும் காக்க வேண்டும்.

**ஒழுக்கமுடைமை**

ஒழுக்கம் ஒவ்வொருவருக்கும் சிறப்பினைத் தரும். ஆதலால் அஃது உயிரினும் மேலாகப் பாதுகாக்கப்பட வேண்டுவதாகும். மனிதன் நேர்மையான வாழ்க்கைக்குரிய பாதையிற் செல்லுதலே ஒழுக்கம் என்பது. அப்பாதை யினின்றும் வழுவுவானேயாயின், அவன் கீழ் மகனாகக் கருதப்படுவான். ஆதலின் ஒழுக்கத்தினை எதனாலும் அழிவுபடாமல் பாதுகாக்க வேண்டும். ஒழுக்கம் தவறியவன் இழிபிறப்பாளனாய்க் கருதப்படுவான். பொறாமையுடையவன் வாழ்க்கையில் முன்னேறமாட்டான்; அவனைப் போலவே ஒழுக்கமில்லாதவனும் சமுதாயத்தில் மதிப்பைப் பெற மாட்டான். ஒழுக்கமுடைமைக்கு மனவுறுதி வேண்டும்.

மனவுறுதி இல்லாதார் ஒழுக்கமுடையவராய் இருத்தல் அரிதாகும். நல்ல ஒழுக்கம் அறத்திற்குக் காரணமாய் அமைந்து இருமையிலும் இன்பம் பயக்கும்: தீய ஒழுக்கம் பாவத்திற்கு காரணமாய் இருமையிலும் துன்பம் பயக்கும். ஒழுக்கமுடையவர் மறந்தும் தீய சொற்களைத் தம் வாயாற் சொல்லார். கல்வி, கேள்வி, ஒழுக்கங்களாற் சிறந்த பெருமக்களது ஒழுக்க நெறியைப் பின்பற்றி நடவாதவர். நூல்களைக் கற்றவராயினும் அறிவற்றவர் என்றே அறிஞரால் கருதப்படுவர்.

**பிறனில் விழையாமை**

காம மயக்கத்தால் பிறனது மனையாளை விரும்பாமையே பிறனில் விழையாமை என்பது. ஒழுக்கமுடையவரே இங்ஙனம் விழையார். இல்வாழ்க்கையில் ஈடுபட்ட ஒருவன் நண்பர் பலரைப் பெற்றிருப்பான். அவன் அவர்தம் ஒழுக்கத்தை ஐயுறாமல் தன் வீட்டில் அவர்களைப் பழக விடுவான். அத்தகைய நிலையில் அவனது இல்லாளை விரும்பும் நண்பர் தீநெறிப்பட்டவரே ஆவர். அத்தகையோர் இறந்தாரேயாவர் என்பது வள்ளுவர் கருத்து. எத்துணைப் பெருமையுடையவராயினும் பிறன் மனைவியை விரும்புவோர் அற்பராய்க் கருதப்படுவர்; இந்திரனைப் போல எல்லாப் பெருமைகளையும் இழந்து சிறுமை அடைவர் என்றும் நிலைநிற்கும் குடிப்பழியினையும் அடைவர், பகை பாவம், அச்சம், குடிப்பழி என்னும் நான்கு குற்றங்களும் அவரை விட்டு அகலா. பிறன் மனைவியை உள்ளத்தாலும் நினையாதவனே பேராண்மையுடைய ஆண்மகன். அவனே அறனுடையவன்; ஒழுக்கமும் உடையவன் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

### பொறையுடைமை

ஏதேனும் ஒரு காரணம் பற்றியோ அல்லது அறியாமை யாலோ ஒருவன் தனக்கு தீமை செய்த போது, தானும் அவனுக்குத் தீமை செய்யாது பொறுத்திருத்தல் பொறை யுடைமை எனப்படும். நெறியில்லாதவற்றைச் செய்த வனையும் பொறுக்க வேண்டுவதே பெருந்தன்மை. தன்னைத் தோண்டுபவரையும் நிலம் தாங்கி நிற்கிறது. அதுபோலத் தன்னை அவமதிப்பவரைப் பொறுத்தல் மிகச் சிறந்த அறமாகும். ஒருவன் செய்த பிழையைப் பொறுத்தல் நல்லது. ஆனால் அப்பிழை செய்யப்பட்டபொழுதே அதனை மறந்து விடுதல் அப்பொறுமையிலும் நல்லதாகும். அறிவின்மையால் தீமை செய்பவரைப் பொறுத்தல் வன்மையுள் வன்மை' என்று சொல்லலாம். பொறுமையைக் கைவிடாதவன் 'சான்றோன் என்று போற்றப்படுவான். பிறர் தனக்குச் செய்யும் தவறு களைப் பொறுப்பவனை அறிவுடையோர் பொன்போல் பாராட்டுவர். நமக்கு தீங்கு செய்தவனைத் தண்டித்தவர் ஒருநாளை இன்பமே அடைவர். ஆயின், தீங்கு செய்தவனைப் பொறுத்தவர் உலகம் உள்ளளவும் புகழ் பெறுவர். மனச் செருக்கால் தன்னிடம் தீயவற்றைச் செய்தாரைத் தான் தனது பொறுமையால் வெல்லுதலே சிறப்பாகும். நன்னெறியற்ற தீயவர் சொற்களைப் வெறுப்பவர், இல்வாழ்க்கையில் இருப்பினும், முற்றும் துறந்த முனிவரைப் போன்ற தூய்மை உடையவராவர்.

### பொறாமைப் படாதிருத்தல்

பொறாமை என்பது மனிதனது உயர்ச்சியைக் கெடுக்கும்; ஊக்கத்தைச் சிதைக்கும்; உழைப்பைப் பாதிக்கும். இல்லறத் தான் இத்தீய குணத்தால் பீடிக்கப்படுவானாயின், அவனுடைய உயர்ச்சி, ஊக்கம், உழைப்பு என்னும் மூன்றும் கெட்டுவிடும். இவை காரணமாக அடக்கம், ஒழுக்கம் முதலிய நற்பண்புகள் அனைத்தும் கெட நேரிடும்; இல்லறம் நல்லறமாகத் திகழாது. ஆதலின் பொறாமை என்னும் தீய பண்புக்கு ஆட்படாமல் ஒவ்வொரு இல்லறத்தானும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும். ஒருவனது ஆக்கத்தினையும் முற் போக்கினையும் கண்டு தானும் அவ்வாறு ஆக்கம் பெறுதல் வேண்டும். முற்போக்கு அடைதல் வேண்டும் என்று எண்ணுபவன் ஊக்கம் பெறுவான்; ஊக்கத்திற்கு ஏற்ப உழைப்பான்; அதனால் ஆக்கம் பெறுவான். இவற்றிற்கு மாறாகப் பொறாமைப் படுபவன் தன்னைத்தானே அழித்துக் கொள்பவனாவான்; அதனால் தானும் கெடுவதின்றித் தன்னைச் சார்ந்தாரையும் கெடச் செய்வான். பொறாமைப் பேயால் பற்றிக் கொள்ளப்பட்ட ஒருவன் இம்மையில் அமைதியை இழப்பான்; அதனால் வாழ்வையும் இழப்பான். பொறாமைப்பட்டு உலகில் பெருமையடைந்தவன் ஒருவனும் இல்லை; அவ்வாறே பொறாமைப்படாததால் சிறுமை யடைந்த வனும் இல்லை. எக்காரணம் கொண்டேனும் பிறரது ஆக்கம் கண்டு பொறாமைப்படுதல் தீயது.

### வெஃகாமை

பிறர்க்கு உரிய பொருளை வவ்வக் கருதாமையே 'வெஃகாமை' எனப்படும். பிறரது பொருளைக் கண் அது தன்னிடம் இல்லையே என்று பொறாமைப்படுதல் கண்டவுடன் தவறு; அதனை அபகரித்துக் கொள்ள கருதுதல் அதனினும் தவறு. இச்செயல் ஒருவனது குடியைக் கெடுப்பதோடு, பல் குற்றங்களுக்கும் அவனை ஆட்படுத்தி விடும். அறநெறியிற் செல்பவர் பிறர் பொருளை வவ்வி, அதனால் வரும் நிலையற்ற இன்பத்தை விரும்பமாட்டார்; தம் வறுமையைப் போக்கப் பிறர்பொருளை விரும்பார். பல நூல்களைக் கற்றும் பிறர் பொருளை அபகரிக்க எண்ணுவோர் கற்றறி மூடரேயாவர். அருளாகிய அறத்தை விரும்பி, அதற்கு வழியாகிய இல்லறத் தில் இருப்பவன், பிறர் பொருளை வவ்விக் குற்றப்படுதல் தவறு. பிறர் பொருளை வவ்வி அதனால் வரும் ஆக்கத்தை விரும்பின், அவ்வாக்கம் நற்பயன் விளைவியாது. வவ்வியோன் மனச் சான்றே அவன் உள்ளத்தைச் சுட்டுக் கொண்டிருக்கும். பிறர் பொருளை வவ்வ நினையாதவனே ஆக்கம் பெறுவான்.

**புறங்கூறாமை**

ஒருவன் இல்லாத இடத்தில் அவனை இகழ்ந்து பேசா திருத்தலே 'புறங்கூறாமை' எனப்படும். ஒருவன் அறம் என்று சொல்லப்படுவதைச் செய்யாமல் தீமை தரத்தக்க செயல் களைச் செய்வானாயினும், பிறனைப் புறங்கூறாமல் இருப்பின், உலகத்தாரால் பாராட்டப்படுவான். அறம் என்பது ஒன்றில்லை என்று வாதித்து, அதன் மேல் பாவங்களைச் செய்வதை விட, ஒருவனை இல்லாத இடத்தில் இகழ்ந்துரைத்து நேரிற் கண்டவுடன் பொய்நட்புக் கொள்ளுதல் கொடிய தீமை யாகும். இவ்வாறு செய்வதைவிட ஒருவன் இறந்துபடுதல் நல்லது. ஒருவன் எதிரில் கண்ணோட்டம் இல்லாமல் அவனைக் கடிந்து பேசலாம். ஆயின், அவன் இல்லாதபோது அவனைப் பற்றித் தவறான சொற்களைச் சொல்லாதிருத்தல் நல்லது. புறங்கூறுவோன் அறத்தை அவமதிப்பவனாவான், கூடி மகிழும்படி இனிய சொற்களைச் சொல்லி அயலாரோடு நட்புக் கொள்ள அறியாதவரே புறங்கூறித் தம் சுற்றத்தாரையும் பிரியும்படி செய்வர். தம் உற்றார் உறவினரது குற்றத்தை அவர் இல்லாத பொழுது தூற்றும் இயல்புடையார். பிறரிடம் என்னதான் செய்ய செய்யார்! புறங்கூறுவோன் நிலத்திற்குச் சுமை போன்றவன். பிறரைப் புறங்கூறுவோர், புறங்கூறலாகிய தமது குற்றத்தை எண்ணிப் பார்ப்பின், புறங்கூறார். இத்தகைய அறிவு பெறுவதே ஒவ்வொருவரது கடமையாகும்.

**பயனில சொல்லாமை**

தமக்கும் பிறர்க்கும் அறம், பொருள், இன்பம் ஆகிய பயன்களுள் ஒன்றும் தராத சொற்களைச் சொல்லாதிருத்தலே பயனில சொல்லாமை' எனப்படும். பொய், கோள் சொல்லுதல், கடுஞ்சொல் கூறல், பயனில சொல்லுதல் என்பன வாக்கின் கண் நிகழும் குற்றங்கள். இவற்றுள் கோள்சொல்லுதல் புறங் கூறாமையால் விலக்கப்பட்டது; கடுஞ்சொல் இனியவை கூறலால் விலக்கப்பட்டது. பொய் ஆங்காங்குக் கடியப் பட்டது.எனவே, பயனில சொல் இங்கு வற்புறுத்தப்படுகின்றது.

அறிவுடையவர் பலரும் கேட்டு வெறுக்கும்படி பயனற்ற சொற்களைச் சொல்லுபவன் எல்லோராலும் இகழப்படுவான். பயனற்ற பொருள்களை விரித்துரைக்கும் ஒருவனை நெறியற்றவன் என்று உலகம் இகழும். ஒருவன் பண்பற்ற சொற்களைப் பலரிடைச் சொல்லுவானாயின், அப்பலரும் அவன் மீது வைத்திருந்த மதிப்பை விட்டுவிடுவர். பயனில்லாத சொற் களைப் பலகாலும் சொல்லுபவனை 'மகன்' என்று சொல்ல லாகாது; மக்களுள் பதர் என்று சொல்ல வேண்டும். சான்றோ ராயினும் அறத்தொடு படாத சொற்களைச் சொல்லுதல் குற்ற மேயாகும். சிறந்த அறிவும் ஒழுக்கமும் உடைய பெருமக்கள் பயனற்ற சொற்களைச் சொல்லார். சொற்களில் கேட்பாருக்குப் பயன்தரத்தகும் சொற்களைப் பேசவேண்டும்; பயன் தராத சொற்களை விட்டொழித்தல் வேண்டும்.

**தீவினை அச்சம்**

தீய காரியங்களைச் செய்வதற்கு அஞ்சுதலே 'தீவினை யச்சம்' எனப்படும். இதனால் உடம்பால் நிகழும் தீச்செயல்கள் தனக்கு இன்பத்தைத் தரும் தரும் என்று எண்ணி ஒருவன் செய்யும் தீச்செயல்கள் அவனுக்குத் துன்பம் பயத்தலையே காண் கிறோம். ஆதலால் அவற்றைச் செய்ய ஒவ்வொருவரும் அஞ்சுதல் வேண்டும். தம் பகைவரிடத்தும் தீய செயல்களைச் செய்யாதிருத்தலே சிறந்த அறிவு என்று அறிஞர் அறைவர். பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை எண்ணுகின்றவனுக்கு அறக் கடவுள் கேடு செய்யும். தன் வறுமை நீங்குவதற்காகப் பிறர்க்குத் தீமை செய்யும் ஒருவனை பற்றிக் கொள்ளுமே தவிர, விட்டு நீங்காது பிறர்க்குச் செய்யும் கேடுகள் பின் வந்து நம்மை வருத்தும். தீவினையாகிய பகை மிகக் கொடியது. தன் நல்வாழ்வை விரும்பும் ஒருவன் பிறர்க்குத் தீமை செய்வதிலிருந்து விலகுதல் வேண்டும்.

இவ்வதிகாரம் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. பிறர் வாழ்வதைப்

பொறாது சிலர் அவர்க்குப் பலகேடுகளைச் செய்தலைக் காண்கிறோம். இங்ஙனம் கேடு செய்பவர் என்ன பயனை அடைகின்றனர்? நல்லறிவுடைய பலராலும் இழித் துரைக்கப் படுகின்றனர்; அதுகாறும் தாம் பெற்றிருந்த மதிப்பை இழந்து, மானம் இழந்து வெட்கப்படுகின்றனர். நாம் இதனைச் சமுதாயத்தில் கண்கூடாகக் காண்கின்றோம். மனிதன் எதை விதைக்கிறானோ, அதையே அறுவடை செய்கிறான். அதுபோலப் பிறர்க்குத் தீமை செய்பவன் தன்னை அறியாமல் தனக்கே தீமை செய்து கொள்கிறான். பிறன் கேடு தன் கேடு ஆகிறது. இந்த உண்மையை உணர்ந்து இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் பிறர்க்குத் தீமை செய்தலை மனத்தாலும் நினைத்தல் ஆகாது.

### ஒப்புரவு அறிதல்

உலகநடையினை அறிந்து - உயர்ந்தோர் செல்லும் நெறியினை அறிந்து-தாமும் அந்நெறியிற் செல்லுதலே ஒப்புரவு அறிதல் எனப்படும். அஃதாவது, பயன் கருதாது பொது நலத்திற்குரியவற்றைச் செய்தலே ஒப்புரவறிதல் எனப்படும். வள்ளுவர் இதுவரையில் மனம், மொழி, மெய்களால் விலக்க வேண்டுவனவற்றைக் கூறியுள்ளார். இங்குச் செய்யத் தருவனவற்றைக் கூறுகின்றார். மேகங்கள் உலக உயிர்களுக்கு நீரை உதவுகின்றன. ஆயின், உயிர்கள் அம்மேகங்களுக்கு ஏதேனும் கைம்மாறு செய்கின்றனவா? இல்லை, அங்ஙனம் கைம்மாறு செய்யாதிருப்பினும், மேகங்கள் தம் கடமையைச் செய்கின்றன. அவ்வாறே சமுதாய நலங்களுள், எவ்விதப் பயனையும் எதிர்பாராமல் இல்வாழ்வாரின் சில கடமைகளைச் செய்தல் வேண்டும்.

இங்ஙனம் சான்றோர் செய்த நல்லவற்றைச் செய்பவன் உயிரோடு வாழ்பவனாவன்; இங்ஙனம் செய்யாதவன் இறந்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான். ஊருணியில் உள்ள நீர் ஊர் மக்கள் எல்லோருக்கும் பயன்படுகிறது. அது போல உலக நடை அறிந்த அறிஞனது செல்வம் பலர்க்கும் பயன்படுதல் வேண்டும். ஊர் நடுவில் இனிய பழங்களைக் கொண்ட மரம் இருப்பின், அப்பழங்கள் ஊர் மக்களுக்குப் பயன்படும். அதுபோல விரிந்த மனப்போக்குடையவனது செல்வம் ஊர் மக்கள் நலத்திற்குப் பயன்படும். அச் செல்வம் தன்னை உடையானது பரந்த நோக்கால் ஊராருக்குப் பயன்படும்; மருத்துவமனையாகவும், படிப்பகமாகவும், பள்ளி யாகவும், உணவி விடுதியாகவும், பிறவாறாகவும் உரு வெடுத்துப் பயன்தரும். இங்ஙனம் சமுதாய நலத்திற்குச் செலவிடுபவனே 'ஒப்புரவாளன்' எனப்படுவான். பொது நலத்திற்குத் தாம் செய்யத் தருவனவற்றை அறிந்த அறிவு டையார், தமது செல்வம் சுருங்கிய காலத்திலும் பொது நன்மைக் குரியவற்றைச் செய்ய தயங்கார். பொதுநலத் தொண்டால் ஒருவனது செல்வம் அழிந்து விடும் என்றாலும், அவன் துணிந்து பொதுநலத் தொண்டு செய்வதே வரவேற்கத் தக்கது என்பது வள்ளுவர் கருத்து.

இல்லறத்தான் ஒருவன் தன் உழைப்பால் பெரும் செல்வத்தை ஈட்டுகிறான். அவன் அதனைத் தன் குடும்ப அளவில் மட்டும் வைத்திருப்பின், 'சுயநலப் பேயன்' என்று உலகத்தாரால் இகழப்படுவான். அவன் ஈட்டும் பொருள் சமுதாயத்திலிருந்து வரும் செல்வமேயாகும். ஆதலால் தன் வாழ்வுக்குத் தேவையானதை வைத்துக் கொண்டு எஞ்சிய பொருளைச் சமுதாய நலனுக்கே செலவிடுதல் நேர்மை. இச்சீரிய நிலையங்களை ஏற்படுத்தி, உலக நாடுகளில் எல்லாம் அற முறையினை அறிந்தே, அமெரிக்க கோடீசுவரர்கள் அறி செயல்களைச் செய்து வருகின்றனர். இத்தகுதி உடைய செயலால் அவர்தம் புகழுடம்பு என்றும் நிலைத்திருக்க வழி உண்டாகிறது. நம் நாட்டிலும் பச்சையப்ப முதலியார், இராசா அண்ணாமலைச் செட்டியார், டாக்டர் அழகப்பச் செட்டியார், மதுரைக் கருமுத்து. தியாகராசச் செட்டியார் போன்ற பெரு மக்கள் சமுதாயத்திற்குப் பயன்பெறும் வகையில் பல அறங் களைச் செய்துள்ளனர். செல்வத்தில் இவரினும் குறைந்தவர் தத்தம் வசதிக்கேற்ற முறையில் சமுதாயத்திற்குப் பயன்படுதல் வேண்டும். இஃது ஒவ்வொருவர் இல்வாழ்வரது சிறந்த கடமை யாகும்.

**ஈகை**

நம்மிடம் ஏற்ற வறியவருக்கு 'இல்லை' என்று சொல்லாமற் கொடுத்தலே 'ஈகை' என்று சொல்லப்படும். ஒரு பொருளும் இல்லாதவனுக்கு அவர் வேண்டியது ஒன்றைக் கொடுப்பதே உண்மையில் 'ஈகை எனப்படும். பிறவகைக் கொடைகள் பயன் கருதிச் செய்வனவாகும். பிறரிடம் கைநீட்டி ஒன்றைப் பெறுதல் மேலுலகத்திற்கு நல்லது என்று கூறுதல் தீது; வறிய வர்க்குக் கொடுப்பவர்க்கு மேல் உலகம் இல்லை என்று சொல்லினும், ஏழைகட்கு உதவுவதே நல்லது. ஒருவன் இல்லை என்று நம்மிடம் வந்து இரக்கும் போது, இரக்கும் போது, நாமும் 'இல்லை' என்று சொல்லுதல் தவறு; அவனுக்கு உதவுதலே அறம். ஏழை களது மிக்க பசியைத் தீர்ப்பது அறம். அங்ஙனம் செய்யின், தனது மேல் உலக வாழ்க்கை என்னும் பயிர்க்கு ஒருவன் வித்திட்டது போலாகும்.

ஏழைகட்கு வழங்கி அவர்கள் மகிழ்வதைக் கண்டு தாம் மகிழ்தலே செல்வர் கடமையாகும். இங்ஙனம் செய்யாதவன் பொருளை வைத்து இழக்கும் வன்கண்ணன் ஆவான். வறியவர்க்குக் கொடாமல் தானே தனித்து உண்ணுதல், பிறரிடம் சென்று இரத்தலினும் இழிவானது. சாவு போன்ற கொடியது ஒன்றில்லை; வறியவர்க்கு ஒன்று கொடுக்க முடியாத போது சாதல் இனிமை பயக்கும். அஃதாவது, இறப்பவனுக்குக் கொடுக்க முடியாத நிலை ஒருவனுக்கு ஏற்படுமாயின், அந் நிலையில் அவன் வாழ்தலை விட இறத்தலே நல்லது. ஏழை எளியவர்க்கு உதவும் மனப்பான்மை இல்லாதவன் சமுதா யத்தில் இருப்பதை விட இறந்துபடுதல் நல்லது என்பது வள்ளுவர் கருத்து.

**புகழ்**

வறியவர்க்கு வழங்கலும் அதனால் புகழ் உண்டாக வாழ்தலும் வாழ்க்கை' எனப்படும். அப்புகழைத் தவிர மனிதன் பெறத்தக்கது வேறொன்றுமில்லை. வறுமையால் இறப் பார்க்குக் கொடுப்பதால் வரும் புகழே உலகத்தில் நிலைத்து நிற்பது. அத்தகையவன் அனைவராலும் வரவேற்கப்படுவான். ஈகையாற் புகழ் எய்தாதவனை மக்கள் இழித்துப் பேசுவர். ஈகையால் வரும் புகழ் பெறாதவரை, அவர் மறைந்த பிறகும் உலகத்தார் இகழ்ந்து பேசுவர். ஆதலால் தம்மிடம் வசை உண்டாகாமல் வாழ்பவரே உயிர் வாழ்பவராவர்.

**இல்வாழ்க்கை**

இங்ஙனம் வாழ்க்கைத் துணைநலம் முதலாகப் புகழ் ஈறாக உள்ள அறநெறிகளிற் பிழையாமல் இல்வாழ்க்கை நடத்து பவரே, இல்வாழ்க்கையால் வரும் பயனை அடைபவராவர். மனைவியோடு இல்வாழ்க்கையில் இருப்பவனே சுற்றத்தாரால் துறக்கப்பட்டவருக்கும். வறியவர்க்கும், நாதியற்றவர்க்கும் துணையாவான். இம்மூவகையாரையும் காத்தல் அவன் கடமையாகின்றது. குடியில் தோன்றி இறந்த முன்னோரை நினைவு கூர்தல் இல்லறத்தானது கடமை: தனக்கு வாழ்வளித்த இறைவனைப் போற்றுதல் இல்லறத்தான் கடமை. தன்னினும் எளியராய்த் தன் உதவி தேடிவரும் உறவினர்க்கு உதவலும் அவன் கடமையாகும். இல்லாழ்வான் இக்கடமைகளிலிருந்து தவறலாகாது. இவற்றிற்கு அன்பு அடிப்படையாகும். அன்பு இல்வாழ்க்கையின் பண்பாகும்; அறவுணர்ச்சி இல் வாழ்க்கையின் பயனாகும். இவற்றை உணர்ந்து செயலாற்று வோர் இல்லற இன்பத்தைக் குறைவின்றி அடைவர். இத்தகைய இல்வாழ்க்கை தவவாழ்விலும் அடிப்படை.

சமுதாய வாழ்விற்கு இல்வாழ்க்கையே அடிப்படை. இதுவே அறநூல்களால் சிறப்பித்துச் சொல்லப்படுவது. மேற்சொன்ன நெறிகளில் தவறாது இல்லறத்தில் வாழ்பவன் இந்நிலவுலகில் வாழ்பவனேயாயினும். மேல் உலகில் வாழும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படுவான்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும். (குறள், 50)

## துணைநூற்பட்டியல்


1. திருக்குறள் உரை

முத்தமிழறிஞர் மு.கருணாநிதி

2. திருக்குறள் உரை

முனைவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள்

3. திருக்குறள் உரை

மு.வரதராசனார்

4. திருக்குறள் உரை

வ.உ.சிதம்பரனார்

5. திருக்குறள் உரை

கவிஞர் வைரமுத்து


© 2026 தகைசால் தமிழறிஞர் அரிமா முனைவர் அய்யர். ச.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.
Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 100–105
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# ஐங்குறுநூறு பகரும் குறிஞ்சி The Kurinji Landscape as Depicted in Ainkurunuru

*The Kurinji Landscape as Depicted in Ainkurunuru*

**முனைவர்.ஆனந்தி ரா.***

தமிழாய்வுத்துறை, உதவிப்பேராசிரியர், தனலட்சுமி சீனிவாசன், இன்ஸ்டிடியூட் ஆஃப் ரிசர்ச் அண்ட் டெக்னாலஜி, (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்), பெரம்பலூர் - 621 212, தமிழ்நாடு, இந்தியா, *9585745865, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.ஆனந்தி ரா. — anandhiveera09@gmail.com



| Received / பெறப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது | Published online / இணையத்தில் வெளியீடு |
|---|---|---|---|
| 28 September 2026 | 29 September 2026 | 1 October 2026 | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00022 |



## ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியப் பெட்டகத்தில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களில் 'ஐங்குறுநூறு' சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இந்நூல் ஐந்திணைகளுக்கும் தனித்தனியே நூறு பாடல்கள் வீதம் ஐந்நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. புலவர் கபிலரால் பாடப்பட்ட குறிஞ்சித் திணைப் பாடல்களை மையமாகக் கொண்டு, குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் முறைகளையும், அகத்திணைக் கோட்பாடுகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது. குறிஞ்சி நிலத்தின் புவியியல் சூழல், முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் மற்றும் மக்களின் பொருளாதார, காதல் வாழ்க்கையை இந்நூலின் சான்றுகளாக அமைகின்றன. மேலும், பழந்தமிழ் இலக்கிய நூல்களின் சான்றுகளுடன் ஒப்பிடப்பட்டு, குறிஞ்சி நிலத்தின் பண்பாட்டுச் செழுமையை எடுத்துரைக்கின்றது.

**Keywords / திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம்; ஐங்குறுநூறு; குறிஞ்சித் திணை; கபிலர்; அகவாழ்வு; முப்பொருள்

## Abstract

Among the Ettuthogai (The Eight Anthologies)—which hold a unique place in the corpus of Sangam literature—the Ainkurunuru occupies a distinguished position. This work comprises five hundred poems, with one hundred dedicated to each of the five Thinai (landscape-based poetic modes). Focusing on the poems of the Kurinji landscape composed by the poet Kapilar, this article examines the lifestyles of the Kurinji people and the principles of Akathinai (the poetics of inner life). It draws upon evidence from the text regarding the geographical setting of the Kurinji region—including its Muthal-porul (primary elements of time and space), Karu-porul (characteristic features of the landscape), and Uri-porul (the specific emotional theme)—as well as the economic and romantic lives of its inhabitants. Furthermore, by drawing comparisons with other ancient Tamil literary works, the article highlights the cultural richness of the Kurinji landscape.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ரா., மு. (2026). ஐங்குறுநூறு பகரும் குறிஞ்சி The Kurinji Landscape as Depicted in Ainkurunuru. KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 100–105. https://ngmtamil.in/journal-article/%e0%ae%90%e0%ae%99%e0%af%8d%e0%ae%95%e0%af%81%e0%ae%b1%e0

%af%81%e0%ae%a8%e0%af%82%e0%ae%b1%e0%af%81-
%e0%ae%aa%e0%ae%95%e0%ae%b0%e0%af%81%e0%ae%ae%e0%af%8d-
%e0%ae%95%e0%af%81%e0%ae%b1%e0%ae%bf%e0%ae%9e/

## முன்னுரை

உலகில் நிலம், நீர், தீ, வளி, வான்வெளி, ஆகிய ஐம்பூதங்களால் ஆனது. இயற்கை பல்வேறு வடிவங்களாய் புவியில் பரிணமித்துள்ளது. மலை, காடு, ஆறு, சமவெளி, கடல், மணல்வெளி என்றெல்லாம் பரந்து விரிந்து அமைந்துள்ளது. பழந்தமிழ் இயற்கையின் புரிதலோடு வாழ்வினை மேற்கொண்டனர். இடங்களுக்கு ஏற்ப நிலங்களைத் தமிழர் பெயரிட்டு அழைத்தனர்.

சங்க இலக்கியம் தமிழர்களின் வாழ்வியலையும், அக மற்றும் புற ஒழுக்கங்களையும் படம் பிடித்துக் காட்டும் பொக்கி~மாகும். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான ஐங்குறுநூறு, ஐந்திணைகளுக்குமான அகத்திணைக் கோட்பாடுகளைத் தனித்தனிப் புலவர்கள் மூலம் நூறு பாடல்கள் வீதம் ஐந்நூறு பாடல்களில் அழகுறப் பேசுகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளில், மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சித் திணை மக்களின் வாழ்க்கை முறையை ஐங்குறுநூறு எவ்வாறு சித்திரிக்கிறது என்பதை இந்நூலின் வாயிலாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## உலகத்தோற்றம்

உலகத்தோற்றம் பற்றியச் சிந்தனைகள் பழங்காலம் முதல் இருந்து வருகின்றது. உலகம், அவனி, ஞாலம் என்றெல்லாம் தமிழர் உலகத்தை குறித்தனர். திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பெரியபுராணம் போன்ற தமிழ் இலக்கியங்களின் தொடக்கம் 'உலகு' என்பதைக் கொண்டு அமைகின்றது. தமிழரின் பார்வை உலகபார்வை மனித இனத்தை நோக்கியப் பார்வை என்பது இதன்வழி அறியலாகின்றது. விசாலப் பார்வையால் மனித இனத்தை ஒரு சேரப்பார்த்தவர்கள் தமிழ்ப்புலவர்கள் என்பது குறிப்பிடப்படுகின்றது. இத்தகு உலகம் பற்றிய சிந்தனை பழங்காலம் முதல் தமிழகத்தில் இருந்த நிலையை,

**"நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"**

- தொல்காப்பியம், பொருளதிகாரம் - நூற்பா எண்-635

என்ற தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**"மண்திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரும் வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம் பெரும் பூதத்து இயற்கை"**

- ஞா.மாணிக்கவாசகன்;, புறநானூறு - பாடல் எண்-2

என்னும் புறநானூற்றுப் பாடலும் உலகத்தின் தன்மையினை எடுத்துரைக்கிறது. அணு செறிந்த நிலையில் உண்டாகிய விசும்பும் கிளர்ந்தெழும் வளி வளியிலிருந்து தோன்றும் தீ வழியாகத் தோன்றிய நிலையினைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழியாக அறியலாம்.

**பழந்தமிழரின் திணை ஒழுக்கம்**

உலகம் தோன்றியப் பிறகு உயிர்களின் தொன்மை இனம் தமிழ் இனம் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டுள்ளது. தாவரங்கள் தன்னுடைய இனமாகவும், பிறஉயிர்களை தனக்கு இணையாகக் கருதி செயல்படும். இயற்கை எதிராக ஒரு போதும் செயல்படாத பழந்தமிழரின் வாழ்வினை இலக்கியத்தின் வழியாக அறியலாம்.

**“வேனல் அம் கிழவனோடு வெம்கதிர் வேந்தன்**

**தான் நலம் திருகத் தன்மயில் குன்றி**

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**

**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”**

- சிலப்பதிகாரம், காடுகாண் காதை (பாடல் எண்-62)

என்ற சிலப்பதிகார வரிகளில் வாயிலாகக் குறிஞ்சியும் முல்லையும் தங்களுடைய இயல்புகளிலிருந்து மாறி மணற் பகுதிகளாயின அதனைப் பாலை என்றழைத்தனர். இவ்வாறாகப் பழந்தமிழர் திணைப் பாகுபாட்டை அமைந்து வாழ்ந்தனர். திணை என்றச் சொல்லிற்கு இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி என்று பொருள் தருகிறது. திரண்ட மக்கள் பல வகையாகத் தமக்குள் பழகித் திண்மைப்பட்டு நின்றக் கூட்டம் திணையாம்.

**குறிஞ்சி பணியியல் சூழல் மற்றும் பின்னணி**

தமிழர் ஒன்றிற்கு பெயரிடும்போது இடு குறியாகவும் காரணத்தின் அடிப்படையிலும் பெயரிட்டனர். காரணப் பெயர்கள் பொருள் பொதிந்த நிலையில் காணப்படுவது சிறப்புக்குரியதாகும். அந்த வகையில் திணைகளுக்கான பெயர்களும் காரணப்பெயர்களாகவே அமைந்துள்ளன.

**“குறுகுதல் குறிஞ்சி எனவும், மருவுதல் மருதம்**

**எனவும், முல்லுதல் முல்லை எனவும், பற்றுதல்**

**பாலை எனவும் நெய்வது நெய்தல் எனவும் கூறுவர்”**

- இராம. குருநாதன் குறிஞ்சி காட்டும் சமுதாயம், பா.15

இராம குருநாதன் அவர்கள், “தழுவுதல் தழிஞ்சி எனவும், நெரிப்பது நெரிஞ்சி எனவும் ஆவது போலக் குறுகுதல் குறிஞ்சியாகும் குறு என்பது குறுகல் எனப்படும். நானிலத்தின்; குறுகுதலான நிலம் மலையும் மலைச்சார்ந்த நிலமும் என்பர். குறிஞ்சி நிலமான மலைச்சார்ந்த இடத்தில் உரிப்பொருள் புணர்தல் ஆகும். தலைவன் தலைவி அன்பின் நிலைகளைக் கொண்டும் குறிஞ்சி நிலத்திற்கு பெயர்க்காரணம் குறிப்பிடுவார்.” **- இராம. குருநாதன் குறிஞ்சி காட்டும் சமுதாயம், ப.16-17** என்று கூறுகின்;றார்.

முதன் முதலில் காதல் மனத்திற்கு அடையாளமாகக் குறிஞ்சிப் பூவைச் சூடியதால் அக்களவு மன ஒழுக்கத்திற்கு ‘குறிஞ்சித்திணை’ எனப் பெயர் வைத்தனர்.

மலையும் மலை சார்ந்த இடம் குறிஞ்சி நிலம். இந்நிலத்தின் கடவுளாக முருகப்பெருமானையும் மக்களின் தலைவனாக வெற்பன், சிலம்புடன் கூடிய தலைவனையும் குறிப்பர். ஐங்குறுநூற்றில் குறிஞ்சித் திணைப் பாடல்களைப் பாடியவர் குறிஞ்சிப்பாட்டுப் புகழ் கபிலர் ஆவார். குறிஞ்சி நிலத்தின் இயற்கை அழகு, அருவிகள், செங்குத்தான மலைகள், சுனைகள், விலங்கினங்கள் மற்றும் அங்குள்ள தாவர வளம் ஆகியவை கபிலரின் பாடல்களில் தத்ரூபமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**முப்பொருள் (முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்)**

தொல்காப்பியர் இலக்கணப்படி அகத்திணைகளுக்குரிய முப்பொருட்கள் குறிஞ்சித் திணைக்கு எவ்வாறு ஐங்குறுநூற்றில் பொருந்தி வருகின்றன என்பதை

அறிவது அவசியமாகும்.

**1. முதற்பொருள்:** குறிஞ்சி நிலத்திற்குரிய காலம் கார்காலமும் குளிர்காலமும் ஆகும்; இடம் மலையும் மலை சார்ந்த பகுதியுமாகும்.

**2. கருப்பொருள்:**

- தெய்வம்: முருகன் (சேயோன்).
- உணவு: மலைநெல், தினை, தேன், கிழங்கு.
- விலங்கு: புலி, யானை, கரடி, சிங்கம்.
- பூ: குறிஞ்சி மலர், காந்தள்.

**3. உரிப்பொருள்:** குறிஞ்சி நிலத்திற்குரிய உரிப்பொருள் புணர்தலும் புணர்நிமித்தமும் (தலைவனும் தலைவியும் சந்தித்து அன்பு பூணுதல்) ஆகும். ஐங்குறுநூற்றின் குறிஞ்சிப் பாடல்கள் அனைத்தும் இந்த உரிப்பொருளை மையமாகக் கொண்டே பின்னப்பட்டுள்ளன.

**கபிலர்**

தமிழ்நாட்டில் கபிலர் என்னும் பெயரால் விளங்கிய புலவர் இருவர். அவர்கள் தொல்கபிலர், கபிலர் என்னும் இருவர்கள் அன்றி சாக்கிய மதத்தின் ஆசிரியராகிய கபிலமுனிவர் ஒருவரும் உள்ளார் என்பது வரலாறு நமக்குக் கூறுகின்றது. அவர் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர் இல்லையாயினும் சமயநூலறிவினால் அவர்பெயரும் இந்நாட்டில் நிலைப்பெற்றிருக்கின்றது. '**கபிலமுனிவரைத் திருமாலின் அவதாரம்** என்று புகழ்ந்து கூறுதலும் உண்டு'

தமிழ்ப்புலவராய் திகழ்ந்திருந்த கபிலர் இருவருள் பிற்காலத்தவராகிய கபிலரின் வரலாறு இங்கு ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. கபிலர், மதுரையில் சங்கப்புலவர்களுள் ஒருவராய் வீற்றிருந்தார் என்னும் குறிப்புகள் பல நூல்களில் காணக்கிடக்கின்றன.

திருவாலவாயுடையார் திருவிளையாடல் ஹாலாஸ் ம~hத்ம்யம் (வடமொழி நூல்) பரஞ்சோதி முனைவர், திருவிளையாடற்புராணம், கடம்பாவனபுராணம் கபிலரகவல், சேதுமண்டல சதகம், ஞானாமிர்தம், தமிழ்நாவலர்கள் சரிதை, தனிப்பாடல், திரட்டுபுலவர் புராணம் விநோதரச மஞ்சரி, திருவள்ளுவர்கதை, பன்னிருபுலவர் சரித்திரம், முதலிய நூல்கள் கபிலரைப் பற்றிக் கூறுகின்றன.

**குறிஞ்சி மக்களின் வாழ்க்கை**

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்த, எளிமையான ஆனால் வீரமும் காதலும் நிறைந்த வாழ்வியலாகும்.

வேளாட்சியும் உணவு சேகரித்தலும்: குறிஞ்சி மக்கள் தினைப் புனம் காத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் போன்ற தொழில்களைச் செய்தனர். ஐங்குறுநூற்றில் குறமகள் தினைப் புனத்தைக்கிளி கடியும் காட்சிகளும், காவல் செய்யும் முறைகளும் அழகாகப் பாடப்பட்டுள்ளன.

காதல் வாழ்க்கை: களவுக்காலக் காதலின் மேன்மையும், இரவுக் குறியிடத்துத் தலைவன் வந்து செல்லும் துணிவும், தோழியின் உதவியும் குறிஞ்சி மக்களின் அகவாழ்வின் உயர்வை வெளிப்படுத்துகின்றன. இயற்கையின் அழகிய சூழலில் மலர்களின் வாசனையோடும் விலங்குகளின் அச்சுறுத்தலோடும் இவர்களின் காதல் வாழ்க்கை திகழ்கிறது.

**அறம்**

தனிமனித விழுமியங்களுள் ஒன்றான அறம் பற்றி ஐங்குறுநூறு கூறுகின்றது.

மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தும் அறம் என்று குறிக்கப்படுகினறது. தமிழர்களின் அகவாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் அறம் கடைப்பிடிக்கப்படுவதைத் தமிழ் இலக்கியங்கள் தெளிவுப்படுத்துகிறது. மனித வாழ்க்கையில் இரண்டற கலந்துள்ள உறுதிப்பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கனுள் முதன்மைப்பெறுவது அறம்; இதனை,

**"அறம்பொரு ளின்பம்வீ டென்னூற் பயனே"**

- ச.திருஞானசம்பந்தம், நன்னூல், எழுத்ததிகாரம், நூ.எ.10,ப.12

என்று நன்னூலார் நூற்பாவழி எடுத்துரைக்கிறார். மனித வாழ்க்கையில் மனித வளர்ச்சியைப் போன்று அறவளர்ச்சியும் காலத்திற்கேற்ப நெகிழ்ச்சி பெற்றுள்ளது. பழங்கால மக்கள் பசி, பிணி, பகை, வறுமை ஆகிய வாழ்க்கைப் போராட்டங்களில் இன்பமும், பொருளும், பெற பல்வேறு நெறிகளைப் பின்பற்றியிருந்தனர். வஞ்சனையால் சுட்டப்பெறும் செல்வமும், இன்பமும் பழியென்றும் அறநெறி வழி வாழ்வதை சிறப்பு எனவும் பண்டைத் தமிழர் கருதினர்.

**ஞா.தேவநேயப்பாவணார்** என்பவர், "அறம் என்னும் சொல்லிற்கு 1,நல்வினை, 2,ஐயம் (பிச்சை), 3.ஏழைகட்கு இலவசமாக கொடுப்பது. 4. நோயாளிகட்கு இலவசமாகக் மருந்தீகை, 5.நலமானது. 6.இன்பம்(சுகம்) 7.தகுதியானது 8.கற்பு, 9.நோன்பு, 10.அறப்பண்பு, 11. சமயம் 12.ஓதி(ஞானம்), 13.அறச்சாலை, 14.அறத்தெய்வம், 15. நடுவுநிலையறம் பேணும் கூற்றுவன் போன்ற பதினைந்தும் வகையான பொருள்களைப் பேரகராதி தருகின்றது."- ஞா.தேவநேயப்பாவணார் செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகாரதி, ப.523

அறம், பொருள், இன்பம், மூன்றும் வாழ்வின் அடிப்படையாக அமைகின்றது. அறத்தினால் பொருளாக்கி அப்பொருளால் இன்பம் தூய்த்தல் சிறப்பானது. இத்தகைய அறத்தைப் பழந்தமிழர் மேற்கொண்டு வாழ்ந்தனர் எனக் கபிலர்,

**"சாத்த மரத்த பூழில் எழும்புகை**

**கூட்டு விரை கமழும் நாடன்**

**அறவற்கு எவனோ,நமஂ அகல்வு அன்னாய"**

-தட்சிணாமூர்த்தி, ஐங்குறுநூறு மூலமும் உரையும், பா.எ212, ப.453

அறப்பண்புள்ள சான்றோனாக இருப்பவன் ஐங்குநுறுநூற்றுத் தலைவன் என்பதைத் தோழிக் குறிப்பிடுகிறாள். 'பொருட் செல்வமும் அன்பு, அருள், நடுவுநிலைமை, வன்மை முதலான பண்புச்செல்வமும் கொண்ட தலைவனை மருமகனாக ஏற்பது நமக்கு பெருமை சேர்க்கும்' என்பதை இப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

தலைவன் 'அறத்தில் சிறந்தவன் மனிதநேயம் உடையவன்' என்பதை கபிலர் உணர்த்தியுள்ளார். மற்றொரு ஐங்குநுறுநூற்றுப் பாடலில் தோழியின் அறம் கூறப்பட்டுள்ளது. தலைவிக்கு வெறியாட்டு நிகழ்த்த முயலுதல் கண்ட தோழி, இனி நம் களவு உறவினைத் தாய்க்கு உணர்த்துவது நல்லது என்று அறச்செயலை செய்கிறாள் இதனைக்,

**" அறியாமையின் வெறி என மயங்கி**

**அன்னையுமஂ அரஂுந்துயர் உழத்தனள் அதனால்**

**எய்யாதுவிடுதலோ கொடிதே- நிரைஇதழ்**

**ஆய்மலர் உண்கண் பசப்ப**

**சேய்மலை நாடன் செய்த நோயே"**

-தட்சிணாமூர்த்தி, ஐங்குறுநூறு மூலமும் உரையும், பா.242

ஐங்குறுநூறு பாடலில் கபிலர் குறிப்பிடுகின்றார்.

உயர்ந்த மலைக்கு உரிமையுடைய நம் காதலனே இந்நோய்க்கு காரணம் என்ற உண்மையை நாம் மறைத்து அவள் அறியாது விடுவதால் நமக்கு தீமையாக முடியும் என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். இதில் தோழியின் அறம் கூறப்பட்டுள்ளது.

**மலைச் சரிவில் பயிரிடுதல்**

மலைச்சரிவுகளில் இயற்க்கையில் அமைந்த இடங்களிலோ அல்லது வேண்டியவாறு பள்ளம்,மேடு, இவற்;றை அடுத்தடுத்து உண்டாக்கியோ அவற்றின் படிகளில் பயிடுவர். மலைக்கண் ஓடிவரும் அருவிநீரைப் பயன்படுத்;திப் பயிரினை விளைவிப்பர். குறிஞ்சி நிலத்தவர் அகில், மூங்கில், முதலியவற்றை மலைச்சரிவுகளில் பயிரிடுகின்றனர்.

நிலத்தை உழுதற்கு எருதுகளைப் பயன்படுத்தினர். யானைக் கொம்பு உலக்கையாகவும் பாறைக்குழி உரலாகவும், சேம்பின் இலைகளாகவும் பயன்படுத்தினர்.

**“முகைவளர் சாந்து உரல் முத்தார் மருப்பின்**

**வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சி”**

- புலியூர்க்கேசிகன், கலித்தொகை பா.4

என்ற கலித்தொகைப் பாடலில் யானைக் கொம்பு உலக்கையாகப் பயன்படுத்தியமை குறித்து அறியமுடிகிறது.

**முடிவுரை**

ஐங்குறுநூற்றின் குறிஞ்சித் திணைப் பாடல்கள் வெறும் இயற்கை வர்ணனை மட்டுமல்லாமல், சங்க காலத் தமிழர்களின் அகவாழ்வு, பண்பாடு, மற்றும் இயற்கையோடு இயைந்த வாழ்வியல் முறைகளின் ஆவணப் பதிவாகத் திகழ்கின்றன. புலவர் கபிலரின் கவித்துவமான மொழிநடை குறிஞ்சி நிலத்தை நம் கண்முன்னே நிறுத்துவதோடு, பழந்தமிழர்களின் நாகரிகச் செழுமையையும் பறைசாற்றுகிறது.

**துணைநூல் பட்டியல்**

1.ஐங்குறுநூறு மூலமும் உரையும் – உ.வே. சாமிநையர் பதிப்பு, 1903, வைஜெயந்தி அச்சுக்கூடம், சென்னபட்டணம்.

2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் (அகத்திணையியல்).

3. சங்க இலக்கியம் - வாழ்வியலும் வரலாறும் – மு. அருணாசலம்.

4. ஐங்குறுநூறு மூலமும் உரையும் - தட்சிணாமூர்த்தி, 2004 முதற்பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

5. புலியூர்க்கேசிகன் (உ.ஆ)., கலித்தொகை, பாரிநிலையம், 2010, சாரதா பதிப்பகம், சென்னை.

6. ஞா. தேவநேயப்பாவனார், செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகாரதி.

7. இராம. குருநாதன் குறிஞ்சி காட்டும் சமுதாயம்.

© 2026 முனைவர்.ஆனந்தி ரா.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)
Vol. 10, No. 02 (September 2026), pp. 106–113
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# அறநூல்களில் (நட்பு) – ஓர் ஆய்வு ( பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்)

*Friendship in Didactic Literature – A Study (The Eighteen Minor Works)*

**மரியம் குருசி MA., Mphil., கு.**[*]

தமிழ்த்துறைஉதவிப்பேராசிரியர், ஏ.வி எஸ் கலை அறிவியல்-தன்னாட்சி சேலம்-*106, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: மரியம் குருசி MA., Mphil., கு. — ngmcollegelibrary@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | 1 October 2026 | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00003 |

## ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வு தமிழ் அறநூல்களில் இடம்பெறும் நட்புக் கருத்துகளை ஆய்வு செய்கிறது. குறிப்பாக திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, இனியவை நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி போன்ற நூல்களில் கூறப்படும் நட்பின் சிறப்புகள் இவ்வாய்வில் எடுத்துரைக்கப்படுகின்றன. உண்மையான நட்பிற்கு அன்பு, நம்பிக்கை, நேர்மை, உதவி, நன்றியுணர்வு மற்றும் நல்லறிவுரை ஆகியவை அடிப்படையாக இருப்பது விளக்கப்படுகிறது. நல்ல நட்பையும் தீய நட்பையும் வேறுபடுத்திப் பார்ப்பதுடன், ஒருவரை நண்பராக ஏற்றுக்கொள்வதற்கு முன்பு அவருடைய பண்புகளையும் செயல்களையும் ஆராய வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது. மேலும் துன்பக் காலத்தில் நட்பு, மாணவர் வாழ்க்கையில் நட்பு மற்றும் இன்றைய தொழில்நுட்ப உலகில் நட்பின் மாற்றங்கள் பற்றியும் இவ்வாய்வு குறிப்பிடுகிறது. காலம் மாறினாலும் உண்மையான நட்பின் அடிப்படை மதிப்புகளான அன்பு, நம்பிக்கை, நேர்மை, உதவி, நன்றியுணர்வு ஆகியவை மாறுவதில்லை என்பதே இவ்வாய்வின் முடிவாகும்.

## Abstract

This study examines the concept of friendship as presented in Tamil ethical literature, with particular reference to works such as the Thirukkural, Naladiyar, Pazhamozhi Nanuru, Iniyavai Narpathu, Sirupanchamoolam and Elathi. The study explains the importance of love, trust, honesty, mutual help, gratitude and moral guidance in true friendship. It also distinguishes genuine friendship from harmful friendship and highlights the need to examine a person's character before accepting them as a friend. The study further discusses friendship in times of difficulty, student life and the modern digital world. It concludes that although the forms of friendship may change with time, its basic values remain constant and continue to guide individuals towards good conduct and social harmony.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** கு., ம. கு. M. M. (2026). அறநூல்களில் (நட்பு) – ஓர் ஆய்வு ( பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்). KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 106–113. https://ngmtamil.in/journal-article/%e0%ae%85%e0%ae%b1%e0%ae%a8%e0%af%82%e0%ae%b2%e0%af%8d%e0%ae%95%e0%ae%b3%e0%ae%bf%e0%ae%b2%e0%af%8d-%e0%ae%a8%e0%ae%9f%e0%af%8d%e0%ae%aa%e0%af%81-%e0%ae%93%e0%ae%b0%e0%af%8d-%e0%ae%86/

# முன்னுரை

மனித வாழ்க்கையில் அன்பு, அறம், ஒழுக்கம், பண்பு, நட்பு ஆகியவை மிகவும் இன்றியமையாதவை. மனிதன் தனித்து வாழ முடியாதவன். பிற மனிதர்களுடன் உறவு கொண்டு, அவர்களுடைய உதவியையும் ஆதரவையும் பெற்று வாழ்கிறான். அந்த உறவுகளில் மிகவும் சிறப்பான ஒன்றாக நட்பு விளங்குகிறது.

நட்பு என்பது வெறும் பழக்கத்தின் அடிப்படையில் உருவாகும் உறவு அல்ல. ஒருவருடைய துன்பத்திலும் இன்பத்திலும் துணை நிற்பதும், தவறு செய்யும்போது சுட்டிக்காட்டுவதும், ஆபத்துக் காலத்தில் கைவிடாமல் இருப்பதும் உண்மையான நட்பின் அடையாளங்களாகும்.

தமிழ் இலக்கியங்களில் நட்பிற்கு மிக உயர்ந்த இடம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக அறநூல்கள் மனித வாழ்க்கையை நல்வழிப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு அறக்கருத்துகளை எடுத்துரைக்கின்றன. அவற்றுள் நட்பு பற்றிய கருத்துகள் மிகவும் முக்கியமானவை.

நட்பு மனிதனின் மனவளர்ச்சிக்கும் சமூக வாழ்விற்கும் அடிப்படையாக அமைகிறது. நல்ல நண்பர்கள் ஒருவரின் எண்ணங்களைச் செம்மைப்படுத்தி, நல்ல செயல்களைச் செய்யத் தூண்டுகின்றனர். எனவே தமிழறநூல்களில் நட்பு எவ்வாறு சித்தரிக்கப்படுகிறது என்பதை ஆய்வு செய்வது பயனுடையதாகும்.

தமிழில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை அறக்கருத்துகளை எடுத்துரைப்பவை. சங்க காலத்திற்குப் பின்னர் தோன்றிய இந்நூல்கள் மனித வாழ்க்கையை நல்வழிப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளன.

அறநூல்கள் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், பிறரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், நல்ல பண்புகளை எவ்வாறு வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பவற்றை விளக்குகின்றன. அன்பு, ஈகை, நட்பு, பொறுமை, உண்மை, ஒழுக்கம், கல்வி, நன்றி, பணிவு, பிறருக்கு உதவுதல் போன்றவை அவற்றின் முக்கிய அறங்களாகும்.

இந்நூல்களின் சிறப்பு என்னவென்றால், அவை வாழ்க்கையின் நடைமுறைச் சிக்கல்களை எளிய சொற்களில் எடுத்துரைக்கின்றன. மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் ஒருங்கிணைத்து நல்லொழுக்கத்தை உருவாக்குகின்றன.

### நட்பு – பொருள் மற்றும் சிறப்பு

‘நட்பு’ என்பது ஒருவருடன் ஒருவர் அன்புடனும் நம்பிக்கையுடனும் பழகுகின்ற உறவைக் குறிக்கிறது. நட்பில் அன்பு, நம்பிக்கை, துணைநிற்றல் ஆகியவை முக்கியமான கூறுகளாகும்.

ஒருவருடைய மகிழ்ச்சியில் மட்டும் பங்கேற்பது நட்பு அன்று. அவருடைய துன்பத்திலும் அவருக்கு ஆதரவாக இருப்பதே உண்மையான நட்பு. உண்மையான நண்பன் நமது வெற்றியைக் கண்டு மகிழ்வான்; தோல்வியைக் கண்டு வருந்துவான்; நாம் தவறு செய்யும்போது அதனை மறைக்காமல் சுட்டிக்காட்டுவான்.

நட்பு மனிதனுக்கு மனத்துணையையும் பாதுகாப்பு உணர்வையும் அளிக்கிறது. வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகள் ஏற்படும் போது நண்பனின் ஊக்கம் மிகப்பெரிய ஆற்றலாக அமைகிறது. இதனால் நட்பு மனித வாழ்க்கையின் அடிப்படை உறவுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

### திருக்குறளில் நட்பு

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகிறது. இதில் நட்பிற்கு தனி அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. நட்பாராய்தல், நட்பு, பழைமை,

கூடாநட்பு என நட்பின் பல்வேறு நிலைகள் விளக்கப்படுகின்றன.

ஒருவரை நண்பராக ஏற்றுக் கொள்வதற்கு முன்பு அவரது குணநலன்களை ஆராய வேண்டும் என்பது திருக்குறளின் முக்கியமான கருத்தாகும்.

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**

**அகநக நட்பது நட்பு. (குறள்- 786)**

வெளிப்புறத் தோற்றஅல்லதுஇனிமையான பேச்சு மட்டுமே ஒருவரை நல்ல நண்பணாக்காது. அவருடைய செயல்கள், ஒழுக்கம், நம்பகத்தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

திருவள்ளுவர் நட்பின் உண்மையான தன்மையை துன்பத்திலும் நன்மையிலும் வெளிப்படும் துணையாகக் காட்டுகிறார். நண்பனின் தவறைச் சுட்டிக்காட்டுவது அவனுக்கு எதிராக இருப்பது அல்ல; அவனுடைய நலனை விரும்புவதன் அடையாளமாகும்.

**நட்பாராய்தல்**

ஒருவரை நண்பராக ஏற்றுக் கொள்வதற்கு முன்பு அவருடைய பண்புகளை ஆராய வேண்டும் என்று திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். ஒருவரின் வெளிப்புறத் தோற்றத்தைக் கொண்டு அவரை நண்பராக ஏற்றுக் கொள்ளக் கூடாது. அவருடைய குணநலன்கள், செயல்கள், ஒழுக்கம், நம்பகத்தன்மை ஆகியவற்றை அறிந்த பிறகே நட்பு கொள்ள வேண்டும்.

நட்பைத் தேர்ந்தெடுப்பதில் அவசரம் காட்டினால் பின்னர் வருத்தம் ஏற்படலாம். ஒருவருடைய நல்ல பண்புகளை நீண்ட காலத்தில் அறிந்து கொள்வதே சிறந்தது. நண்பன் நம்முடைய முன்னேற்றத்தை விரும்புகிறானா, தவறான செயல்களைத் தடுக்கிறானா, நெருக்கடியான நேரத்தில் உதவுகிறானா என்பதைக் கவனிக்க வேண்டும்.

இந்தக் கருத்து இன்றைய சமூகத்திற்கும் மிகவும் பொருத்தமானது. சமூக ஊடகங்களில் எளிதாக உருவாகும் தொடர்புகள் அனைத்தும் உண்மையான நட்பாக இருக்க வேண்டிய அவசியமில்லை. எனவே அறநூல்கள் கூறும் நட்பாராய்தல் என்ற கொள்கை இன்றும் அவசியமானதாகும்.

**உண்மையான நட்பு**

உண்மையான நண்பன் நம்முடைய நன்மையை மட்டுமே விரும்புவான். நாம் தவறான வழியில் செல்லும்போது அதைத் தடுத்து நல்வழிப்படுத்துவான். நண்பனின் குறைகளை நேர்மையாக எடுத்துரைப்பதும் உண்மையான நட்பின் அடையாளமாகும்.

உண்மையான நட்பில் எதிர்பார்ப்பு குறைவாகவும் அன்பு அதிகமாகவும் இருக்கும். நண்பனுடைய வெற்றியைத் தனக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதி மகிழ்வதும், அவனுடைய தோல்வியில் மனமுடைந்து துணை நிற்பதும் நல்ல நட்பின் இயல்பாகும்.

நட்பின் வலிமை காலப்போக்கில் வெளிப்படும். இன்பமான சூழ்நிலையில் மட்டும் பழகுபவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் துன்பம், தோல்வி, பொருளாதாரச் சிக்கல் போன்ற நேரங்களிலும் விலகாமல் இருப்பவர்களே உண்மையான நண்பர்கள்.

**கூடாநட்பு**

வெளியில் நண்பராகத் தோன்றியும் உள்ளத்தில் பகைமை கொண்டிருப்பவர்கள் உள்ளனர். இத்தகைய நட்பு மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியது. நண்பனின் பண்புகளை ஆராயாமல் பழகினால் பின்னர் துன்பம் ஏற்படலாம்.

பொறாமை, சுயநலம், பொய், துரோகம், தவறான செயல்களுக்கு ஊக்கம் அளித்தல் போன்றவை தீய நட்பின் அடையாளங்களாகும். இத்தகைய உறவு மனிதனுடைய வாழ்க்கை முன்னேற்றத்தைத் தடுக்கும்.

எனவே, நமக்கு தீங்கு விளைவிக்கும் நட்பிலிருந்து விலகுவதும் அறநெறியின் ஒரு பகுதியாகும். நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதோடு, தீய நட்பை அடையாளம் காணும் அறிவும் மனிதனுக்கு தேவை.

**நாலடியாரில் நட்பு**

நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முக்கியமான அறநூலாகும். இது மனித வாழ்க்கையின் நிலையாமை, அறம், ஒழுக்கம், நட்பு போன்ற பல கருத்துகளை எடுத்துரைக்கிறது

**பாடல் ( கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை-211)**

நல்லவர்களுடன் பழகும்போது அவர்களின் நல்ல பண்புகள் நம்மிடமும் உருவாகும். அதேபோல் தீயவர்களுடன் பழகினால் அவர்களின் தீய பண்புகள் நம்மையும் பாதிக்கக்கூடும். எனவே மனிதனுடைய குணநலன்களை உருவாக்குவதில் நட்பின் பங்கு அதிகம் என்பதை நாலடியார் உணர்த்துகிறது.

நட்பு என்பது ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய சக்தியாகவும் தாழ்த்தக்கூடிய சக்தியாகவும் இருக்கிறது. நல்ல நண்பர்களின் தொடர்பு அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்க்கிறது.

**பழமொழி நானூற்றில் நட்பு**

பழமொழி நானூறு பல பழமொழிகளின் வழியாக வாழ்க்கை அனுபவங்களை எடுத்துரைக்கும் அறநூலாகும். இதில் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது, தீயவர்களை விலக்குவது, நண்பர்களின் நம்பகத்தன்மை போன்ற கருத்துகள் இடம்பெறுகின்றன.

நல்ல நண்பர்கள் அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்க்க உதவுவார்கள்; தீய நண்பர்கள் தவறான செயல்களுக்கு அழைத்துச் செல்லக்கூடும். மனிதன் யாருடன் பழகுகிறான் என்பதைப் பொறுத்தே அவனுடைய எண்ணங்களிலும் செயல்களிலும் மாற்றம் ஏற்படலாம்.

அனுபவத்தின் மூலம் பெறப்பட்ட அறிவுரைகளைப் பழமொழிகளின் வடிவில் வழங்குவது இந்நூலின் சிறப்பு. எனவே நட்பு தொடர்பான நடைமுறை அறிவையும் இந்நூல் வழங்குகிறது.

**இனியவை நாற்பதில் நட்பு**

இனியவை நாற்பது மனித வாழ்க்கையில் இனிமையான செயல்கள் எவை என்பதை எடுத்துரைக்கும் நூலாகும். நல்லவர்களுடன் பழகுதல், பெரியோர்களை மதித்தல், பிறருக்கு உதவுதல் போன்றவை இனிய செயல்களாகக் கருதப்படுகின்றன.

**(நட்டார் இனியவை செய்தல் இனிது - பாடல் 11)**

நண்பர்களிடையே அன்பு, மரியாதை, நம்பிக்கை ஆகியவை இருக்கும்போது நட்பு நீண்ட காலம் நிலைத்திருக்கும். நண்பனிடம் இனிமையாகப் பேசுவதும், அவனுடைய உணர்வுகளை மதிப்பதும் நட்பை வலுப்படுத்தும்.

நல்ல உறவுகளை வளர்ப்பது தனிமனித மகிழ்ச்சிக்கும் சமூக ஒற்றுமைக்கும் வழிவகுக்கிறது. எனவே இனியவை நாற்பதில் காணப்படும் அறக்கருத்துகள் நட்பு வாழ்வுக்கும் வழிகாட்டுகின்றன.

**சிறுபஞ்சமூலம் மற்றும் ஏலாதியில் நட்பு**

சிறுபஞ்சமூலம் மனித வாழ்க்கைக்குத் தேவையான பல அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் நூலாகும். நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல், தீய செயல்களைத் தவிர்த்தல், நல்லவர்களுடன் பழகுதல் போன்ற கருத்துகள் இதில்

வலியுறுத்தப்படுகின்றன. நல்ல நண்பர்கள் வழிகாட்டிகளாக இருக்க முடியும்.

ஏலாதி அறநெறிகளை எடுத்துரைக்கும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். மனிதனுடைய வாழ்க்கையில் ஒழுக்கமும் நல்ல பண்புகளும் முக்கியம் என்பதை இந்நூல் எடுத்துரைக்கிறது. நல்ல நண்பர்களுடன் பழகுவதன் மூலம் நல்ல எண்ணங்களும் செயல்களும் உருவாகின்றன.

இவ்விரு நூல்களும் நட்பை தனியாக மட்டும் பார்க்காமல், நல்ல வாழ்க்கையை உருவாக்கும் சமூகத் தொடர்பின் ஒரு பகுதியாகக் காட்டுகின்றன.

**நல்ல நட்பின் பண்புகள்**

அறநூல்கள் கூறும் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு நல்ல நட்பின் பண்புகளை அன்பு, நம்பிக்கை, நேர்மை, உதவி, பொறுமை, ரகசியம் காத்தல் ஆகியவையாகக் குறிப்பிடலாம்.

அன்பில்லாத நட்பு நீண்ட காலம் நிலைக்காது. நம்பிக்கை இல்லாத இடத்தில் உண்மையான நட்பு உருவாகாது. தவறு செய்தால் சுட்டிக்காட்டுவதும், தேவைப்படும் நேரத்தில் உதவுவதும் நட்பின் முக்கிய பண்புகளாகும்.

நண்பனுடைய தனிப்பட்ட விஷயங்களை அனுமதியின்றி பிறரிடம் பகிராமல் இருப்பதும் முக்கியமான பண்பாகும். கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் மரியாதையுடன் பேசுவது நட்பை பாதுகாக்கும்

**தீய நட்பின் தன்மைகள்**

நம்மைத் தவறான செயல்களுக்கு அழைத்துச் செல்லுதல், நம்முடைய வெற்றியைப் பொறாமைப்படுதல், தேவையான நேரத்தில் கைவிடுதல், ரகசியங்களை வெளிப்படுத்துதல், தவறுகளை ஊக்குவித்தல், பணத்திற்காக மட்டும் பழகுதல் போன்றவை தீய நட்பின் அடையாளங்களாகும்.

தீய நண்பர்களின் தாக்கம் முதலில் சிறியதாகத் தோன்றினாலும் காலப்போக்கில் வாழ்க்கையில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தலாம். குறிப்பாக மாணவர்களின் படிப்பு, ஒழுக்கம், எதிர்கால இலக்கு ஆகியவை பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

எனவே நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் அறிவும் பொறுப்புணர்வும் அவசியம். தவறான நட்பை விட்டு விலகுவது சில நேரங்களில் கடினமாக இருந்தாலும் அது நல்வாழ்விற்குத் தேவையான முடிவாகும்.

**நட்பும் நம்பிக்கையும்**

நட்பு நிலைத்திருப்பதற்கு நம்பிக்கை மிகவும் முக்கியமானது. ஒரு நண்பன் மற்றொரு நண்பனை நம்பும்போது இருவருக்கும் இடையே ஆழமான உறவு உருவாகிறது. நம்பிக்கையை ஒருமுறை இழந்துவிட்டால் அதனை மீண்டும் பெறுவது கடினம்.

நண்பர்களிடையே உண்மையும் நேர்மையும் இருக்க வேண்டும். ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு இருந்தாலும் பொய்யாக நடந்து கொள்வதைவிட வெளிப்படையாகப் பேசுவது நல்லது. நம்பிக்கையைப் பாதுகாப்பது இருவருடைய பொறுப்பாகும்.

நம்பிக்கையுடன் கூடிய நட்பு மன அமைதியையும் பாதுகாப்பு உணர்வையும் தருகிறது. இதனால் மனிதன் தன்னுடைய எண்ணங்களையும் கவலைகளையும் நண்பனிடம் பகிர்ந்து கொள்ள முடிகிறது.

**துன்பத்தில் நட்பு**

நட்பின் உண்மையான தன்மையை அறிய துன்பக் காலம் சிறந்த அளவுகோலாகும். ஒருவர் வெற்றியடைந்திருக்கும்போது அவரைச் சுற்றி பலர் இருப்பார்கள். ஆனால் அவர் தோல்வியடைந்தபோது அல்லது துன்பத்தில் இருக்கும்போது அவருடன்

இருப்பவர்கள் உண்மையான நண்பர்கள்.

துன்பத்தில் நண்பனுக்கு ஆறுதல் கூறுதல், தேவையான உதவியைச் செய்தல், மனதைத் தளர விடாமல் ஊக்கப்படுத்துதல் ஆகியவை உண்மையான நட்பின் அடையாளங்கள்.

ஒரு நண்பனின் பிரச்சினையைத் தீர்க்க முடியாவிட்டாலும், அவனுடன் இருப்பது மட்டுமே அவனுக்கு பெரிய ஆறுதலாக இருக்கலாம். இதனால் நட்பு மனிதனுக்கு மனவலிமை அளிக்கும் உறவாக விளங்குகிறது.

**நட்பும் அறிவுரையும் நன்றியும்**

நண்பர்கள் ஒருவருக்கொருவர் அறிவுரை வழங்க வேண்டும். தவறான முடிவு எடுக்கும்போது நண்பன் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டும். நண்பனுடைய கோபத்திற்குப் பயந்து உண்மையைச் சொல்லாமல் இருப்பது உண்மையான நட்பு அல்ல.

நல்ல நண்பனுடைய அறிவுரை சில நேரங்களில் கடுமையாகத் தோன்றினாலும் அது நன்மையை ஏற்படுத்தும். அதேபோல் நண்பன் செய்த உதவியை மறக்காமல் இருப்பது நன்றியுணர்வாகும்.

நண்பர்களிடையே ஒருவருக்கொருவர் உதவுவது இயல்பானதாக இருந்தாலும், செய்த உதவியை மதிப்பதும் நினைவில் வைத்திருப்பதும் நல்ல பண்பாகும். நன்றியுணர்வு நட்பை மேலும் வலுப்படுத்துகிறது.

**சங்க இலக்கியத்தில் நட்பு**

சங்க இலக்கியங்களில் நட்பு உயர்ந்த நிலையில் பேசப்பட்டுள்ளது. பிசிராந்தையார் – கோப்பெருஞ்சோழன் நட்பு மிகவும் புகழ்பெற்றது. இருவரும் நேரில் அதிகம் சந்திக்காத நிலையிலும் அவர்களுக்கிடையே ஆழமான நம்பிக்கையும் அன்பும் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

உண்மையான நட்பு என்பது உடல் நெருக்கத்தை மட்டுமே சார்ந்தது அல்ல; மன ஒற்றுமையையும் நம்பிக்கையையும் சார்ந்தது என்பதை அறியலாம். சங்க இலக்கியப் பார்வையில் நண்பன் என்பது வாழ்வின் முக்கியமான துணையாகக் கருதப்படுகிறான்.

இந்த நட்புக் கருத்துகள் தமிழரின் பண்பாட்டில் மனித உறவுகளுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த இடத்தை வெளிப்படுத்துகின்றன.

**இன்றைய காலத்தில் நட்பு**

இன்றைய நவீன உலகில் நட்பின் வடிவம் மாறியுள்ளது. சமூக ஊடகங்கள், இணையம், கைப்பேசி போன்ற தொழில்நுட்ப வளர்ச்சிகளால் உலகின் பல பகுதிகளில் உள்ளவர்களுடன் எளிதாக நட்பு கொள்ள முடிகிறது.

ஆனால் இணையத்தில் உள்ள அனைவரும் உண்மையான நண்பர்கள் என்று கருத முடியாது. நேரில் பழகும் நட்பிலும் இணைய நட்பிலும் நம்பிக்கை, பாதுகாப்பு, தனியுரிமை போன்றவற்றில் கவனம் தேவை.

அறநூல்கள் வலியுறுத்தும் 'நட்பாராய்தல்' என்ற கருத்து இன்றைய காலத்திற்கும் மிகவும் பொருத்தமானதாக உள்ளது. ஒருவரின் வார்த்தைகளைக் காட்டிலும் செயல்களைப் பார்த்து அவருடைய பண்பை அறிந்து கொள்வது அவசியம்.

**மாணவர் வாழ்க்கையில் நட்பு**

மாணவர் வாழ்க்கையில் நண்பர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. நல்ல நண்பர்கள் படிப்பில் உதவுவார்கள், தேர்வுக்கு தயாராக ஊக்குவிப்பார்கள், தவறான பழக்கங்களிலிருந்து விலக்குவார்கள், மனம் தளரும் நேரங்களில் ஆறுதல் அளிப்பார்கள், வாழ்க்கை இலக்குகளை அடைய ஊக்கமளிப்பார்கள்.

அதே சமயம் தீய நண்பர்கள் மாணவர்களைப் படிப்பிலிருந்து விலக்கி தவறான

பழக்கங்களுக்கு அழைத்துச் செல்லலாம். எனவே மாணவர்கள் நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நல்ல நண்பர்களுடன் இணைந்து படிப்பது, கருத்துகளைப் பகிர்வது, அறிவை வளர்த்துக் கொள்வது ஆகியவை கல்வி முன்னேற்றத்திற்கு உதவுகின்றன. நட்பு கல்வியையும் நல்லொழுக்கத்தையும் இணைக்கும் சக்தியாக அமைய வேண்டும்.

## நட்பின் சமூகப் பயன்

நட்பு தனிமனிதனுக்கு மட்டுமல்லாமல் சமூகத்திற்கும் பயனளிக்கிறது. மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்யும்போது சமூகத்தில் ஒற்றுமை உருவாகிறது.

நட்பு மனிதர்களிடையே அன்பை வளர்க்கிறது, ஒற்றுமையை உருவாக்குகிறது, பகைமையை குறைக்கிறது, உதவும் மனப்பான்மையை வளர்க்கிறது, சமூக நலனை மேம்படுத்துகிறது. நண்பர்கள் ஒருவருக்கொருவர் துணை நிற்பதன் மூலம் சமூகப் பொறுப்புணர்வும் அதிகரிக்கிறது.

ஒரு நல்ல நட்பு பல நல்ல உறவுகளுக்குத் தொடக்கமாக அமையலாம். தனிமனிதர்களிடையே உருவாகும் நம்பிக்கை பின்னர் குடும்பம், கல்வி நிறுவனம், பணியிடம், சமூகம் ஆகியவற்றிலும் நல்ல ஒற்றுமையை உருவாக்க உதவும்.

## அறநூல்களில் நட்புக் கருத்துகளின் சிறப்பு

அறநூல்கள் கூறும் நட்புக் கருத்துகள் காலத்தைக் கடந்தவை. பண்டைய காலத்திற்கும் இன்றைய நவீன வாழ்க்கைக்கும் பல வேறுபாடுகள் இருந்தாலும், உண்மையான நட்பின் அடிப்படை பண்புகள் மாறவில்லை.

அன்பு, நம்பிக்கை, நேர்மை, உதவி, நன்றியுணர்வு போன்றவை எந்தக் காலத்திலும் நட்பிற்கு அடிப்படையாக இருக்கின்றன. அதனால் அறநூல்களின் கருத்துகள் பழையவை என்றாலும் அவற்றின் வாழ்க்கைப் பயன் இன்றும் குறையவில்லை.

குறிப்பாக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் அறநூல்கள் கூறும் நட்புக் கருத்துகளைப் புரிந்து கொண்டால், நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்து நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

## ஆய்வு முடிவுகள்

அறநூல்களை ஆய்வு செய்தபோது நட்பு மனித வாழ்க்கையின் முக்கியமான உறவு என்பதும், நண்பர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதும், உண்மையான நண்பன் துன்பத்திலும் துணையாக இருப்பான் என்பதும் தெளிவாகிறது.

நண்பனுடைய தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்; தீய நட்பு வாழ்க்கைக்கு ஆபத்தானது; நல்ல நண்பர்கள் வாழ்க்கையை முன்னேற்றுவார்கள்; நம்பிக்கையும் நேர்மையும் நட்பின் அடிப்படையாகும்; மாணவர்கள் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; அறநூல்களின் நட்புக் கருத்துகள் இன்றைய சமூகத்திற்கும் பொருந்துகின்றன.

இவ்வாய்வின் மூலம் நட்பு என்பது தனிப்பட்ட உணர்வு மட்டுமல்லாமல் ஒரு அறப்பண்பு என்பதும் தெரியவருகிறது. நல்ல நட்பு மனிதனை நல்வழியில் நடத்தி, சமூகத்தில் ஒற்றுமையை உருவாக்குகிறது.

## முடிவுரை

நட்பு என்பது மனித வாழ்க்கையின் மிக அழகான உறவுகளில் ஒன்றாகும். உண்மையான நண்பன் வாழ்க்கையின் இன்பத்திலும் துன்பத்திலும் துணையாக இருப்பான். நம்முடைய வெற்றியில் மகிழ்ந்து, தோல்வியில் ஆறுதல் கூறி, தவறான பாதையில் செல்லும்போது நம்மைத் தடுத்து நல்வழிப்படுத்துவான்.

தமிழ் அறநூல்கள் நட்பின் சிறப்பை மிக ஆழமாக எடுத்துரைக்கின்றன. திருக்குறள் நட்பாராய்தல், உண்மையான நட்பு, கூடாநட்பு போன்ற பல கோணங்களில் நட்பை ஆராய்கிறது. நாலடியார், பழமொழி நானூறு, இனியவை நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி போன்ற நூல்களும் நல்லவர்களின் தொடர்பையும் தீயவர்களின் தொடர்பைத் தவிர்ப்பதையும் வலியுறுத்துகின்றன.

இன்றைய தொழில்நுட்ப உலகில் நட்பின் வடிவம் மாறினாலும் அதன் அடிப்படை மதிப்புகள் மாறவில்லை. அன்பு, நம்பிக்கை, நேர்மை, உதவி, நன்றியுணர்வு ஆகியவை உண்மையான நட்பின் அடித்தளங்களாக உள்ளன.

எனவே, அறநூல்கள் காட்டும் நல்வழியைப் பின்பற்றி நண்பர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து, உண்மையான நட்பை வளர்த்துக் கொள்வது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்.

## துணை நூற்பட்டியல்

1. திருக்குறள் – திருவள்ளுவர் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை; 1975

2. நாலடியார் - புலியூர் கேசிகன் - சாரதா பதிப்பகம், சென்னை – 600 014.

3. பழமொழி நானூறு - முன்றுறை அரையனார் - சாரதா பதிப்பகம், சென்னை – 600 014 முதற்பதிப்பு 2010

4. இனியவை நாற்பது – பூதஞ்சேந்தனார் - சேகர் பதிப்பகம், சென்னை - முதற்பதிப்பு 2012

5. சிறுபஞ்சமூலம் – காரியாசான் - கழக வெளியீடு, திருநெல்வேலி; 1936 பதிப்பு

6. ஏலாதி – கணிமேதாவியார்- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்,- சென்னை - முதற்பதிப்பு -2012

© 2026 மரியம் குருசி MA., Mphil., கு.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 114–119
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# சிலப்பதிகாரம் உணர்த்தும் வாழ்வியல் முறைகள்

*Ways of Life Conveyed by Silappathikaram*

**சீனிவாசன் MA B.ED கோ***

உதவிப் பேராசிரியர் ,ஏவிஎஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ,(தன்னாட்சி), சேலம்-*636106, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: சீனிவாசன் MA B.ED கோ — ngmcollegelibrary@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
| --- | --- | --- | --- |
| 30 September 2026 | — | — | 30 September 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
| --- | --- |
| — | KALN-2026-00004 |

## ஆய்வுச்சுருக்கம்

இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம் தமிழரின் பழந்தமிழ் வாழ்வியலை எடுத்துரைக்கும் சிறந்த காப்பியமாகும். இக்காப்பியத்தில் இடம்பெறும் கண்ணகி கோவலன் வாழ்க்கை, புகார், மதுரை, வஞ்சி ஆகிய நகரங்களின் சமூகச் சூழல் வழியாக அக்கால மக்களின் வாழ்க்கை முறைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. விருந்தோம்பல், கற்பு, அறம், நீதி, ஈகை, குடும்ப உறவு, தொழில், வணிகம், கலை, சமயம், அரசாட்சி போன்ற பல்வேறு வாழ்வியல் கூறுகளைச் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகிறது. இவ்வாய்வு, காப்பியத்தில் இடம்பெறும் நிகழ்வுகளின் அடிப்படையில் தமிழர்களின் வாழ்வியல் நெறிகளை ஆராய்ந்து, அவை இன்றைய சமூகத்திற்கும் வழங்கும்
அறக்கருத்துகளை எடுத்துரைக்கிறது

## Abstract

Silappathikaram*, authored by Ilango Adigal, is a magnificent epic that portrays the traditional way of life of the Tamil people. The lifestyles of the people of that era are revealed through the lives of the protagonists, Kannagi and Kovalan, and the social environments of the cities of Puhar, Madurai, and Vanchi. The epic highlights various aspects of life, such as hospitality, chastity, righteousness, justice, generosity, family relationships, occupations, trade, arts, religion, and governance. This study examines the Tamil way of life based on the events depicted in the epic and articulates the ethical values it offers to contemporary society

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** கோ, சீ. M. B. (2026). சிலப்பதிகாரம் உணர்த்தும் வாழ்வியல் முறைகள். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 114–119.

## ஆய்வின் நோக்கம்

- ❖ சிலப்பதிகாரம் கூறும் தமிழர்களின் பழந்தமிழ் வாழ்வியல் முறைகளை அறிதல்.
- ❖ குடும்பம் மற்றும் சமூக உறவுகளின் சிறப்பை ஆராய்தல்.

❖ விருந்தோம்பல், ஈகை, அறம் போன்ற பண்பாட்டு விழுமியங்களை எடுத்துரைத்தல்.
❖ கண்ணகியின் கற்பு, துணிவு, நீதி உணர்வு ஆகியவற்றை ஆராய்தல்.
❖ அக்கால மக்களின் வணிகம், தொழில், கலை மற்றும் சமய வாழ்வை அறிதல்.
❖ அரசனின் கடமை மற்றும் நீதியின் முக்கியத்துவத்தை விளக்குதல்.
❖ சிலப்பதிகாரம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் இன்றைய சமூகத்திற்கு எவ்வாறு பொருந்துகின்றன என்பதை எடுத்துக்காட்டுதல்.

**ஆய்வுப் பொருள்**

- கண்ணகியின் கற்பு மற்றும் அறச்சிந்தனை
- கோவலனின் வாழ்க்கை மற்றும் குடும்ப உறவு
- மாதவியின் கலை வாழ்க்கை
- அரசனின் நீதி வழங்கும் கடமை
- வணிகம் மற்றும் பொருளாதார வாழ்க்கை
- பெண்களின் சமூக நிலை
- சமயம் மற்றும் வழிபாட்டு முறைகள்
- உணவு, உடை, தொழில், விழாக்கள்
- நகர மற்றும் கிராம வாழ்க்கை
- மனிதநேயம் மற்றும் சமூக அறம்

## முன்னுரை

தமிழின் ஐம்பெரும் காப்பியங்களுள் முதன்மையானதாகத் திகழ்வது சிலப்பதிகாரம். இக்காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோரின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு அமைந்த இக்காப்பியம், தனிமனித வாழ்க்கையையும் சமூக வாழ்வியலையும் விரிவாகப் பதிவு செய்கிறது.

சிலப்பதிகாரம் ஒரு கதை நூலாக மட்டும் இல்லாமல், “அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்; உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்; ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்” என்ற அடிப்படைக் கருத்துகளையும் உணர்த்துகிறது. இதன் மூலம் அறம், நீதி, கற்பு, விருந்தோம்பல், ஈகை, குடும்பப் பண்பு, அரசாட்சி, கலை மற்றும் பண்பாடு போன்ற பல்வேறு வாழ்வியல் கூறுகளை அறிந்துகொள்ள முடிகிறது. எனவே, “சிலப்பதிகாரம் உணர்த்தும் வாழ்வியல் முறைகள்” என்ற தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாய்வின் மூலம் பழந்தமிழரின் உயர்ந்த பண்பாட்டு நெறிகளையும், அவை இன்றைய தலைமுறைக்கு வழங்கும் வாழ்க்கைப் பாடங்களையும் வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

## கண்ணகி கோவலனின் வாழ்க்கை மற்றும் குடும்ப உறவு

கோவலன் தன்னைப் பிரிந்து மாதவியுடன் வாழ்ந்தபோதும், கண்ணகி தன் கணவனை வெறுக்காமல் பொறுமையுடன் இருந்தாள்.
கோவலன் மீண்டும் தன்னிடம் வந்தபோது, கடந்த காலத்தைப் பொருட் படுத்தாமல் அவனை ஏற்றுக்கொண்டாள்.மதுரைக்குச் செல்லும்போது தன் சிலம்புகளில் ஒன்றைக் கொடுத்து, கோவலனுக்கு உதவினாள்.

கோவலன் தவறாகக் குற்றம் சாட்டப்பட்டு கொல்லப்பட்டதை அறிந்த கண்ணகி, உண்மையை நிலைநாட்ட அரசவைக்குச் சென்றாள்.
தன் கணவன் கள்வன் அல்ல என்பதை சிலம்பின் மூலம் நிரூபித்து, பாண்டிய மன்னனின் தவறை வெளிப்படுத்தினாள். கண்ணகியின் கற்பு தனிப்பட்ட வாழ்க்கைப் பண்பாக மட்டுமல்லாமல், நீதி மற்றும் உண்மைக்காகப் போராடும் ஆற்றலாகவும் சிலப்பதிகாரம் காட்டுகிறது.

**சிலப்பதிகாரம் கூறும் விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது தமிழர்களின் முக்கியமான பண்பாடுகளில் ஒன்றாகும். சிலப்பதிகாரம் விருந்தினரை அன்புடன் வரவேற்று, உணவு அளித்து உபசரிக்கும் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

கண்ணகி இல்லற வாழ்வில் விருந்தினரைப் பேணி உபசரிப்பதை சிறந்த கடமையாகக் கருதுகிறாள்.

கணவன் பிரிந்திருந்த காலத்தில் விருந்தினரை உபசரிக்க முடியவில்லை என்று கண்ணகி வருந்துகிறாள்.

இதன் மூலம் விருந்தோம்பல் இல்லறத்தின் முக்கியக் கடமை என்பதை அறியலாம்.

விருந்தினருக்கு உணவு, அன்பு, மரியாதை அளிப்பது தமிழர் பண்பாட்டின் சிறப்பாகக் காட்டப்படுகிறது.

விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்பதும், அவர்களின் தேவைகளை அறிந்து உதவுவதும் சிறந்த பண்புகளாகக் கூறப்படுகின்றன.

**கண்ணகி தோழியின் வாழ்வியல் பங்கு**

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தோழியாக தேவந்தி குறிப்பிடப்படுகிறாள். கண்ணகியின் வாழ்க்கையில் அவளது பங்கு முக்கியமானதாக அமைந்துள்ளது.

கண்ணகியின் துயரங்களையும் மனநிலையையும் புரிந்துகொண்டு அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள்.

கோவலன் பிரிந்திருந்த காலத்தில் கண்ணகியின் கவலையை அறிந்து அவளுடன் துணை நிற்கிறாள்.

கண்ணகியின் குடும்ப வாழ்க்கை சிறக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் செயல்படுகிறாள்.

கண்ணகியின் நலனில் அக்கறை கொண்ட நெருங்கிய தோழியாகத் திகழ்கிறாள்.

கண்ணகியின் கற்பு, மன உறுதி, பொறுமை ஆகிய பண்புகளை வெளிப்படுத்தும் சூழலுக்கு தேவந்தியின் நட்பு துணைபுரிகிறது.

தோழி என்ற நிலையில், பழந்தமிழ்ச் சமூகத்தில் பெண்களுக்கிடையேயிருந்த நட்பு, அக்கறை, ஆதரவு ஆகியவற்றையும் தேவந்தியின் பாத்திரம் எடுத்துக்காட்டுகிறது.

**கண்ணகி கோரும் வாழ்வியல்**

கணவனிடம் கொண்ட உறுதியான பற்றையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறாள்
கோவலன் தன்னைப் பிரிந்தபோதும் பொறுமையுடன் இருந்தாள்

சிலம்பின் உண்மையை நிரூபித்து கோவலன் குற்றமற்றவன் என்பதை வெளிப்படுத்தினாள்.

தனியாகவே அரசவைக்குச் சென்று தன் கருத்தைத் தெளிவாக எடுத்துரைத்தாள்.
உண்மை வெளிப்படும் வரை தொடர்ந்து போராடினாள்.
ஆட்சியாளர்கள் நீதியுடன் செயல்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறாள்.

## கண்ணகியின் வாழ்வியல் முக்கியப் பங்குகள்

கண்ணகி, கற்பு, பொறுமை, நீதி, துணிவு ஆகியவற்றின் அடையாளமாக விளங்குகிறாள். அவளுடைய வாழ்வில் முக்கியமான பங்குகள்
கோவலனைத் தன் கணவனாக ஏற்று, அவனுடைய தவறுகளையும் பொறுத்துக் கொண்டாள்கணவனிடம் கொண்ட உறுதியான அன்பையும் கற்பையும் கண்ணகி வெளிப்படுத்தினாள்.கோவலன் அநியாயமாகக் கொல்லப்பட்டபோது, அச்சமின்றி அரசவைக்குச் சென்று உண்மையை எடுத்துரைத்தாள்.
அநீதிக்கு எதிராக ஒரு பெண்ணும் துணிந்து குரல் கொடுக்க முடியும் என்பதை நிரூபித்தாள்.ஆட்சியாளர்கள் நீதியுடன் செயல்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினாள்.கண்ணகியின் வாழ்க்கை தமிழர்களின் கற்பு, அறம், நீதி ஆகிய பண்புகளை எடுத்துக்காட்டுகிறது.

## சிலப்பதிகாரம் கூறும் முக்கிய வாழ்வியல்

### கற்புடைமை

கண்ணகி தன் கணவனிடம் கொண்டிருந்த உறுதியான அன்பும் கற்பும் போற்றத்தக்கது.கணவன், மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு வாழ வேண்டும் என்பதை உணர்த்துகிறது.
பிறருக்கு உதவுதல், தேவையுடையோருக்கு வழங்குதல் போன்ற அறச்செயல்கள் வலியுறுத்தப்படுகின்றன.நண்பர்களிடம் அன்பும் நம்பிக்கையும் கொண்டு பழக வேண்டும் என்பதைப் பாத்திரங்கள் மூலம் அறியலாம்.

### நீதிநெறி

அரசன் ஆராய்ந்து உண்மையை அறிந்த பின்னரே தீர்ப்பு வழங்கவேண்டும்மக்களின் நலனைப் பாதுகாத்து, நடுநிலையுடன் நீதி வழங்குவது அரசனின் முக்கியக் கடமையாகும்.மனிதனின் செயல்களுக்கு ஏற்ற விளைவுகள் ஏற்படும் என்ற கருத்து எடுத்துரைக்கப்படுகிறது.
கண்ணகியின் துணிவு, நேர்மை, நீதி உணர்வு ஆகியவை பெண்ணின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன.தவறு செய்தவர் அரசனாக இருந்தாலும், உண்மை மற்றும் அறத்தின் முன் தவறு நிலைக்காது என்பதை காப்பியம் உணர்த்துகிறது.
மனைவி உறவு, குடும்பப் பொறுப்பு, உறவினர்களின் அன்பு ஆகியவை சிறப்பாகப் போற்றப்பட்டன.கண்ணகியின் மூலம் கற்பு, மன உறுதி, கணவன்பால் கொண்ட அன்பு ஆகியவை எடுத்துக்காட்டப்படுகின்றன.

**வணிகச் சிறப்பு**

வணிகர்கள் பல இடங்களுக்குச் சென்று பொருள்களை வாங்கி விற்றனர். நகர வாழ்க்கையில் வணிகம் முக்கிய இடம் பெற்றிருந்தது.
பல்வேறு தொழில்களைச் செய்த மக்கள் ஒருங்கிணைந்து வாழ்ந்தனர்.

நிலம், நீர், மலை, காடு போன்ற இயற்கைச் சூழல்களுடன் மக்கள் நெருங்கிய தொடர்புடன் வாழ்ந்தனர்.

மக்கள் பல்வேறு தெய்வங்களையும் சமய வழிபாட்டு முறைகளையும் பின்பற்றினர்.

இசை, நடனம், கூத்து போன்ற கலைகள் மக்களின் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.
ஆட்சியாளர்கள் நீதி தவறாமல் ஆட்சி செய்ய வேண்டும் என்ற உயர்ந்த கருத்து வெளிப்படுகிறது.

**அறநெறியைப் பின்பற்றுதல்**

மனிதன் எந்தச் சூழ்நிலையிலும் அறத்தைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதை சிலப்பதிகாரம் வலியுறுத்துகிறது. தனிமனித வாழ்வுக்கும் சமூக வாழ்வுக்கும் அறமே அடிப்படை எனக் காட்டுகிறது.
அரசனின் கடமை மக்களைக் காப்பதும், குற்றமற்றவர்களுக்கு நீதி வழங்குவதுமாகும். அரசன் தவறான தீர்ப்பு வழங்கினால் நாட்டிற்கே பாதிப்பு ஏற்படும் என்ற சமூகச் சிந்தனை வெளிப்படுகிறது.
கண்ணகி தன் கணவனுக்கு ஏற்பட்ட அநீதிக்காக அரசனிடம் துணிச்சலுடன் சென்று உண்மையை எடுத்துரைக்கிறாள். இதன் மூலம் பெண்ணும் சமூக அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கக்கூடியவள் என்ற சிந்தனை வெளிப்படுகிறது.
சிலப்பதிகாரத்தில் ஊழ் அல்லது விதியின் தாக்கம் முக்கியமாகக் கூறப்படுகிறது. மனிதனின் செயல்களுக்கும் அதன் விளைவுகளுக்கும் தொடர்பு இருப்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

**முடிவுரை**

சிலப்பதிகாரம் அறம், நீதி, கற்பு, குடும்பம், விருந்தோம்பல், கலை, பண்பாடு போன்ற பல்வேறு வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கிறது. எனவே, இது ஒரு காப்பியம் மட்டுமல்லாமல் தமிழரின் வாழ்வியல் களஞ்சியமாகவும் திகழ்கிறது.

## துணை நூற்பட்டியல்

1 சிலப்பதிகாரம் மூலமும் உரையும்-உ.வே. சாமிநாதையர்

உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்1985

2 சிலப்பதிகாரம் – மூலமும் உரையும்புலியூர்க் கேசிகன்

கௌரா பதிப்பகக் குழுமம்2018

3 சிலப்பதிகாரம் மூலமும் உரையும்-புலியூர்க் கேசிகன்

ரிதம் வெளியீடு2024

4 சிலப்பதிகாரம் ந.மு. வேங்கடசாமி நாட்டார்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்1956

© 2026 சீனிவாசன் MA B.ED கோ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 120–124
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# எனது பார்வையில் அக்கால மருத்துவமும் இக்கால மருத்துவமும்

*Medicine of the Past and Present: My Perspective*

**நிர்மலா ர.***

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை நிஃப்- டீ பின்னலாடைக் கல்லூரி, முதலிபாளையம், திருப்பூர். *(9842150955), India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: நிர்மலா ர. — nirmalachandran1982@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | — | 30 September 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00005 |

## ஆய்வுச்சுருக்கம்

மனித வாழ்வில் உடல்நலம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. நோய்களைத் தடுத்து உடல் நலத்தைப் பாதுகாப்பதற்காக மனிதன் காலங்காலமாகப் பல்வேறு மருத்துவ முறைகளைக் கடைப்பிடித்து வந்துள்ளான். தமிழர்களின் தொன்மையான மருத்துவ மரபுகளில் சிறப்பிடம் பெறுவது சித்த மருத்துவம் ஆகும். இயற்கையை அடிப்படையாகக் கொண்டு உருவான சித்த மருத்துவம், உடல், மனம், உணவு, வாழ்க்கை முறை ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்க்கிறது. இதற்கு மாறாக, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றது தற்கால நவீன மருத்துவம் ஆகும். இவ்விரு மருத்துவ முறைகளுக்கும் சில ஒற்றுமைகளும் பல வேற்றுமைகளும் காணப்படுகின்றன.

## Abstract

Health holds a vital place in human life. Throughout history, humans have adopted various medical practices to prevent disease and maintain physical well-being. Siddha medicine occupies a distinguished position among the ancient medical traditions of the Tamils. Rooted in nature, Siddha medicine takes a holistic approach, integrating the body, mind, diet, and lifestyle. In contrast, contemporary modern medicine has evolved based on advancements in science and technology. These two medical systems share certain similarities while also exhibiting numerous differences.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ர., நி. (2026). எனது பார்வையில் அக்கால மருத்துவமும் இக்கால மருத்துவமும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 120–124.

### அக்கால சித்த மருத்துவம் :

**அன்றைய காலத்தில் வீட்டு வைத்திய முறைகள் இயற்கை சார்ந்த உணவுமுறை மற்றும் வாழ்க்கை ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இதனைத் திருவள்ளுவர்,**

**திருக்குறள் – குறள் எண் 942 - அதிகாரம்: மருந்து**

‘மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின்.

**முன்பு உண்ட உணவு நன்றாகச் செரித்துவிட்டதை அறிந்து, அதன் பின்னர் தக்க அளவில் உணவு உண்டால் உடலுக்கு மருந்து என்று வேறு எதுவும் தேவையில்லை. என திருவள்ளுவர் இக்குறளில் உணவே சிறந்த மருந்து என்ற கருத்தை வலியுறுத்துகிறார். உணவை அளவோடு, சரியான நேரத்தில் உட்கொண்டு, முன்பு உண்ட உணவு செரித்த பிறகே மீண்டும் உண்பது உடல்நலத்தைப் பாதுகாக்கும். இவ்வாறு ஒழுங்கான உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடித்தால் நோய்கள் ஏற்படுவது குறைந்து, மருந்தின் தேவை இல்லாமல் ஆரோக்கியமாக வாழ முடியும். என்ற குறள் மூலம் உணவு ஒழுங்கே உடலுக்கு மருந்தாகும் என வலியுறுத்துகிறார்.**

சித்த மருத்துவம் தமிழர் மரபோடு தொடர்புடைய தொன்மையான மருத்துவ முறையாகும். சித்தர்கள் தங்களுடைய அனுபவம், ஆராய்ச்சி மற்றும் இயற்கை அறிவின் அடிப்படையில் மருத்துவக் கருத்துகளை வளர்த்தனர். அகத்தியர் உள்ளிட்ட பல சித்தர்கள் சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

சித்த மருத்துவம் மனித உடலில் ஏற்படும் நோய்களை மட்டும் குணப்படுத்துவதை நோக்கமாகக் கொள்ளாமல், நோய் வராமல் தடுப்பதற்கும் உடல் நலத்தைப் பேணுவதற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. உணவு முறைகள், உடற்பயிற்சி, தூக்கம், மனநிலை, சுற்றுச்சூழல் ஆகியவற்றை உடல்நலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கிறது.

சித்த மருத்துவத்தில் பெரும்பாலும் மூலிகைகள், தாவரங்கள் மற்றும் இயற்கைப் பொருட்கள் மருந்துகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், உடலின் இயல்பான சமநிலையைப் பாதுகாப்பதே நல்ல ஆரோக்கியத்திற்கு அடிப்படை எனக் கருதப்படுகிறது.

**தற்கால நவீன மருத்துவம் :**

தற்கால நவீன மருத்துவம் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட மருத்துவ முறையாகும். மனித உடலின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை அறிவியல் முறையில் ஆராய்ந்து நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கிறது.

இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, ஸ்கேன், நவீன ஆய்வகப் பரிசோதனைகள் போன்ற பல்வேறு தொழில்நுட்ப முறைகள் மூலம் நோய்களைத் துல்லியமாகக் கண்டறிவது நவீன மருத்துவத்தின் முக்கிய சிறப்பாகும். அவசரநிலைச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சை, தடுப்பூசி, தீவிர சிகிச்சை போன்ற துறைகளில் நவீன மருத்துவம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

சித்த மருத்துவமும் நவீன மருத்துவமும் – ஒப்பீடு

ஒப்பீட்டுக் கூறுகள் - சித்த மருத்துவம் - நவீன மருத்துவம் - அடிப்படை

இயற்கை மற்றும் பாரம்பரிய அறிவு :

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்மருந்துகள் - மூலிகைகள் மற்றும் இயற்கைப் பொருட்கள் - அறிவியல் முறையில் தயாரிக்கப்படும் மருந்துகள் -நோய் அணுகுமுறை

உடல் மற்றும் வாழ்க்கை முறையை முழுமையாகக் கருதுகிறது.

உணவு, மருந்து, வாழ்க்கை முறை மாற்றம்மருந்து, அறுவைச் சிகிச்சை மற்றும் பிற நவீன சிகிச்சைகள் சிகிச்சை காலம்சில நீண்டகால நோய்களில் தொடர் சிகிச்சை தேவைப்படலாம்பல நோய்களில் விரைவான சிகிச்சை கிடைக்கலாம் நோக்கமாகக்

கொள்வது நோய் தடுப்பு மற்றும் உடல் சமநிலை நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை.

**இரு மருத்துவ முறைகளின் ஒற்றுமைகள் :**

சித்த மருத்துவமும் நவீன மருத்துவமும் மனித உடல்நலத்தைப் பாதுகாப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. நோய்களைக் கண்டறிந்து அவற்றிற்குச் சரியான சிகிச்சை அளிப்பதே இரு மருத்துவ முறைகளின் பொதுவான நோக்கமாகும்.

மேலும், நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களை அறிந்து அவற்றைத் தடுப்பதிலும் இரு மருத்துவ முறைகளும் கவனம் செலுத்துகின்றன. மனிதனின் உடல் நலமே சமூக நலத்திற்கு அடிப்படை என்பதை இரண்டும் வலியுறுத்துகின்றன.

**சித்த மருத்துவத்தின் சிறப்புகள் :**

சித்த மருத்துவம் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை வலியுறுத்துகிறது. சரியான உணவு, ஒழுக்கமான வாழ்க்கை, உடல் மற்றும் மன நலம் ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பார்க்கிறது. குறிப்பாக நீண்டகால உடல்நலப் பராமரிப்பில் வாழ்க்கை முறை மாற்றத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.

**“உணவே மருந்து; மருந்தே உணவு” என்ற கருத்திற்கு ஏற்ப உணவுப் பழக்கத்திற்குச் சித்த மருத்துவம் முக்கியத்துவம் அளிக்கிறது.**

**‘மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**

**அற்றது போற்றி உணின்.**

**– திருக்குறள் 942, மருந்து அதிகாரம்**

**பொருள்: முன்பு உண்ட உணவு நன்றாகச் செரித்த பிறகு, உடலுக்குத் தேவையான அளவில் உணவு உண்டால் உடலுக்கு மருந்து தேவையில்லை.**

**விளக்கம்:**

**இக்குறள் உணவே மருந்தாக அமையும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. சரியான நேரத்தில், போதிய அளவில், உடலுக்கு ஏற்ற உணவை மட்டும் உட்கொண்டால் நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம். அளவான உணவும் முறையான உணவுப் பழக்கமும் உடலுக்கு முறையான நல்ல மருந்தாகும்.**

**இன்றைய மருத்துவச் சிறப்புகள் ;**

**“பல்லவர் நோய் நீக்கும் பாங்கு”**

**எனச் சிறுபஞ்சமூலம் சுட்டும் நோய் நீக்கக் கருத்து, இன்றைய நவீன மருத்துவம் பல்வேறு நோய்களை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில் கண்டறிந்து சிகிச்சையளிக்கும் திறனுடன் ஒப்பிடத்தக்கதாகும்.**

நவீன மருத்துவம் நோய்களைத் துல்லியமாகக் கண்டறியும் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டுள்ளது. அவசரநிலைகளில் உடனடியாகச் சிகிச்சை அளிக்கும் திறன் இதன் முக்கிய பலமாகும். அறுவைச் சிகிச்சை,…அளிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல், நோய் வராமல் தடுப்பதற்கும் முக்கியத்துவம் அளித்ததாகும். உணவு, உறக்கம், உடற்பயிற்சி, மனநிலை, சுற்றுச்சூழல் போன்றவற்றை மனித உடல்நலத்துடன் இணைத்துப் பார்த்தது அதன் சிறப்பாகும்.

மேலும், மூலிகைகள் மற்றும் இயற்கையில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி மருத்துவம் செய்யப்பட்டதால், மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்பு பாதுகாக்கப்பட்டது. ஒவ்வொருவரின் உடல்நிலையையும் தனித்தனியாகக் கருத்தில் கொண்டு சிகிச்சை அளிக்கும் முறையும் அன்றயை மருத்துவத்தின் குறிப்பிடத்தக்கச் சிறப்பாகும். எளிய நோய்களுக்கு வீட்டில் கிடைக்கும் மூலிகைகள்

மற்றும் உணவுப் பொருட்களைக் கொண்டு மருத்துவம் செய்வதற்கான அறிவும் மக்களிடையே பரவலாக இருந்தது. குறிப்பாக உணவே மருந்தாக அமைய வேண்டும் என்ற சிந்தனை அன்றயை மருத்துவத்தின் முக்கியக் கொள்கையாகும்.

ஆனால், அக்கால மருத்துவ முறைகளில் சில குறைகளும் காணப்பட்டன. நோய்களின் காரணங்களைக் கண்டறிவதற்கான நவீன ஆய்வக வசதிகள் மற்றும் மருத்துவக் கருவிகள் அக்காலத்தில் இல்லை. இதனால் உடலின் உட்புற உறுப்புகளில் ஏற்படும் சில நோய்களைத் துல்லியமாகக் கண்டறிவதில் சிரமம் ஏற்பட்டிருக்கலாம். மேலும், அவசரநிலை நோய்கள், கடுமையான காயங்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை தேவைப்படும் சூழ்நிலைகளில் அக்கால மருத்துவ முறைகளின் செயல்திறனுக்கு வரம்புகள் இருந்தன.

அத்துடன், சில மருத்துவ அறிவுகள் வாய்மொழியாகவும் அனுபவ அடிப்படையிலும் பரவியதால், அவற்றை முறையாகப் பதிவு செய்து அனைவருக்கும் ஒரே மாதிரியாகப் பயன்படுத்தும் வாய்ப்பு குறைவாக இருந்தது. மருந்து தயாரிக்கும் முறைகள் மற்றும் அளவுகளில் இடத்திற்கு இடம் வேறுபாடுகள் இருந்திருக்கலாம். மேலும், சிகிச்சையின் விளைவு நோயாளியின் உடல்நிலை மற்றும் நோயின் தன்மையைப் பொறுத்து மாறுபடும் சூழலும் இருந்தது.

ஆகவே அக்கால மருத்துவம் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறை, நோய் தடுப்பு, உணவு ஒழுக்கம் மற்றும் முழுமையான உடல்நலப் பராமரிப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கியது. அதேவேளையில், துல்லியமான நோய் கண்டறிதல், அவசரச் சிகிச்சை மற்றும் நவீன மருத்துவத் தொழில்நுட்ப வசதிகள் போன்றவற்றில் சில வரம்புகளைக் கொண்டிருந்தது. ஆகையால், அக்கால மருத்துவத்தின் சிறப்பான கருத்துகளைப் பாதுகாத்து, தற்கால அறிவியல் மருத்துவத்தின் முன்னேற்றங்களோடு இணைத்துப் பயன்படுத்துவதே மனித நலனுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

நவீன மருத்துவத்தின் நிறைகள் மற்றும் குறைகள்.

நவீன மருத்துவம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் மருத்துவ முறையாகும். இதன் முக்கியமான நிறைகளாக, நோய்களை இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற நவீன கருவிகளின் மூலம் துல்லியமாகக் கண்டறியும் திறன், அவசரநிலைகளில் உடனடி சிகிச்சை அளிக்கும் வசதி, அறுவைச் சிகிச்சை மற்றும் பல்வேறு நவீன சிகிச்சை முறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேலும், தடுப்பூசிகள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகள் மூலம் பல நோய்களைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் முடிகிறது. இருப்பினும், நவீன மருத்துவத்தில் சில குறைகளும் உள்ளன. சில மருந்துகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடும்; நீண்டகால சிகிச்சை மற்றும் மருத்துவச் செலவுகள் சிலருக்குப் பொருளாதாரச் சுமையாக அமையலாம். மேலும், சில நேரங்களில் நோய்க்கான சிகிச்சைக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், உணவு, வாழ்க்கை முறை மற்றும் இயற்கை சார்ந்த முழுமையான உடல்நலப் பராமரிப்பில் போதிய கவனம் செலுத்தப்படாமல் இருக்கலாம். எனவே, நவீன மருத்துவத்தின் அறிவியல் முன்னேற்றங்களைப் பயன்படுத்துவதோடு, ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

**நிறை குறைகள் (நவீன மருத்துவம்)**

நவீன மருத்துவம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் மருத்துவ முறையாகும். இதன் முக்கியமான நிறைகளாக, நோய்களை இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற நவீன கருவிகளின் மூலம் துல்லியமாகக் கண்டறியும் திறன், அவசரநிலைகளில் உடனடி சிகிச்சை அளிக்கும் வசதி, அறுவைச் சிகிச்சை மற்றும்

பல்வேறு நவீன சிகிச்சை முறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேலும், தடுப்பூசிகள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகள் மூலம் பல நோய்களைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் முடிகிறது. இருப்பினும், நவீன மருத்துவத்தில் சில குறைகளும் உள்ளன. சில மருந்துகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

நீண்டகால சிகிச்சை மற்றும் மருத்துவச் செலவுகள் சிலருக்குப் பொருளாதாரச் சுமையாக அமையலாம். மேலும், சில நேரங்களில் நோய்க்கான சிகிச்சைக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், உணவு, வாழ்க்கை முறை மற்றும் இயற்கை சார்ந்த முழுமையான உடல்நலப் பராமரிப்பில் போதிய கவனம் செலுத்தப்படாமல் இருக்கலாம். எனவே, நவீன மருத்துவத்தின் அறிவியல் முன்னேற்றங்களைப் பயன்படுத்துவதோடு, ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

## முடிவுரை :

அன்றயை மருத்துவமும் இக்கால மருத்துவமும் மனிதனின் உடல்நலத்தைப் கொண்டுள்ளன முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளன. அக்கால மருத்துவம் இயற்கை சார்ந்த மூலிகைகள், உணவுமுறை, வாழ்க்கை ஒழுக்கம் மற்றும் நோய் வருமுன் தடுக்கும் முறைகளுக்கு முக்கியத்துவம் அளித்தது. இக்கால நவீன மருத்துவம் அறிவியல் ஆய்வு, தொழில்நுட்ப வளர்ச்சி, துல்லியமான நோய் கண்டறிதல் மற்றும் விரைவான சிகிச்சை முறைகளின் மூலம் மனித வாழ்வை மேம்படுத்தி வருகிறது. இவ்விரு மருத்துவ முறைகளிலும் தனித்தனியான சிறப்புகளும் சில குறைகளும் காணப்படுகின்றன. எனவே, அக்கால மருத்துவத்தின் இயற்கை சார்ந்த நோய் தடுப்பு அணுகுமுறையையும் இக்கால மருத்துவத்தின் அறிவியல் சார்ந்த சிகிச்சை முறைகளையும் தேவைக்கேற்ப ஒருங்கிணைத்து அணுகுவது மனித சமுதாயத்தின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பயனளிக்கும் என்பதே இவ்வாய்வின் முக்கிய முடிவாகும்.

## துணைநூற்பட்டியல்

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை - மணிவாசகர் பதிப்பகம் - 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600 10
2. தமிழ் இலக்கிய வரலாறு - மு. வரதராசன் - சாகித்திய அகாதெமி பதிப்பகம் - புது தில்லி – 110 001.

© 2026 நிர்மலா ர.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 125–133
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# நாலடியாரில் புல்லினங்கள்

*Bird Species in Naladiyar*

**முனைவர் மீனாட்சி ச.***

உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் மீனாட்சி ச. — meenakshis-tam@sfrcollege.edu.in

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | — | 30 September 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00006 |

## ஆய்வுச்சுருக்கம்

அறநூல்கள் எனப் பகுக்கப்பெற்ற நாலடியார் காலத்தால் அழியாத ஆவணங்களாகும். அரிய அறச்சிந்தனைகள் அறிவியல் கூறும் அறுதியிடப்பட்ட இலக்கிய வடிவமாக மதிக்கப்படுகின்றன. அறமும், அறிவியலும் இழைந்து செல்லும் இயல்பினைக் கொண்டதாக நாலடியார் திகழ்கின்றது. பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழும் தன்மையினை உடையவர்கள். இலக்கியங்களில் புலவர்கள் தங்கள் கருத்தினை புலப்படுத்தும் வண்ணம் தாம் காணும் தாவரங்களை உவமையாகவும் உள்ளுறையாகவும் சுட்டுகின்றனர். புலவர்களின் இத்தகைய உத்திமுறைகளே பண்டைத்தமிழர்களின் தாவரவியலறிவுக்குத் தக்கச் சான்றாகும். தாவரங்களை வளரியல்பின் அடிப்படையில் தாவரவியலாளர் புல், செடி, கொடி, மரம், மலர் என்று பாகுபடுத்துகின்றனர். வளரியல்பில் முதன்மை இடத்தைப் பெறுகின்ற புல்லினங்களின் தன்மை மற்றும் வாழிடங்கள் அறிவியல் காரணத்தோடு நாலடியார் வழி எடுத்தியம்பப்படுகின்றது. மேலும் புல்லினங்களின் அறிவியல் பெயர், வகைபாடு மற்றும் மருத்துவ பயன்களையும் நாலடியார் வழி ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## Abstract

Naladiyar*, classified among the texts on ethics (*Aranoolgal*), stands as a timeless document. It is revered for its profound ethical insights, which are presented through a well-defined literary structure that aligns with scientific principles. The text exemplifies an intrinsic blend of ethics and science. Ancient Tamils lived in harmony with nature; in their literature, poets frequently employed the flora they observed as similes and metaphors to convey their ideas. These poetic techniques serve as compelling evidence of the ancient Tamils' botanical knowledge. Botanists classify plants based on their growth habits—categorizing them as grasses, shrubs, creepers, trees, or flowering plants. *Naladiyar* elucidates the characteristics and habitats of grass species—which hold a primary place among these growth forms—offering explanations grounded in scientific reasoning. Furthermore, this research paper examines the scientific names, classifications, and medicinal uses of these grass species as presented in *Naladiyar*.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ச., மு. மீ. (2026). நாலடியாரில் புல்லினங்கள். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 125–133.

**புல்லினங்கள்**

புல் என்பது ஒரு வித்திலைத்தாவரமாகும். இயற்கையின் வரங்களான செடி, கொடி மற்றும் மரங்களின் பெரும்பகுதி புல் வகையினைச் சார்ந்தவையாகும். பிற தாவரங்களைப் போல் நுனிப்பகுதியில் வளராமல் அடிப்பகுதியில் உள்ள கணுக்களிலிருந்து இஃது வளர்கின்றது. கிளைகளின்றி நேராகவும், வளைந்தும் வளரும் தன்மையுடையன. தொல்காப்பியர் புல் பற்றி,

"புறக்கா ழனவே புல்லெனப் படுமே" (இளம்பூரணார்,தொல்,மரபு,நூற்.630)

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். புறக்காழ் என்பது தண்டின் மையப்பகுதியில் உள்ளீடற்ற தாவரங்களே புல்லினமாகும். தொல்காப்பியரின் நூற்பாவிற்கு உரை வகுக்கும் இளம்பூரணார், "தெங்கு, பனை, கமுகு, மூங்கில்"[1] முதலாயின புல் என்று குறிப்பிடுகின்றார். புல்லின் உறுப்புகளை தொல்காப்பியர்,

"தோடே, மடலே, ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்" (இளம்பூரணார்,தொல்,மரபு,நூற்.632)

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு முதலியன புல்லின் உறுப்புகளாகும். இனம்பூரணார் புல்லின் உறுப்புகளை உடைய "வாழை, ஈந்து, தாமரை, கழுநீர் என்றுத் தொடக்கத்தன"[2] என்று குறிப்பிடுகின்றார். ஆக தொல்காப்பியரின் கூற்றுப்படி தெங்கு, பனை, கமுகு, மூங்கில், வாழை, ஈந்து, தாமரை மற்றும் கழுநீர் ஆகியன புல்லின வகையினைச் சார்ந்தவையாகும். புல் வகையினைப் பற்றி இல.தாணம்மாள், "நிலத்தின் அடிப்பகுதி வரை ஆழ்ந்து வேர்கள் செல்லாமல் மேலோட்டமாய் வேர்கள் உடையனவாக விளங்கும் தாவரங்கள் 'புல் வகை' எனப்படும்"[3] என்று தன் நூலில் குறிப்பிடுகின்றார். நாலடியாரில் இடம்பெற்றுள்ள புல் வகைகளை,

- புல்
- நெல்
- கரும்பு
- தென்னை
- பனை
- பாக்கு
- வாழை

என்ற முறைகளில் பட்டியலிட்டு நாலடியாரின் வழி புல்லின் தன்மையினை ஆராயலாம்.

**புல்**

புற்கள் அடர்ந்து நீளமாக காணப்படும் ஒரு தாவர வகை ஆகும். மனிதனின் முயற்சியின்றி மழையின் வருகையால் தானாக வளரும் தன்மையுடையது. பரந்து விரிந்து வளரும் புல்வெளிகள் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுகின்றன. இதனடிப்படையில் புற்களை, "1. மேய்ச்சல் புல் (Grazing grass) 2. வெட்டுப்புல் (Fodder grass)"[4] என்று இரண்டு முறைகளில் குறிப்பிடுகின்றன. மேய்ச்சல் புல் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படும் முறையினை (நான்மணி – 68) வது பாடல் சுட்டுகின்றது. கிளைகளின்றி வளைந்து வளரும் புல்லின் தன்மையை உடல் நிலையாமையுடன் நாலடி ஒப்பிடும் பாங்கினை,

"புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி

இன்னினியே செய்க அறவினை..... (இளவழகனார்,நாலடி.பா.அடிகள்29:1-2)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. மேலும் இப்புற்களை களைகின்ற தன்மையினை,

“சாய்பறிக்க நீர்திகழுந் தண்வய லூரன்மீது

ஈப்பறக்க நொந்தேனும் யானேமன்...” (இளவழகனார்,நாலடி.பா.அடிகள்.389:1-2)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. நிலத்தைச் சூழ்ந்துள்ள கோரைப் புற்களை பறித்துள்ள குளிர்ந்த வயல்வெளிகளை உடைய மருதநிலத் தலைவனே! என்று புல்லின் இயல்பினை வெளிப்படுத்துகின்றது. நீண்டு வளரும் புற்கள் காகித தயாரிப்பிலும், குடிசைகள் வேயவும் பயன்படுகின்றன. இலக்கியங்கள் புற்களின் தன்மை மற்றும் வளர்ச்சியினைக் கொண்டு மாந்தர்களை நெறிப்படுத்துகின்றன. அறக்கருத்தோடு அறிவியலும் ஊடுருவும் தன்மையினை அறிய முடிகின்றது.

**நெல்**

நெல் புல் வகையினைச் சார்ந்த தாவரமாகும். நெற்பயிர் நான்கு அடி உயரம் வரை வளரக்கூடியது. இப்பயிர் ஐந்து மாதங்கள் வரை வளரக்கூடிய ஓர் ஆண்டுத் தாவரமாகும். இலக்கியங்களில் நெல்லின் வகைகளை வெண்ணெல், செந்நெல், மலைநெல், நெல் ஐவனம், தோரை என்ற பெயர்களில் குறிப்பிடப்படுகின்றன. நெற்பயிர்கள் ஈர நிலங்களில் செழித்து வளரக்கூடியது. செழிப்பான இடத்தில் நெல் வளரும் முறையினை,

“நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தங்

குலநலத்தால் ஆகுவர் சான்றோர்.....” (இளவழகனார்,நாலடி.பா.அடிகள்179:1-2)

என்ற பாடலடி விளக்குகின்றன. வயல்வெளிகளில் செந்நெல் செழிப்பாக வளர்வது போல மக்களும் செழித்திருப்பர். மேலும் வளமற்ற பகுதிகளில் நெற்பயிர் செழிக்காது என்பதனையும் நாலடி,

“பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட

மின்னொளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்”

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்:269:1-2)

என்ற பாடலடி சுட்டுகின்றன. ஆக நெற்பயிர்கள் ஈர நிலங்களில் மட்டுமே செழித்து வளரும் என்பதை பண்டைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பதனை அறிய முடிகின்றது. நெல் நமது இந்திய நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தொன்று தொட்டுப் பயிரிடப்பட்டு வரும் உணவுப்பொருள் ஆகும். உணவுப்பொருளாக பயன்படுத்தப்படும் நெல்லிலும் உமி உண்டு என்பதனை,

“நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை

அல்லா ரெனினும் அடக்கிக் கொளல் வேண்டும்

நெல்லுக் குமியுண்டு.....” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்:221:1-3)

என்ற பாடலடி உணர்த்துகின்றன. உமியை நீக்கி நெல்லைப் பயன்படுத்துவது போல நேசித்தவரின் தீய குணங்களை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசிரியர் வழிப்படுத்துவதோடு தற்காலத்தில் நெல்லினை உமி நீக்கி அரிசியாக பயன்படுத்தும் முறையினையும் சுட்டுகின்றார். நெல்லினை பயிரிடும் போது வேண்டாத களைகளை களைந்து நல்விதைகளை விதைத்து பயிரிடும் தன்மையினை,

“செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்

செந்நெல்லே யாகி விளைதலால் - அந்நெல்

வயனிறையக் காய்க்கும் வளவிய லூர!.....”

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்:367:1-3)

என்ற பாடலடி புலப்படுத்துகின்றன. தற்காலத்தில் செயற்கை ஒட்டு முறையில் பல வகைப்பட்ட நெல் வகைகள் உருவாக்கப்படுகின்றன. எனவே நமது பாரம்பரிய நெல் வகைகள் அழிந்து விட்டன என்பதை யாவரும் அறிவோம்.

**கரும்பு**

கரும்பு தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் வளர்க்கப்படும் தாவரமாகும். புல் இனத்தைச் சேர்ந்தது. ஓராண்டு காலப் பயிராகும். இஃது பணம் கொழிக்கும் ஒரு வாணிகப் பயிராகும். சர்க்கரை உற்பத்தி செய்யப் பயன்படும் ஒரு தாவரமாகும். கரும்பிலிருந்து பெறப்படும் முக்கியப் பொருள் சுக்ரோஸ் ஆகும். இதன் வேதிப்பொருள் கரும்பின் தண்டுப்பகுதிகளில் சேர்த்து வைக்கப்படுகிறது. கரும்பானது செங்கரும்பு, ஆலைக்கரும்பு, கருப்புக்கரும்பு என்றெல்லாம் வகைபடுத்தப்படுகின்றன. இவற்றுள் ஆலைக்கரும்பு சாறு பிழிவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இயந்திரப் பொறிகளைக் கொண்டு சாறு பிழியும் வழக்கம் பண்டைக்காலத்திலும் இருந்திருந்தன. கரும்புச்சாற்றின் இனிமையையும், சாறு பிழியும் நேரத்தினையும் நாலடியார்,

“கடித்துக் கரும்பினைக் கண்தகர நாறி,
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்”

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்156:1-2)

“கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேம்கால் துயராண் டுழவார்”

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்:35:1-2)

என்ற பாடலடிகளில் பதிவு செய்துள்ளார். இன்றைக்கும் நாம் கரும்பு பிழியும் இயந்திரத்தினை பயன்படுத்தி வருகின்றோம். கரும்பின் சாறு சிறுநீரகக் கற்களை குணமாக்குகின்றன. இவற்றில் உள்ள இனிப்பு இரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவை சீராக்குகின்றன. ஒரே கரும்பானாலும் கரும்பின் சுவை வெவ்வேறானது. நுனிக் கரும்பை விட அடிக்கரும்பின் சுவையே இனியது. இத்தகைய இனிய சுவையினை கற்றறிந்தார் நட்புடன் ஒப்பிடும் பாங்கினை,

“கற்றறிந்தார் கேண்மை
நுனியின் கரும்புதின் றற்றே – நுனிநீக்கித்
தூரின்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.138:1-4)

“கருந்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே – குருத்திற்
கெதிர் செலத்தின் றன்ன தகைத்தரோ.......”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.211:1-2)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

தற்காலத்தில் சாறு பிழிந்து எஞ்சிய சக்கை காகிதம் செய்வதற்குப் பயன்படுகின்றன. கரும்பு பாரம்பரியமான உணவாகும். தற்காலத்தில் அதனை பண்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்துகின்றோம். கரும்பின் இலைகள் மக்கி நல் எருவாகின்றன. கரும்பினை அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடவு செய்கின்றனர். உலர்ந்த கரும்புத் தோகைகளை மண்ணோடு கலப்பதால் மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் தன்மை மேம்படுகின்றது. இதனால் மண்ணின்

மின்கடத்தும் திறன் குறைந்து நீரைத் தக்க வைக்கும் திறன் அதிகரிக்கிறது. கரும்பிலுள்ள ‘அல்கலைன்’ என்னும் பொருள், புற்றுநோயை குணப்படுத்தும் தன்மையுடையது. மேலும் பெருங்குடல், நுரையீரல் (அ) மார்பக புற்றுநோய் போன்றவற்றிற்கும் சிறந்தது. தற்காலத்தில் கரும்பினை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இலக்கியங்கள் கரும்பின் சுவையினை புலப்படுத்துவதோடு கரும்புத் தோட்டத்தினை பாதுகாக்கும் முறையினையும் பறை சாற்றுகின்றன.

**தென்னை**

தென்னை எண்ணெய் வித்து தாவரமாகும். பனைமரத்தை விட உயரமாக வளரக்கூடியது. முட்களும் கிளைகளும் இன்றி உயரமாக வளர்ந்தாலும் தென்னை புல் இனத்தைச் சார்ந்ததாகும். எண்ணற்ற வேர்கள் எல்லாப் பக்கமும் ஓடக்கூடியவை. மரத்தின் உச்சியிலுள்ள இலைகள் மரத்துக்கு மணிமுடி போல் அழகிய தோற்றத்தைத் தரும். தென்னையினை அடிக்கடி நீர்ப்பாய்ச்சி கவனித்தால் மட்டுமே மரம் செழுமையாக இருக்கும் என்பதனை,

“.......ஏனை

இடையாயார் தெங்கி னனையர்,....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.216:1-2)

என்ற பாடலடி விளக்குகின்றன. இம்மரம் ஏறத்தாழ ஐந்து வருடங்களுக்குள் பயன்தரக் கூடியதாகும். கடலோர உவர் நிலங்களிலும், மணற்பாங்கான இடத்திலும் தென்னை வளரக்கூடியது. நல்ல மழையும் சூரிய ஒளியும் கிடைக்கும் இடங்களில் இஃது நன்கு வளரக்கூடியது. எல்லா வகை மண்ணிலும் வளரும் தன்மை உடையது. இலக்கியங்களில் தென்னை ‘தெங்கு’ என்றே அழைக்கப்படுகின்றது. தென்னையின் வாழிடங்களை,

“எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகாது

எந்நாட் டவருஞ் சுவர்க்கம் புகதலால்....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.243:1-2)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன. நீர்வளம் மிகுந்த பகுதியிலும் எந்த வகை மண்ணிலும் தென்னை வளரும் தன்மையுடையது என்பதனை அறிய முடிகின்றது. தென்னையின் ஓலை, பூ, இளங்காய், முற்றின காய், நடுமரம், வேர் என்று அனைத்தும் பயன்தரக்கூடியது. தென்னையின் ஓலை வீடுகட்டவும், கொட்டகை போடவும், கூடை பின்னவும் பயன்படுகின்றது. தேங்காயின் தண்ணீர் ஜீரணமண்டலத்தை வலுப்படுத்த உதவும். இவற்றின் வேரை கசாயமிட்டு பருக படை, சொறி, தோல் நோய், நாக்கு வறட்சி போன்றவை குணமாகின்றன. தேங்காயின் சதைப்பகுதியைச் சர்க்கரையுடன் சேர்த்து சாப்பிட்டால் ஆண்மை சக்தியை அதிகரித்து வயிற்றுப் பூச்சிகளைச் சாகடிக்கிறது.

**பனை**

பண்டைத் தமிழர்களின் கற்பக விருட்சம் பனை. பழந்தமிழர்களின் வாழ்வில் பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்தவை. தமிழ்நாட்டின் சின்னம் பனை. தமிழ்நாட்டில் மட்டுமே 5.2 கோடி பனைமரங்கள் உள்ளன. இது ஏறத்தாழ 60 சதவீதம் ஆகும். பூக்கும் ஒரு வித்திலைத் தாவரமாகும். இஃது பயிரிடப்படுவதில்லை. இயற்கையிலேயே வளரக்கூடியது. இவை சுமார் 20 மீ உயரத்துக்கு கிளைகளின்றி நேராக வளரும் தன்மையுடையது. நீண்டு உயரினும் இஃது புல் வகையினைச் சார்ந்ததாகும். பனையினைப் பற்றி எஸ்.சௌந்தரராஜன், “பனைமரம் பாமேசியீ என்னும் ஒற்றை விதையிலைத் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். பனை மரத்தின் பெயர் போரஸஸ் பிளாடெல்லிபெர் என்பதாகும். இம்மரத்தின் ஓலைகள் விசிறி போன்ற அமைப்புடையதாக இருப்பதால் இதனை ‘Palm tree’ என்று கூறுவர்.”[5] என்ற முறைகளில்

தன் நூலில் குறிப்பிடுகின்றார். சேர மன்னர்களின் குடிப்பூ பனையாகும். இம்மரம் சதுப்பு நிலங்களிலும், கடற்கரை ஓரங்களிலும் வளரக் கூடியதாகும். இவை பாலை நிலம், வறட்சிப்பகுதி, குறைந்த ஆழமான நிலம் போன்ற இடங்களில் காணப்படுகின்றது. வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் உடையது. இவை மக்களுக்கு உச்சி முதல் அடி வரை பயன்தரக் கூடியது. இதன் அடிப்பகுதி பருத்துக் காணப்படும். பனையின் இலைகள் ‘மடல்’ என்றும், காய்ந்த இலை ‘ஓலை’ என்றும், காய் ‘நுங்கு’ என்றும், பனங்காய் முதிர்ந்தால் ‘பனம்பழம்’ என்றும் அழைக்கப்படுகின்றன. பனையின் வளரியல்புகளை உணர்ந்த பண்டைத்தமிழர்களின் தாவரவியல் புலமையை,

“......எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே

தொன்மை யுடையார் தொடர்பு” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.216:3-4)

என்ற பாடலடி விளக்குகின்றன. பனை பருவம் அடைவதற்குள் பதினைந்து வருடங்கள் எடுத்துக் கொள்கின்றது என்பதனையும் வறட்சியைத் தாங்கி உப்பங்கழிகளில் வளரும் தன்மை உடையது என்பதனையும் அறிய முடிகின்றது. மனிதர்களின் பண்பினை பனையின் உயரத்துடன் ஒப்பிடும் பழந்தமிழர்களின் நுண்ணியத் திறனை,

“தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்

பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்105:1-2)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இதே கருத்தினை (நாலடி-344) வது பாடலும் எடுத்துரைக்கின்றன.

பனையில் ஆண், பெண் என்ற இரண்டு வகைகள் உள்ளன. இவற்றில் பாலினப்பெருக்கம், விதையில்லா பெருக்கம் என்ற இரண்டு முறைகளில் இனப்பெருக்கம் நிகழ்கின்றது. பூக்களில் தோன்றும் வித்துகள் வழி நடைபெறுவது பாலினப்பெருக்கம் ஆகும். தண்டு மற்றும் கிழங்கு மூலம் விதையில்லாமல் நடைபெறுவது விதையில்லா பெருக்கம் ஆகும். பெண்பனையில் பதநீர் இறக்கப்படுகிறது. பெண்பனையின் முக்கியத்துவத்தை அறிந்த பழந்தமிழரின் நுண்மாண்நுழைபுலத் திறனை,

“நடுவூருள் வேதினை சுற்றுக்கோட் புக்க

படுபணை யன்னர் பலர்நச்ச வாழ்வார்....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்96:1-2)

என்ற பாடலடி சுட்டுகின்றன. காய்க்கின்ற பெண்பனையை அனைவரும் விரும்புவர். காய்த்தலில்லாத ஆண்பனையை விரும்புபவர் எவரும் இல்லை. பெண்பனையின் உணவுப்பொருட்களில் முதன்மையானது பதநீர். இப்பதநீரே கருப்பட்டி, வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பனம்மிட்டாய், பனங்கூழ் என்று பல்வேறு வகையான பொருள்களை தயாரிக்க இன்றும் பயன்படுகின்றது. ஆண்பனை கட்டிட வேலைக்கு பயன்படுத்தப்படுகின்றது.

பனையை போந்தை, பெண்ணை என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பனைஓலையின் பயன்பாட்டினை,

“......பனையின் மேல்

வற்றிய ஓலை கலகலக்கும், எஞ்ஞான்றும்

பச்சோலைக் கில்லை யொலி” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.256:2-4)

“கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி

அடகு பறித்துக்கொண் டட்டுக் - குடைகலனா
உப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே.....”
(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்289:1-3)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. பனை ஓலையில் கூடை, பெட்டி, பாய், விசிறி, தொப்பி, குடை, ஓலைச்சுவடி என்று பல்வேறான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

பனை உணவுப்பொருட்கள் வழங்குவதோடு பல்லோருக்கு பனைமரம் ஏறுதல், கள் மற்றும் பதநீர் இறக்குதல், கருப்பட்டி மற்றும் பனைவெல்லாம் தயாரித்தல் என்று கைத்தொழிலாகவும் பயன் அளிக்கின்றது. “விவசாயம் கைத்தறிக்கு அடுத்தப்படியாக பேரளவு வேலை வாய்ப்பினைக் கொண்டதாக பனைத்தொழில் விளங்குகிறது.”[6] என்று இணையம் உரைக்கின்றது. துவர்ப்பும் இனிப்பும் கலந்த பதநீரின் சுவை உடலுக்கு ஊட்டத்தை அளிப்பதோடு வெப்பத்தைத் தணித்து குளிர்ச்சியைத் தருவது பனம்பழம் சிறந்த உயிர்சத்து உடையது. பனைவெல்லாம் நிலக்கரி மற்றும் ஸிலிகா தூசிகளால் ஏற்படும் நுரையீரல் பாதிப்பை குறைக்கும் என்பது தெரிய வருகின்றது. தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமான பனைமரங்கள் வளர்க்கப்பட வேண்டும். பனைமரங்கள் அழிவதால் மண்வளமும் மனிதவளமும் கெடுகிறது.

**பாக்கு**

பாக்கு ஒரு வித்திலைத் தாவரம் ஆகும். இலக்கியங்களில் கமுகு என்று அழைக்கப்படுகின்றது. இஃது நெடிது ஓங்கி வளரினும் ‘புல்’ என்ற வகையினைச் சார்ந்ததாகும். இதனது தாவரவியல் பெயர் அரீகா காட்சூ (Areca catechul) என்பதாகும். பொதுவாக பாக்கு தென்னையைப் போல் கடற்கரைச் சார்ந்த உப்பு மண்ணில் நன்றாக வளரும் தன்மை கொண்டது. இதன் தண்டு வெண்மையாக வழவழப்பாக இருக்கும். இவற்றின் இலை சிறகு வடிவக் கூட்டிலையின் பட்டை அகலமாக தண்டைச் சுற்றிக் குருத்துக்குப் பாதுகாப்பாக இருக்கும். கடற்கரையோரப் பகுதிகளிலும் மலையடிவாரங்களிலும் இஃது பயிரிடப்படுகின்றது. கமுகின் தன்மையினை நாலடி,

“கடையாயார் நட்பிற் கமுகளையர் ஏனை..”
(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.216:1)

என்ற பாடலடியில் குறிப்பிடுகின்றார். கீழ்நிலையில் உள்ளோரின் நட்பை கமுகின் தன்மையோடு ஒப்பிட்டுள்ள பண்டைத் தமிழரின் தாவரவியல் புலமை அளவிடற்கரியது. தமிழர்களின் சடங்கு மற்றும் விழாக்களில் அதிகளவு வெற்றிலையுடன் சேர்த்து பயன்படுத்தப்படுகின்றது. பாக்கின் மருத்துவத் தன்மையினை ஜே.சி.குரியன் தன் நூலில், “பிஞ்சு பாக்குக் கொட்டைகள் மலமிளக்கியாகும். முதிர்ந்த பாக்குக் கொட்டைகள் ஒரு நல்ல புழுக்கொல்லியாகும்.”[7] என்ற முறைகளில் குறிப்பிடுகின்றார். அதிகளவு பாக்கினை எடுத்துக் கொண்டால் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது. அர்கோலின் என்னும் நச்சுத்தன்மை வாய்ந்த அல்கலாய்டு கொட்டையில் நிரம்பியுள்ளதால் பக்கவாதத்தை தோற்றுவிக்கும்.”[8] என்பதை இணையம் வழி அறிய முடிகின்றது. இன்றும் பாக்கு மங்கலப்பொருளாக பயன்படுத்தப்படுகின்றது.

**வாழை**

வாழை குறுகிய கால பயிராகும். தாவரவியலாளர் இதனை “Musa Paradisiaca” என்று குறிப்பிடுவர். உறுதியாக உயர வளரும் வாழையை மரம் என்று பேச்சுவழக்கில் குறிப்பிட்டாலும் இஃது புல் இனத்தைச் சார்ந்ததாகும். வாழையினங்கள் செடி மற்றும் மரங்களைப் போல் காணப்படுவதில்லை. இவற்றின் தண்டுப்பகுதி கிழங்கு வடிவில் மண்ணுக்கடியில் மட்டுமே வளர்கிறது. மேல்பகுதியானது நிலைகுத்தாக வளரும் போலித்தண்டாகும். எனவே இவை தாவரங்களின் புல் வகையைச் சர்ர்ந்ததாகும்.

இந்தியாவில் மாமரத்திற்கு அடுத்து வாழையே அதிகமான நிலப்பரப்பில் பயிரிடப்படுகின்றன. தமிழ்நாட்டில் தலைசிறந்த முக்கனிகள் மா, பலா, வாழை என்பதாகும். வாழையின் காய், கனி, தண்டு, இலை, பட்டை முதலிய அனைத்து பாகங்களும் உணவிற்குப் பயன்படுகின்றன. வாழை மலைப்பகுதிகளிலும், நீர்வளம் மிகுந்த நிலங்களிலும், வயலோரங்களிலும் அதிகமாக வளரும் தன்மை கொண்டது. வாழையினங்கள் கனிகளைப் பெறுவதற்காகவும், அலங்காரச் செடியாகவும், நார் பெறுவதற்காகவும் பயிரிடப்படுகின்றன. தென்னை மற்றும் வாழை பயிரிடுவதே ஒரு நாட்டின் செழுமை என்று குறிப்பிடுவதாக முடத்தாமக்கண்ணியார்,

“கோள் தெங்கின் குலை வாழை”

(பொ.வே.சோமசுந்தரனார்,பொருநராற்றுப்படை,பா.அ:205)

என்ற பாடலடிகளில் குறிப்பிடுகின்றார். வாழையில் பூவன், மொந்தன், பேயன் என்ற மூவகையான பழங்கள் முறையே அயன், அரி, அரன் என்ற மூவர்க்கும் உரியன என்று பாரம்பரியாக நம்பப்படுகின்றது. வாழைப்பழங்கள் மிகவும் இனிது. இவற்றின் சுவையை நாலடி,

“வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்

தீஞ்சுவை யாதுந் திரியாதாம்.....” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.244:1-2)

என்ற பாடலடி குறிப்பிடுகின்றது. வேப்ப மரத்தின் இலைக்குள்ளிருந்து பழுத்தாலும் வாழைப்பழம் தனது இன்சுவையில் இருந்து மாறுபடாது என்று குறிப்பிடுவதன் மூலம் வாழையின் இனிய சுவையினை அறிய முடிகின்றது. வாழையின் தன்மையினை கு.சீநிவாசன் தன் நூலில், “வாழைமரம் ஒரு முறை மட்டுமே பூக்கும். வாழைக்குலையில் கருஞ்செம்மையான மடல்கள் இருக்கும். இம்மடல்களுக்குள் வாழை மலர்கள் சீப்புச்சீப்பாக அமைந்திருக்கும். வாழைக்குலையை வாழைத்தார் என்பர். தாரின் நுனிப்பகுதியில் ஆண்பூக்களும், அடிப்பகுதியில் பெண்பூக்களும் உண்டாகும். மடல் விரிந்து ஆண் பூக்களின் தாதுக்கள் பெண் பூக்களின் நுனியில் சேர்ந்தபின் பெண்பூக்கள் பிஞ்சாகிப் பழமாகும்”[9] என்ற முறைகளில் குறிப்பிடுகின்றார்.

வாழை ரகங்கள் நிலத்திற்கு ஏற்ப பயிரிடப்படுகின்றன. வாழையின் அனைத்து பாகங்களும் மருத்துவ குணமாகும். இவற்றின் இலை நச்சுமுறிப்பாகவும், நார் பூச்சரம் கட்டவும், மூக்குப்பொடி வைக்கும் மட்டையாகவும், நூல் தயாரித்து துணி நெய்யவும் பயன்படுகின்றன. இவற்றின் தண்டுநீர் இரத்த போக்கை குணப்படுத்தவும் பட்டை மற்றும் தண்டானது பித்தத்தைக் கட்டுபடுத்தவும், சிறுநீரைப் பெருக்கவும் பயன்படுகின்றது. வாழையின் பூ, பிஞ்சு, காய் போன்றன துவர்ப்புச் சுவையைத் தூண்டும், வெள்ளைப்படுதலையும் கட்டுப்படுத்தும். மேலும் வாழைப்பழமானது உள்ளுறுப்புகளின் புண்களை ஆற்றுகின்ற திறனுடையது.

## தொகுப்புரை

- பழந்தமிழரின் திணைப்பாகுபாடே அவர்களது தாவரவியல் புலமையினை அறிவதற்கு சிறந்த சான்றாகிய முறையினை அறிந்து கொள்ள முடிகின்றது.
- தாவரங்களின் நுட்பமான வளரியல்புகளை அறிந்திருந்த பண்டைத்தமிழனின் தாவரவியல் சிந்தனை நாலடியார் வழி வெளிக்கொணரப்படுகின்றது.
- தாவரவியலாளரின் கருத்தோடு ஒன்றிணைந்த இலக்கியப் புலவர்கள் தங்களது படைப்புகளில் தாவரங்களின் பசுமையினை தன் எழுத்தில் படைத்ததோடு தாவரங்களின் வகைபாட்டினையும் மருத்துவ பயன்பாட்டினையும் நுட்பமாக பதிவு செய்த புலவனின் நுண்மாண்நுழைபுலத்திறன் அளவிடற்கரியது.

- தாவரங்கள் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றது
- தாவரங்களின் அனைத்து உறுப்புகளும் மனிதர்களுக்கு சிறந்த மருத்துவ குணமுடையதாக பயன்படுத்துகின்ற பாங்கினை அறிய முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**


1. இளம்பூரணார்,தொல்,மரபு,ப.529
2. இளம்பூரணார்,தொல்,மரபு,ப.530
3. இல.தாணம்மாள், சங்க இலக்கியத்தில் மலர்கள், ப.56
4. **ta.wikipedia.org\wiki\புல்**
5. எஸ்.சௌந்தர ராஜன், பனைமரங்களின் மூலம் கிராம முன்னேற்றம் 2014,ப.128
6. **ta.wikipedia.org\wiki\பனை16.11.2019**
7. ஜே.சி.குரியன், நலம் தரும் தாவரங்கள்(தொகுதி1),ப.20
8. **tamil vu.org\tdb\titles**
9. கு.சீநிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள், ப.665–666


© 2026 முனைவர் மீனாட்சி ச.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 134–138
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியலும் பண்பாட்டுக் கூறுகளும்

*Elements of Lifestyle and Culture in Tamil Literature*

**முனைவர் தென்றல் சு.[1,*], முனைவர் சசிக்குமார் வே.[2]**

[1] முதல்வர் சேன் பன்னாட்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நவக்கரை, கோவை – *641105. Ph : 8300002751., India*

[2] உதவிப்பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை சேன் பன்னாட்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நவக்கரை, கோவை – *641105. Ph : 8015566463., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் தென்றல் சு. — thendralsundar20@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | — | 30 September 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00007 |

## ஆய்வுச்சுருக்கம்

இலக்கியம் என்பது நுண்கலை. அதற்கெனத் தனித் தன்மையும் வளர்ச்சியுண்டு. காலத்தின் மாற்றத்திற்கேற்பத் தமிழ் இலக்கியங்களும் புதுப்பொலிவுடன் வளர்ச்சி நிலையை அடைந்து நம் மண்ணின் பழம்பெருமைகளையும், மானுட வாழ்வின் மகத்துவங்களையும் எதிர்வரும் தலைமுறையினருக்கு எடுத்துக் காட்டுகின்றன. மனிதனைப் பண்படுத்தும் மதிப்புகளை இலக்கியங்கள் பெற்றுத் திகழ்வதோடு வாழ்வின் வழிகாட்டியாகவும், சமுதாயத்தோடு மனிதனை ஒன்றிணையச் செய்யும் பாலமாகவும் திகழ்கின்றன. இலக்கிய வரலாற்றை ஒரு தேசத்தின் வாழ்க்கை வரலாறு எனச் சிறப்பித்து உரைப்பாரும் உளர். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். பெறற்கரிய மானிடப் பிறப்பைப் பெற்ற மனிதன் நன்முறையில் வாழ்வதற்குச் சில நெறிமுறைகளைப் பின்பற்றி இப்பிறப்பின் பொருளைச் சிறக்கச் செய்ய வேண்டும். அதற்கு நம் தமிழ் இலக்கியங்கள் வழிகாட்டியாக அமைகின்றன என்பதை வெளிக்கொணர்வதே இவ்வாய்வுக்களமாகும்.

## Abstract

Literature is a fine art, possessing its own unique character and trajectory of evolution. Adapting to the changing times, Tamil literature has flourished with renewed vitality, showcasing the ancient glories of our land and the magnificence of human existence to future generations. Beyond embodying values that refine human character, literature serves as a guide for life and a bridge connecting the individual with society. Some even characterize the history of literature as the biography of a nation. The poet Avvaiyar famously remarked, "Rare, indeed, is birth as a human being." Having attained this precious human life, one must adhere to certain principles to live meaningfully and nobly; this study aims to highlight how Tamil literature serves as a guiding light in that endeavor.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** சு., மு. தெ., & வே., மு. ச. (2026). தமிழ் இலக்கியங்களில் வாழ்வியலும் பண்பாட்டுக் கூறுகளும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 134–138.

**முன்னுரை:**

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" - குறள்: 322**

பகிரும் உணவை அனைத்துயிர்களுக்கும் பகிர்ந்து தந்து தானும் உண்டு வாழ்வதே வாழ்வின் முதல் அறமென்பார் வள்ளுவர். தமிழரின் பண்பாடு என்பது உலக அளவில் எல்லா தேசத்தினராலும், மொழியினராலும் போற்றப்பட்டும், பின் தொடரப்பட்டும் தமிழருக்குப் பெருமை தருவன. உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களில் ஒன்றான தமிழர் பண்பாடு அன்பு, வீரம், விருந்தோம்பல், அறம், இயற்கை வழிபாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தனிச் சிறப்பான வாழ்க்கை முறையாகும். அக்காலம் தொட்டு இக்காலம் வரை பாரம்பரியக் கலைகள், பழக்கவழக்கங்கள், கலாச்சாரம் போன்ற விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ இலக்கியங்களின் பங்களிப்பை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழ் இலக்கியங்களில் வாழ்வியலும் பண்பாட்டுக் கூறுகளும்**

"இசையும் இன்பமும் ஈதல் மூன்றும்

அசைவுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு ஈனம் என

வினையான் பிரிந்த வேறுபாடு கொள்கை"

- நற்றிணை - 214

நல்லவை செய்தல் வேண்டும். அதனையும் இன்றே செய்தல் வேண்டும். இசை, இன்பம், ஈதல் இம்மூன்றும் செயலாற்று இருப்போர்க்கு எளிமையாகக் கிடைப்பதில்லை. பொருளையும், புகழையும் தேடி இன்பமாக வாழ்வதோடல்லாமல் வறுமையில் வாழுவோர்க்கு மனமிரங்கிப் பொருள் உதவி செய்வது மகிழ்ச்சியைத் தருமென நற்றிணை கூறுகிறது. பிறருக்கு உதவுவதே பேரின்பம் எனும் கொள்கை போற்றுதலுக்குரிய தமிழர் பண்பாகும்.

"வலம்படு முரசின் இலங்கவன வீழுஉம்

அவ்வெள் அருவி உவ்வரையதுவே

சில்வளை விறலி செல்குவை ஆயின்"

பதிற்றுப்பத்து - 78

சங்க இலக்கியங்களில் கடையெழு வள்ளல்கள் அன்புக்கும், கொடைக்கும் பேளுதாரணமாகத் திகழ்ந்ததை அறியலாம். மனித உணர்வுகளை மட்டுமல்லாது தாவரம் போன்ற உயிரினங்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து இலக்கியங்களில் நீங்கா இடம் பெற்றனர். மோசிகீரனார் எனும் புலவர் இரும்பொறை எனும் மன்னனைச் சந்திக்க வந்து அயர்வுற்று அவரது கட்டிலில் உறங்கிய போது மன்னன் விசிறிய செய்தி நம் பண்பாட்டைப் பறைசாற்றும். பகைவரிடம் பொருளைப் பெற்ற பெரும் செல்வத்தை புலவர்பெருமக்களுக்கு வாரி வழங்கிச் செய்திகளையும் இலக்கியங்கள் கூறுகின்றன. மன்னர்கள் அறிவிற் சிறந்தோரைப் போற்றி அவர் துயர் தீர வழிசெய்து வாழச் செய்தது உயரிய பண்பாகும்.

"மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்படும் போது எவையெல்லாம் இன்றியமையாததாகக் கருதப்படுகிறதோ அவை பண்பாட்டு விழுமியங்கள் எனப்படும்."

- பண்பாட்டு மானுடவியல்

கூட்டாக வாழும் சமுதாயத்தின் மனமும் உடலும் சார்ந்து ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் மேற்கொள்ளப்படும் நல்ல நடத்தை முறைகள், பண்பாட்டு மதிப்புகளாகும் என்பது தெளிவாகிறது. 'பாடறிந்து ஒழுகல்' எனும் புறநானூற்றுப் பண்பாட்டுக் கூற்று,

பண்படுத்தப்பட்ட விழுமிய மனிதனது வாழ்க்கை அமையும் போது அனைவருக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

நல்ல சமுதாயம் உருவாக வேண்டுமெனில் அங்கே இல்லறம் நல்லறமாக விளங்க வேண்டும். அதனால் தான் வள்ளுவர் 'இல்லறவியல்' எனும் தனி இயலில் 'இயல்புடையக் கணவனும், மனைவியும் இல்லற மாண்பறிந்து ஒருமித்த கருத்து' இணைந்து வாழ்தல் மகிழ்ச்சிக் கூட்டும். இல்லறத்தின் வெற்றி அன்பைப் பெறத்தக்கக் கொண்ட பண்பாட்டு அடையாளத்தைப் பெற வேண்டும். இளமை தொடங்கி முதுமை வரை புரிதலுடன் கூடிய வாழ்வு நம் பண்பாட்டின் அடையாளமும், இலக்கியங்களும் இல்லற ஒழுக்கத்தின் மேன்மையை எடுத்தியம்புகின்றன.

மனைத்தக்க மாண்புடையாள் ஆகித் தற்கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கை துணை"

— திருக்குறள் *51*

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்புகளைக் கொண்ட பெண் தன் குடும்ப பொருள் வளத்திற்கு ஏற்ப வாழ்க்கை நடத்திப் பெருமை சேர்ப்பாள் என்கிறார் வள்ளுவர்.

தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் முக்கிய இடம் பெறுகிறது. தனிச்சிறப்பு பெற்றுத் திகழ்கிறது. 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்றது கொன்றைவேந்தன். பசியில் வருபவர்க்கும் பகிர்ந்து கொடுத்தல், தன்னிடம் ஏதும் இல்லாத வறுமைச் சூழலிலும் தன்னிடமிருந்து பொருளை விற்று பசி போக்கிய செய்தி என நம் இலக்கியங்கள் பண்பாட்டுச் செய்திகளை நயந்து நோக்கக் கூடியவை.

"நெருநை வந்த விருந்திற்கு மற்றுந் தன்

இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்று இக்

கருங்கோட்டுச் சீறியாழ் பணயம்"

— புறநானூறு – *31*

நேற்று வந்த விருந்தினரை உபசரிக்கத் தன்னிடம் பொருள் இல்லாத போது, தன் வீரத்தின் அடையாளமான வாளை விற்று உணவுப்பொருள் வாங்கி பசிபோக்கியதும், மறுநாள் வந்தவரை உபசரிக்கப் பொருள் இல்லாத போது தன்னிடம் இருந்த யாழை விற்றுப் பொருள் ஈட்டி உணவளித்ததும், எவர்க்கும் இல்லாத தமிழரின் உயரிய பண்பாடாகும்.

சங்க காலத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் வீரத்திலும், அறிவிலும் சிறந்து விளங்குவர். ஆண் பாற் புலவர்களுக்கு நிகராகப் பெண்பாற் புலவர்களும் அறிவில் சிறந்து உயர்ந்திருந்தனர். இருவரும் அகம் / புறம் இரண்டிலும் ஆகச்சிறந்த பாடல்களைத் தந்தனர். மிகத் துயரமான காலச் சூழலிலும் வீரம், நாட்டுப்பற்றும் பெண்களிடம் மிக்கிருந்தது.

**"கெடுக சிந்தை கடிது இவள் துணிவே**

**மூதில் மகளிராதல் தகுமே"**

**- புறநானூறு - 279**

ஒரு பெண் போரில் தந்தையையும், கணவனையும் இழந்த பின்னும் போர்ப் பறைக்கேட்டு தன் மகனையும் போருக்கு அனுப்பிய செய்தியை ஒக்கூர் மாசாத்தியார் பாடல் கூறுகிறது. தமிழ் சமுதாய தமிழர்களின் பண்பாட்டு மதிப்புகளில் இன்றியமையாத மக்களை தலை நிமிர வைத்த வீரம் என்பது அவரது மனத்திடத்தை உறுதிப்படுத்துகிறது. கடுமையான மனநெகிழ்ச்சியிலும், தனக்குப் பிறந்த குழந்தை இறந்து பிறந்தாலும் வாளால் குழந்தையைக் கீறிப் புதைக்கத் துணிணனின்று தன்

வீரத்தை மெய்ப்பித்தான்.

திரைகடலோடியும் திரவியம் தேடியொர் தமிழர். தான் வாழும் சூழலுக்கேற்ப தன் வாழ்வைத் கட்டமைத்துக் கொண்ட தமிழ் மக்கள் சூழல் மாறும் பொழுது அம்மாற்றத்தோடு போராடித் தம்மை நிலைநிறுத்தி தகவமைத்து வாழ்ந்தார்கள். தன் இல்லறத் துணையும் பிரிந்து பல நாட்கள் கடலிலே பயணம் செய்து பொருளீட்டி நல்லறத்தை நிலைநாட்டினர். தான் ஈட்டிய பொருளைத் தன்னைச் சார்ந்தோர்க்கும், வறியவர்க்கும் பகிர்ந்து தந்து கொடைப்பண்போடு வாழ்வின் பெருளுணர்ந்து வாழ்ந்தார்கள்.

நல்வாழ்வு தெளிந்த குறிக்கோளோடு தொடங்வேண்டும். தெளிவான சிந்தனையே பிறரது பழிப்புக்கு ஆளாகாமல் அறம் சார்ந்து வாழ்வாக இருக்க வேண்டும். செய்ய இயலாது. மனித வாழ்வு இன்றைய சூழலில் செல்லாதிருத்தல் வேண்டும். னல்லவை செய்வது னற்பண்பு. ஒரவேளை செய்ய இயலாது பயின் அல்லவை செய்யாதிருத்தல் வீண்டும். மனித வாழ்வு இன்றைய சூழலில் வீகமும், அவசரமும் னிறைந்து.

ஈன்ற புறந்தருதாலன் என் தலைக்கடனே

சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

ஒளிறு வாள் அருஞ் சமம் உருக்கித்

ளிறு எறிந்து பெயர்தல்

காளைக்குக் கடனே!"

**— புறநானூறு - *312***

பிள்ளைகளைப் பெற்று வீரத்தோடு பாதுகாத்து வளர்ப்பது தாயின் கடமை; நல்லொழுக்கமும் அறிவும் கொண்ட சான்றோனாக ஆக்குவது தந்தையின் கடமை; போர் வீரனுக்கான ஆயுதத்தை நேர்த்தியாக வடிவமைத்துத் தருவது கொல்லனின் கடமை; நாட்டு மக்களுக்குச் சரியான ஒழுக்கத்தையும், நெறிகளையும் விதித்து வழங்குவது மன்னனின் கடமை. போர்க்களம் சென்று வெற்றியுடன் திரும்புவது வீரனின் கடமை என்பதாக மானுடத்தின் கடமைகளை வகுத்து மனித சமூகம் சிறந்த இலக்கியம் வழிநடத்துகிறது.

ஒருவர் செய்யும் நற்செயல்கள்தான் அவர்களுக்குத் துணை நின்று வளமான எதிர்காலத்தை உருவாக்கித் துன்பமின்றி வாழ வைப்பதாகும். செல்வம் ஒருவரிடம் இருந்தால் அதன் பயன் பிறருக்கு உதவுவது என்றும் கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர். செய்யும் தொழிலைத் தெய்வமாகவும், உயிராகவும் நினைத்து உழைத்தனர்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா

நோதலும் தணிதலும் அவற்றோரன்ன

பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

**— புறநானூறு - *192***

என்கிறார் கணியன் பூங்குன்றனார். இவ்வுலகத்திலுள்ள அனைத்து இடங்களும் நம் சொந்த இடங்களே; மொழி, இனம், மதம் கடந்து அனைத்து மக்களும் நம் உறவினர்களே. நாம் அனுபவிக்கும் இன்பமோ, துன்பமோ அது பிறரால் வருவது இல்லை. நம்

வினையினால் ஏற்பட்டது. இறப்பு என்ப அனைவருக்கும் பொதுவானது. வாழ்வை நினைத்துப் பெருமைப்படவோ, தாழ்ந்து நோக்கவோ கூடாது. நம்மை விட கீழானோரைக் கண்டு கீழ்மையாக நடத்தலும் கூடாது என்ற வாழ்வின் மெய்மை இப்பாடலில் உணர்த்தப்படுகிறது.

## முடிவுரை

தமிழரின் வாழ்வியல் தன்னலமற்றது. உலகளாவிய நிலையில் உயர்ந்து நிற்கும் பண்பாடு தமிழர்க்கே உரித்தானது. உலகம் சிறப்புற நல்ல சிந்தனையுடைய தனிமனிதனின் பண்பாடு சமுதாயத்தை முன்னேற்றுகிறது. தனிமனித முன்னேற்றமே சமுதாய முன்னேற்றம் ஆகும். அறமும் நீதியும் கண்களாகக் கொண்டு நம் முன்னோர்கள் மனித வாழ்வை அர்த்தமுள்ளதாக்க அரும்பாடுபட்டனர். உலகத்தின் கடைக்கோடியில் வாழக்கூடிய நம் மக்கள் கூட நம் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், மூத்த வழக்கங்களையும் பின்பற்றுவதைப் பெரும் பேறாகக் கொண்டுள்ளனர். நம் தமிழ் இலக்கியங்கள் காட்டிய நல் வழியில் தான் நம் தமிழுலகம் தரணி புகழ் பெற்றுள்ளது. இலக்கியங்களின் ஆகச் சிறந்த இப்பணி தனித்துவம் நிறைந்த பண்பாட்டு அடையாளங்களை நமக்குத் தந்தது என்பதில் ஐயமில்லை.

துணை நற்பட்டியல்

1. திருக்குறள் – புலியூர் கேசிகன், பூம்புகார் பதிப்பகம் – சென்னை – 108
2. நற்றிணை – புலியூர் கேசிகன், பாரி னிலையம் – சென்னை – 108
3. பதிற்றுப்பத்து – ஔவை துரைசாமிப்பிள்ளை – சைவ சித்தாந்த னூற்பதிப்புக்கழகம்.

சென்னை – 001.

4. புறனானூறு - புலியூர் கேசிகன், பாரி னிலையம் – சென்னை – 108
5. பண்பாட்டு மானுடவியல் – பக்தவத்சல பாரதி - அடையாளம் பதிப்பகம் – திருச்சி – 310.

© 2026 முனைவர் தென்றல் சு., முனைவர் சசிக்குமார் வே.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.
Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

**KALANJIYAM – International Journal of Tamil Studies**
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 139–143
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# தமிழ் மொழி வளர்ச்சியில் அருளாளர்களும் புலவர்களும்

*Benefactors and Poets in the Development of the Tamil Language*

**முனைவர் நடராஜன், சிவ.***

உதவிப் பேராசிரியர், ஆய்வுநெறியாளர், தமிழாய்வுத்துறை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரி, திருப்பனந்தாள்- 612504. ( திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் 22 வது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் புரந்தருளப் பெறுவது), *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் நடராஜன், சிவ. — sivanatarajansiva@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | — | 30 September 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00009 |

## ஆய்வுச்சுருக்கம்

தமிழ் மொழி வளர்ச்சிக்குச் சைவ சமய அருளாளர்களும் புலவர்களும் தம் படைப்புக்கள் வழி துணை நின்றமையைத் தக்கச் சான்றுகள் வழி ஆய்வுக் கட்டுரை கண்டு காட்டுகிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** ஆ – பசு; ஐந்திலக்கணம்- தமிழ் மொழியில் உள்ள எழுத்து; சொல்; பொருள்; யாப்பு; அணி என்னும் இலக்கணங்கள். ஏரகம் – சுவாமிமலை; காவை; சம்புவனம் – திருவானைக்கா; யமகம் – உதடுகள் ஒட்டாமல் பாடப்படும் பாவகை; பாய்ச்சல் – தாண்டுதல்; கோட்டம் – வளைவு; மாந்தர் - மக்கள்

## Abstract

This research paper demonstrates, through appropriate evidence, how Saivite saints and poets contributed to the development of the Tamil language through their literary works.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** சிவ., மு. ந. (2026). தமிழ் மொழி வளர்ச்சியில் அருளாளர்களும் புலவர்களும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 139–143.

## முன்னுரை:-

இனிமையும் நேர்மையுமாக விளங்கும் தமிழ் மொழியில் பண்டுதொட்டு இன்றளவும் தோன்றி நிலைபெற்று மாந்தர்தம் மனக்கோட்டம் தீர்க்கும் நூல்கள் எண்ணில் அடங்காதன. இந் நூல்கள் அறிஞர்களால், தமிழ் மொழியின் கட்டமைப்பினைக் காக்கும் இலக்கணங்கள் என்றும் மக்கள் தம் வாழ்வில் அடைவதற்குரிய இலக்கினை இயம்பும் அமைப்பினை இலக்கியங்கள் என்றும் பகுக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியின்கண் உள்ள இலக்கியங்கள் பல வகையில் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் வடிவமைப்பால் அறிமுகப் படுத்தப்படும் பகுப்பானது, பயிலும் மக்களால் எளிதில் உள்ளத்தில் கொள்ளத்தக்க வகையில் உள்ளன. அவை பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என்பனவாகும். இவ் வகையில், சிற்றிலக்கியங்களின் பங்களிப்பினை, தமிழ் மொழி வளர்ச்சியில் அருளாளர் களும்

புலவர்களும் என்ற தலைப்பின் கீழ் கட்டுரை ஆவின் பாய்ச்சல் எனக் கண்டு காட்டுகிறது.

**அருளாளர்களும் சிற்றிலக்கியங்களும்:-**

இறைவனின் முழுமையான அருளுக்கு உடையவர்களாக விளங்குபவர்கள் அருளாளர்கள் ஆவர். இறைவன் மீது கொண்ட அன்பினால் இவர்கள் உள்ளத்தில் ஊற்றெடுத்தத் தமிழ் இலக்கியங்கள் பலவாகும். அருளாளர்கள் வரிசையில், இறை யருளோடு தமிழ் வளர்ச்சியை இயைத்த அருளாளர்களின் நிரலில்,

திருஞானசம்பந்தர்

சேரமான் பெருமாள் நாயனார்

குமரகுருபரர்

ஆகியோர் சான்றாகக் கொள்ளப்படுகின்றனர்.

**திருஞானசம்பந்தர்:-**

சீர்காழி என்னும் தலத்தில் 7ஆம் நூற்றாண்டில் அவதரித்தவர். இவர் 3ஆம் வயதில் இறைவனால் ஞானப்பால் ஊட்டப் பெற்றவர். திருஞானசம்பந்தர் அருளிய பாடல்கள் பதிகம் எனும் அமைப்பு முறையை உடையன. இவர் அருளிய பதிகங்கள் 383 ஆகும். இப்பதிகங்கள் ஒவ்வொன்றும் ஒரு சிற்றிலக்கியமாகும். இப்பதிகங்கள் பன்னிரு திருமுறை தொகுப்பில் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களில் ஈரடி மேல் வைப்பு, எழுகூற்றிருக்கை, ஏகபாதம், கோ மூர்த்தி, கூடற் சதுக்கம், திரு இருக்குக்குறள், திரு முக்கால், நாலடி மேல் வைப்பு, மாலை மாற்று உள்ளிட்ட பதிகங்கள் தமிழ் இலக்கணத்துள் ஒன்றான சொல்லணியியல் அமைப்பு முறையில் உள்ளன. இப்பதிகங்கள் இறைவன்முன்பு பாடப்பட்ட சமய நூல்கள் என்றாலும் இப்பதிகங்கள் தமிழ் வளர்ச்சிக்கு உரியனவாகும்.

**சேரமான் பெருமாள் நாயனார்:-**

சேரநாட்டு மன்னர். 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பன்னிரு திருமுறை ஆசிரியர்களில் பதினோராம் திருமுறைத் தொகுப்பில் மூன்று இலக்கியங்களை அருளியவராவார். இம்மூன்று இலக்கியங்களில் திருக்கயிலாய ஞான உலா என்னும் சிற்றிலக்கியம் தனித்துவம் வாய்ந்ததாகும். சேரமான் பெருமாள் நாயனார் இவ்வுலாவை திருக்கயிலையில் இறைவன் முன்பு பாடினார் இறைவன் அருளால் இந்நூல் பூமிக்கு அனுப்பப்பட்டது என்பது பெரிய புராணம் குறிப்பிடும் வரலாறு.[1]

திருக்கயிலாய ஞான உலாவிற்கு, ஆதி உலா என்று ஒரு சிறப்புப் பெயர் உண்டு. உலா இலக்கியங்களில் முதல் உலாவாக விளங்குகிறது. சேர நாட்டு மன்னனாக விளங்கிய சேமான் பெருமான் நாயனார். சுந்தரருடன் நட்பு கொண்டார். சுந்தரர் கயிலை செல்லும் போது தான், தன்னுடைய குதிரையின் காதில் ஐந்தெழுத்து மந்திரத்தினை ஓதி விண்ணில் பறந்து சென்று சுந்தரருடன் கயிலை அடைந்தார். இறை வழிபாடு செய்து திருக்கயிலை சென்று முக்தி அடையும் நிலையில், இறைவன் முன்பு உலா இலக்கியத்தைப் பாடி, முத்தி அடைந்தார். இந்நிலையை ஆழ்ந்து நோக்கும் பொழுது சமயத்தையும் மொழி வளர்ச்சியையும் உயிருள்ளளவும் உன்னதமாக போற்றிய தன்மை தெரிய வருகிறது.

**ஸ்ரீ குமரகுருபரர்:-**

பாண்டி நாட்டில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் 17 ஆம் நூற்றாண்டில் அவதரித்தவர். ஏழாம் வயதில் திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் ஆற்றலைப் பெற்றவர் இவர் அருளிய சிற்றிலக்கியங்கள் 14 ஆகும். தருமையாதீனம் 4ஆவது குருநாதர் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகளிடம்

குமரகுருபரர் துறவு வேண்டினார். குருநாதர் ஆணைப்படி சிதம்பரம் தலத்தில் சில காலம் தங்கி இறைவனை வழிபாடு செய்து வந்தார். அப்பொழுது பாடிய நூல்களில் சிதம்பரச் செய்யுட் கோவை[2] என்னும் நூலும் ஒன்றாகும். தமிழ் யாப்பிலக்கணம் கூறும் பா இனங்களுக்குச் சைவ சமயச் சார்பான புராணச் செய்திகளை எடுத்துக்காட்டி அருளப்பட்ட நூலாகும். இந்நூல் 84 பாடல்களைக் கொண்டது. இந்நூல் முதல் சான்றிலக்கிய நூல் என்னும் தனிச் சிறப்படையதாகும். துறவு வேண்டி இறைவனை வழிபாடு செய்யும் காலத்தும் தமிழ் மொழியில் தனித்த பற்றுடையவராய் மொழி வளர்ச்சிக்கு அருளிய பிரபந்தமாகச் சிதம்பர செய்யுட் கோவை விளங்குவது தெரிய வருகிறது.

**புலவர்களும் சிற்றிலக்கியங்களும்:-**

தமிழ் மொழியில் உள்ள ஐந்திலக்கணத் தோய்வும் இலக்கியத் திறமும் ஒருங்கே அமைந்தவர்கள் புலவர்கள் எனப்பட்டனர். புலவர்கள் வரிசையில் தமிழிலக்கிலக்கிய வளர்ச்சிக்குத் துணை நின்றவர்கள் நிரலில்,

கலியாணசுந்தரம்பிள்ளை,

அப்புலிங்கம் பிள்ளை

ஆகியோர்களின் தமிழ் வளர்ச்சிப் பணிகள் சான்றாகக் கொள்ளப்படுகின்றன.

**கலியாணசுந்தரம் பிள்ளை:-**

20 ஆம் நூற்றாண்டில் கும்பகோணம் பகுதியில் வாழ்ந்த புலவர் ஆவார். இவர் யாத்த நூல், திருவேரக ஓரெழுத்து நிரோட்டக யமக அந்தாதி என்பதாகும். இந் நூல் காப்பு பாடல் நீங்களாக 50 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆனது. இந் நூலின் பொது அமைப்பு நாயகன் நாயகி பாவம் ஆகும். இந்நூலில் உள்ள பாக்களின் ஒவ்வொரு அடியும் "க" என்ற ஓரெழுத்தின் தொடக்கம் கொண்டு அமைந்துள்ளது.

" கண்டந்த நல்லேர கத்தனந் தாதி கழறற்கிசை,

கண்டந்த கார நிகரள கச்சத்தி காதலன் செங்

கண்டந்த னிற்கர த்தா னரன்சங் கரனளித்த,

கண்டந்த யானையி னானனத் தாதி கழல்சரணே." [3]

என்பது நூலில் உள்ள காப்பு பாடல் ஓரெழுத்தின் தொடக்கத்திற்குச் சான்றாகும்.

"இந்நூல்போல் ஓரெழுத்து நிரோட்டக யமகவந்தாதி தமிழில் வேறில்லை ஆகலின், இதுவே இனி எழும் ஓரெழுத்து நிரோட்டக யமகவந்தாதிக்கு முதல் நூலாயமைந்திலங்கும் சிறப்புற்று வெளிவருகின்றது"[4] என்று நூலின் சிறப்பினை வாரியார் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளது எண்ணத்தக்கது. இந் நூலினை நோக்குங்கள் புலவரது மொழி அறிவும் மொழி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பெரும் பங்கும் தெரிய வருகிறது.

**அப்புலிங்கம் பிள்ளை:-**

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மற்றொரு புலவராவார். திருவானைக்கா என்னும் திருத்தலத்தில் வாழ்ந்தவர். பல இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவற்றுள் காவை முருகன் பிள்ளைத்தமிழ் என்னும் நூலும் ஒன்றாகும். இந்நூல் திருவானைக்காத் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பட்டதாகும். பருவம்தோறும் ஐந்து பாடல்களை அமைத்துள்ளார். பிள்ளைத் தமிழின் பருவங்கள் 13 என்ற இலக்கணத்தை கொண்டு இந்நூலில் 13 பருவங்களை அமைத்துள்ளார். பிள்ளைத் தமிழின் பருவ நிரலை நோக்கும் போது எட்டாம் பருவமாக சிற்றில், ஒன்பதாம் பருவமாக துயிலெழற் பருவம், பத்தாம் பருவம் சிறுபறைப் பருவம், பதினோராம் பருவம் சிறு தேர் பருவம், பன்னிரண்டாம் பருவம் தகர் அடக்கு பருவம், 13ம்

பருவம் வேலோச்சு பருவம் என்று பெயரிட்மைத்துள்ளமை, பருவ நிரல் முறை அமைப்பில் ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளமையைக் காண முடிகிறது. இன் நூலில் பல புதிய அமைப்பு முறைகள் காணப்படுகின்றன. இவருடைய காந்தியை கொள்கைகளும் சுதந்திர தாகத்தையும் இவர்தான் பாடல்களில் பல இடங்களில் முருகனிடம் விண்ணப்பிப்பதாகக் காண முடிகின்றது. சான்றாக,

"பந்த விலங்கற என்னுடை இந்தியப் பண்டைய தொண்டர்குழாம்

பற்றும் வலக்கரம் உற்றஓர் கோலினிற், பார்முழு தும்பரவ

வந்து தவழ்ந்திடு தென்றல் அசைப்பினில், வானுற ஓங்கிஒளிர்

வண்ண மதில் தன தெண்ணம் விளங்கிட, வல்லமை காட்டிடவே

அந்தர மீதினில் ஆடி யசைந்திடும் ஆன்ற கதர்க்கொடியின் ஆட்டத்தை

மீறிய நாட்டியம் செய்மன மாம்மயில் மீதில். அருட்

சந்தக் கவிதரும் செந்தமிழ்த் தெய்வமே! சண்முக! சாய்ந்தாடு

சம்பு வனத்துறை அம்பிகை பாலனே! சண்முக! சாய்ந்தாடு! "[5]

என்ற பாடல் காந்திய கொள்கையோடு சுதந்திர தாகத்தையும் கொண்டுள்ளதைக் காண முடிகிறது.

அடுத்து, இன்று மக்கள் ஆலயம் சென்றும் இல்லத்திலேயும் இறைவனிடம் பல வகையான விண்ணப்பங்களை வேண்டி வழிபாடு செய்கின்ற அறிமை நிலையை கண்ட புலவர் தம் பாடலில்,

"நீண்டதோர் பட்டியலே நீட்டி, 'அவற்றையெலாம் நீ அளித் தால்

இதனை நினக்களிப் போம்' எனவே

வேண்டும்அப் பக்தர்குழாம் வீரிடும் ஓசையிலே,

விற்கப் படும்பொருளாய் விட்ட நினதருளுக்கு

ஈண்டும் அடியவரும் எண்ணத்தை நஞ்சாக்கி ஏய்க்கும்

தரகர்களும் எங்கணும் சூழ்ந்து, அறிவை

ஆண்டு வரும்மடமைக்கு ஆலயத் துள்ளிருந்தே

ஆனையங் காஅழகா! - ஆர்த்தங்கை கொட்டுகவே!"[6]

என்பது அப்பாடலாகும்.

அப்புலிங்கம் பிள்ளையின் காவை முருகன் பிள்ளைத்தமிழ் நூலானது சமயம் மொழி வளர்ச்சி என்ற நிலையில் மட்டும் அல்லாது தமிழிலக்கிய வளர்ச்சியில் ஒரு புதுமையைக் காட்டுவதாகவும் உள்ளமை அறிய முடிகிறது.

**முடிவுரை:-**

தமிழ் வளர்ச்சி என்பது தமிழ் மொழி என்றும் நின்று நிலைபெறுத்தக்க வகையில் அருளாளர்களும் புலவர்களும் பல்வேறு வகையான இலக்கியங்களைப் படைத்து அதனூடே சமய, சமுதாய சிந்தனைகளை அமைத்து மக்களுக்கு நெறி காட்டத்தக்க வகையில் பாடிய சிற்றிலக்கியங்கள் இடையே சமயம் சமுதாயம் என்ற இரண்டு நிலை களிலும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய கொடையை அறிந்து கொள்ள முடிகிறது

**சான்றெண் விளக்கம்**

1. சேக்கிழார், பெரியபராணம், வெள்ளானைச் சருக்கம்
2. ஸ்ரீகுமரகுருபரர் பிரபந்தத் திரட்டு

3. வெ.கலியாணசுந்தரம் பிள்ளை, திருவேரக ஓரெழுத்து நிரோட்டக யமக அந்தாதி, காப்பு பா. 1
4. மேலது, முன்னுரை, பக்கம்.5
5. அப்புலிங்கம் பிள்ளை, காவை முருகன் பிள்ளைத்தமிழ் பா.12
6. மேலது, பா.21

**துணை நூற்பட்டியல்**

1 பெரியபராாணம், ஸ்ரீகாசிமடம் , திருப்பனந்தாள்-612504. பதிப்பு - 2019
பதிப்பாண்டு - 2000

2 ஸ்ரீகுமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, ஸ்ரீகாசிமடம் , திருப்பனந்தாள்-612504.
பதிப்பாண்டு - 2000

3. வெ.கலியாணசுந்தரம் பிள்ளை, திருவேரக ஓரெழுத்து நிரோட்டக யமக அந்தாதி, 2ஆம்பதிப்பு ஆண்டு 2017
4. அப்புலிங்கம் பிள்ளை, காவை முருகன் பிள்ளைத்தமிழ், கீதா பிரஸ், திருச்சி -02, முதற்பதிப்ப- 1971

© 2026 முனைவர் நடராஜன், சிவ.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..